
www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியம் – தேவதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை


பாம்பு - **கலாமோகன்** (பிரான்ஸ்) ------------22


## நாடகம்


ஜெய்ஹிந் ஜெய்சிலோன் (தொடர்ச்சி) ------------71
**பிரிஜிட் & ஷோபாசக்தி** (பிரான்ஸ்)


## கட்டுரை


நிலத்துக்கு முன்னோடியான நிலப்படம் ------------18
**அங்கயற்கண்ணி** (இந்தியா)
உடலரசியல் (தொடர்) ------------63
**ஜமாலன்** (றியாத்)


## ஓவியம்


முகப்போவியம், ஓவிய எழுத்துக்கள்
**கருணா** (கனடா)
உள்ளட்டை **தேவதாசன்** (பிரான்ஸ்) ------------1


## பதிவு


பெண்கள் சந்திப்பு (பிரான்ஸ்) ------------32
இலக்கியச் சந்திப்பு (ஜேர்மன்) ------------53
நதியின் மரணம் (இந்தியா) ------------40


## கவிதை


**அறிவழகன்** (இந்தியா) ------------14
**சுமதிரூபன்** (கனடா) ------------21
**அனார்** (இலங்கை) ------------31
**கைலாஷ்சிவன்** (இந்தியா) ------------39
**ரவி** (இந்தியா) ------------50
**கற்சுறா** (பிரான்ஸ்) ------------52
**பாமதி** (அவுஸ்ரேலியா) ------------85
**சுமதி** (சுவிஸ்) ------------82
**பிரியம்** (இந்தியா) ------------94
**ஜெயா** (பிரான்ஸ்) ------------100

கவனி ------------3
தமிழ் இனி **கற்சுறா** (பிரான்ஸ்) ------------10
தீ இனிது **நாதன்** (பிரான்ஸ்) ------------15
இன்னும் இன்னும் **தேவதாசன்** (பிரான்ஸ்) ------------29
Notes by Mythila (பிரான்ஸ்) ------------47
சுவரோவியங்கள் (பிரான்ஸ்) ------------51
வெளியீட்டு நிகழ்வுகள் ------------60
நூல் அறிமுகம் ------------83
இடைமறிப்பு (தொடர்ச்சி) ------------86
கோணல் பக்கங்கள் **சாரு** (இந்தியா) ------------95



# எக்ஸில்

**VOL: II - No:10**
**April -Octo - 2000**

EXIL

அன்பளிப்பு:
பிரதி ஒன்று -20 பிராங்குகள்
வருடம் -100 பிராங்குகள்
(தபாற்செலவு உட்பட)

காசோலைகள் அனுப்பவேண்டிய வங்கியும் இலக்கமும்

B.N.P
ASSOCIATION EXIL
00345/100241-65



தொடர்புகட்கு:

EXIL
B.P-204
92604 ASNIERES CEDEX
FRANCE

E-MAIL: exil-inba@infonie.fr



No d'enreg: 13022670




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எக்ஸிலின் ஆக்கங்கள் தரம் தரமற்றவை என்பதை விடுத்து பொதுவாக எக்ஸிலின் தரம் கூடியிருக்கின்றது என்றே சொல்லாம். உதாரணமாக ஜமாலனின் உடலரசியல் என்ற தொடர் கட்டுரை மிகவும் பிரயோசமானதென்றே நினைக்கின்றேன். சிலவேளை இக்கருத்துக்கள் காலப்போக்கில் விமர்சனத்திற்கு உட்படுத்தப் படவேண்டிய ஒன்றாக இருந்தாலும் உடலரசியல் என்ற பதத்தில் மனித உணர்வு, மொழி, வாழ்நிலை, சாதி, தீண்டாமை, இனவாதம், என்ற பதங்கள் கேள்விக்கிடமாக்கப்படுகின்றன. ஆனால் அவரின் கட்டுரையில் «கற்பு» என்ற ஆணாதிக்கச் சொல்லின் பதம் பற்றி அவர் இன்னும் தொடவில்லையே? கற்பும் உடலரசியல் சம்பந்தப்பட்ட விடயம் என்றே நினைக்கின்றேன். இது சம்பந்தமாக அவர் தனது கட்டுரையில் விளக்கினால் நல்லது. மற்றப்படி இன்றைய காலகட்டத்தில் இக்கட்டுரை தேவை யானதொன்றாகும். ஜெபாவின் கவிதையின் மொழி நடை நன்றாக உள்ளது. உமாவின் கதை இன்னும் மெரு கூட்டியிருக்கலாம் போல் தோன்றுகிறது. ஓவியாவின் புது உலகம் எமை நோக்கி பற்றிய விமர்சனம் ஒரு பக்கப் பார்வையாகவே உள்ளது. அதில் உள்ள நிறைகளை விமர்சித்தது போல் குறைகளையும் விமர்சித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

சாரு நிவேதிதாவின் கோணல் பக்கங்கள் கோணல்களாகவே இருக்கட்டும். அதற்காக பெண்களை வலிந்து கோணல்களாகவே பார்க்கிறார் போலுள்ளது. தனது கருத்துக்களைச் சொல்வதற்கு சாருநிவேதிதா பெண்களை நக்கலடிக்கவோ கொச்சைப்படுத்தவோ தேவையில்லை. «ஆண்குறி இருக்கிறதோ இல்லையோ ரீவி சீரியல்களைப் பற்றி பேசத் தெரிந்திருக்க வேண்டும் அப்படி அந்தத் தகுதியும் எங்களிடம் அறவே இல்லை என்பதால் பெண்கள் எங்களை சொறி நாயை விரட்டுவது போல் விரட்டி அடித்தார்கள் என்று அவரது கோணல் பக்கத்தில் கூட்டம் 2 இல் கூறுகிறார். இதே போல் ஞானியுடனான உரையாடலும் தொடர்கிறது. இதே வகைப்பட்ட கோணல்களைத்தான் புலம்பெயர் இலக்கிய உலகிலும் சில முற்போக்கு ஆண்கள் தொடர்கின்றனர்.பெண்களின் பிரச் சினைகளில் தலையிடுவது, கருத்துச்சொல்வது, அவர்களை சுதந்திரமாக சிந்திக்க விடாமல் தனித்துவமாக முடி வெடுக்கத்தடுப்பது, மூக்கை நுழைப்பது, அராஜகம் என்று சொல்லிக் கொண்டு பெண்களின் செயற்பாடுகளில கருத்துச் சொல்ல முற்படுவது போன்ற ஆணாதிக்க செயற்பாடுகள் அண்மைக் காலங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவை இன்று பெண்களாகிய நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன. பெண் விடுதலை அல்லது பெண்களின் பிரச்சினைகளை பாலியலுக்கு இன்னும், கீழ்படுத்தி வைத்துள்ள இந்த ஆண்கள் கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், கோணல்கள் என்று எழுதி பெண்களை கொச்சைப் படுத்துவதை பெண்ணியம், பின்நவீனத்துவம், தலித்தியம் என்ற பெயரின் கீழ் செய்து விடுகின்ற னர். இவ்வாறு பாலியல் வக்கிரங்களைக் கொட்டித் தீர்த்துக் கொள்ளும் «முற்போக்கு» ஆணாதிக்க வாதிகள் சிலர் எழுதிக் கிழிக்க புறப்பட்டுள்ளார்கள்.





**றஞ்சி**
(சுவிஸ்)

---

எக்ஸில் நவம்பர்-மார்ச் 2000 இதழில் சாரு நிவேதிதா எழுதியுள்ள கோணல் பக்கங்கள் பத்தி படித்தேன். பொதுவாக சாரு எழுதும் பத்திகள் சுவாரசியமானவை. அவரது கதைகளைக் காட்டிலும் அவர் எழுதும் பத்திகளில் நகைச்சுவை உணர்வு அதிகம். ஆனால் அவற்றின் நம்பகத் தன்மை குறித்து தமிழ்நாட்டில் அவரது எழுத்துக்களையும், செயல் பாடுகளையும் கவனித்து வரும் எவரும் அக்கறை கொள்வதில்லை என்று நினைக்கிறேன். எனவே என்னைப்பற்றி அவரது பத்தியில் குறிப் பிட்டுள்ள வற்றை பொருட்படுத்த வேண்டாம் என்று நினைத்தேன். அதோடு சமீபத்தில் எனக்கேற்பட்ட மனச்சோர்வு காரணமாக எழுதுவதும் சிரமமான காரியமாக இருந்தது.

தமிழ் நாட்டிலிருந்து வரும் இதழ்களில் சாரு என்னைப்பற்றி இத்தகைய குறிப்பை எழுதியிருந்தால் அதைப் பொருட்படுத்த தற்பொழுதும் முயன்றிருக்கமாட்டேன் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டு வாசகர்கள் கழிந்த பத்து பதினைந்து வருடங்களாக பல்வேறு மோஸ்தர்களுக்கும், குழப்பங்களுக்கும் சாரு போன்றோரின் செயற்கை யான அரை நிக்கர் கலகங்களுக்கும் ஆட்பட்டு

www.tamilarangam.net

தற்பொழுது நிம்மதியாக இருக்கின்றார்கள். வெறும் வாய்வீச்சுக்களையும், போலியான நிக்கர் கலகங் களையும் அவர்கள் பொருட்படுத்த மறுக்கிறார்கள். இதை சாருவுக்கு தமிழ்நாட்டில் வாசகர்கள் மத்தியில் ஏற்பட்ட பலத்த சரிவு என்றுதான் சொல்லவேண்டும். தமிழ் நாட்டுடன் ஒப்பிடும்போது எக்ஸில் போன்ற இதழ்கள் பத்துவருடங்களுக்கு பின்தங்கியிருக் கின்றன. பத்து வருடங்களுக்கு முந்தைய வாசக மனோநிலையை உருவாக்க முயற்சி செய்கின்றன. இது சாரு போன்றோருக்கு தஞ்சமடைய தோதான இடங்களாக மாறி விட்டன. இதன் விளைவாக சாரு தன்னைப் பற்றிய புதிய படிமம் ஒன்றை எக்ஸிலில் சித்தரிக்க விரும்புகிறார். இது எக்ஸில் இதழை வாசிக்கும் போதும், சாருவின் பத்தியை படிக்கும் போதும் தெரிகிறது.

திருநெல்வேலியில் கள்ளழகர் கூட்டி யிருந்த 'உரைகல்' கூட்டம் பற்றிய சாருவின் பத்தி யில் அடிப்படைத் தகவல்களே பொய்யாக உள்ளன. பாலகுமாரனோடு ஒப்பிட்டு சாருவின் எழுத்தைப்பற்றி நான் ஒரு வரிகூட கூறவில்லை. சாருவோடு ஒப்பிடும்போது வெகுசன வாசகர்களைக் கவர்வதில் பாலகுமாரன் மிகப்பெரிய திறமைசாலி என்பது அவரது குறைவான எழுத்துக்களைப் படித்த எனது எண்ணம். மற்றப்படி சாருவின் எழுத்துக்கள் போலி என்றும் நான் சொல்லவில்லை. "சுரேஷ் குமார இந்திரஜித், எஸ்.ராமகிருஷ்ணன், கோணங்கி, ஜெயமோகன் போன்ற அவரது சமகாலத்து எழுத்தாளர்களுடன் ஒப்பிடும்போது சாருவின் எழுத்துக்கள் மிகச் சாதாரணமானவை என்பது என் எண்ணம்". என்பதையே கூட்டத்தில் நான் தெரிவித்தேன். ஏற்கனவே சென்னையில் புக் பாயிண்ட் அரங்கில் - 3-7-99 அன்று நடைபெற்ற சாருநிவேதிதாவின் 'நேநோ' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் நான் படித்த கட்டுரையின் கருத்துக்களே அவை. சாருவின் சிறுகதைகள் பற்றிய எனது வாசிப்பும், அபிப்பிராயங்களும் அடங்கிய அந்தக் கட்டுரை காலச்சுவடு (28) ஜனவரி-மார்ச் 2000ல் வெளியாகியுள்ளது. பக்கம் எண் 32. அதில் சாருவின் 'பிளாக் நம்பர் : 27 திரிலோக்புரி' என்ற கதை சமீபத்திய மணிரத்தினத்தின் திரைப்படங்களை நினைவுபடுத்துவதாக எழுதியிருந்தேன். அதையே கூட்டத்திலும் எனது கருத்தாகத் தெரிவித்தேன். ஏற்கனவே சங்கர ராமசுப்பிரமணியன் சாருவின் கதைகள் பற்றிய அவரது பார்வையை முன்வைத்து பேசி அமர்ந்திருந் தார். அதுவும் சாருவின் கதைகளுக்கு பாதகமான அபிப்பிராயங்களாகவே இருந்தன. மிகவும் கலங்கிய நிலையில் சாரு தனது கதைகள் எங்களுக்குப் (தமிழ் நாட்டு வாசகர்களுக்கு) புரியக்கூடியவை இல்லை என்றும் புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர் களுக்கே புரியக்கூடியவை என்றும் ஒரு பட்டியல் பெயர்களை உதிர்த்தார். அவரது பெயர் பட்டியலில் சேரன், ஷோபாசக்தி, கற்சுறா ஆகியோரின் பெயர்கள் அடங்கி இருந்ததாக நினைவு. கூட்டத்தில் நகைப் பொலி எழும்பி அடங்கியது. பட்டியலில் கூறியவர்கள் கூட்டத்தில் இல்லாத தைரியத்தில் இப்படிக் கூறு கிறார்களா! சாரு என்று நான் கேட்டேன். தேவதச் சனும் சாரு பேசியதற்கு தனது ஆட்சேபத்தைத் தெரிவித்தார். அவ்வளவே. மற்றப்படி தமிழ்நாட்டில் நடைபெறும் கூட்டங்கள் அலுப்பூட்டக் கூடியவை. பெரும்பாலும் நண்பர்களை சந்திப்பதற் கும், குடிப்பதற்குமே கூட்டங்களில் பலர் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். நானும் அதற்காகவே கூட்டங்களில் கலந்து கொள்கிறேன். இதுவே திருநெல்வேலிக் கூட்டத்திலும் நடந்தது. காலையிலேயே குடிந்திருந் தோம் என்றாலும் காலையில் கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவிக்க குடி எனக்கு ஒரு பிரச்சனை யாக இருக்கவில்லை. மதிய இடைவேளையில் சாரு, நான், ந்றி.கண்ணன் மற்றும் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து குடித்தோம். பிராந்தி கடையில் குடிக்கும் இடம் குழுவலாக இருந்தது. சிகரெட் புகை சூழ்திருந் தது. ந்றி.கண்ணன் பரிமாறிக் கொண்டிருந்தார். காலையில் நடந்த கருத்துப் பரிமாற்றங்கள் காரணமாக சாரு மிகவும் சோர்வுடன் காணப்பட்டார். குடிப்பதற்கு மட்டும் ஏற்ற தனது நண்பன் என்று அவர் என்னைப் பற்றி சொல்லிக் கொண்டார். மதிய அமர்வில் சாரு தனது வழக்கமான அலுப்பூட்டும் நாடகங்களை துவங்கினார். அது தமிழ்நாட்டு கூட்ட பங்கேற்பாளர் களுக்கு மிகவும் பரிட்சயமான விடயம்தான். நாட கத்தை நிறுத்துங்கள் சாரு.மிகவும் அலுப்பாக இருக்கி றது என்று போதையில் எனது ஆட்சேபத்தைத் தெரிவித்தேன். வேறு சில நபர்களும் தங்களுடைய ஆட்சேபத்தைத் தெரிவித்தார்கள். ஏற்கனவே சாரு வின் நாடகத்தால் தமயந்தி உட்பட பெண்கள் அரங்கை விட்டு வெளியே ஓடிவிட்டார்கள். நாடகத் தின் இறுதிக் காட்சியாக சாரு தனது கட்டுரையை கிழித்தெறிந்தார். அரங்கை நடத்திக் கொண்டிருந்த எஸ்.ராமகிருஸ்ணன் "இந்த கட்டுரை கிழித்தெறியும் வைபவம் நான் உட்பட பலரும் செய்வதுதான்.நாங் கள் வீடுகளுக்கு சென்ற பிறகு செய்வதைத்தான் சாரு இங்கே செய்திருக்கிறார்" என்று கூறி அமர்வை நிறைவு செய்தார். ஓம்மாள ஓத்தா அடித்துப் பார்ப் போம் வாடா என்று அழைத்த சாரு அதன் பிறகு ஆவேசம் தணிந்து விறுதே ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தார். இதுவே கூட்டம் பற்றிய எனதுபதிவு.

சாரு எழுதிய பத்தியில் விஷேசம் என்ன வென்றால் அவர் இவ்வளவு நாளும் தனக்கு தக்க வைத்திருந்த 'இலக்கியரௌடி' பட்டத்தை எனக்கு வழங்கிருப்பது மகிழ்ச்சியாகத்தான் உள்ளது.

**லக்ஷ்மி மணிவண்ணன்**
இந்தியா 5-7-2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எக்ஸில் 7,8 வது இதழ்கள் பற்றி சில குறிப்புக்கள் எழுதவேண்டும் எழுதவேண்டும் என்று நினைத்திருந்தேன் எவ்வளவு முயன்றும் முடியாமல் போய்விட்டது. என் கருத்துக்களை ஒத்த குரல்களை 9வது இதழில் இனங்கண்டு கொண்டதில் ஒரு மகிழ்ச்சி. இதழ்-07இல் பிரசுரம் பெற்ற ஸ்ராலினின் முஸ்லிம்கள் மீதான கட்டுரை குறித்தும் நாலுவார்த்தை அவருக்கு எழுத முடியாமலற் போனது உண்மையில் கடும் வருத்தமாயுள்ளது.

ஐரோப்பிய நெருங்கடி வாழ்க்கையில் பம்மாத்தும், போலித்தனங்களும் மலிந்த ஒரு நாகரீக சூழலில் வசித்துக்கொண்டு, இன்னும் மனிதாபிமானத்தை உயிர்ப்புடன் தக்கவைத்துக் கொள்ள ஸ்ராலின் போன்றவர்கள் தீவிரமாக உழைக் கின்றார்கள் என்பதை நினைக்கையில் மனம் ஆனந்திக்கின்றது. அவ்வாறே சக்கரவர்த்தியும் தீய்ந்துபோன தமிழ் முஸ்லிம் உறவின் மேம் பாலங்களென இவ்விருவரையும் நான் காண்கின் றேன். தமிழர்கள் தமிழின் பெருமையையும், தமிழினத்தின் கீர்த்தியையும், காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை துளிர்விடத் தொடங்குகிறது. இங்கு நான் பெயர் குறிப்பிட மறந்த அல்லது பிரபல்யத்தை விரும்பாத எத்தனையோ தமிழ் நெஞ்சங்கள் இக்குரலுடன் சேர்ந்து ஒலிக்கலாம். அவர்களும் வரலாற்றில் நன்றியுடன் நினைத்துப் பார்க்கப்பட வேண்டியவர்கள்.

எக்ஸில்-9 வது இதழின் கவிதைகளில் கற்சுறா, ஜெபாவின் கவிதைகள் ஓரளவு படிக்கும் படியாக உள்ளன. சுகனின் இருகவிதைகளுக்கும் அப்படியொரு இடைவெளி நிரப்பும் பணியை எக்ஸில் எடுத்துக் கொண்டு சிரமப்பட்டிருக்கத் தேவையில்லை எனப்படுகின்றது. "நகரசபை நீதிமன்றத் தீர்ப்பு" ஒரு மேடை நாடகத்துக்கான முற்குறிப்புகளா - அல்லது உடையாடலா- புரியவில்லை. சுகனின் பார்வையில் அது கவிதையாக இருந்துவிட்டுப் போகட்டும். அதை ஏன் எல்லோரும் படிக்க வைத்து சித்திரவதைப் படவேண்டும்.

சிறுகதைகளில்- "முன்னைஇட்ட தீ" கதைப்பொருள், வேறுபட்டு சித்தரிக்கும் ஒருகதை. மொழிவளத்தில் உமா சற்று கவனம் செலுத்தினால் தேர்வடைய வாய்ப்புண்டு. "புலம்பெயர்ந்தவன்களின் புலம்பல் வழக்கமான முட்டைக் கலவைதான். அதில் வியக்கும்படி எதுவுமில்லை. சாருநிவேதிதாவின் "கோணல் பக்கங்கள்" பல்சுவை ததும்பும் ஒரு பத்தி. அவரின் பாலியல் சுதந்திரத்துக்கு இடையூறாக கதைப்பவர்களை, எழுதுபவர்களை ஒருபிடி பிடிக்க இப்படியான பத்திகள் தேவைதான். "ஸீரோடிகிரி" படிப்பதற்கு முன் பத்துக்கு மேற்பட்ட விமர்சனங்களை ஆங்காங்கு படித்து பிரமித்து, மிகுந்த ஆவலுடன் அதை வாங்கிப் படித்த பிறகுதான் இனி பிரமிப்புகளுடன் விமர்சனங்களை படிப்பதில்லை என்பது டன்-நூலைப்படிப்பதற்கு முன் விமர்சனங்களைப் படிப்பது வீண்வேலை என்பதையும் அறிந்து கொண்டேன்.

ஆண்குறி, பெண்குறி சண்டைகளுக்கும், அதைப் பிரயோகிப்பது எப்படி என்ற வியாக்கியானங்களுக்கும், ஒரு புத்தகம் இலக்கிய அந்தஸ்துடன் தேவையா என்பதே என்கேள்வி. அதையும் மீறி சத்தீான சில விவாதங்களும், விமர்சனங்களும் எக்ஸிலில் தொடர்ந்து வருவது மிகுந்த ஆறுதலாய் உள்ளது.

**ஓட்டமாவடி அறபாத்**
இலங்கை, 2000-06-23

எக்ஸில் இதழ் எண்-09னை வாசித்தேன். இதற்கு முன் இதழ்-04 னையும் வாசித்துள்ளேன். ஒரு வித மீள் பார்வையுடன் கூடிய விசாலத்தன்மை எக்ஸில் வாசிப்பின் மூலம் கிட்டுகிறது.

இதழ் எண்-09 னை பொறுத்தமட்டில் உள்ளடக்கமும், கருத்தும் புதிய நீட்சியை அடைந்துள்ளன. கற்சுறாவின் கவிதையில் பிரமை, கனவு, அதன் வழி ஏக்கங்கள் வட்டமிடுவதாக பதிவாகியுள்ளது. திவாகரின் 'புதிய ஏற்பாடு' நல்ல கவிதைக்கான ஆற்றலை மெய்ப்பிக்கின்றது. கோணல்பக்கங்களில் சாருநிவேதிதா, தனது மனவெப்பங்களை பரவலாக கொட்டி 'கூலிங்' காகியுள்ளார் போலும். எல்லாம் நன்றாகச் சொல்லி (எழுதி)க் கொண்டு போனவர் 'கொசுறு'வாக பாலகுமாரனை ஒரு வாங்கு வாங்கியது அவரளவில் திருப்தியை ஏற்படுத்தவோ என்னவோ?

ஷோபாசக்தி கதைத்த (அவர் அப்படித் தானே சொல்லியுள்ளார்) அ.மார்க்ஸின் 'ஓர் இடைமறிப்பு' இதழுக்கு கனம் சேர்த்துள்ளது. சில விடயங்கள் புதிதாக கிடைத்ததன் பொருட்டு 'எக்ஸில்' பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புகள் அதிகளவில் (நான் இங்கு தமிழ்நாட்டைச் சேர்ந்தப் படைப்பாளிகளைச் சுட்டுகிறேன்.) இடம் பெறாதது குறையே. இனி வரும் இதழ்களில் இது தவிர்க்கப் படுமென நம்புகிறேன். அடுத்த இதழ் காண ஆவலாக (பழைய வார்த்தையாக இருந்தாலும்) இருக்கிறேன்.

**சூர்யநிலா**
சேலம்

எக்ஸிலை வெளியூர் நண்பர் ஒருவர் வாங்கிச் சென்றுவிட்டார், ஒரு மாதமாகியும் கைக்கு வரவில்லை, அதனால் இதழ் குறித்து எனது கருத்துக்களை தற்சமயம் எழுத வாய்க்கவில்லை. பெண்ணியம் குறித்து இதழில் செலுத்தப்படும் கூடுதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனம் கொஞ்சம் ஆறுதல்தான். எனது புரிதல் சரியெனில், 'பெண்ணியம்' இதுவரையிலான/ இன்றைக்கான எல்லா கோட்பாடுகளையும் உள்ளடக்கிய ஒன்றாகவே இருக்க முடியும். சரியாக சொன்னால், 'ஆணை'-க்கூட பெண்ணியம் வழியான கோட்பாட்டு அடிப்படையிலேயே விடுவிக்க முடியும் என்று எண்ணத் தோன்றுகிறது. பெண்ணியம் வரையறுக்கவும், புரிந்து கொள்ளவும் சிக்கலான ஒரு கோட்பாடுதான். 'அதிகாரம் எங்கும் விரவியிருக்கிறது' என்று பூக்கோ சொல்வதின் தொனி, பெண்ணின் மீதான அதிகாரத்தையும்கூட நியாயப்படுத்திவிடும் ('Power is everywhere, and so ultimately nowhere' – N. Hartsock என்கிற பெண்ணியவாதி சுட்டுகிறாராம் பூக்கோ பற்றி விமர்சனத்தில்). இந்த நூற்றாண்டின் மிக முக்கியச் சிந்தனைகளான மார்க்சியம் பெண் விடுதலையை சமூக விடுதலைக்குள் வைத்து பார்க்கிறது என்றால், பிராய்டியம் தனது சொல்லாடலை முழுக்க ஆணை நோக்கியே முன்வைக்கிறது. உளவியல் பெண் மனம் குறித்து அதிகம் யோசித்ததாக தெரியவில்லை. விஞ்ஞானம், வளர்ச்சி, தொழில் நுட்பம் போன்றவற்றை பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவை ஆணிய வேட்கை, நுட்பங்களின் வெளிப்பாடுகள்தான். இதனைத் தவிர்த்து கீழைத்தேய மரபுகளை பார்த்தால், அவற்றிற்குள் பெண் பற்றிய பதற்றமும், பயமுமே மிஞ்சியிருக்கிறது. இந்த 'சாது'க்களின் பதற்றம் 'சக்தி' கொண்டாட்டங்களாக, பெரிய கருத்து வெளிக்குள் தள்ளுகிறது பெண் உடலை. பெண்ணோ/ஆணோ தன்னை மறுத்துக்கொள்வதிலும், தனது தன்னிலைகளை இனங்கண்டு, அதிலிருந்து வெளியேறுவதினால் மட்டுமே, இன்றைய சமூக அமைப்பின் இறுக்கத்திலிருந்தும், வன்முறையிலிருந்தும் விடபட்டு உயிர்ப்பிற்கான இயக்கத்தை கொள்ள முடியும் போலிருக்கிறது.

ஆக, பெண்ணியம் என்பது இந்த நூற்றாண்டிற்கான ஒரு முக்கிய சிந்தனையாக பரிணமிக்கும் என்றே தோன்றுகிறது. ஒருவேளை இது 'ஹேஸ்யமா'கக்கூட இருக்கலாம். காரணம், இன்றைக்கான நவீன சிந்தனைகளாக அறியப்பட்டவற்றில், 'அறிவிற்கு' எதிரான, 'ஒழுங்கமைப்பிற்கு எதிரான சிந்தனைகளை, குறிப்பாய் பின் நவீனத்துவம், பின் காலணீயம் மற்றும் Subaltern Studies ஆகியவற்றில் பங்களிக்கும் பெண் 'அறிவுஜீவிகள்' உருவாக்கும் கருத்தாடல்கள் எதிர்கால 'அறிவுலகத்தை' நிச்சயமாக பெரிய அளவில் பாதிக்கும் என்றே தோன்றுகிறது. அவ்வகையில், 'பெண்ணியம்' குறித்த சிந்தனைகள் தொகுக்கப்பட வேண்டியவையாக, தொடரப்பட வேண்டியவையாக இருக்கிறது. எக்ஸில், உயிர்நிழல் (நிறைய வருவதாக அறியமுடிகிறது, சக்தி, அம்மா எப்படி, அவற்றை பார்க்க வாய்க்கவில்லை) இப்படியாக புலம் பெயர் இலக்கியத்தில் காத்திரமானதாக 'பெண்ணியம்' குறித்த பிரக்ஞையுடன் இதழ்கள் வருவது, ஒரு 'முன்னுணர்வு"தான் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டில் 'அமீபா'-விற்கு பிறகு ஒன்றையும் காணும்.

பெண்ணியம் குறித்து பல வரையறைகள் இருக்கிறது என்ற போதிலும், நான் புரிந்துகொண்ட வகைக்கு, பெண்ணியம் என்பதை

1.

ஆண்/பெண் பெயர்களை உடலிலிருந்து விடுவிக்க வேண்டும். பெரும்பாலும் பெயரைக் கொண்டே, ஆண், பெண் வேறுபாடுகள், பிம்பங்கள் உருவாக்கப் படுகிறது. இலக்கண நூல்கள் எல்லாம் மொழியை பால் அடிப்படையில் பிரித்திருப்பது, உடலற்ற நிலையிலும், பெண்ணை கருத்துப்புனைவாக உணர்ந்து கொள்வதற்கான உத்திதான் அதிலும் அரபி போன்ற மொழிகளில் – பொருட்களுக்கே, பால் பாகுபாடு உண்டு. பாருங்கள் 'கலம்' (பேனா) எழுத்தாணி என்பது ஆண்பாலாம், கோப்பைகள் (கப்ஸ்) பெண்பாலாம்.

2.

ஆண்/பெண் உடல்களை உருவகமாக்கிக் கொண்டு, அதன் எல்லைவரைகளை (lanscape) உருவாக்க வேண்டும். அதாவது, ஆண்/ பெண் பாகுபாடு என்பதற்கான உறுப்பு வித்தியாசங்களை முதன்மை படுத்தாது, அதன் வரைபட வித்தியாசங்களை முதன்மை படுத்தலாம். அதாவது குவித்தல், பரவுதல் என்பதாக.

3.

ஆண் என்பது அதிகாரம்/வன்முறை. பெண் என்பது உயிர்ப்பு/காதல். ஆண் மையத்தில் குவித்தல். பெண் வெளிநோக்கிக் கிளைத்தல். ஆண் விறைப்பின் வதை. பெண் நெகிழ்வின் இதம். என்பதாக மொழியின் தன்மைகளை பாகுபடுத்தலாம்.

4.

மார்க்சியம், உளவியல், மொழியியல், தலித்தியம், விளிம்பு நிலை ஆய்வு, பின்னை நவீனத்துவம், பின் காலணீயம், சொல்லாடல் ஆய்வு, சிதைவாக்கம் என எல்லாவற்றையும், அதன் பன்மைத் தன்மை மற்றும் வித்தியாசங்கள் அடிப்படையிலான ஒரு கோட்பாடாக 'பெண்ணியத்தை' மறுவரையறைக்கு உட்படுத்தலாம்.

ஆக, பெண்ணியம் அதிகார/ஒற்றை மைய வாழ்தலுக்கு எதிரான ஒரு வாழ்தல் முறை. இதுவே, எல்லாவித ஒடுக்குமுறைக்கும் எதிரான உயிர்ப்புள்ள ஒரு கலகம் எனலாம். இதன்பொருள் ஏகாதி பத்தியம், பொருளாதார ஒடுக்குமுறை ஆகியவற்றை மறுதலிப்பதல்ல, அதனையும் உள்ளடக்கியதே.

பெண்ணியம் குறித்து அதிகமாக எக்ஸில் கவனம் செலுத்துவதால், எனக்கு புரிந்து சில குறிப்புகள். இவை முழுமுதலானவை அல்ல, சமீப காலங்களில் எனது வாசிப்பு எனக்குள் நிகழ்த்தியிருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் வினையின் விளைவான தடப்பதிவுகளே இவை. இவற்றை பற்றி இன்னும் ஆழமாக யோசித்துக் கொண்டிருக்கிறேன். உடல் அரசியல் பற்றிய எனது குறிப்புகளைக் கொண்ட அந்த தொகுப்பும், தேடலும் கூட பெண்ணியத்திற்குள் உள்ளடங்கிய ஒரு கூறாகவே உணர்கிறேன். அதனை வாசிக்கும் பிறிதொரு வாசிப்பாளனின் கையில் .... அதன் முடிவு.

**ஜமாலன்.**
றியாட்

எக்ஸில் இதழ்களில் ஒன்பதாவது இதழே எனக்கு வாசிக்கக்கிடைத்தது. நூல்கள் மற்றும் சிற்றேடுகளை வாசிக்கும்போது நாம் அன்னத்தைப் போல் செயற்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. காரணம் அந்நூல்களின் உட்கிடக்கைகள் யாவுமே சிறப்பானதாக அமைவதில்லை. அன்னக்குருவி நீரைவிடுத்து பாலை மட்டும் பருகுவதைப்பொலத்தான் நாமும் அந்நூற்களில் தக்கதை எடுத்து தகாததை நீக்கி வாசிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. ஆனால் எக்ஸில் இதழை விரித்துப்படித்தேன். சுலபமாக சலிப்புத் தட்டும் என் மனதுக்கு எக்ஸிலை வாசித்துக் கொண்டு செல்கையில் அசரீதி சற்றேனும் ஏற்படாதவாறே மனதுக்கு இதமாக இருந்தது. ஒரே மூச்சில் எக்ஸிலை படித்து முடித்தாயிற்று.

பல புதிய, விரிந்த தளத்திலாலான முற்போக்குவிடயங்களை எக்ஸில் மூலம் என்னால் அறிய முடிந்தது. இலக்கியம் தேடும் இதயங்களை ஆற்றுப்படுத்துவதைப் போல எக்ஸிலில் இலக்கிய நூல்களையும், சிற்றேடுகளையும் முகவரியுடன் அறிமுகப்படுத்தி இருப்பது எக்ஸிலின் மற்றுமொரு சிறப்பாகும்.

எக்ஸில்-09ல் வெளியான கவிதைகள் பற்றிக்கூறுகையில்... கனவுகளையே வாழ்க்கையாகக்காணும் கற்சுறாவின் கவிதையில் ஈழத்தின் யுத்தக் கெடுபிடிகளில் சிக்கித்தவிக்கும் மக்களின் யதார்த்த வாழ்வின் அர்த்தங்கள் இழையோடிக் கிடக்கிறது. அதுதவிர ஜெபாவின் கவிதையும் பேசும்படியாக உள்ளது. எக்ஸிலின் கனதியும், ஆக்கத்திறனும் அதன் இருப்பை வலுவூட்டுவதாய் இருப்பது எம்மனதுக்கு ஆறுதல் அளிக்கிறது.

**பாலைநகர் – ஏ.எச்.எம்.ஜிஃப்ரி**
(இலங்கை)

இலங்கை அரசியல் குறித்து... எம்.ஆர். ஸ்ராலின் எழுதியது பற்றி:-

இலங்கை முஸ்லிம்களை ஒரு தனித்துவமான தேசிய இனமாக ஏற்றுக்கொள்வதை விடுத்து தொடர்ந்தும் அவர்களது இவ்வுரிமை இரு சகோதர இனங்களால் மறுக்கப்பட்டு தமிழ்தேசியத்தினுள்ளேயே மூடி மறைக்கப்படுகின்ற நிலையில் சகோதரர் ஸ்ராலின் திறந்த மனதுடன் முஸ்லிம்களைப்பற்றி எழுதியிருப்பது இலங்கை இனவியல் வரலாற்றில் வித்தியாசமான முற்போக்கானதொரு திரும்பு முனையாகும்.

"இரு பெரும் சமூகங்களின் முன்னிறுத்தல்களிலும் இருந்து கண்டு கொள்ளப்படாமல் எங்கோ ஒரு மூலையில் ஏதோவொரு மூன்றாம் தர சமூகமாக கணிக்கப்பட்டு வந்த பிரிவினரே இலங்கை முஸ்லிம்களாவர்"

என அரசியல் உரிமைகள், இனத்துவ அடையாளங்கள் அற்றிருந்த சமூகத்தின் நிலைமையை அப்பட்டமாக சகோதரர் வெளிக் காட்டுகின்றார். முஸ்லிம்களின் இலங்கைத் தொடர்பை ஏழாம் நூற்றாண்டாக குறிப்பிட்டிருப் பினும் அவர்களது மூதாதையர்களாக அராபிகளின் தொடர்பு அதற்கு முன்னரேயே ஏற்பட்டிருந்தது கவனித்திற்கொள்ளத்தக்கது.

மேலும் முஸ்லிம்களுக்கெதிரான சகோதர சமூகத்தின் நெருக்கடிகள் 1700 களில் ஆரம்பித்ததோடு அதற்கு முன்னரேயே இலங்கையை காலனித்துவம் செய்த அந்நியர்களான போர்த்துக்கேயர்களால் சிலுவை யுத்தத்தின் தொடராக 1500 களில் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அது தொடர்ந்து ஒல்லாந்தர்களாலும் ஆங்கிலேயர்களாலும் முன் னெடுக்கப்பட்டு இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் சிதறடிக்கப்பட்ட முஸ்லிம்கள் தம்மை ஒரு தனித்தேசமாக கட்டி எழுப்பமுடியாமல் இலங்கை இனவாத அரசியல் கிணற்றின் மிகவும் ஆழமான பகுதியினுள் விழுந்துள்ளனர்.

ஏற்கனவே இனவாதப்படுகுழியில் விழுந்த இரு சகோதர சமூகங்களும் தம்மை விடுவித்துக் கொள்ளும் உக்கிரமான இராட்சதப் போராட்டத்தின் மத்தியில் அச்சமூகங்களின் விடுதலையின் போது அப்போராட்டத்தின் இரும்புக்கால்களின் கீழ் பிரதேசவாதத்தாலும் சந்தர்ப்பவாதத்தாலும் உறுதியான நிலைப்பாட்டுக்கு வர முடியாமல் தம் இருப்பைத் தொலைத்துவிடாமல் இருக்க அச்சமூகம் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தின் மூலம் தம் ஸ்திரத்தன்மையை பாதுகாத்துக்கொள்ள முடியும் என கட்டுரையாளர் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

அத்தோடு இரு சகோதர சமூகங்களுடனான முஸ்லிம் உறவையும் அதன் போக்கையும் அதன் யாதார்த்தபூர்வமான பின்னணிகளுடன் ஆராய்ந்திருப்பது இனத்துவரீதியான சிந்தனைப் போக்கில் தேசிய சர்வதேச மட்டத்தில் புதியதொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனைக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஸூஹைர்**
சாய்ந்தமருது15-02-2000

எக்ஸில்-9 இல் கவிதைகள் அனைத்தும் பிரமாதம் என்று சொல்லமுடியாவிட்டாலும் காத்திரமானவைதான். கற்சுறாவின் கவிதையை சிலாகித்துப் படித்தமைக்காக வீட்டில் செம திட்டு. திவாகரின் ஒரு "பஞ்சமனின் மொழியில்" கவிதை என்னைத் தொட்டது. கலாமோகனின் "நிஷ்டை" படிக்கக் கிடைக்கவில்லை. சில கதைகளை இங்குள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊடாக படிக்க முடிந்தது. புகலிடச்சூழலில் கலாமோகன் சிறுகதைகள் எவ்விதம் நோக்கப்படுகிறது என்பதை நிஷ்டை விமர்சனம் ஊடாக அறிய முடிந்ததில் மகிழ்ச்சி. எனக்கென்னவே கலாமோகனின் சிறுகதைகள் அப்படியொன்றும் விரசமானதாகத் தோன்றவில்லை. சில சமயம் நிஷ்டையை முழுமையாகப் படித்தபின் அத்தகையதோர் உணர்வு ஏற்பட்டுவிடும் என்பதை இப்போதே நான் புறம் தள்ளி விட்டேன். உண்மையில் ஒரு படைப்பாளியின் எத்தகைய படைப்பென்றாலும் அதை எடுத்த எடுப்பிலேயே தங்களுக்குப் பிடிக்கவில்லை அல்லது கவரவில்லை என்பதற்காக அதை ஒரு படைப்பே இல்லை என்று தட்டிக் கழிக்கும் உரிமையை இவர்களுக்கு யார் கொடுத்தது? புகலிடச் சூழலில் கலாமோகன் காத்திரமான படைப்பாளிதான் அதனைப் புறம் தள்ளி அவரது சிறுகதைகளை முற்றாக நிராகரிக்க முயல்வது வேடிக்கையானது.

சாருநிவேதிதாவின் குறிப்புகள் சுப்பிரமணிய சுவாமியின் அறிக்கைகள் போன்று நகைப்பிற்கு நல்ல தீனி. தன்னைக் கமலுடன் ஒப்பீடு செய்ததும் தான் சாருவின் உதடுகள் நடித்திருப்பதன் காரணி எனக்குப் புலனாகியது. தன்னைத்தானே பெருமை யடித்துப் பீற்றிக் கொள்வதில்தான் மனிதர்களுக்கு - அதிலும் பல எழுத்தாளர்களுக்கு - எத்தனை அலாதிப்பிரியம். இதற்குச் சாருவும் விதி விலக்கல்ல. சரி ஜெயமோகனின் முதுகு சொறியும் அளவுக்கு சாருவுக்கு என்ன நடந்தது. இதனை அவர் தெளிவாக விளக்கவேண்டும்.

சிறுகதைகள் இரண்டும் தென்னிந்திய மசாலா சஞ்சிகைகளை நினைவூட்டக்கூடியது. மசாலா வகையறாக்கள் நினைவில் நிலைத்திருக்கக் கூடியவையல்ல.

வ.ஐ.ச.ஜெ. இற்கான பதில் நேரத்தை விரயமாக்கும். ஏனய்யா! உங்களுக்கு பச்சோந்திகள் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லையா? ஒரு பச்சோந்திக்கு எக்ஸில் போன்ற இதழில் இரு பக்கங்கள் ஒதுக்கி இருப்பது, எங்கே உங்களுக்கும் பக்கங்களை நிரப்ப வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டு விட்டதோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது. நீங்கள் இருந்துதான் பாருங்கள் வ.ஐ.ச.ஜெ, இலங்கையில் முஸ்லிம்களுக்குப் பிரச்சனையா? எந்த முட்டாள் சொன்னது? என்று கேட்கும் காலமும் வரும். அழியட்டும் என் தமிழ், அழியட்டும் என் தலைமை என்பதெல்லாம் கவிதையில்தான் அழகு. கவிதைக்கு பொய்தானே மெருகு. வ.ஐ.ச.ஜெ, மனோநிலை குன்றாமல் ஏற்கனவே இந்த நோய் ஏற்பட்டிருப்பின் இன்னமும் அதிகரிக்காமல் இருந்தால் போதும்.

**சத்திரியன்**
பூந்தோட்டம், வவுனியா 12.08.00

என்னால் எழுத முடிந்தது.

அண்மையில் EXIL சில படிக்கக் கிடைத்தது. மிக சிரமப்பட்டுத்தான் அதிகமான சிறு பத்திரிகைகள் கைகளில் வந்து சேருகின்றன.

கற்சுறாவும் கவிதை எழுவதாய்ச் சொல்லும் பிறரும் வீணாய் தாள்களை அசிங்கப்படுத்தியிருப்பது சந்தோசத்துக்குரிய விசயமாய் என்னால் கருதமுடியவில்லை.

கலாமோகனுடைய "நிஷ்டை" பேயன் பலாப்பழத்தைப் பார்ப்பது போல் விமர்சித்து முடித் திருப்பதாய் "அறுவடை நம்பி"யின் எழுத்துக்களில் இருந்து காணக்கிடைத்தது. நல்லது இப்படித்தான் "ஆசாக்கோல்கள்" மாற்றப்பட்டு தும்புக்கட்டின் தொழிலுக்காய் வற்புறுத்தப்படுகிறது. பாவம் கலாமோகன்!

சி.சிவசேகரத்திடம் நிரம்பிக்கிடக்கும் குப்பைகளைக் கிளறிவிடும் சேவலாய் சுகன். மிக உன்னதமான "வால்பிடித்தல்". ரஜினிகாந்தின் பக்தனா வதற்குரிய சகல தகுதிகளும் சுகனிடம் இருக்கிறது. முயற்சி செய்து பார்க்கலாம் சுகன்.

வ.ஐ.ச.ஜெயபாலனை சரியாக இனங் கண்டிருக்கும் "கற்சுறா". தமிழ், முஸ்லிம் இரண்டு இனத்துக்குமான தேசிய கதாநாயகன். நல்ல வேடம். அக்கரைப்பற்றில் அவருடைய "உயிர்த்தெழுகிற கவிதை" நூல் வெளியீட்டு விழாவில் உரை யாற்றுவதற்குப் பதிலாக கண்ணீர் வடியும் வரை அழுது, விழாவுக்கு வந்த எல்லோரையும் அழவைத்த நடிப்பு எனக்கு இன்னும் மறந்த பாடில்லை. ஒரு பாம்பு வாங்கிக் கொடுக்கலாம் "ஜே" க்கு. அற்புதமாய் ஆட்டுவார்.

**RIYAS QURANA**
AKKARAIPATTU



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "எக்ஸில்"

# வாசக/எழுத்தாளர்களுக்கு

பேரினவாத அரசிற்கெதிராய் எழுந்த தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது தமது சுயநிர்ணய உரிமையை வேண்டி தமிழீழ கோரிக்கையை முன்வைத்தது. காலப்போக்கில் தமிழ் பேசும் முஸ்லிம்களின் தனித்துவத்தை நிராகரிக்கும் பெருங் கதையாடலாய் இத்தமிழீழ கோசம் மாறிப்போனது சோகமான வரலாறு.

அது மட்டுமன்றி வைச, வேளாள கருத்தியலால் கட்டுண்ட தமிழ்த் தேசியம் முஸ்லிம்களின் வாழ்வுரிமையையே கேள்விக்குள்ளாக்கி வடக்கிலிருந்து ஒருலட்சம் முஸ்லிம்களை தென்னிலங்கை நோக்கி விரட்டியடித்ததோடு கிழக்கில் பாரிய படுகொலைகளை நிகழ்த்தி முஸ்லிம்களின் இருப்பையே அச்சுறுத்தியது. இன்னிலையில் இலங்கை முஸ்லிம்கள் தங்களை ஓர் தேசிய இனமாக அடையாளம் காண்பதோடு தங்கள் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்தி வருகின்றார்கள்.

மேற்படி இனசுத்திகரிப்பு நடத்தப்பட்டு இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தோடு பத்துவருடங்கள் கடந்துவிட்டமையை நினைவில் நிறுத்தி எக்ஸிலின் அடுத்துவரும் 11வது இதழை "முஸ்லிம் தேசியத்தின் முழுமையான குரல்களாக" பதிவு செய்ய எண்ணுகிறோம்.

எனவே முஸ்லிம் தேசியமானது கடந்து வந்த பாதையின் வரலாற்று நிகழ்வுகள், சம்பவங்கள் ஆய்வு பார்வைகள், ஓவியங்கள், நிழல்படங்கள்... என்பவற்றோடு இலங்கை முஸ்லிம்களின் வாழ்நிலை பதிவுகளாக ஆக்க இலக்கிய பிரதிகளையும், இலக்கிய விமர்சனங்களையும் உங்களிடமிருந்து வேண்டிநிற்கிறோம். டிசம்பர் இறுதிவாரத்திற்குள் அனைத்து விடயதானங்களும் எமக்கு கிடைக்ககூடியதாக அனுப்பி வைக்கப்படுவது விரும்பத்தக்கது.

நன்றி.

தொடர்பு முகவரி:-

**EXIL**
**B.P.204**
**92604 Asnieres Cedex**
**France**
E-mail : exil-inba@infonie.fr

❑ **குறித்த எக்ஸிலின் 100 பக்கங்களும் முஸ்லிம் தேசியத்தின் முழுமையான குரல்களாக பதிவு செய்யப்பட வேண்டுமென்பதால் எமது தொடர்கட்டுரைகள், பத்திகள் யாவும் அடுத்த இதழில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகிறது என்பதை வாசகர்கட்கு முன்கூட்டியே அறியத்தருகிறோம்.**

எக்ஸில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Tamil Ini 2000 = Euro2000

## -கற்சுறா-

அதிகபட்சமாக அனைத்து சிறு சிறு செயற்பாடுகளையும் சரி இதுவரையான எதிர்க் குரல்களையும் சரி ஒட்டு மொத்தமாக விழுங்கி அதனூடு நிகழும் அழிவில் தனது தடயத்தைப் பதித்து இதுதான் வரலாறு, இதுதான் இது வரையான அனைத்து இலக்கிய முயற்சிகளுக்குமான தீர்வு, நாம்தான் அதன் வழிகாட்டி என்பதாக என்றென்றைக்குமான முடிவாக வைப்பதற்கு அனைத்து அதிகார சக்திகளும் ஒன்று கூடுகிறது தமிழ் இனி 2000 என்ற பெயரில். இந்தத் தலைப்பும் இதைத் திட்டமிடுபவர்களும் அவர்களின் பின்னணியும்தான் எமக்கு அதன் மீதான எதிர்ப்பார்வையை வெளியில் தெரிவிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஸ்ரீராம் சிற்ஸ் என்ற பெரு நிதிநிறுவன(சீட்டுக் கொம்பனி) ஆதரவில் காலச்சுவடும் சரிநிகரும் இணைந்து நிகழ்த்தும் இந்தத் தமிழ் இனி 2000 மிகப் பெரிய பணத்தொகைச் செலவில் பெருந் திரு விழாவாக நடைபெற உள்ளது. இதன் அமைப்புக் குழுவின் அமைப்பாளர்கள், இந்தியா, இலங்கை, ஐரோப்பா, கனடா... என்று உலகம் பூராவும் உள்ள நாடுகளில்(ஒருவர்-இருவர்) இருந்து தெரிவு செய்யப்பட்டு குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொருவரையும் அவர்களோடு மிக முக்கிய செயற்பாட்டாளர்களான காலச்சுவடு கண்ணன், சுந்தரராமசாமி, சேரன் ஆகியோரையும் இனம் காண்பதன் மூலம் தமிழ் இனி 2000 பற்றி இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

காலச்சுவடு, காலங்காலமாக பார்ப்பனீய கருத்தாக்கத்துடன்- இன்றைக்கு நேரடியாகத் தெரிவிக்க முடியாதிருப்பினும்கூட- தனது ஆதிக்கத்தை தொடர்ந்து இலக்கியத்தில் செலுத்தி வந்துள்ளது. தமிழ் நாட்டில் இருக்கின்ற சிறு பத்திரிகைச் சூழலை அது விழுங்கிக் கன காலமாகிவிட்டது. காலச்சுவட்டில் எழுதுபவன்/ள் தான் சிறந்த இலக்கியவாதி என்ற ஒரு தர்க்கத்தையும் மறைமுகமாகக் கொடுத்து விட்டிருக்கிறது. வளர்ந்து வருகின்ற தலித் எழுச்சி என்பதனை மட்டுமல்லாது தன்னுடைய இருப்பிற்கு எதிராக எழுகின்ற அனைத்து கருத்தாக்கங்களையும் என்ன முறையிலாவது மழுங்கடிக்க வேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகின்ற போக்கை அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அதற்காகவே ஒவ்வொரு கட்டத்திலும் அது ஒவ்வொரு ஆதிக்க சக்திகளை அல்லது அதற்கு துணை போகக் கூடியவர்களின் துணையை நாடுகின்றது. அந்த வரிசையில் இன்றைக்கு சேரனை கண்டு பிடித்துள்ளது. தலித்தியத்தின் மீது காறி உமிழ்ந்து வந்த காலச்சுவடு பின்நவீனத்தினையும் தலித்தியத்தையும் விளிம்பு நிலைச் செயற்பாடுகளையும் ஐரோப்பிய சரக்கு என்று சொல்லி இலகுவாக கண்டு கொள்ளாதுவிட்டது. அதையும் மீறி வளர்ந்த தலித்தியத்தைக் கண்டு காய்ச்சல் (ஜுரம்) பிடித்த காலச்சுவடு அவ்வப்போது "நானும் பேசுகிறேன் தலித்தியம்" போக்கில் போனாலும் ஒட்டு மொத்தமாய் குறிவைத்தடிக்க நல்ல காலம் பார்த்திருந்தது. காலச்சுவட்டின் பிதா சுந்தர ராமசாமி இலக்கியத்தின் தந்தை என்ற பட்டம் பெறத் துடிப்பதை ஒவ்வொரு காலச்சுவட்டின் பக்கங்களும் எமக்குத் தெரிவிக்கிறது. "பிள்ளை இல்லா வீட்டில் கிழடு துள்ளி விளையாடிச்சாம்" கணக்காய் சாமியும் இருக்க சாமிட தோல் முட்டினாலே பூர்வ ஜென்மத்திற்கு இலக்கியம் வாசிக்க எழுதத் தேவையில்லை என்ற நினைப்பில் உலகம் பூராவும் உள்ளவன் எல்லாம் பறந்து திரிகிறான்.

இன்றைக்கு 20 வருசத்திற்கு மேலாக யுத்தத்துக்குள்ள கிடந்து அடிபட்டு, சுடுபட்டு வாழ்கையை இழந்து போய் எல்லாவற்றையும் வெறிச்சு வெறிச்சு பார்த்துக்கொண்டு நலமடித்த மாடுகளாய் நாங்கள் நடமாடிக்கொண்டு திரிகிறோம். "ஐயோ! ஈழ யுத்தமா? நாங்களும் தானே பேசுகிறோம்" என்பதாய் அண்மைக் காலச்சுவடுகள் பேசுகிறது. (நாய்களே வெடிச் சத்தம் தெரியுமாடா உங்களுக்கு! தெரிந்தால் இப்பிடியெல்லாம் எழுதிக் கொட்டமாட்டீர்கள்.) கடைசிக் காலச்சுவட்டில் ஈழத்துக் கடிதங்கள் என்று சொல்லி "கேட்டிருப்பாய் காற்றே" என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொஞ்சக் கடிதங்கள் பிரசுரித்திருந்தார்கள். ஒரு வாசகி/ வாசகனுக்கு அவையெல்லாம் ஒருவன் தான் எழுதியவை என்பதைப் பிடிப்பது ஒரு கஸ்ரமான காரியம் அல்ல. ஈழத்தின் துயர்க்குரல் வெகுஜன ஊடகங்களில் புறக்கணிப்பதால்தான் பிரசுரிக்கிறார்களாம். ஆருக்கடா கதை விடுகிறியள்? அதைவிட தனிப்பட்ட/அரசியல் காரணங்கள் குறித்து எழுதியவர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்கிறான்கள். தனிப்பட்ட/ அரசியல் காரணங்கள் எழுதியவனுக்கா? காலச்சுவட்டிற்கா?

**"உங்களை நினைக்கும் பொழுது எங்களுக்குச் சிரிப்பு வருகிறது. தெற்கத்திய அரிவாள் வீச்சுக்கும் நாட்டு வெடிகுண்டு எறிதலுக்கும் கோவைக் குண்டு வெடிப்பிற்கும் லபோ லபோ என்று அடித்துப் பரிதவிக்கும் நீங்கள் எல்லோரும் தமிழர்கள் தானா? சூப்பர் சோனிக்குகளும் சிபீர்களும் வானத்தில் வட்டமிட ஏ.கே.களும் ஜி.கே.களும் வெடித்தால் எப்படி இருப்பீர்கள் என்று யோசிக்கிறேன். நாங்கள் காதலில் தோல்வியுற்று தற்கொலை செய்தாலும் கிரைனைற் வெடிக்க வைத்துத் தான் தற்கொலை செய்வோம்."**

என்று எழுதியிருக்கிறான்கள். இந்த வாக்கியத்தை கடைசிவரைக்கும் இலங்கையில் இருந்து ஒருவனால் எழுத முடியாது. கிரைனைற்றை கண்ணால் காணாத ஒருவனும் யுத்தத்தில் அழிந்த ஒரு பிணத்தைத்தானும் காணாத ஒருவனால் மட்டுமே இதனை எழுத முடியும். காலச்சுவட்டு பரம பிதாக்களே! உங்களுக்கு அரிவாள் வீச்சில் இறந்த உடல்களும் சரி, கோவை குண்டு வெடிப்பில் பலியான உடல்களும் சரி எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஏற்படப் போவதும் இல்லை என்று அறிந்து கொள்கிறோம். ஆனால் வன்முறையை,கொலையை தூண்டுவதற்கு ஊசி ஏத்தாமலாவது இருக்கலாம் அல்லவா? உங்களுக்கும் இந்தியா ருடே போல் ஈழப்பிரச்சனை வியாபாரமாகிவிட்டதை உணரமுடிகிறது. தயவு செய்து உங்கள் சேட்டையை நிறுத்துங்கள்.

...இப்படி சமூகத்தில் எது அதிகமாகப் பேசப்படுகிறதோ அதனுடன் தன்னை அணைத்து அதனையும் விழுங்குகின்ற செயற்பாட்டினை பார்ப்பனீய கும்பலான காலச்சுவடு காலங்காலமாக செய்துவருகின்றது. இன்றைக்கு அதுவும் இல்லாமல் போகின்ற சூழலில் அனைத்தையும் காவு கொண்டு உள்ளிழுத்துள்ளது. "எப்படா போவேன், எப்படா போவேன்" என்று அனுஷ்டானம் இருந்த அனைத்து ஜீவிகளும் ஒட்டுமொத்தமாய் காலச்சுட்டின் பாதத்தில் விழுந்து சிவபதமெய்தி விட்டார்கள். ஆனால் இன்றுவரைக்கும் மாற்றுக் கருத்து மாற்றுக்கருத்து என்று ஈழத்திலும் சரி புகலிடத்திலும் சரி அடிக்கடி பேசிவருகின்ற சேரன் அவர்கள் எவ்வாறு இதற்குள் சங்கமமானார்? எப்படி சங்கமிக்க முடிந்தது? சங்கமிப்பில் இன்னொரு ஆதியாய் எப்படித் தோன்ற முடிந்தது?

புகலிடம் பற்றியும், தலித்தியம், விளிம்புநிலைமக்கள் பற்றியும் சேரன் எவ்வாறான புரிதல் கொண்டவர் என்பதை நோக்கின் சங்கமிப்பது சுலபம் என்பதை புரிந்துகொள்ள முடியும். தலித்திய விளிம்புநிலைச் செயற்பாடுகள் குறித்து கண்டுகொள்ளாமல் விட்டதுடன், தான் ஒரு புத்திஜீவி, நான் தான் மற்றவர்களுக்கு அறிவுரைசொல்ல வேண்டும் என்ற நிலையில் இருந்து கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தி தமிழ் இலக்கியத் தலைமையை காவு கொள்வதில் மட்டுமே குறியாக இருக்கிறார், புலம் பெயர்ந்த சூழலையும் அதன் கூறுகளையும் ஆழமாக பார்க்காது, தமிழில் ஏற்கனவே உள்ள 5 திணைகளினூடு 6வது திணையாக புலம் பெயர்ந்த சூழலை உருவாக்குவதனூடு மட்டுமே விளங்கிக் கொண்டுள்ளார் (ஆறாம் திணையும் ஏழாம் திணையும்-அருணோதயம் 2000 /காலச்சுவடு30) சரி அவர் சொல்வது போல் 6வது திணையாக ஏற்றுக் கொண்டால் ஏற்கனவே இருக்கின்ற

கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல்
வயலும் வயல் சார்ந்த இடமான மருதம்
மணலும் மணல் சார்ந்த இடமான பாலை
காடும் காடு சார்ந்த இடமான முல்லை
மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி
என்றிருப்பதினூடு,
சாதியும் சாதி சார்ந்த இடத்தையும்
யுத்தமும் யுத்தம் சார்ந்த இடத்தையும்

எவ்வாறு அழைப்பது என்ற கண்டுபிடிப்பினை ஏன் சிந்திக்காது விட்டார்? என்று ஒரு கேள்வி நம் மனதில் தோன்றுமல்லவா? (அவரால் யோசிக்க முடியாது என்று தெரிந்திருப்பினும்கூட.) சரி அவர் சொல்வது போல் புலம் பெயர்ந்த சூழலை இன்னொரு திணையாகவே கொண்டாலும், பெயர்ந்தவர்கள் அனைவரும் மண்ணைத் தவிர குடை/ கொடி/ஆலவட்டத்துடன் தமிழருக்குரிய அனைத்து கலாச்சார சாக்கடைகளையும் அள்ளிக்கொண்டு வந்து சுற்றி வைத்துவிட்டு நடுவில் குந்தி இருந்துகொண்டு தன் தன் சாதி தேடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலியாணச் சந்தை நடத்துவதையும் மறுப்பதாகிறதே? பாரீசில் உள்ளது போன்று 10மடங்கு அதிகமாக சாதிகளும் கோயில்களும் சண்டைகளும் கனடாவில் இருக்கின்ற போது 6வது திணையாக புலம் பெயர்ந்த சூழலை ஒன்றாக வரித்துவிடுவது ஒரு இன்ரர் லெக்சுவலுக்கு அழகல்ல. பாரீசிலேயுள்ள கோயில்கள் இந்து பாசிசக் கொடியுடன் தேர் இழுப்பதனையும் அவர் அறியாமல் இல்லை. இவ்வளவும் அறிந்த சேரன் இப்படிச் சொன்னது ஒரு குசும்பாகக் கொள்ளலாமா?

புலம் பெயர்ந்தும் சாதியின் பெயரால் பிளவுண்டு கிடக்கும் தமிழ்ச் சூழலை இன்னொரு ஒற்றைத் திணையாக வரிப்பதற்கு அவர் அதில் என்ன பொதுப்பண்பை கண்டார்? புலம் பெயர்ந்தவர் களை மட்டும் இவ்வாறு எதேச்சையாக அடையாளப் படுத்துவது சேரன் மீது எமக்கு சந்தேகத்தை உண்டு பண்ணுகிறது.

அத்தோடு புலம் பெயர்ந்த சூழல் மொத்தத்தையும் இனித்தமிழ்க் கொண்டாட் டத்திற்குள் புகுத்திவிட சேரன் எடுத்துக் கொண்டமுயற்சி பெரும் முயற்சி.' தமிழ் இனி விளம்பரத்தை இங்குள்ள சஞ்சிகைகள் பத்திரிகைகளில் பிரசுரிப்பதன் மூலம் தொடர் பாடலுக்கு அவர்களது முகவரியையே இட்டு உரிமை வழங்கி இலகுவாய் உள்ளிழுத்து கொள்வதற்கு எத்தனித்தார். ஆனால் எக்ஸில் மாத்திரம்அவரது அழைப்பிற்கு மறுப்புத் தெரிவித்து காலச்சுவடுடன் சேர்ந்த இந்த ஆட்டத்திற்குள் தான் விளையாட வரமுடியாது என்பதை தீர்க்கமாக அவருக்கு உடனே அறிவித்திருந்தது. மாற்றுக் கருத்து வேண்டி நின்றவை தொடக்கம் அனைத்து அராஜகத்திற்கும் துணை போய்க் கொண்டிருக்கும் பத்திரிகைகள் வரை இதற்குள் அடக்கம். ஈழநாடு உட்பட. ஆனால் ஈழநாடு பத்திரிகையின் வன்முறை தொடர்பாக எதிர்க்கருத்துக் கொண்டிருந்த சேரன் தமிழ் இனி கனவில் பேதலித்துப் போய் இப்போது ஈழநாட்டிடமே மண்டியிட்டுக் கிடக்கிறார்.

**"அண்மையில் கனடாவில் நிகழ்ந்த ஒரு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய S.S. குகநாதன் அவர்கள் (ஆறுநாடுகளில் ஒரே நேரத்தில் அச்சாகும் தமிழ்ப் பத்திரிகையான ஈழநாடுவின் பிரதம ஆசிரியர்), 'பத்திரிகைகளைப் பொறுத்து இன்றைய சூழலில் நடு நிலைமை என்ற கேள்விக்கே இடமில்லை. மேதகு பிரபாகரனின் தலைமையிலான விடுதலைப் புலிகளை ஆதரிப்பது மட்டுந்தான் எமது நிலைப்பாடு'. என்று முழக்கமிட்டிருந்தார். இத்தகைய நிலைப்பாட்டுடன் வெளியாகிற பத்திரிகைகளிடம் இருந்து என்ன எதிர் பார்க்கமுடியும் என்று விரிவுரை எழுதவேண்டிய அவசியம் இல்லை"**

*(காற்றை எதிர்த்து ஒரு காலடி-தோற்றுத்தான் போவோமா, பிரான்ஸ்,மே 1999)*

என்று எழுதிய சேரனின் மறுத்தோடிக் குரல்கள் இன்று தமிழ் இனி2000 இன் பிரமாண்டமான பார்ப்பனக் கைகோர்ப்பில் சீரழிந்து ஈழநாட்டிடமே நிதிக்காக கையேந்துகின்ற நிலை. இங்கேதான் பிரமாண்டமும் பெருங்கதையாடல்களும் என்றும் அரசியல் சமூக பொது நீரோட்டப் போக்குகளுக்கு எதிராக தம்மை இனம் காட்டும் சிறு சிறு குழுக்கள், சஞ்சிகைகள்,மாற்றுக்கருத்துக்கள் போன்ற வற்றை விழுங்கி ஏப்பம் விடுகின்ற நிலைமை சாத்தியமாகின்றது.

நாங்கள் இங்கே ஏற்கனவே யிருக்கின்ற (இலக்கியத்திலும் சரி, சமூகத்திலும் சரி) அதிகார சக்திகளுடன் சேர்ந்து கொண்டு அள்ளுண்டு போகாமல் அவர்கள் மீது கேள்வி எழுப்பிக் கொண்டும் கறாரான விமர்சனங்களை முன்வைத்தும் அதற்கும் முடியாவிட்டால் அவர்களைத்தூக்கிக் கடாசிவிட்டு ஒரு மாற்றினை உருவாக்கி வருகிறோம். இதுவரையான புலம்பெயர் இலக்கிய முன்னோடிகளாக தம்மை வருணித்து, நாம்தான் புலம்பெயர் இலக்கியத்தினை கண்டுபிடித்தவர் என்கின்ற தோரணையில் மார்தட்டி வந்தவர்களுடன் முரண்பட்டு நிற்க வேண்டியவர் களாகிறோம்.

இன்றுவரை ஐரோப்பாவில் 'இலக்கியச் சந்திப்பு' என்கின்ற மிகப்பெரிய இலக்கிய மோட்டார் தனி உயர்சாதி ஆதிக்க மனோபாவம் உடையவர்களின் திமிரில் இயங்கிக் கொண்டிருப்பதை விடுவிக்க நாம் படாத பாடு படவேண்டியுள்ளது. அதன்மீது வைக்கப்பட்ட எந்த விமர்சனத்தையும் அது இன்றுவரை கண்டு கொள் ளாத நிலையில் பல முற்போக்கு சக்திகள் ஒதுங்கிக் கொள்ள நேர்ந்தது. கருத்துச் சுதந்திர மறுப்புக்கு எதிராககுரல் கொடுப்பதாக கூறிக் கொண்ட சந்திப்பு, மிகுந்த அதிகாரம் மிக்க ஒன்றாக இயங்கி வருவதற்கு காரணமானவர்கள் யாரோ அவர்களே இன்று தமிழ் இனி 2000 அமைப்புக் குழுவிலும் கட்டுரையாளர்களாகவும், பேச்சாளர்களாகவும் அடக்கம் பெறுகிறார்கள் என்பது ஒரு இடையீடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேர்லினில் நடைபெற்ற 25வது இலக்கியச் சந்திப்பில் நிஷ்டை சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டதற்காக கலாமோகனுக்கு என்ன திமிரா? என்று எந்தக் கூச்சமும் இல்லாமல் கேட்ட ந.சுசீந்திரனும் அந்த திமிரெடுத்த கருத்திற்கு எந்த மறுப்பையும் தெரிவிக்காது மௌனமாய் ஆமோதித்துக் கொண்டிருந்த மற்றய பலரும் இங்கு ஒன்று கூடுவது நாம் எதிர்பார்த்ததுதான். இதில் பிரச்சனை ஒன்றும் இல்லை. ஆனால் இவர்கள் தங்களது கருத்துக்கள் மட்டும்தான் ஒட்டுமொத்த புலம் பெயர் இலக்கியம் எனப் பதிவாக்கத் துடிப்பவர்கள். இந்தக் கோஷ்டி, தம்மீதான மாற்றுக் கருத்துக்களை கொண்டோர் மீது சரமாரியாக வசை மொழிபாடி வன்முறை, மிரட்டல் மேற்கொண்ட போதுகளில் எல்லாம், அவற்றைத் தெரிந்து கொண்டும் "கழுவுற மீனில் நழுவுற மீனாய்" த்தான் சேரன் இருந்து வந்துள்ளார். இதற்குள் ஏதாவது ஒரு போக்கைத்தன்னும் அவரால் வெளிப்படுத்த முடியவில்லை.

இந்த லட்சணத்தில் காலச்சுவடு "புலம் பெயர்ந்த புலமையாளர்கள் பங்கு பெறுகிறார்கள்" என அறிவித்திருந்தது. அப்பாடா என்று ஒரு நிம்மதி கிடைத்தது- நல்ல வேளை புலம் பெயர்ந்து வாழும் ரெஸ்ரோரண்ட் தொழிலாளிகள், வீட்டுப் பணிப் பெண்கள்- கலந்துகொள்வார்கள் என்று போட வில்லை. தப்பித்துக்கொண்டோம் என்றானது. ஆனால் இந்தப் புலம் பெயர்ந்த புலமையாளர்கள் யார் என்று அறியும் ஆவல் ஏற்பட்டது. அறிந்தோம். உண்மையில் நல்ல தெரிவுதான் செய்திருக் கிறார்கள். எப்படா மடியை விரிப்பான் படுக்கை போட என்று காத்துக்கிடந்தவர்கள் எல்லோரையும் நன்றாக இனம் கண்டிருக்கிறார்கள்.

கனடாவில் செல்வம் அருளானந்தம், காலம் சஞ்சிகையின் ஆசிரியர். தனது சஞ்சிகையின் சுயம் எல்லாம் இழந்து போக, காலச்சுவட்டிற்கு தாரை வார்த்துக் கொடுத்தவர். இவர் காலம் சஞ்சிகையின் விளம்பரத்தினை காலச்சுவட்டில் பிரசுரிப்பதற்கு "வாழும் தமிழ் இதழ்- வானம் அறிந்ததனைத்தும் அறிந்து வளர் மொழி வாழியவே" (பக்கம் 78 காலச்சுவடு...) என்று எழுதிவிட்டு

> "பிரபஞ்சத்தை அறிய முடியாது ஆனால் விஷ்ணுபுரத்தை அறிந்து விடலாம் என்று எண்ணுகிறாய் நீ... அறிய முடியாது நண்பா. ஒரு கூழாங்கல்லைக்கூட என்னாலோ உன்னாலோ எந்தஒரு மானிடப்பதராலோ அறியமுடியாது.அறியமுடியாதென்பதன் சாட்சிகளே இங்குள்ள நூல்களும் தத்துவங்களும்."

என்று விஷ்ணுபுரத்தில் உள்ள ஜெயமோகனின் வாக்கியத்துடன் அறிமுகப் படுத்துகிறார். என்ன தேவை? எப்படிக் கூட்டு? இவர்களைப் பற்றி இதன் பிறகும் புரிந்து கொள்ள முடியாதா என்ன?

இப்படி சேரனதும் அதற்குள் சங்கமித்த அனைத்து அதிகார சக்திகளது செயற்பாடுகளும் இருக்க இன்னுமொரு எதிர்க்குரல் எமக்கு எஸ்.பொ. வடிவில் கிடைக்கிறது. ஈழத்தில் கைலாசபதி/ சிவத்தம்பியின் அட்டகாசங்கள் அறியாதவர் யாரும் இலர். யாழ் சைவ வேளாள அரசியலுடன் மார்க்சியத்தையும் பூட்டி உண்டு-இல்லை என்று ஆக்கியவர்கள் அவர்கள்- அவர்களின் ஆதிக்க செயற்பாடுகள்/அழிப்புக்களில் மிஞ்சாதவர்கள் இல்லை என்று சொல்லும் அளவுக்கு அட்டகாசம் பண்ணியவர்கள்- அவர்களுக்கு தண்ணி காட்டி 'தீ' என்ற முதல் நாவலூடு 40 ஆண்டுகளின் முன்னர் தடாலடி கொடுத்த எஸ்.பொ- இனித் தமிழ் 2000 காலங்களில் இந்தியாவை விட்டு வெளியேறி ஐரோப்பிய நாடுகளில் சுற்றுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறு எஸ்.பொ.வை தமிழ் இனி 2000 கண்டுகொள்ளாமல் விட்டது ? அல்லது எஸ்.பொ. எவ்வாறு தமிழ்இனி2000ஐ கண்டு கொள்ளாமல் விட்டார்? அதைவிட ஈழத்து - புலம்பெயர் இலக்கிய அரங்கிற்கு சிவத்தம்பியை தூணாய் இருத்தி, கைலாசபதியின் பெயரை இடமுடிந்த சேரனுக்கு புதுமைப்பித்தன் போல் ஆக்க இலக்கியத்தில் தடம் பதித்த டானியலை பின்தள்ளி விட எப்படி முடிந்தது?

அடுத்து முக்கிய விடயம் இந்தத் திருவிழாவிற்காக பெறப்பட்ட பணத் தொகையும் பெறப்பட்ட இடங்களும்- அதன் விளம்பரங்களும்-அதன் செலவிடப்பட்ட பணத் தொகையும் எமக்கு அண்மையில் நடந்த உலகக் கிண்ண உதை பந்து போட்டியையும் ஈரோ2000 உதைபந்து போட்டியையும் ஞாபகத்திற்கு கொண்டு வருகின்றன. Nike, Adidas தொடக்கம் கொக்கோ கோலா , கைத்தொலைபேசி நிறுவனங்கள் அள்ளிக் கொட்டிய பணத்தில் கோலாகலமாக நடந்ததுடன் விளையாட்டின் இறுதி முடிவையும் அவையே தீர்மானித்துக் கொண்ட வரலாறு எல்லோரும் அறிந்த ஒன்று. இன்றைக்கு FIFA என்ற உலகஉதைபந்தாட்ட நிறுவனம் பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு விளையாட்டை தீர்மானிப்பது சாதாரணமாகிவிட்டது. அந்த நிலையில்தான் 2006ம் ஆண்டின் உலகக் கிண்ணப் போட்டி நடாத்த கேட்டுக் கொண்ட நாடுகளில் இறுதிப் பரி சீலனையில் தென்னாபிரிக்கா நாடு வசதிக்குறைவு, பாதுகாப்பின்மை எனும் காரணங்களால் நிரா கரிக்கப்பட்டு ஜேர்மனி தெரிவு செய்யப்பட்டதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவை மையமாக வைத்தே உதைபந்தாட்ட விளையாட்டு ஒழுங்கு செய்யப்படுவதும், தீர் மானிக்கப்படுவதும் அங்கே கொட்டுகின்ற பணத்திற்காக மட்டுமே. இந்த வருடம் நடைபெற்ற ஈரோ2000 என்றழைக்கப்பட்ட ஐரோப்பியக் கிண்ணத்திற்கான விளையாட்டும் உலகக் கிண்ணத்தில் எவ்விதத்திலும் குறைந்து விடாது நடாத்தி முடிக்கப்பட்டது. இதிலும் உலகக் கிண்ண விளையாட்டில் இருந்தது போல Nike/ Adidas நிறுவனங்களின் ஆதிக்கம் இருந்ததாகவே பலராலும் நம்பப்படுகிறது. பாரீசில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தனித்து ஆண்களுக்கானது என்பதனூடு அதற்கு செலவிடப்பட்ட தொகை போன்றவற்றிற்காக முதல் நாள் தொடக்க விழாவின் அணிவகுப்பில் Rue De Rivolie எனும் வீதியில் ஒரு பெண் தன் மார்புக் கச்சைகளை வீதி ஓரத்தில் கொடி கட்டி பறக்க விட்டு எதிர்ப்பு தெரிவித்ததை எதுவித சலனமும். இல்லாது உலகம் முழுவதும் பார்த்துக்கொண்டு இருந்தது

இந்த செயற்பாடுகளுக்கு எந்த விதத்திலும் குறைந்து விடாதபடியே தமிழ் இனி2000 தையும் எம்மால் பார்க்க முடிகிறது. விளம்பர தாரர்களுக்கு! பணஅளவைப் பொறுத்தே 'பனர்' அளவு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பேசாமல் கொக்கோ கோலா கொம்பனியிடமோ வில்சன் சிகரட் கொம்பனியிடமோ மொத்தமாக பணத்தை வாங்கிவிட்டு சுந்தர ராமசாமியும் கண்ணனும் சேரனும் அவர்கள் தருகின்ற T சேட்டை போட்டுக் கொண்டு கையில் வில்சன் சிகரட்டுடன் கூட்டத்தை நடத்தியிருந்தால்... வியாபாரத்திற்கு வியாபாரமும் ஆகி கொண்டாட்டத்திற்கு கொண்டாட்டமும் ஆகியிருக்கும்.

இப்படியான மிகப் பெரிய திருவிழாக் களினூடு இலக்கிய வியாபாரம் பண்ண முடியுமே தவிர இலக்கியத்தின் மீதான தேடலைக் காணமுடியாது. இந்த தமிழ் இனி2000 திருவிழா தமிழ்நாட்டிலுள்ள சிறுபத்திரிகைச்சூழலை எந்தளவிற்கு உள்ளடக்கியது? என்பது இன்னோர் கேள்வி. வணிக மயப்பட்ட இந்தக் கூட்டினை எதிர்த்து நாங்களும் எங்கள் மார்புக்கச்சை களையும் உள்ளாடைகளையும் உங்கள் மூஞ்சிகளில் தேய்த்துக் கொள்கிறோம். ஆனால் உதைபந்தாட்ட கோஷ்டி போல் எந்த சுரணையும் இல்லாது எமது எதிர்ப்பையும் கண்டு கொள்ளாமல் விடப்படும் என்பது தெரிந்திருந்தும் இதனை தெரிவிக்க வேண்டியது எமது கடமையாகிறது.

01/ 09/ 2000
**பாரீஸ்**

ஒளி அசையும் புதர்களில்
உக்கிர சுடலைகளின்
நீர்மிருகக் கோள ஒளியில்
வனமிறங்கிய முதுகுடிகள்
ஆடிக் கொட்டிய உடல்பனியில்
துளிர்த்த துசிகள்
உயிர்களின் ஈரல் நிறைத்து
நினைவடுக்குகளுள்
வெப்பத் துரும்பு இறக்கியது
இருள் உடல் கீறி
இலை வடித்த
உஷ்ண பிசுபிசுப்பில் வெந்த
தொல் தானியங்கள்
மிருகத் தோலின்
துடியிசையில்
செவி கிழிந்து விண்முட்ட
உறையுண்ட தாவர
ஆவிகள்
வெளியெங்கும் நீரிலை இறக்கி
மகரந்த மணம் கொட்டியது
உறையும் மூச்சுப் பாம்புகள்
வனக்குருவிகளின்
கூடுகலைத்துத்
தேடுகிறது
ஒளிருப்புகள் கொண்டு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீ இனிது

## நாடகமும்... நானும்!!

நாதன்

புகலிட வாழ்வியல் அனுபவங்களின் பிரதியாக்கமானது புனைவாக, நவீனத்துவமாக, அடிப்படைத் தத்துவ விருப்பின் மூலமாக, தமிழ்த்தேசியத்தின் இறைமைப் பாதுகாப்பின் நிமிர்த்தமாக... புகலிட கலை - இலக்கிய கருத்துருவாக்கச் சாதனங்களில் நாடகமும்...!!!

அண்மையில் மகாஜனாக்கல்லூரியின் பழையமாணவர் விழா பிரான்ஸில் நடைபெற்றது. புகலிட நாடுகளில் தமது பிள்ளைகளால் வரவழைக்கப்பட்ட பெற்றோர்களின் (முதியவர்கள்) மனப்பிறழ்வுகளும் அவர்கள் மீது மேற்கொள்ளும் மனிதநேய நிராகரிப்பையும் "தீ இனிது" என்கின்ற குறியீட்டு வெளிப்பாட்டின் மூலமாக "அம்மா" சஞ்சிகையின் ஆசிரியர் மனோவின் நெறியாள்கையில் அரங்கேற்றப் பட்டது.

புகலிடத்தில் அவலப்படும் முதியவர்களின் உணர்வுகளை அறிதல் முறையாக்க "தீ இனிது" என அழகியலாக ஆற்றுகைக் குள்ளாக் கட்டிருக்கின்றது. புகலிடத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டிய விடயங்களே மனோவின் தேர்வுகள். ஏற்கனவே இவரால் "சாமத்தியச் சடங்கு" என்ற நாடகமும் ஆற்றுகைக் குள்ளானது. பலரால் பேசப்பட்டது என்னால் பார்க்கப்படவில்லை. "தீ இனிது" நாடகத்திற்கான உத்திகைகளான அரங்கமைப்பு, நடிப்பு, குறியீடு போன்ற காரணிகளை வழிமொழியலாம்...!!!

இந்நாடகத்தின் கருத்தியல் பின்புலமானது முற்றுண்மையும் அதற்கான தீர்வுமாக யதார்த்தச்சூழலை மனதில் எதிரொலித்து பொதுஜனக்கருத்தியலாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகக் கருதுவதாலும் யதார்த்தத்தை புரிந்து கொண்ட போலி மகிழ்ச்சி ஏற்படுத்தும் யதார்த்தவாதம் இந்நாடகத்தில் இழையோடுவதாலும் வழிமொழிய முடியவில்லை. சமூகம், குடும்பம், ஆசிரியர், பேராசிரியர் போன்ற நிறுவன அதிகாரிகளால் என்மீது புகுத்தப்பட்ட அறிதல் முறையானது, புகலிட வாழ்வியல் முரண்களிலும் எம்மை "நீதிவான்"களாக நிர்ப்பந்திக்கும்.

"தீ இனிது" நாடகத்தின் மூலமாக வெளியேற்றப்பட்ட கருத்தியலை அனைத்து மரபியல் ஆளுமைகளையும் சிதைத்து உட்பொருள் காண்போம்.

### காட்சி: முதியோர் இல்லம்

தமது சொந்தப் பிள்ளைகளால் புகலிடத்துக்கு வரவழைக்கப்பட்டு அவர்கள் விருப்பு, தேவைகள் நிராகரிக்கப்பட்ட முதியவர்கள்... அங்கிருந்த வாழ்க்கைச் சுமையுடனும், புகலிடத்தில் இருந்து கொண்டு நாளாந்த செய்திகளை உள்வாங்குவதன் மூலமாகவும், தமது சொந்தப் பிள்ளைகளாலேயே நிராதரவாக்கப்பட்டுவிட்ட ஏமாற்றத்தின் காரணமாகவும்... "எங்கட நாட்டில சிங்களவர் குண்டு போட்டாலும் செல் அடித்தாலும் கூழோ கஞ்சியோ குடித்துக் கொண்டு நிம்மதியாக இருந்திருப்போம்" என்பதாக முதியவர்களுக் கிடையிலான உரையாடல்.

ஒரு மகளினது நியாய ஆதிக்க உரையாடல்... "நான் பிள்ளைகளைப் பார்க்க வேணும், மனிசனைக் கவனிக்க வேணும், வேலைக்கும் போகவேணும் இவைகளுக்குள்ள உன்னை வீட்டில நான் வச்சுப் பார்க்க ஏலாது... அதோட இங்க தமிழ் ஆக்கள்தான் இருக்கினம்" எனக்கூறி தாயினது வேண்டுதலுக்கும், விருப்பத்துக்குமாறாக பலவந்தமாக தாயை இழுத்து வந்து தள்ளிவிட்டுச் செல்வது தாய் அரங்கத்தின் நடுவில் விழுதல். இருள் அப்பி தாய்மீது ஒளி வட்டம். கவிதை ஒன்று பரவுகின்றது...

அம்மா...! அம்மா...!
என்ன பார்க்கிறாய்
எதைத் தேடுகிறாய்
...
கால்கள் அகல கருவறைச்சுவர் உடைத்து
குருதி கொப்பளிக்க - உன் ஒவ்வொரு
பிரசவத்திலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீ மட்டும்
மரணம் வரைதானே
சென்று மீண்டுவந்தாய்
...
தொப்பிள்கொடி உறவை
தொலைத்துவிடாமல்-நீ
எங்கோ நெடுந்தொலைவிலிருந்து
ஏங்கிக்கிடந்ததெல்லாம் - இங்கே
ஏகாந்தமாய் இருந்து ஓர்நாள்
தொலைந்து போகத்தானோ?

---

மேற்படி கவிதையானது...!!! புகலிட தமிழ் சமூகத்தின் மீதான மதிப்பீட்டில் நெருக்க மற்றுப்போன தொடரும் வாழ்வியல் புனைவின் **'சென்ரிமென்ற்'** தொகுப்பாகவே தன்னை அடையாளப்படுத்துகின்றது.

"கால்கள் அகல கருவறைச் சுவர் உடைத்து குருதி கொப்பளிக்க உன் ஒவ்வொரு பிரசவத்தி லும் நீ மட்டும் மரணம்வரைதானே சென்று மீண்டுவந்தாய்" இதே கருவறைச்சுவர் உடைப்பும், தொப்புள் கொடி சென்ரிமென்றும் இக் கவிதைக் காரணியான பெண்ணுக்கும் நாளை பொருத்திப் பார்த்து நியாயம் கேட்கப்படும்.

**இடைச்செருகல் மன்னிக்கவும்:**
தொப்புள் கொடியை எனி யாரும் அறுக்காமல் பார்த்துக்கொள்ளவும், கருவறைச்சுவரை யாரும் உடைச்சுப்போடாமல் இருக்கிறதுக்கும் மவனே இதுக்கு...!! கவிஞர்களெல்லோரையும் இணைத்து ஒரு அமைப்புக்கட்டி...! அதனூடாக ஒருமக்கள் எழுச்சியாக உரு ஏத்தி ஒரு வழிபண்ணத்தான் இருக்கு.

**தொடர்ந்து:**
நாடகத்தில் தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உரையாடல் மூலமாக, குடும்பம் பற்றிய கோட் பாட்டை வலியுறுத்தப்பபடுவதாகவும், கூட்டுக் குடும்பம் அமைதிக்குறைவிற்கான காரணங் களில் பெண்கள் வேலைக்குப் போவதும் என்பதாக ஓர் கருத்து வலுப்பெறுவதற்கான வாய்ப்பையும் அக்காட்சியின் மூலமாக நியாயப் படுத்திவிட முடியும். மேலும், முதியோர் இல்லத் திற்கு எமன் வந்து ஒவ்வொரு முதியவர்களாக அழைத்துச் செல்வதாக காட்சி. இதில் முதியவர்களிடத்தில் புலம்பெயர் வாழ்வின்மீதான வெறுப்பை மரணத்தின் விருப்பின் மூலமாக காட்சிப்படுத்தப்படுகிறது. "தீ இனிது" என்கிற குறியீடும் முதியவர்களின் மரணம் குறித்தே அடையாளப்படுத்தப்படுகிறது.

இறுதியாக முதியவர்களின் ஆன்மாவை வழி அனுப்பும் நிகழ்ச்சியாக பார்வையாளர்களும் எழுந்துநின்று, ஆண்டவரே உம்மை நோக்கி என் ஆன்மாவை எழுப்பினேன், ஆன்மாவை எழுப்பினேன், உமது வழியை இறைவா காட்டுவீர் என்கின்ற கிறிஸ்தவப்பாடலுடன் நிறைவு பெறுகிறது.

புகலிடத்தில் முதியவர்கள் (ஆண், பெண்) எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை பன்முக ஆய்வுத் தளத்திற்குள் உட்படுத்தாமல் நிகழ்வுகளை அப்படியே பதியவைப்பதின் ஊடாக, பார்வையாளர்களிடம் இருந்து கோபம், பரிதாபம், கழிவிரக்கம் போன்ற வெறும் புலன் உணர்வு களின் வெளிப்பாடுகளைத்தான் எம்மால் எதிர்பார்க்க முடியும். இவ்வகையான வெளிப் படுத்தும் செயலானது வாழ்வியல் மூலங்களின் பன்முக ஆய்விற்கான வாய்ப்பை மறுக்கின்றது அல்லது தடுக்கின்றது.

அவதானத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய விடயமானது புகலிடங்களில் முதியவர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் பொதுமைப்படுத்தப்பட முடியாததென்பதை காட்சிகளூடாக முதியவர்கள் தமது சொந்த நாடுகளில் இருந்திருந்தால், பெற்றோர் பிள்ளை களுக்கிடையிலான பாசம், நேசம், பரிவு போன்றவைகளால் அவர்களுக்கிடையிலான உறவுகள் நிலைத்திருக்கும் என்பதாக குடும்பம் புனிதமும் தேசிய உணர்வும் கற்பிதப்படுத்தப் படுகின்றது. எமது நாட்டு சமூக - அரசியல் - பொருளாதார வாழ்வியலானது பெரும்பான்மை யான மக்களை தமது இருப்பு மீதான நம்பிக்கையற்றவர்களாகவே நிர்ப்பந்தித்திருக் கின்றது. பொருளாதாரத் தளம் மாறுபடுகின்ற போது குடும்ப அதிகாரமும் ஆதிக்கமும் சுழற்சி வடிவத்தில் மாற்றமடைகின்றது. அதிகாரத்தி லிருந்த பெற்றோர்களின் பொருளாதார தளம் பிள்ளைகளிடத்தில் மாறுகின்ற போது பெற்றோர்களிடமிருந்த அதிகாரமும் ஆதிக்க மும் பிள்ளைகளிடத்தில் மாறுகின்றது. இம் மாறுபாட்டின் ஊடாக எதிர்ப்புணர்வின்மையும், அடங்கிப் போதலும், நிராகரிப்பும் சொந்த நாடுகளில் வாழும் முதியவர்களுக்கும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

புகலிடத்தில் வேண்டுமானால் சூழல், புவியியல் காரணிகளால் அளவுகளில் வேறு பாடுகள் இருக்கலாமே அல்லாது குணமாறு பாடுகளில் வேறுபாடுகளை காணமுடியாது. மேலும் இந்நாடகத்தின் ஊடாக புகலிடத்திற்கு வரவழைக்கப்பட்ட பெற்றோர்களுக்கும் (முதிய வர்கள்) பிள்ளைகளுக்கும் இடையிலான எதிர்பார்ப்புகளையும், உணர்வுகளையும் வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்திப் பார்க்காமல் பொதுமைப் படுத்தி தீர்வு வழங்குமாறு வலியுறுத்தப்படுகின்றது. புகலிடத்தில் பல வருடகாலமாக வாழ்பவர்கள். அவர்கள் பொருளாதார நோக்கமாக இருப்பினும் அல்லது உயிர்ப்பாதுகாப்பு நோக்கமாக இருப்பினும் அவர்கள் எவ்வித நேர் எதிர்மாறான நிகழ்வுகளையும், சூழ்நிலைகளையும் எதிர்நோக்கும் நிலைக்கு தம்மை தகவமைத்துக் கொண்டவர்கள்.

**ஆகவே இவர்கள் புலம் பெயர்ந்தவர்கள்...!**
ஆனால் முதியவர்களோ அவர்களுக்கு நேர் எதிர்மாறான எதிர்பார்ப்புகளுடன்...!!
**புலம் பெயர்க்கப்பட்டவர்கள்...!!!**

இவர்களுக்கிடையிலான உறவுகளின் காத்திரமான அடிப்படைக்காரணிகளை நாடக ஆற்றுனர்கள் கலை - இலக்கியவாதிகள் வெறுமனே புலன் உணர்வுகளுக்குள் வசப்படுத்த முனையாமல் தனித்துவங்களை நிராகரித்து ஏதாவது ஆளுமைக்குட்பட்டு அதிகாரத்துவப் படுத்தும் வாய்ப்பையும் கோரி நிற்காமல் அறிவுத் தளத்துக்குள் பரப்புகின்ற போதுதான், அள்ளுண்டு கரைந்து போகாமல் கலை - இலக்கியங்களினூடாக கருத்தியல் மாறுபாட்டிற்கான தேவையையும் அதன் அவசியத்தையும் தொடர்ந்து வலியுறுத்த முடியும் என நான் கருதுகின்றேன்.

●


**"உரத்துப் பேச"**
**ஆழியாள் கவிதைத்தொகுதி**




"மறு"
71, முதலாவது பிரதான சாலை,
இந்திரா நகர்,
சென்னை - 20





கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டு களுக்குப் பிறகு நிறப்பிரிகை வருகிறது. கடந்தகாலங்களில் நிறப்பிரிகை வாயிலாக முன்வைத்து செயற்பட்டுவந்த பல்வேறு பார்வைகள், சிந்தனைகள், அணுகல் முறைகள் ஆகியனவற்றுக்கு மேலும் அழுத்தம் கொடுத்து செயற்படவேண்டிய அவசரச்சூழல் உருவாகியுள்ளதை நண்பர்கள் பலரும் சுட்டிக்காட்டி வற்புறுத்தியதின் விளைவாக நிறப்பிரிகை மீண்டும் தொடர்ச்சியாக கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம்... என்று குறிப்பிடும் நிறப்பிரிகை இதழ்-10 இல் இம்முறை "தமிழினி 2000" என்கிற கும்பமேளாவில் இருந்து ஒதுங்கி நிற்கும் நிறப்பிரிகை அதற்கான காரணங்கள் குறித்த விரிவான கட்டுரையுடன் சிறப்பிதழாக வந்திருக்கிறது.

**தொடர்புகட்கு:**
"நிறப்பிரிகை வெளியீடுகள்"
47, ருக்மணி நகர்,
செட்டி மண்டபம்,
கும்பகோணம் - 612001
E-Mail: nirapirihai@usa.net

**புகலிடத்தில் பிரதிகள் பெற்றுக் கொள்வதற்கு:**
EXIL
B.P 204
92604 Asnieres Cedex



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "நிலத்திற்கு முன்னோடியான நிலப்படம்"

**ஜோன் போத்ரியாட் (Jean Baudrillard)**

பின் நவீனத்துவத்தை அணுகுவதற்கு தூண்டிவிடக்கூடியதும், குறிப்பாக தெரிவிப்பதும், வலியுறுத்தி அமைதியைக் குலைக்கும் வகையில் சொல்வதுமானதே, தெளிவில் சிறிது குறைந்த பிரெஞ்சுத் தன்மையைவிட சிறந்தது என்பதற்கு ஜோன் புத்தேலரின் இந்த குறிப்பே சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரின் கூற்றின்படி மனதில் தோன்றும் படிமம் (Imagery) நான்கு நிலைகளில் உருப்பெறுகிறது: எடுத்த எடுப்பில் மக்கள் ஒரு குறியீடு என்பது மனித உணர்விற்கு அப்பாற்பட்ட ஓர் உண்மையை குறித்து நிற்கிறது என்று நம்பினர். இரண்டாவதாக அப்படிப்பட்ட குறியீடுகள் பொய்யானவை என்று சந்தேகிக்கத் துவங்கி, அவை உண்மையை மறைத்து அவற்றை தவறாகக் காட்டுவதாகவும் கருதினார்கள். அடுத்த கட்டத்தில் அந்தக் குறிகள் இயல்பில் இல்லாத உண்மையை முகமூடி போட்டு மறைக்கிறது என்று நினைத்தார்கள். அதன் பிறகே அவர்கள் அடுத்த நிலைக்கு போனார்கள். அதுதான் புத்தேலரின் பின் நவீனத்துவம் பற்றிய கூற்றாகும். அதன்படி படிமத்திற்கும் மனித உணர்விற்கு அப்பாற்பட்ட உண்மைக்கும் எந்த தொடர்பும் இல்லை. கற்பனை- அதுவே அனைத்து நடைமுறைக்கும் எதார்த்தமானது

> "உருத்தோற்றம் என்பது ஒருபோதும் உண்மையை மறைப்பதாய் இல்லை — உண்மையே தான் ஒன்றுமே இல்லாத வெறுமையை மறைக்கிறது. உருத் தோற்றமே உண்மையாகும்."
>
> – எக்ஸிபோர்ட் –

போர்ஹேயின் ஒரு கதையினை நாம் தொடர் உருவகப் பாவிப்பிற்கான சிறந்த படைப்பாய் எடுத்துக்கொண்டால் அதில் ஒரு பேரரசின் நிலப்பட வரைவாளர்கள் பலரும் சேர்ந்து ஒரு விரிவானவரைபடத்தை வரைய அது மிகவும் கச்சிதமாய் முழு நிலப்பரப்பையும் தன்னுள் அடக்கிவிட (ஆனால் பேரரசின்வீழ்ச்சி அந்நிலப் படத்தை அழித்து, சிதைத்தது எனினும், சில சிதைந்து கிழிந்த துண்டுகள் பாலை வனத்தில் காணக்கிடந்தன- சிதைந்து கிடந்த அருவங்களின் நுணுக்க அழகு, பிணம் போல் அழுகிக் கொண் டிருக்கும் ஒரு பேரரசின் பெருமை பேசும் துப்பாக இருக்க, அழிந்து மண்ணுடன் கலக்கும் அந்த சிதிலங்கள். இன்னும் உறுதியாகச் சொன்னால் முழுதான மறுவடிவமாய் அந்நிலப்படம் உண்மை யாய்இருப்பது போல் ஒரு குழப்பத்தையே தந்தது.)- அதன் மேல் அந்தப் புனைவின் முழுசுற்றும் நம் முன் வந்துவிடும், தற்பொழுது அது ஒரு இரண்டாம் நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுவடிவே அல்லாது வேறில்லை.

இன்றைய சாராம்சம் இனியும் வரைபடம் பற்றியோ, இரட்டைத் தன்மை பற்றியோ, பிரதி பலிக்கும் கண்ணாடி பற்றியோ அல்லது கருத்து பற்றியோ இல்லை. பாவிப்பு இனியும் பிராந்தியம் பற்றியதாகவோ ஒரு சுட்டுப் பொருளாகவோ, அல்லது மூலமாகவோ இல்லை. அது மெய்யானதின் மாதிரியான தலைமுறையின் தொடக்கமோ, இயல்போ இல்லாத்தன்மையானது: யதார்த்தத்தை மீறியதாகும். தேசம் ஒரு போதும் வரைபடத்திற்கு முன்னோடியானதாய் இருந்ததுமில்லை, அதற்கு பின்னும் நீடித்திருப்பதில்லை. எனவேதான் வரைபடம் தேசத்திற்கு முன்னோடியாய்- உருத் தோற்றத்தின் பூர்வாயணம்-அதுவே தேசப்பரப்பு தோன்ற காரணமாய் இருக்க, மேலும் நாம் அந்த புனை கதையை இன்று உயிர்ப்பித்தால், பிராந் தியத்தின் துண்டுகளே மெதுவாய் அழுகி சிதைந்து வரைபடத்தில் பரவுகின்றன. வரைபடமல்லாது உண்மையான நிலப்பரப்பே அதன் மீதமிருக்கும் சிதைந்த பகுதிகளே இங்கும் அங்குமாய் பாலை வனத்தில் நிலைத்திருக்க, அவையாவும் பேரரசினுடையதாய் அல்லாது நமக்குச் சொந்த மானவையேயாகும்.

மருத்துவம், படைக்கு வெளியில் பாசாங்குகளுக்கு இடமளிக்கும் நிலைபாடு மதத்தையும் தெய்வீகத்தின் தோற்றத்தையும் நோக்கி நகர்கிறது: "நான் கோவில்களில் எந்த ஒரு உருத்தோற்றத்தையும் அனுமதிக்கவில்லை என்பது இயற்கைக்கு ஜீவனளிக்கும் தெய்வீகத்தை பிரதிபலிப்பது இயலாததாலேயாகும்."

ஜெசுயிட்ஸ்களின் அணுகு முறை யானது கடவுளின் மறைவிலும் உலகியல் நடைமுறை களுக்கேற்ப உள உணர்வை கையாள்வதிலுமே அமையப்பெற்ற கட்டமைப்பில் இயங்க- அதிகாரத் தின் தோற்றுவாயில் கடவுளின் மறைவு- மனித அறிவை கடந்த நிலையின் முடிவு. இனியும் குறிகளும், தூண்டு காரணிகளுக்கில்லாத நிலை பாடுகளில் ஒரு சாக்காய் நீடிக்கப் போவதில்லை. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளின் கலை வடிவங்களின் பின்புலத்தில் அழகியல் கட்டமைப்பின் சிறப்பம்சம் மறைந்திருக்கிறது.

எனவே கொலைத்திறன் கொண்ட உருவங்களும் இயல் தன்மையின் கொலையாளி களும் பண்டை கீழை ரோமானிய கலை வடிவங்கள் தெய்வீகத்தின் தனித்தன்மையை அழித்தொழிக்க முடிந்ததுபோல் தங்கள் சொந்த உருப்படிவங் களையே அழிவுக்குண்டாக்குபவை எல்லாம் ஒருக்கால் எப்பொழுதுமே போராட்ட நிலையில் இருந்திடலாம். இந்த அழிவுத்திறனை எதிர் கொண்டு பிரதிநிதித்துவத்தின் வாதஞ் சார்ந்த திறன் தெள்ளத் தெளிவாய், புத்தி சாதுர்யத்துடன் இயல்பின் சார்பாக நிற்பதாக உள்ளது. அனைத்து மேற்கத்திய நம்பிக்கைகளும், நன்னம்பிக்கை களும் பிரதிநிதித்து வத்தின் மீதான தாக்குதலை நடத்தவே ஏவப்பட்டன. ஒரு சின்னம் அர்த்தத்தை மிகவும் ஆழமாகக் குறிக்கலாம், ஒரு சின்னம் அர்த்தத்திற்கு பரிமாற்றமாய் மாறமுடியலாம், அந்த ஏதோ ஒன்று இந்த பரிமாற்றத்திற்கு உத்தரவாதமளிக்கலாம்- நிச்சயமாய் அது கடவுள்தான். ஆனால் கடவுளையே பாவிப்புக்குள் அடக்க முடியுமானால் அதாவது அவரது இருப்பை உணர்த்தும் வெறும் குறியீடே அவராகி சுருங்கிப் போனால் என்ன செய்வது? பிறகு முழு அமைப்புமே மதிப்பீட்டில் கனக்குறைவாய் எதுவுமேயில்லாத ஒரு மாபெரும் உருத்தோற்றமாய், பொய்யான தாய் அன்றி வெறும் உருத்தோற்றமாய், அதன் பின் உண்மையான எதுவுடனுமே பரிமாற்றமின்றி தன்னிலையிலேயே பரிமாற்றம் கொண்டு எவ்விதத் தொடர்போ எல்லையோ இல்லாது ஒரு தடையில்லா சுற்றுவெளியில் இயங்குவதாய் அமைகிறது.

இதுவரை பிரதிநிதித்துவத்தை எதிர்த்தே இருப்பதினால் அது பாசாங்குடன்தான் இருக்கிறது. பிரதிநிதித்துவம் குறிகளும், இயல்பும் சமமானது என்ற கோட்பாட்டிலே பிறக்கிறது. (இந்த சமன்பாடு ஆதர்ஸ நிலையில் இருப்பினும் அதுவே அடிப்படை மூதுரையாகவும் உள்ளது.)

முடிவாய் பாவிப்பு இந்த சமன் நிலையை அடிப்படையாய் கொண்ட ஆதர்ஸ கனவு நிலை யில் குறிகளையும் மதிப்பீடுகளையும் தீவிரமாய் மறுப்பதிலிருந்தும் குறிகளை பின்னுக்குத் தள்ளி அனைத்து குறிப்பீடுகளையும் முழுமையாய் மறுதலித்து முடிவுக்கு கொண்டு வருவதிலிருந் தும் தொடங்குகிறது. எங்கே பிரதிநிதித்துவம் பாவிப்பை அது ஒரு பொய்பிரதி நிதித்துவம் என்று பெயரிட்டு தன்னில் முழு வதுமாய் ஐக்கியப் படுத்திக் கொள்ள முயல் கிறதோ அங்கே

"The Fontana Postmodernism Reader" என்ற ஆங்கில மொழி புத்தகத்தின் "Symbols At Work And Play" என்ற பகுதியில் உள்ள Jean Baudrillard இன் "The Map Precedes The Territory" எனும் கட்டுரையிது.

எக்ஸிலுக்காக தமிழில் **— அங்கையற்கண்ணி —**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவிப்பு/ பாசாங்கு பிரதிநிதித்துவத்தின் முழுக் கட்டமைப்பையும் ஏதோ ஒரு உருத்தோற்றம் போல் பாவித்து தன்னுள் அடக்கிவிடுகிறது.

இவைதான் படிவத்தின் தொடர் நிலைகளின் வரிசையானவை:

-அது அடிப்படை யதார்த்தத்தை பிரதிபலிப்பதாய் இருக்கிறது.

-அது அடிப்படை உண்மைக்கு முகமூடி போட்டு அந் நெறியிலிருந்து விலகிச் செல்கிறது.

-அது அடிப்படை உண்மையின்மையை முகமூடி போட்டு மறைக்கிறது.

-அது எந்த ஒரு உண்மைத் தன்மையுடனும் தொடர்பில்லாது இருப்பதுடன் தனது வெறும் உருத்தோற்றமாகவே இருக்கிறது.

முதலில் சொன்ன நிலையில் படிவம் நற்தோற்றத்தையுடையதாகவும்- பிரதிநிதித் துவம் புனிதத்தை குறிக்கும் படியிலும் உள்ளது. இரண்டாமாவதில் அது தீங்கான தோற்றத்தையும்- கேடு சூழ்கின்ற படியிலுமாய் உள்ளது. மூன்றாமதில் தோற்றமாய் இருப்பது போல் பரிணமிக்கும் அது மாயக்கலைத் தோற்ற நிலையில் உள்ளது. நான்காவதில் தோற்றமாய் நிலைக்கும் படியில் இனிமேலும் நீடிக்காது வெறும் பாவிப்பாய் இருந்து விடுகிறது.

எந்த குறியீடுகள் வேறு ஏதோ ஒன்றை மாய்மாலமாய் குறிகளாய் சித்தரிக்கின்றனவோ அவை ஏதுமற்ற சூன்யத்தை கபடமாய் சித்தரிக்க குறியீடுகளினின்றும் மாறுபட்டு வந்த இந்நிலை ஒரு தீர்க்கமான திருப்பத்தை குறிப்பதாக உள்ளது. முதலாமது உண்மையின் தத்துவத்தையும் ரகசியத் தன்மையையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது. (அதற்குத்தான் கருத்தின் சீர்மை தீர்க்கம் சொந்தமாய் உள்ளது.) இரண்டாமது உருத்தோற்றம், பாவிப்பு இவை களில் சகாப்தத்தை தோற்றுவித்த நிலையில் கடவுளையும் அவரின் இருத்தலையும் மறுதலித்தது மட்டுமின்றி மெய்மையையும் பொய்மையையும் பிரித்தறியும் இறுதித் தீர்ப்பையும் இயற்கையை அதன் செயற்கைத்தன்மையான உயிர்ப்பித்தலிலிருந்து பிரித்துணர்வதையும் இல்லாதாக்கிவிட்டமையில் அனைத்துமே ஏற்கனவே மரித்தும் முன்பே எழுச்சியுற்றும் ஆகிவிட்டது.

உண்மை/யதார்த்தம் எங்கனமிருந்ததோ அங்கனம் இனியும் நீடித்திருக்காதிருக்கும் நிலையில் பழமை நாட்டம் அதன் முழு அர்த்தத்தையும் அடைந்துவிடுகிறது. கணக்கற்று புற்றீசல்களாய் புனைவுகளும் யதார்த்த குறிகளும் அவற்றின் வழியாய் வாங்கிவந்த இரண்டாம் முறை உண்மையும் புறப் பொருள் தன்மையும் நம்பகத் தன்மையும் பெருகிவிடுகின்றன. யதார்த்த உண்மையின் வாழ்வு சார்ந்த அனுபவங்கள் பலவாய் பெருகிட உருவமைப்புச் சார்ந்த குறிகள் மீண்டும் எழுச்சியுற அங்கே புறப்பொருள் காட்சிகளும் அகப்பொருள் சாரமும் மறைந்துவிடுகின்றன.

●

---


"மண்டல்குழு பரிந்துரைகளை வி.பி.சிங் நடைமுறைப்படுத்தியபோது அதை எதிர்த்து அத்வானி ரதயாத்திரை நடத்தியதுபோல் நீதிக்கட்சியின் வகுப்பு வாரி உரிமைக் கோரிக்கையை எதிர்த்து மிகத் தீவிரமாக இந்துமதத்தின் அருமை பெருமைகளை எழுத ஆரம்பித்தார். தாழ்த்தப்பட்ட மக்களே உண்மையான இந்துக்கள் என்று பூக்களால் மூடப்பட்ட பாறாங்கல்லைத் தூக்கி தாழ்த்தப்பட்ட மக்களின் தலையில் போட்டார் பாரதி..." என்று பாரதி மீதான கட்டவிழ்ப்பை தொடர் கட்டுரையாக தாங்கி வரும் தலித்முரசு அடக்கப்பட்ட மக்களின் சமூக நீதி இதழாக வெளிவருகிறது.



**தொடர்புகட்கு:**

ஈ.21
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு
அண்ணா முதன்மைச் சாலை
கே.கே.நகர்
சென்னை-78




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நசுங்(க்)கிய தமிழினம்

பெருஞ்சாலை கடக்கையில்
பட்டுச் சென்றது வள்ளி முகம்

அப்போதைய
அவள் ஏக்கக் கீறல்கள்
இடம் மாறி
இப்போதைய
சுருக்கங்களாய் என் முகத்தில்

வள்ளிக்கு இப்போது எத்தனை வயசிருக்கும்?

உழைத்தலுக்கு
அஞ்சா அவள் உடல் (தயவு என் தாய்)
குளிர் நாட்டில்
வ...ச..தி..யா..ய்

வள்ளியின் கைவண்ணம்
என் உடலை மட்டும்
வளர்த்திருந்தது

வயதின் அடையாளமாம்
என் முகத்தில்
இவர் சொன்னார்
எனக்குத் தெரியும்
குற்ற உணர்வுகளின்
நெருடல் கீறல்கள்
அவையென்று

இப்போதெல்லாம்
வீடு கூட்ட
உடுப்புத் தோய்க்க
பாத்திரம் கழுவ
பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்ப
அடிக்கடி
வந்து போகுது
வள்ளியின்
அந்தப் பிஞ்சு முகம்

வள்ளிக்கு அப்போது எத்தனை
வயசிருக்கும்?

நசுங்குகிறதாம் தமிழினம்
கேட்கிறார்கள் தமிழீழம்

ஆழியாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாம்பு

## ஓர் சிறுகதைக்கான சில குறிப்புகளும், ஏனைய குறிப்புகளும்.

க.கலாமோகன்



மனவெளி மூடப்பட்டு. அதற்குள் எதனைத் தேட? பூஞ்சண வாசம் அடிக்கிறது. நிச்சயமாக அதற்குள் நிறையப் பூஞ்சணம் இருக்கலாம். இது எனது நினைப்பு. விழிகளுக்கு எதிரே கருமைக்கோடுகள் கண் சிமிட்டும்போது, வெளியின் மீதான எனது தியானம்கூடப் போலியானதோ எனும் சந்தேகங்கள் சில காலங்களாக என்னைக் கவ்வியபடி. வாங்கிய புத்தகங்கள் யாவும் அதே இடத்தில். ஆனால் மாற்றங்களோடு. முதலில் அவைகள் மீது தூசிகள் விழத் தொடங்கின. போதாக் குறைக்கு பூஞ்சணம்கூட தூசிக்குத் துணையாக. இந்த இணைப்பின் சமாதானத்தை கலைக்கும் தைரியம் என்னிடம் இல்லாததாலும், இந்த இணைப்பே அழகிய சமாதானமாக எனக்குப் பட்டதாலும் - என்னை என்னிலிருந்தும், அவைகளிலிருந்தும் இழுத்துக் கொண்டேன்.

ஆம், மூடப்பட்டுத்தான் கிடக்கின்றது வெளி, மனவெளி. அமைதி உள்ளதா? அதற்குள் கலர் படங்கள், கறுப்புப் படங்கள், கலங்கல் படங்கள். என்னைத் தன்வசம் இழுப்பது முதுமையா? அல்லது இருப்பின்மை மீது நான் எனக்குள் வரைந்த தீப்பொட்டா?

பொட்டு வட்டமாக.
கறுப்பாக உள்ளது.
சிவப்பாக உள்ளது.
கண் சிமிட்டுகின்றது.
கதைக்கின்றது.
கரைகின்றது.

***ஓய்வில் தியான சுகம் சுவைத்துக் கொண்டிருந்த சர்ப்பம் அசையும் போது, நான் எங்கிருந்தேன் என்பது எனக்குத் தெரியாது, தெரிதல் எனது தேடலுமல்ல.***

"உனது நெற்றியில் ஏன் பொட்டு இல்லை?"

"அதன் வரையும் உரிமை எனக்கு மறுக்கப்பட்டுள்ளது"

"உனது பதிலை நான் கட்டவிழ்க்கலாமா?"

"கட்டவிழ்ப்பதற்கு என்னிடம் எதுவும்."

"அது எனக்குத் தெரியும். உனது மொழிபற்றியதே எனது கேள்வி."

"நீ டெரிதாவின் மாணவனா?"
"டெரிதாவின் அசைவு எனக்கு அந்நியமாகாதது."

"சரி விஷயத்துக்கு வா!"

"பொட்டு வரையும் உரிமை உனக்கு மறுக்கப்பட்டுள்ளது என்றாய். ஓவியக்கலைஞையாக வரவேண்டும் என்கின்ற கனவு உனக்குள் இருந்ததா?"

"ஓவியங்கள் எனக்குச் சலிப்பை ஏற்படுத்துகின்றன. எனக்கு வழங்கப்பட்ட அனைத்து ஓவியங்களையும் எரித்துவிட்டேன்."

"உனக்கு யார் யார் ஓவியங்கள் தந்தனர் என்கின்ற பட்டியலை நான் உன்னிடம் கேட்கமாட்டேன். கடைசியாக உனக்கு ஓவியம் தந்தது யார் என்றும் கேட்க மாட்டேன். நீ எரித்த கடைசி ஓவியத்தை எனது மனக்கண்முன் வரைவாயா?"

***சர்ப்பம் தனது தியான சுகத்துள். அது அழிக்கின்றதா அல்லது ஆக்குகின்றதா? அதனது இலக்கு சந்தேகமாக இருந்தால்... ஆக்குமா அல்லது அழிக்குமா? சர்ப்ப நிஷ்டையைக் கலைத்தல் என் இலக்கு அல்ல. இலக்கு வேறு வழிவேறு எனும் ஞானமுள் எப்போதாவது சர்ப்பத்தைக் கடித்ததுண்டா?***

"நீ விழுங்கியது தயக்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குளிசையையா? சரி, என்மீது உனக்கு விருப்பம் உள்ளதா?"

"உன்மீது எனக்கு விருப்பம் இல்லை. உனக்கோ எனது நிர்வாணம் தெரியும்"

"எனக்கு மட்டும் என்று சொல்லுதல் தப்பு"

"சரி, உனக்கும் என மாற்றிக் கொள்கின்றேன். மல்லிகையை உனக்குத் தெரியுமா?"

"மல்லிகை மலரின் தாய் என் பது எனக்குத் தெரியும்"

"மலரை உனக்குத் தெரியும் என்பதை மல்லிகைக்கூடாக நான் அறிவேன்."

"மல்லிகை என்ன சொன்னாள்"

"சுட்டுப்போட்டாலும் உனக்கு ஓவியம் வராது எனச் சொன்னாள்"

"மலர் எனது மடியில் கிடந்ததைக் கண்டதாக மல்லிகை உன்னிடம் சொல்லவில்லையா?"

"சொன்னாள்!"

"சரி நீ எரித்த கடைசி ஓவியத்தை எனது மனக்கண் முன் வரை."

"வரையும் விருப்பம் எனக்கு இல்லை"

"மல்லிகை வரைந்ததா?"

"இல்லை. மல்லிகையுடனான கடைசி இரவின் பின், நான் எரித்தது."

"மல்லிகையின் பிரிவால் ஏற்பட்ட அவதையின் அறுவடையா இந்த ஓவிய எரிப்பு?"

"உனக்கு எல்லாம் தெரியுமா?"

"தெரியும் என நான் சொன்னால்...?"

"எனது பதில் உனக்குத் தெரியும்"

"என்னிடம் உள்ள பதில் உனது பதிலாகவும் இருக்க வேண்டும் என்கின்ற நியதி எதுவும் இல்லை. எனது பதில்போல உனது பதிலும் இருக்குமா என்பதில் எனக்குச் சந்தேகங்கள் உள் ளன. எனக்கு உன் பதில் தேவை. எனது பதில் மீதான கற்பிதத்தால் உனது பதிலின் புனிதத்தைக் கெடுத்து விடாதே, சரி விஷயத்துக்கு வா. பொட்டு வைக்கும் உரிமை உனக்கு ஏன் மறுக்கப் பட்டுள்ளது?"

"நான் விதவை, நான் விபச் சாரியும் கூட."

"பொட்டு வைக்கும் உரிமை விதவைகளுக்கு மறுக்கப்பட்டுள் ளது என்பதை நான் அறிவேன். விபச்சாரிக்கு சோடிக்கும் உரி மையை மறுத்தவர்கள் யார் எனச் சொல்வாயா?"

"நான் விதவையாகவும் விபச் சாரியாகவும் பார்க்கப் படுகின்றேன்."

"பார்வைகளுக்குள் அடங்கு தலையும் அடங்க மறுத்தலை யும் தீர்மானிப்பது நீயே!"

"உனது மொழியின் கோலங் கள் எனக்குக் கலங்கலாக உள்ளன. என்னை நீ துரத்து வது எதற்காக?"

"இந்தக் கேள்வியின் பதிலை நீயே ஊகித்துக் கொள். உனது கண்ணாடியில் என்னைப் பார்க்க எனக்கு விருப்பமாக உள்ளது."

"எனது விழிகளைக் கட்டு" பின்னே வந்து அவளது விழிகளைப் பொத்துகின்றேன்.

"உனது விழிகள் ஈரமாக உள்ளன. இரவு முழுவதும் அழுதாயா?"

"எனது கண்ணாடி உடைந்து விட்டது."

"நான் என்னை எப்படிப் பார்ப்பதாம்?"

"நீ உன்னையும் பார்க்காதே, என்னையும் பார்க்காதே! இது எமது கடைசிச் சந்திப்பு."

*தியான சுகம் சலித்து அரவம் பெட்டிக்குள் தற்காலிகமாகத் தஞ்சம் அடைகின்றது. கடை சிச் சந்திப்பு எவ்வாறு ஓர் கதையின் முடிவாக இல்லையோ, அதுபோல் முதலாவது சந்திப்பும் ஓர் கதையின் தொடக்கமாக இருந்ததில்லை. முடிவு, தொடக்கம் இவைகளைத் தேடுதல் அரவத்தின் இலக்குமல்ல.*

*பேய்க்காற்றிலே மல்லிகைப் பந்தல் ஆடும் போது, அரவம் பெட்டியை விட்டு வெறியேறு கின்றது. பூக்கள் கிழிந்து கிழிந்து கீழே விழுகின்றன. அரவமோ பந்தலில் ஏறுகின்றது சயன சுகத்தில் மூழ்க. சயனம். விழிகளைச் சற்றே திறப்பதற் கான சயனம்.*

"விருந்துண்போம்!"

"விருந்தை வழங்குவது யார்?"

"அது நானாகவோ அல்லது நீயாகவோ இருக்கலாம். ஆனால் ஓர் சங்கமிப்புத் தேவை."

"இந்தச் சங்கமிப்பு உண்மை யானதா?"

"உண்மையைத் தேடுதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது இலக்கு அல்ல. எனது இலக்கு விருந்தைச் சுவைத் தலே, அதைச்சந்தேகிப் பதுமோ அல்லது அனாதை யாக்குவதுமோ அல்ல."

"உனது இலக்கு விருந்தினை நுகர்வது மட்டுமா?"

"எனது நுகர்வின் கைதியே விருந்து. எனது நுகர்வாக நீ இருக்கவில்லையா?"

"உனது கேள்விகள்... உன்னிடம் எப்போதுமே கேள்விகள்... உனது அன்னையின் கருவறை கேள் விக்குறி வடிவில் இருந்ததா?"

"நீ என்ன பதில்களின் கலவி யில் இருந்து ஜனித்தவளா?"

"எனது உடல்...எனது உடல்..."

"உனது பதில் முடிய வில்லை. உனது பதிலே கேள்வியுமாக. எனவே நீயும் கேள்விகளின் ஆணைக்குள்."

"எனது வரியை முடிக்க நீ அவகாசம் தரவில்லை."

"உனக்கு அவகாசம் தரும் உரிமை எனக்கில்லை. உனது அவகாசம் உன்னிலிருந்து பிறப்பது. எனது கேள்விகள் எனது அவகாசங்களை எப்படி என்னிடம் இருந்து பிறப்பன போலவோ..."

"எனது உடல்..."

"உனது உடலைப்பற்றிப் பேச விரும்புகின்றாயா? பேசு! எனது உடலைப் பிரித்து நீ உனது உடலைப்பற்றிப் பேச முடியாது."

"எனது உடல்..."

"ஏன் தயக்கம்? உனது உடலைப் பற்றிப் பேச உனது உடலுக்கு பேசும் உரிமை யைக் கொடு!"

"பண்டம், உனது நுகர்விற் கான பண்டமே எனது உடல்"

"எனது நுகர்வின் பண்டமாக மட்டுமே அது இருந்ததா? எனது உடலும் ஓர் பண்டமே எனும் உண்மையை நீ மறுதலிக்கின்றாயா?"

"உனது உடலும் எனது உடலும் ஒன்றல்ல."

"ஏன்?"

"நீ நுகர்பவன் நான் நுகரப் படுபவள்"

"இதில் என்ன தப்பு உள்ளது. நீயும் பண்டம், நானும் பண்டம். பண்டமாற்றின் வித்தியாசமான வடிவங்களே இன்று எமது கொடி களாக உள்ளன. உன்னை வாங்கும் சக்தி என்னிடம் இருந்தது, வாங்கினேன், நுகர்ந்தேன். நீயும் என்னை வாங்கலாம், நுகரலாம்."

"நான் உன்னை வாங்க முடியாது. நீ ஆண்!"

"நான் ஆண் அல்ல. பண்டம். நீ பெண், நீயும் பண்டம். நான் ஆண் என்பதும், நீ பெண் என் பதும் குறியீடுகள் சம்பந்தப் பட்ட சர்ச்சைக்குரிய விஷ யமே. ஆனால் நாம் பண்டங் கள் என்பதே உண்மை."

"நீ பண்டமாக இருந்தால் உன்னை வாங்கியது யார், உன்னை நுகர்ந்தது யார்?"

"வாங்கும் கணங்களில் நான் வாங்கப்படுவதாகவும் உணர்ந்து கொள்கின்றேன். எந்தக் கணத்தில் நுகர்வு சாத்தியமாகின்றதோ, அந்தக் கணத்தில் நான் நுகர்வின் இலக்காக. இந்தக் கணங்கள் அற்பமானவையாக இருக்க லாம். இந்த அற்பமான கணங் களிலேயே ஜனனத்தையும் மர ணத்தையும் நான் மறக்கின் றேன். உன்னை மல்லிகை நுகர்ந்தாளே! அப்போது உனக்கு நீ பண்டம் எனும் பிரக்ஞை வராமல், நான் உன்னை நுகர்ந்தபோது மட்டும் இந்தப் பிரக்ஞை வந்ததா?"

"நீ ஆண், மல்லிகை பெண்."

"மல்லிகை பெண் அல்ல. பூ. பூ மல்லிகை, பூ பண்டம், பூக்கடைக்கு நாம் செல்வது வாங்குவதற்காக. வாங்கப்படு வது எந்த நிறத்தில் இருந் தாலும் எந்த வடிவில் இருந்தாலும் பண்டமே."

"நான் மல்லிகையை வாங்கவில்லை."

"அவள் உன்னை வாங்கினாளா?"

"நாம் எங்களை விரும்பினோம்."

"விருப்பம் ஓர் அழகிய சொல். உங்களது உறவுக்குள் கொடுத்தல் வாங்குதல் ஒரு துளியாவது இல்லை எனச் சொல்ல மறுத்தல், உடல் பண்டமாக உள்ளது எனும் உண்மை உனக்கு விளங்க வில்லை அல்லது வாங்க மறுக்கின்றாய் என்பதையே எனக்கு உணர்த்துகின்றது. தத்துவ விசாரணையையும், பொருளாதாரக் குறியீடு களையும் சற்றே ஒதுக்கி வைப்போம். என்னை நீ நுகர்ந்தாயா என்பதை யறியவே எனக்கு விருப்பமாக உள்ளது."

"நீ நுகர்பவன், நான் நுகரப்படுபவள்."

"இது பழைய கதை. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய கதையாகவும் இருக் கலாம். ஆனால் பால் குடத் துள் கூட நாம் பண்டங்களாக இருக்கின்றோம் என்பதே உண்மை."

"உன்னை நுகர்வது யார்?"

"என்னையும் நீயும் நுகர்ந்தாய் என்பதை நான் அறிவேன். உனது முனகல்கள், உனது விட்டுக்கொடுப்புகளின் கணங்கள், உனது விழிகளின் சொருகல், உனது முகத்தில் ஒழுகிய தவிப்பு... இவை களுக்கு அர்த்தம் இல்லையா? மறுதலிப்பின் மறுபக்கம் அங்கீ காரமாகவும் இருக்கலாம். சரி, உன்னை மல்லிகை நுகர்ந் தாளே, அப்போது உனக்கு நீ பண்டம் எனும் பிரக்ஞை வராமல், நான் நுகர்ந்தபோது மட்டுமே நீ பண்டம் எனும் பிரக்ஞை உனக்கு வந்துள் ளது. இது விசித்திரமான விஷயம்தான். என்னை நீ நுகர்ந்தாயா? உனது நிர் வாணத்தை எனக்குக் காட்டு."

"நான் உன்னை நுகரவில்லை! நீயே என்னை நுகர்ந்தாய்!"

"மீண்டும் மறுதலிப்பு. மறுதலிப் பில் நீ துயில் கொள்ளுதலும் சாத்தியமே. சந்தைக்கு உன் னைக் கூட்டி வந்ததோ, வரச் சொன்னதோ நான் அல்ல. உனது சந்தை கள்ளச் சந்தை வேறு."

"எனது சந்தை கள்ளச் சந்தையா?"

"ஆம்! உனது வியாபாரத்தை நீ களவாகவே செய்கின்றாய்."

"நீ பெண்ணாக இருந்திருப்பின் எனது நிலை கொஞ்சமாவது விளங்கியிருக்கும்."

"நான் பெண்ணாகவும் ஆணாகவும். இப்போது உனது கள்ளச் சந்தையை நான் விமர்சிக்கவில்லை.

"எனக்கு ஓர் சத்தியம் தருவாயா?"

"சத்தியமா? உனக்கு என்னில் நம்பிக்கை இல்லையா? உனக் குத் தீங்கிழைத்தல் எனது இலக்கு அல்ல."

"என்னோடு நீ ரகசிய இரவு களைக் கழிக்கும் விபரத்தை யாரிடமும் சொல்லாதிருப்பாயா?"

"என்னால் ஆம் எனச் சொல்ல முடியும்! ஆனால் உனது ஏனைய வாடிக்கையாளர்களும் உனக்குச் சத்தியம் செய்து தந்தனரா?"

"எனது உடல்..."

*உதடுகள் பதிலைப் பிரசவிக்க இன்னலுறும் வேளையில் அரவம் தனது காதுகளைச் செவிடாக்கி நகரத்துள் நுழைகின்றது. அங்கே ஓர் மலை. அதன் கீழ் முறிந்த நிலையில் ஓர் மரம். மரத்தினது கால் பகுதியிலே தன்னைச் சுருட்டி வைத்துக் கொண்டு மலை உச்சியைப் பார்க்கின்றது. மருட்சி இல்லாத விழிகள். பல தடவைகள் அரவம் மலை அடி வாரத்திற்கு வந்த துண்டு, அங்கே தூங்கியுள்ளது., ஆடி யுள்ளது, சில கீரிகளையும் கொன்றுள்ளது.*

-கீரியும் பாம்பும்.

"இந்த மரத்தில் ஆப்பிள்கள் விளைந்தபோது அவை யாருக் காக விளைந்தன என்பது உனக்குத் தெரியுமா?"

"அது எனக்குத் தெரியாது! ஆனால் ஒருவருக்காக நான் அவைகளைப் பாதுகாத்தேன்."

"இன்று இந்த ஆப்பிள்களை பலர் சுவைக்கின்றனர். இந்த பலருள் அவரும் ஒருவராக உள்ளாரா?"

"நிச்சயமாக நீ அவர் இல்லை."

"அதை நீ சொல்லி நான் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் எனக்கோ இந்த ஆப்பிள்களைச் சுவைக் கும் பாக்கியம் கிடைத்தது. அது அவருக்கும் கிடைத்ததா?"

"இல்லை."

"உனது கழுத்தில் தாலி பூட்டியவர் அவர் அல்லவா?"

"அது அவர் அல்ல. இன்னொருவர்."

"அப்படியா?"

"ஆம்! விருப்பமான தெரிவு களை ஆடுவதற்கான தொட்டி லாக திருமணம் எனக்கு இருந்ததில்லை."

"ஆப்பிள் மரம்வரை அவரை உன்னால் அழைக்கமுடியாமல் போனது ஏன்?"

"அவர் மிருதுவானவர். பலவீன மானவர். ஆப்பிள்களைத் தன் வசம் எடுக்கும் பலம் அவரிடம் இல்லாது போனதால், அவை களை இன்னொருவர் எடுத்துக் கொண்டார்."

"அவரது பலவீனத்தின் மூலம் எது?"

"அவர் கீழ் சாதி என அறியப்பட்டவர்."

"நீ"

"உயர்சாதியென..."

"இந்தப் பிரிவுகளில் உனக்கு நம்பிக்கை உள்ளதா?"

"எனக்கு இல்லை. எனது பெற்றோர்களுக்கும், மூதாதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யர்களுக்கும் இருந்தது."

"இந்த நம்பிக்கை பெற்றோர், மூதாதையர்களைத் தாண்டி வேறு எவருக்கும் வராதா?"

"ஏன் வரக்கூடாது. எனது கழுத்தில் தாலி பூட்டியவர், சாதி ஒழிப்பை எழுதிப் பல பரிசில்கள் பெற்றவர்."

"எவரது கையில் ஆப்பிள் மரம் போகக்கூடாதோ, அவரது கையில் போய் விட்டதே என்பதற்காக நீ துயர் கொண்டாயா?"

"ஆம்! எனது ஆப்பிள்களை நான் இன்னொருவருக்காகப் பாதுகாக்கவில்லை. அவருக் காக மட்டுமே."

"அவரிடம் ஆப்பிள் மரத்தை மீளப்பெறுவதற்கான போராட்ட துணிச்சல் இல்லையா?"

"இருந்தது. போராடத் தொடங்கிய வேளையிலேயே அவரை எனது அவரும், அவரது ரசிகர்களும் அடித்துக் கொன்று விட்டார்கள்."

"இன்றோ பலரும் சுவைக்கின்ற ஆப்பிள்களாகி விட்டன."

"எல்லோருக்கும், எல்லா ஆண் களுக்கும் ஆப்பிள் வெறி"

"நீ சுவைக்கும் கனி எது?"

"அந்தக் கனி எனது கைக்கு வரவில்லை."

"ஆனால், நீ ஏனைய கனிகளைச் சுவைத்ததுண்டல்லவா?"

"நிர்ப்பந்தம் காரணமாக..."

"சுவைத்தாயா? சுவைக்க வில்லையா?"

"எனது உதடுகளால் அவை களைக் கவ்வினேன், கடித் தேன். இதற்கு அர்த்தம் நான் அவைகளைச் சுவைத்தேன் என்பதல்ல."

"உனது ஆப்பிள்களை நான் கடித்தபோது அவைகள் சுவையாக இருந்தன."

"உனது சுவையைத் தீர்மானித் தது நீயே, நான் அல்ல."

"சந்தைக் கலாச்சாரத்தில் எனது சுவையைத் தீர்மானிப்பது நானே என்பது எனக்குத் தெரியும்."

"எனது பண்டத்தின் தர்மமும், பெறுமானமும் உனது சந்தை விழிகளுக்குத் தெரியாது."

"பண்டங்களின் தரத்திற்கேற்ப விலைகள் ஏறலாம் இறங்க லாம். சில சந்தைகளில் பண்டங்களைப் பேரம் பேசு வதற்கு வாய்ப்புள்ளது. உனது பண்டத்தின் விலை உயர்வாக இருந்தபோதும் நான் பேரம் பேசாமல் தெரிவு செய்தேன். ஏனெனில் உனது தரம் உயர் வானது என நான் மதிப்பிட்டேன்."

"கேள்விகளால் என்னைக் கொத்தாதே!"

*அரவம் பால் கேட்கின்றது. அவள் கொடுக்கின்றாள். அது குடிக்கின்றது. பின்னர் அவளைக் கொத்துகின்றது. கடனிற்காக.*

"நீ என்னிடம் கேட்க வந்தது எது?"

"தூங்கும் கலையை உன்னால் எனக்குக் கற்பிக்க முடியுமா?"

"இரவில் நான் தூங்குவ தில்லை. பகலிலே சற்றுத் தூங்குவதுண்டு. எனது தொழில் தூங்கும் கலையைக் கற்பிப்பதோ அல்லது தூக்க மாத்திரைகளை விற்பது மோவல்ல."

"உன்னால் எனக்குக் கற்பிக்கக் கூடிய கலை எது?"

"அது உனக்கு மட்டுமல்ல, என்னிடம் வருகின்ற அனைவருக்குமே தெரியும்."

"உண்மைதான், அது எனக்குத் தெரியும். ஆனால் நான் இங்கு வந்ததோ தூங்கும் கலையைக் கற்கவே."

"உன்னால் தூங்கமுடியவில்லையா?"

"ஆம்!"

"தூக்க மாத்திரைகளைப் பாவிக்கலாமே!"

"எனக்கு இயற்கைத் தூக்கமே தேவை."

"தூங்காத வேளைகளில் நீ என்ன செய்வதுண்டு?"

"தூங்க முயற்சிப்பதுண்டு."

"அரிதாகத் தூங்க வரும் வேளைகளில்..."

"தூக்க சுகத்தை என்னால் அனுபவிக்க முடியாமல் உள்ளது."

"கனவுகள் உனது தூக்கத் தைச் சித்திரவதை செய்கின்றன போலும்."

"கனவுகள் அல்ல."

"அவை எவை?"

"தெரியாது. அதுதான் உன்னி டம் ஆலோசனை கேட்க வந்தேன்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆலோசனை சொல்வது என் தொழிலுமல்ல, அதற்கு எனக்கு நேரமும் இல்லை. எனது நேரமே எனது தொழிலின் கணங்கள். வருகின்றாயா?"

"எங்கே?"

"எனக்குள்."

"ஏன்?"

"மாமிஷம் ருஷிக்க."

"நான் இறைச்சி சாப்பிட்ட பின்னர்தான் இங்கு வந்துள்ளேன்."

"அந்த இறைச்சியும் இந்த இறைச்சியும் ஒன்றல்ல."

"பிராணிகள் வித்தியாசமானவை, வித்தியாசமான தோற்றங்களைக் கொண்டன. இந்த வித்தியாசங்களுக்கு ஏற்ப சுவையில் மாற்றம் ஏற்படும் என்பது எனக்குத் தெரியும்."

"வா அல்லது போ."

"நான் போகின்றேன்."

"நீ விரும்பியபோது திரும்பி வரலாம். எனது சந்தையின் கதவுகளுக்குப் பூட்டுகள் இல்லை."

*அரவம் போகின்றது. போகு மிடம் தெரியாமல். அதனது இலக்கு இலக்குகளைத் தேடுவதல்ல. இலக்கின்மையின் அர்த்தங்களை நீர் மேடையில் கிளறிப் பார்ப்பதற்காக அது ஊர்கின்றது அதனது பாஷையில் கிளறுதல் தேடுதலின் தொடக்கமும் அல்ல.*

"Wait!"

*அரவம் திரும்புகின்றது.*

"ஏன் தாமதிக்க வேண்டும்?"

"உன்னைப் புதைக்கக் கிடங்கு தோண்டி வைத்துள்ளேன்."

"என்னைப் புதைக்க முன்னர் கிடங்கை நான் எட்டிப் பார்க்கலாமா?"

"பார், நீர் பார்க்கலாம்!"

*பார்க்கின்றது அரவம்.*
*பார்க்கின்றது நான்.*

"பார்த்தது போதும்! இறங்கு:"

*அரவம் நுழைகின்றது. அதன் மீது மண் விழுகின்றது. கிடங்கு மூடப்படுகின்றது. அரவம் வெளியேறுகின்றது.*
*அங்கே இப்போது கிடங்கு இல்லை. ஓர் சிறிய துவாரம் மட்டுமே. தப்பித்ததிற்கான அடையாளம். தப்பித்தலுக்குப் பல வழிகள் இருக்கலாம். அரவத்தின் வழிகள் அதற்கே தெரியும்.*

*கோவிலின் முன் அரவம் ஒதுங்கியதற்குக் காரணம் எது? தரத்திற்குத் தரம் கற்பிக்கும் ஊதுபத்தி வாசனையா? பக்திக் கிறக்கமா? ஜோனி-லிங்க தெய்வீக அர்த்தங்களுக்கு மாற்று அர்த்தங்கள் தரும் ஓர் வேட்கையா? இந்தக் கேள்விகளுக்குள் அது இல்லை, இல்லாமலுமில்லை. அரவம் பதில்களைத் தேடுவதுமில்லை, அதனது கேள்விகள் பதில்களில் குளிர் காய்வதுமல்ல.*

*அரவமும், அதனது கடந்த காலமும். மகுடி அதனை ஆட்டியபோது, அதனது கமெரா விழிகள் அதன் மீதே. அதனது மனவெளியை நிறைந்திருந்தது இருளா அல்லது ஒளியா என்பதை மகுடி அறிந்திருந்தானா? அவனைக் கொல்ல அது எத்தனித்ததில்லை. அவனுக்கும் அதனது பல்களைப் பிடுங்கும் எண்ணம் வந்ததுமில்லை. இருவர் உறவினதும் அடையாளம் நிறம் அற்றது.*

"நில்!"

"என்னைத் தடுக்காதே!
என்னைப் பார்க்காதே!
என்னைத் தொடாதிரு!
என்னைத் தெரியாதிரு!"

"உனது பின்னல் அழகியது."

"ஏன் என்னைத் தொடருகின்றாய்?"

"திரும்பாதே! உனது பின்னலை ரசிக்கச் சில கணங்களை எனக்குத் தா. உன்னிடம் நான் கெஞ்சுகின்றேன்."

"உனது கெஞ்சல் போலியானது.

"எனது ரசனையோ சுத்தமானது."

"உனது சுத்தம் போலித் திராவகத்துள் தோய்த்தெடுக்கப்பட்டது."

"உனது பின்னலும், இந்தப் பின்னல் முடியில் பூத்திருக்கும் வெண் பூக்களின் வாசமும் எனக்குள் போதை வித்துக்களைத் தூவிக்கொண்டுள்ளன. இந்தப் பூக்களை நீ எங்கே வாங்கினாய்?"

"பூக்கடையில் வாங்காமல் எங்கே வாங்குவதாம்?

"வாங்கியதா அல்லது வாங்கித் தரப்பட்டதா?"

"எனது பூக்களின் வரலாறு உனக்கு ஏன் தேவை?" •

"இன்றுதான் முதல் தடவையாக உனது உச்சியில் பூக்களைப் பார்க்கின்றேன். இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதவன்

ATHAVAN
83, Piliyandala Road
Maharagama

முஸ்லீம், தமிழ், சிங்கள சமூகங்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் அரங்காக "ஆதவன்"

அனைவரும் கௌரவமாகவும் சமாதானத்துடனும் வாழக்கூடிய நாட்டை கட்டியெழுப்பும் நோக்குடன் சிங்கள மொழியில் "ராவய" கடந்த 15 வருட காலமாக துணிவான கருத்துக்களை முன்வைத்து பரிமாற்றத்தை ஏற்படுத்தி வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இதே நோக்குடன் "ராவய" வெளியீடான "ஆதவன்" வார இதழ் தமிழ் மொழியிலும் ஓர் மாற்றுப்பத்திரிகையாக...

விசித்திரம்."

"இதில் என்ன விசித்திரம் உள் ளது. நான் கோவிலிற்குப் போகின்றேன்."

"பிரார்த்தனை வெறி உனக்கு வந்துவிட்டதா? அல்லது பக்தன் ஒருவனும் உனது உடலில் பக்தி கொண்டு விட்டானா?"

"எனது உடல் உனது சொத்து அல்ல."

"ஓஹோ! அது உலகின் சொத்தாகி விட்டதா?"

"என்று நீ எனது உடலைத் என்று தொட்டாயோ அன்றே அது உலகின் சொத்தாகி விட்டது."

"அப்படியா? நீ என்னுடன் உடனடியாக எனது கோவிலுக்கு வா!"

"உனது கோவிலிற்கு நான் வரமாட்டேன்."

"எனது கோவிலுக்கு நீ இன்று வராது விட்டால், இனி உனக் குக் கோவில்களே இருக்கா."

"உனது கோவிலுக்கு வரு தலைக் காட்டிலும், கோவில் களிற்கே போகாதிருத்தல் எவ்வளவோ மேலானது."

"வா! இன்று இரவுமட்டும் எனது கோவிலுக்கு வா! எனது கோவிலைக் காட்டிலும் வசதியான கோவில்களை உனக்குக் காட்டித்தருவேன், அவைகளுக்கான வழிகளையும் காட்டுவேன்."

"வராது விட்டால்..."

"உனது கோவில்களின் வழி களை உனது கணவன், ஆம் உனது கணவன் என அறியப் பட்டவனுக்குக் காட்டுவேன்."

"காட்டு!"

"உனது மொழி மோசமானது. இந்த மொழியைமாற்றுவாயா?"

"எனது மொழியை மாற்றம் செய்வதிலோ அதில் திருத்தம் போடுவதிலோ எனக்கு எந்த விருப்பமும் இல்லை. காட்டு! எங்கு காட்டமுடியுமோ அங்கெல்லாம் காட்டு!"

*"வா" என அரவத்தை அழைப் பது வேறு யாருமல்ல மகுடியே. மகுடி வாயைத் திற எனக் கேட்கு முன், அரவத்தின் பல்கள் தாமாகவே கழண்டு விழுகின்றன.*

***

**பாம்பின் குறிப்பு:** என்னால் இன்னும் கூடுதலாக ஊரமுடியும். கதாசிரியர் தான் எழுதிய பக்கங்களை சிறுகதைக் குறிப்பு கள் எனத் தொடக்கத்திலேயே குறித்து விட்டதால், எனது ஊரும் உரிமை இவரால் நசிக்கப்பட்டு விட்டதாக கருதுகின்றேன். இது காரணமாக நானும் என்னைக் கதாசிரியர் எனப் பிரகடனப் படுத்துதல் என முடிவெடுத்து, நான் எழுதும் முதலாவது படைப்பிற்கு "பாம்பின் கதை" எனத் தலைப்பிடலாம் என நினைத்துள்ளேன்.

**கதாசிரியரின் குறிப்பு:** பாம்பின் அவதி எனக்கு விளங்குகின்றது. இது காரணமாகவே அது அவதிப்பட்டு ஓர் குறிப்பையும் எழுதியுள்ளது. எனது 'சிறுகதைக் கான குறிப்புகள்' என்று ஓர் சிறுகதை வடிவத்தைப் பெறுகின் றதோ அப்போது எனது குறிப்பு களையும் பாம்பின் குறிப்புகள் மீதான சில குறிப்பு களையும் எழுதலாம் என நினைக்கின்றேன்.

Paris 21.08.2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னும் இன்னும்

தேவதாசன்

சாதியம் என்கிற சாம்ராஜ்யம் இரண்டாயிரம் வருசங்களுக்கு மேலாக தன்ர ஆதிக்கத்த செலுத்திக்கொண்டுதான் வருகிது. இந்த நாசமாய்ப் போன சாதிய இல்லாமச் செய்யோணும் என்று சிலரும் எப்படியாவது காப்பாற்றியே ஆகவேணும் எண்டு சிலரும் அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரையும் விடாப்பிடியா வேலை செய்து கொண்டுதான் இருக்கினம்.

மனிசன மனிசன் அடக்கி வைக்கிற விளை யாட்டுக்கள் உலகம் முழுக்க இருந்தாலும் தமிழ்ச் சமூகத்துக்குள்ள இருக்கிற சாதியம் உலகத்தில இருக்கிற எல்லா ஏற்றத்தாழ்வுகளையும் 'ஓவரேக்' பண்ணிக்கொண்டிருக்கு எண்டதில சாதி வெறியர்கள் சந்தோசப்படலாம்.

இந்த இரண்டாயிரம் ஆண்டுவரையும் தமிழர்கள் என்னத்த சாதிச்சிருக்கினம் எண்டு கணக்குப் பார்த்தால் சாதிய அழிய விடாம காப்பாற்றி இருக்கினம். விஞ்ஞானம் வளர வளர சாதி பார்க்கிற முறையும் மாறிக்கொண்டுதான் இருக்கு அதிலும் இந்த புலம்பெயர்நாடுகளில பெரிய அசிங்கம் என்னண்டால் ஒரு தமிழன் இன்னொரு தமிழனைக் கண்டால் ஹலோ எந்த ஊர்? எண்டு கேட்பான். பிறகு ஊரில எவடம்? எந்தத் தெரு? எந்த ஒழுங்கை? எண்டு துருவித் துருவி விசாரிப்பான். ஒரு 'கூடின சாதிக்காரன்' 'குறைஞ்ச சாதி' எண்டு சொல்லுறவனை இப்படிக் கேட்கைக்குள்ள குறைஞ்ச சாதிக்காறனுக்கு சரியான மனச்சங்கடமாயப் போயிரும். மற்றவனோ விடமாட்டான். கொழும்பில கடவைச்சிருக்கிறவரத் தெரியுமா? இந்த விதானையைத் தெரியுமா? அந்த வாத்தியாரைத் தெரியுமா? இப்படியெல்லாம் கேட்டு அவயள் தன்ர சொந்தக்காரர் எண்டு சொல்லி தன்ர பெருமையைச் சொல்லிக் கொண்டிருக்க மற்றவன் அவமானத்தால கூனிக் குறுகுவான் அப்படி இப்படி விசாரிச்சு சாதியக் கண்டறிஞ்ச பிறகு வேற எங்காயாவது இடத்தில திரும்பவும் காணயிக்க 'ஹலோ'வோட அவையின்ர உறவு முடிஞ்சிடும். சில பேர் இவர் ஆர் எண்டு தெரிஞ்ச பிறகு கண்டாலும் காணாதது மாதிரிப் போவினம். ஐரோப்பாவில் இப்ப கனபேர் சாதிபார்க்கிறதில்லை எண்டு கதைக்கிறது ஒரு பாசனாப் போச்சு.

என்ர நண்பன் ஒருத்தர் சொன்னார் இப்ப சாதி எண்டு ஒண்டும் கிடையாது. இதுகளைக் கதைக் கிறதாலதான் பிரச்சனை. இதைப்பற்றிக் கதைக் காமல் விட்டால் பேசாமல் அழிஞ்சி போயிடுமாம் எண்டு சொல்கிறார். அப்படியெண்டால் சிங்கள ஆட்சி நடத்திறவ தமிழரை அடக்கி ஆளுகினம் அதைப் பற்றிக் கதைக்காமல் போராடாமல் அப்படியே விட்டு விட்டால் பிரச்சனை தீர்ந்திடும்தானே. வீணா என்னத் துக்கு இந்த ஆயுதப்போராட்டம், மனிதக்குண்டு.

இண்டைக்கு எல்லாரும் பரவலாக் கதைக் கிற விசயம் சிதா (எயிட்ஸ்) . செக்ஸைப்பற்றி நாங்கள் நிறையத் தெரிய வேண்டிக் கிடக்கு, கனக்கக் கதைக்கவேண்டி இருக்கு, அதைப்பற்றி அலசி ஆய்வு செய்யவேண்டிக் கிடக்கு. அப்பதான் அந்த நோயைப் பற்றியும் தீர்வைப் பற்றியும் முடிவெடுக்க முடியும். அதைப் போலதான் சாதியும். இரண்டாயிரம் வருஷமா இழுத்துக்கொண்டு வாற சாதி எண்டுற சிதாவை அழிக்க வேண்டும் எண்டால் சாதியைப் பற்றி கதைக்கத்தான் வேணும் அதை மறைச்சிவைக்க வைக்க அது கூடிக் கொண்டு போகுது.ஆகக் கூடினது ஐம்பது வருசத்தில முடிய வேண்டிய பிரச்சனையை இரண்டாயிரம் ஆண்டு முடிஞ்சும் அசைக்க முடியல்ல எண்டு சொன்னால் இதுக்கு அடிப்படையில என்ன காரணம் எண்டு யோசிக்கவேணும்.

எனக்கொரு மச்சான் ஜேர்மனியில இருக்கிறார். மச்சான் எண்டால் என்னுடைய அக்கா வின்ர புருசன்ர தம்பி. ஊரில பார்த்து பத்து வரு சத்துக்குப்பிறகு அவரைப்பார்க்க ஜேர்மன் போறன். பத்துவருசத்துக்குப்பிறகு பார்த்ததுல சரியான மகிழ்ச்சி. ஊர்க்கதையெல்லாம் கதைக்க வெளிக் கிட்டம். அவரும் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில வேலை செய்தவர். நானும் அந்தச் சங்கத்திலதான் வேலை செய்தனான். என்னதான் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் எண்டு பேர் வச்சாலும் மற்றவ கள்ளுச் சங்கம் எண்டுதான் ஸ்ரைலாச் சொல்லுவினம். சங்கத்தப் பற்றியும் மெல்லக் கதைக்க வெளிக்கிட மச்சான் டக்கு, டக்கு எண்டு கண்ணைக் காட்டினார். எனக்கு விளங் கிட்டுது நான் கதைய சடக்கெண்டு நிப்பாட்டிப் போட்டன். என்ன காரணம் எண்டால் எனக்குப் பக்கத் தில வேற ஆக்கள் இருந்தவ. அவயள் மச்சாண்ட வீட்டுக்கு பக்கத்து வீடு. நான் பிரான்சில இருந்து வாறன் எண்டாப்போல என்னைப் பார்க்க அவையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தவ. கொஞ்ச நேரத்தில அவ போயிட்டினம். மச்சான் துவங்கினார். தாசன் நான் கண்ணக் காட்டி னது ஏனெண்டால் அவையள் 'வெள்ளாம்' ஆக்கள். எங்கள ஆரெண்டு தெரியாது. எங்களப் பற்றி அறிய அவையும் கனக்க முயற்சி செய்தவ. ஆனால் நாங்கள் பிடி குடுக்கையில்ல எண்டு தங்கட வீர வாழ்க்கையைச் சொன்னார்.

ஒரு உயர்சாதிக் காரன் எண்டால் தான் ஆரெண்டத உடனே சொல்லிப் போடுவான். ஆனால் குறைஞ்ச சாதிக் காரனெண்டால் அதை மறைக்க படாத பாடு படுவான். இப்படி மறைக்க துடிக்கிறது என்ர மச்சான் மட்டும் இல்ல தொண்ணூறு வீதமான தலித்துகளுக்கும் இதே கதிதான்.

என்னுடைய மருமகன் ஒருத்தன் சுவிசில இருக்கிறான். அவனுக்கு கலியாண வயசாப் போச்சு. அவனுக்கு ஒரு தனிக்குணம். அவனை அங்கு உள்ளவ லோயர் எண்டு கூப்பிடுவினம். அந்தளவுக்கு கதை கூட. எல்லோருக்கும் இவனுல ஒரு கண். தன்ர அக்காவின்ர மகளுக்கு செய்யலாம், அண்ணன்ர மகளுக்கு செய்யலாம் எண்டெல்லாம் கணக்கு! என்னோட கதைக்கைக்குள்ள ஒருநாள் சொன்னான் தனக்கு ஊரில ஒரு பொம்பிள பார்க்கச் சொல்லி. நான் கேட்டன் சுவிசில பெண் இல்லையா? எண்டு அதுக்கு அவன் இஞ்ச நிறையப் பேர் ரெடிதான். நான்தான் ரெடியில்ல. நான் என்ன சாதியெண்டு தெரியாம சாதகத்தையும் குறிப்பையும் கேட்குதுகள். கலியாணம் பேச வெளிக்கிட்டால் எல்லாம் நாறீரும் (அதாவது சாதி தெரியவந்திடும்) அதுதான் நான் 'ஊரில் எல்லாம் பார்த்திட்டினம்' எண்டு சொல்லி சமாளிச்சுக் கொண்டிருக்கிறன் எண்டான். என்னதான் உற்ற நண்பர்களைப் போல பழகினாலும் கலியாணம் காட்சி எண்ட உடன சாதி முக்கியமாப் படும். ஏனெண்டால் அதுதான் ரெத்த உறவு.

பொருளாதார சமநில வந்தால் சாதி அழிஞ் சிடும் எண்டது உண்மையானால் ஐரோப்பாவில சாதி எண்ட பேச்சே இருக்கக் கூடாது. மாறாக என்ன நடக்குது எண்டால் ஐரோப்பா அமெரிக்காவில் இருக்கிற படிச்சு பெரிய லெவலில அதாவது டொக்டர், இஞ்சினியர் மாதிரி படிச்ச பையன்கள் கூட தங்களுக்கு சமைச்சுப் போடவும் வாரிசு பெற்றுக் கொடுக்கவும் மணப்பெண்ணுக்கு விளம்பரம் போடுகினம்.'உயர்குல வேளாள சாதியைச் சேர்ந்த படித்த அழகான பெண் வேண்டும்' எனக்குத் தெரிந்தவரை எங்கள் குடும்பத்தைவிட மிகவும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழுற குடும்பத்தில ஒரு பன்னிரெண்டு வயதுப் பிள்ளை ஐம்பது வயது நிரம்பிய என் தகப்பனாரை பேர் சொல்லித்தான் கூப்பிடும். ஆனால் இதே தமிழ்க் கலாச்சாரத்தில வயது கூடினவையள பேர் சொல்லிக் கூப்பிடக்கூடாது எண்டும் பேசிக் கொள்ளுவினம். மொத்தத்தில பாமர மக்களாயிருந்தாலும் படிச்சவ எண்டாலும் பொருளாதார சமநிலை இருந்தாலும் சாதி எண்டது பெரிய சாதிக்காரர் எண்டு தங்கள நினைக்கிறவைக்கி ஒரு தராதர சேட்டிபிக்கட் எண்டுதான் இப்பவும் நினைக்கினம். இப்ப அண்மையில நான் அறிந்த விடயம் தமிழ் மக்களின் விடுதலைக்காக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் ஊடகம் ஒன்றில் இரண்டு நபர்களுக்கு ஒரு விடயத்தில் கருத்து முரண்பாடு வந்திட்டுது. ரெண்டுபேரும் வாயால சண்டை பிடிச்சினம். அதில ஒருத்தன் பேசினான் உன்ர புத்தியக் காட்டுறயா? ஒரு வெள்ளாளன் எண்டு தன்னைச் சொல்லிக் கொள்கிறவனும், ஒரு தலித்தும்தான் இந்த ரெண்டுபேரும். வெள்ளாளன் சொன்னான் உன்ர புத்தியைக் காட்டுறியா? எண்டால் என்ன அர்த்தம். சாதிப் புத்தியைக் காட்டுறயா? என்பதுதானே. இப்படி ஒரு வார்த்தையைப் போட்டு தலித்தைக் கதைக்கவிடாமல் அப்படியே அடக்கிவிட முயற்சிப்பது காலங்காலமா நடக்கிற விடயம். ஒரு நண்பர் சொன்னார் "சாதி என்றது டீ பிறிச்சுக்குள்ள வைச்சிருக்கிற இறைச்சி மாதிரி. தேவையான நேரத்துக்கு எடுத்துப் பாவிக்கலாம்." சாதி இப்படித்தான் இண்டைக்கு ஐரோப்பாவில இயங்கிக் கொண்டிருக்கிறது.


இந்த ரெண்டாயிரம் வருசமா சாதி அழியாம இருக்குது எண்டால் என்ன காரணம். அப்படி யோசிச்சுப் பார்த்தால் என்ர மண்டைக்கு எட்டினவர இந்த இந்து மதம்தான் காரணம். இந்த இந்து மதத்தை தமிழன் கட்டிப் பிடிச்சுக் கொண்டிருக்கும் வரையும் சாதியும் அதோட ஒட்டிக் கொண்டுதான் இருக்கும். சாதி என்கிற விருட்சமான மரத்துக்கு ஆணிவேர் மாதிரி இருக்கிறது இந்து மதந்தான். எப்ப இந்த மதம் தமிழனுக்க வந்துச்சோ அப்பதான் தூய்மை, புனிதம் மயிர் மண்ணாங்கட்டி எண்டு வளந்து சாதியா வளர்ந்தது. ஒரு சரியான இந்துமத வெறியன் சாதி வெறியனாயும் இருப்பான். இது 'லொஜிக்' அவன் என்னதான் சோசலிசம் கதைத்தாலும் சாதி எண்ட சாமான் அவண்ட மனசுக்குள்ள பத்திரமா இருக்கும். நேரம் வரயுக்குள்ள அவன் யாரெண்டத நிரூபிப்பான்

சாதிப் பிரச்சனையை இல்லாமச் செய்ய பலர் பல காரணங்களைச் சொல்லுவினம். பொதுவுடமை ஆட்சி வந்திட்டா சாதி அழிஞ்சிடும், உலகத் தொழிலாளர் எல்லாம் ஒண்டு சேர்ந்து போராடி தொழிலாளர் ஆட்சி வந்தா சாதி அழிஞ்சிடும், தலித்துகளிட்ட பொருளாதாரமும் கல்வியும் வளர்ந்திட்டா சாதி அழிஞ்சிடும், செய்யிற தொழில்கள மாத்தினா சாதி அழிஞ்சிடும், இப்ப கடைசியா தமிழீழம் வந்தா சாதி அழிஞ்சிடும். என்னப் பொறுத்தவரைக்கும் இதுகளில எதுவும் சாதிகளை அழிக்க சரிப்பட்டு வராது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை;
என்னை நிர்ப்பந்திக்காதே!

உன் மேற்பார்வையின் கீழ்
"வாழ்வை"
கோப்புகளாக்கி-
(அலுமாரி லாச்சிக்குள் )
பூட்டி வைக்கவும் முடியாது.

நான் அதிசயப் புதிரோ
ரகசியப் புதையலோ அல்ல...
ஒழித்துப் புதைத்து விட்டு-
நீ- பூதமாய் காவல் காக்க-

நீ- திகட்டி வீசியெறியும்...
மிச்சம் மீதியுமல்ல...

எனது குரல்-
தனித்துவமானது...! என்
ஆற்றலும்... சிந்தனையும்-
உறுதியானவை!

திருத்தச் சட்டங்களாலும்...
புதிய ஏற்பாடுகளாலும்...
வேலிகளை விசாலப்படுத்தாமல்
விலகி நில்!

உன்னை வழிப்படவும்
உன்னைப் பின்பற்றவும்
உனக்கே அனைத்தையும்
தாரை வார்க்கவும்,
வற்புறுத்தாதே!

முழுவதும் உறுஞ்சவிட்டு
வெற்றுக் கோதாகி...
குப்பையோடு குப்பையாகும்...
பைத்தியக்காரத் தியாகத்தை
நான் வெறுக்கிறேன்!

"என்னை" - எனக்கே...
நீ- கற்றுத் தந்தது(ம்) போதும்;
"நீ"
என்னைக் கற்றுக் கொள்!

நீ- நினைத்தபடி... சேர்க்கவும்... கழிக்கவும்
செப்பனிடவும்...
களிமண் பொம்மையல்ல- நான்;
மூக்கும் முளியும்...
மூளையும் உள்ள பெண்!

நீ- வைத்திருக்கும்
அளவுப் பாத்திரத்தில்...
என்னை- ஊற்றி வார்த்துவிட
இனியும்- எண்ணாதே
மன்னிக்க,
உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை...!!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19வது தொடர்...

# பெண்கள் சந்திப்பு

பிரான்ஸ் 29,30.07.2000

ஐரோப்பாவில் நடந்துவருகின்ற பெண்கள் சந்திப்பானது தனது 19வது தொடரை இவ்வாண்டு யூலை 29-30ம் திகதிகளில் முதல்தடவையாக பிரான்சில் நடத்தியுள்ளது. சந்திப்பு ஏற்பாட்டாளர்களின் சார்பில் அனைவரையும் வரவேற்ற **விஜி** இச்சந்திப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகிய மல்லிகா அவர்களை தொடக்க உரையை நிகழ்த்துமாறு கேட்டுக்கொண்டதுக்கிணங்க **மல்லிகா** அவர்கள் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். பெண்கள் சந்திப்பை ஆரம்பித்தவர்களில் சிலரே இன்றும் தொடர்ந்து இச்சந்திப்பில் கலந்து கொள்கிற தாகவும், எனினும் இச்சந்திப்பு தொடர்ந்து நடை பெறுவதையிட்டு மிகவும் சந்தோஷமாக இருப்பதாகவும், இந்தியாவில் இருந்து அழைக்கப்பட்டு இச்சந்திப்பில் கலந்துகொள்ள வந்திருக்கும் சிவகாமியையும், மற்றும் அனுபாமா அவர்களையும் பெண்கள் சந்திப்பின் சார்பில் வரவேற்று அமர்ந்தார்.

தொடர்ந்து சுயவிமர்சனத்தின் பின்னர் நிகழ்சிகள் ஆரம்பமாகியது. முதலாவது நிகழ்வாக

"முற்போக்கு பேசும் ஆண்களும் பெண்ணியமும்" – ரஞ்சி

உரையாற்றுகையில்:- இன்றைய இலக்கிய உலகில் எழுத்து துறையில் இருக்கும் முற்போக்கு பேசும் ஆண்களின் எழுத்துப்போக்கும் நடவடிக்கை களையுமே இந்தத் தலையங்கத்தை நான் எடுப் பதற்கு முக்கிய காரணமாகும் எனக் கூறி, பெண்களின் பிரச்சனைகளை தாங்களே கைகளில் எடுத்துக் கொண்டு கட்டுரைகள், கதைகள், விமர்சனம் செய்வதை தான் எதிர்க்கவில்லை எனவும். ஆனால் இவைகள் மூலம் இவர்கள் பெண்களுக்கு அறிவுரை கூறும் விதத்தில் மீண்டும் மீண்டும் ஒரு நவீன வகையான ஆண் ஆதிக் கத்தைத் திணிப்பே நடந்து வருவதாக தெரிவித்தார். இந்த முற்போக்கு பேசும் ஆண்கள் நினைப்பதுபோல் பச்சையாக பாலியல் சம்பந்தமாக கதைத்துவிட்டால் பெண்களுக்கு சுதந்திரம் கிடைத்துவிடுவதோ அல்லது பெண்களின் உறுப்புக்களை வைத்து படைப்புக்களைப் படைத்துவிட்டால் தாங்கள் ஏதோ பெண்ணியப் படைப்புப் படைத்து விட்டதாகுவதோ கிடையாது. அடுத்து தூஷண வார்த்தைகள் சரளமாக பாவிக்கப்படுவதும் அதுவும் பெண்களின் உறுப்புக்களை சுட்டுவதாகத்தான் காணப்படுவதும் அவதானிக்கத்தக்கது என்றும், இப்படி எழுதிவிட்டு அதுதான் பின்நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம் என்று கூறிக்கொள்வார்கள். கூடுதலாக பாலியல் சுதந்திரம் என்ற அடிப்படையில் குடும்பக் கட்டமைப்பை உடைக்கவிரும்பும் முற்போக்கு வாதிகளாகவே இவர்கள் உள்ளார்கள். இந்தப் புலம்பெயர் இலக்கியப் போக்கில் பெண்களின் பிரச்சனைகளை ஆண்கள் பேசுவது ஒரு பாஸனாக போய்விட்டது. எல்லாவற்றுக்கையும் மூக்கை நுழைக்கும் ஆண்கள் என்றே இவர்களை வைத்துக் கொள்ளலாம்.




ஒரு பெண் ஆளுமையாக இருந்துவிட்டால் தங்களை மீறி விடுவாளோ என்ற பயம், சிலவேளை பெண்கள் மீது வீண் பழி சுமத்துவது மேலும் கூட் டங்களில் கூட பெண்களுக்கு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களின் உறுப்புக்களை வைத்து தூஸணத் தால் பேசுவது அநாகரிகச் செயல்பபடுகளில் ஈடுபடுவதையும் நாம் அண்மைக்காலங்களிலும் கண்டுள்ளோம். சில அமைப்புக்களில் இருக்கும் ஆண்கள் தங்கள் அமைப்பில் அங்கம் வகிப்பது பற்றி இறுமாந்து கொண்டு இலக்கிய உலகில் இருக்கும் பெண்களை விமர்சிப்பதும் அவர்களைப் பற்றி அவதூறுகளைப் கதைப்பதுமாகவே உள்ளார்கள். சில பெண்களும் தங்களை பெண்ணியவாதிகள் எனச்சொல்லிக் கொண்டு இவற்றுக்கு உடந்தையாக உள்ளார்கள்.

இக்கட்டுரையைத் தொடர்ந்து நீண்ட நேரம் விவாதம் நடந்தது. அவற்றில், தாங்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொள்வார்கள். தங்களுடைய மனைவிமாரை குழந்தை பார்க்கவும், சமைக்கவும் வீட்டில் வைத்துக்கொள்வார்கள் எனவும், உதாரணமாக மாக்ஸிய பெண்ணிய வாதியான றோசா லுக்சம்பேர்க் கூட தனது சொந்த வாழ்க்கையில் போராட வேண்டியிருந்தது என மல்லிகா விளக்கினார். இது பற்றி நிருபா தனது கருத்தை வெளியிடுகையில் எக்ஸிலில் வெளிவந்த சுகனின் "மதிப்பு மறுப்பறிக்கை" மிகவும் விமர்சனத்துக்குரிய கதை எனவும். பெண்ணியம் பற்றிப் பேசும் பெண்கள் இருக்கும் இப் பத்திரிகையில் இதை ஏன் பிரசுரிக்கிறார்கள் என்றும், மேலும் அண்மையில் வெளிவந்த எக்ஸில் வெளியீடான சக்கரவர்த்தியின் சிறுகதைத் தொகுப்பில் வந்த சில கதைகள் யாழ்ப்பாணப் பெண்கள் பற்றி மிகவும் மோசமாக எழுதப் பட்டுள்ளது என்றும் தனது விமர்சனத்தை வைத்தார். இதற்கு பதிலளித்த ரஞ்சி பிரசுரிப்பதில் எந்தத் தப்பும் இல்லை என்றும், இவற்றைப் பிரசுரிப்பதன் மூலம்தான் அவர்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்லவருகிறார்கள் என்பதையும் அறியமுடிகிறது. உதாரணமாக சாருநிவேதிதாவின் ஸீரோ டிகிரி போன்ற நாவல்களில் உள்ள அவரது பாலியல் வக்கிரத்தன்மையை இந்நாவல் வெளிவராவிடின் அறிந்திருக்க முடியாது. சாருநிவேதிதா ஒரு சிறந்த எழுத்தாளன் என்னும் மற்றவர்கள் தந்த பிரமையிலேயே வாழ்ந்து கொண்டு இருக்க வேண்டும் என்றார். அடுத்து நிருபாவுக்கு எக்ஸில் சார்பில் பதில் அளித்த விஜி மதிப்பு மறுப்பறிக்கை மீதான கடந்த பெண்கள் சந்திப்பு விமர்சனம் எக்ஸிலில் வெளியாகியிருந்தது என்றும் இக்கதையில் நமது மரபார்ந்த குடும்ப ஒழுக் கவியலை கேள்விக்குள்ளாக்கும் கூட்டுப்பாலுறவு பற்றியும் அதில் கலந்து கொண்ட பெண்ணுக் கிருக்கும் பாலியல் சுதந்திரம் பற்றியும் பேசப்படுகின்ற புள்ளி



களை தொட்டுக்காட்டியதுடன், இதை பிரசுரிப்பது தப்பு என்று சொல்லிக்கொண்டு இருப்பதை விடுத்து அதற்குரிய விமர்சனத்தை வைக்கவேண்டும். எப்போது நாம் எமது பிரச்சனைகளை எமது கைகளில் எடுக்கின்றோமோ அதுதான் இப்பிரச் சனைக்கு தீர்வாக அமையும் என தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான எழுத்துக்களை பிரசுரிக்க வேண்டும் அதற்குரிய காட்டமான விமர்சனங்களை வைக்க வேண்டும் எனும் ரீதியில் சுமதி, ரஞ்சனி, தேவா, அனுபாமா போன்றோர் விவாதித்தனர். அதைத்தொடர்ந்து ஆணாதிக்க சிந்தனை எவ்வாறு ஆண்கள் மீதும் பெண்கள் திணிக்கப்பட்டிருக்கிறது, அதைச் சுமக்கும் பெண்களே பெண்களை மிகவும் மோசமாக அடக்குகின்றார்கள் என்றும், குழந்தை வளர்ப்பில் உள்ள பிரச்சனைகள், விவாகரத்தினால் அப்பெண்ணுக்கும், குழந்தைகளுக்கும் சமூகத் தினால் ஏற்படும் பிரச்சனைகள் என்றவாறாக பலகோணங்களிலும் ஒவ்வொருவரும் தங்களுடைய அனுபவங்களையும், தங்களுடைய சொந்தப் பிரச்சனைகளையும் மனந்திறந்து பேசினார்கள்.

2வது நிகழ்வாக:-

"பெண்களும் குறைந்த கூலியும்" – மல்லிகா

மல்லிகா தனது கருத்துக்களை பல ஆதாரங்களுடன் எடுத்து வைத்தார். ஆரம்ப காலங்களில் பெண்கள் வீட்டில் உள்ள ஆண்களுக்கு வேலை செய்வதிலேயே தங்களுடைய வாழ்க்கையைக் முடித்தனர். அதன் பிறகு பாடசாலைப் படிப்பு இல்லாத காரணத்தால் கூடுதலாக பெண்கள் தையல் வேலைக்குப் போகவேண்டிய தேவையே ஏற்பட்டது. அங்கும் பெண்களின் உழைப்புக்கு மிகவும் குறைந்த கூலியே வழங்கப்பட்டதுடன், மிகவும் உதாசீனமாகவும், கேவலமாகவும் நடத்தப்படும் வழமை இப்போதும் இருக்கிறது. இதற்கு வசதியாக பின்னர் வந்த திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் கம்பெனிகளும், உலக வங்கியும் சேர்ந்து சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்கியது. இதில் 1978ம் ஆண்டு முதலாவதாக உருவான கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் தையல் தொழிற்சாலைகள் உருவாகின. இங்கு பெண்களே அதிகம் வேலைக்கு எடுக்கப்பட்டார்கள். அப்பெண்களின் வாழ்க்கை நிலமை மிகவும் மோசமானது. அவர்கள் மிகவும் குறைந்த கூலியில் கூடியளவு உழைப்பை கொடுத்தனர். அதுமட்டுமன்றி அங்கு அவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாத நிலையே அங்கு உள்ளது என்றும், அவ்வாறன செயற்பாடுகள் எவ்வாறு அங்கு வேலைசெய்யும் ஆண்களாலும், முதலாளிமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களாலும் செய்யப்படுகின்றது என்பது பற்றியும், அவற்றுக்கெதிராக சில போராட்டங்களில் பங்கேற்ற அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். இது போன்று எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. அதற்கெதிராக நாங்கள்தான் பெண்கள்தான் போராடவேண்டும் என தனதுரையை முடித்தார்.


**3வது நிகழ்வாக**

"குடும்பம்" (சீன நாவல்) ஒரு பார்வை –ஜெபா

"பாஜின்" என்கின்ற சீன நாவல் ஆசிரியர் பாரிஸ் நகரத்தில் புகலிடம் கொண்டிருந்த போது 1927 களில் எழுதப்பட்ட இந்த நாவலில் சீனாவின் கூட்டுக்குடும்ப அமைப்பு ஒன்றில் இருக்கக் கூடிய பழக்கவழக்கங்கள், பத்தாம்பசலித்தனமான மூட நம்பிக்கைகள், கலாச்சாரத்தின் பெயரால் பேணப்படுகின்ற பெண்ணடிமைத்தனம் போன்றவை விபரிக்கப்படுகின்றன. ஆகவே மேற்படி குடும்ப சூழலுக்கும், இக்குடும்ப நிறுவனத்தின் ஊடாக பேணப்படுகின்ற பெண்மீதான ஒடுக்குமுறை களுக்கும் எமக்கும் மிக நெருக்கம் காணப்படுவ தால் குறித்த நாவல் எம்மில் இருந்து அந்நியப் படவில்லை எனக் குறிப்பிட்ட ஜெபா நாவலின் கதையை சுருக்கமாக விளக்கினார்.

இக்கூட்டுக்குடும்ப அமைப்பில் "காவோ" என்னும் குடும்பத் தலைவரின் ஒழுங்கு படுத்தலிலும் கண்காணிப்பிலுமே இக்குடும்ப வாழ்க்கை அமைகிறது. மூன்று பேரன்களும் இந்த தாத்தாவின் ஆளுமையின் கீழ் வளர்க்கப்படுகிறார்கள். இவர்கள் மூன்று பேரினது வித்தியாசமான நடவடிக்கைகளும் சிந்தனைகளுமே இங்கு கதையாக்கப்பட்டுள்ளது என்றார். அதில் மூத்தவனான ஜுக்சின் அவனது ஆசைகளைக் கூட துறந்து குடும்பத்தின் கட்டுப் பாடுகளுக்கு கட்டுப்பட்டு தாத்தா காவோவைப் போன்று ஒரு அதிகாரமுள்ள குடும்பஸ்தவனாக வருகின்றான். அடுத்த ஜுமின், ஜுகு என்னும் இருவரும் முற்போக்கு புரட்சிகர சிந்தனைகளோடு வளர்ந்து வருகிறார்கள். அக்காலகட்டத்தில் சீனாவில் நடந்த மாணவர் புரட்சி இயக்கங்களிலும் இவர்களுக்கு தொடர்புகள் ஏற்படுகின்றது. இந்த குடும்ப அமைப்பு, அண்ணா, தாத்தாவின் அதிகாரம் இவற்றில் எல்லாம் வெறுப்பேற்பட்ட ஜுகு புரட்சி இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்வதற் காக குடும்பத்தை விட்டு முற்றுமுழுதாக வெளியேறுகிறான்.

மேலும் இக்கதையில் பெண்கள் அடக்கப் படும் விதத்தை குயின், மிங் பெங், முத்த மகனின் மனைவி போன்றோர் நடத்தப்படும் முறைகளினூடாக விளங்கப்படுத்தப்படுகிறது. இந் நாவல் பற்றிய தனது கருத்தைத் ஜெபா தெரி விக்கையில் "கதை யாசிரியர் தன்னுரையில் குறிப்பிட்டதுபோல் இது ஒரு பெண்ணடக்குமுறைக்கு எதிரான ஒரு நாவலாக என்னால் இனம் காணமுடியவில்லை. மேலும் நாவலில் சில இடங்களில் அவரே ஆணாதிக்க சிந்தனைக் கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது, இந்நாவலை அக்காலகட்டத்து ஒரு பதிவாகவே கொள்ள முடியும்" என்றும் குறிப்பிட்டார்.



"தமிழில் இந்நாவல் மிகவும் இலகுவான மொழியில் அதாவது ஒரு மொழிபெயர்ப்பு என்கின்ற நினைவு இன்றியே வாசிக்கக் கூடியமாதிரி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது" என்றும், "எமது பேச்சு வழக்கில் உள்ள பழமொழிகள், முதுமொழிகள் என்பன மிகவும் சரளமாக பயன்படுத்தப் பட்டிருக் கிறது" என்றும் குறிப்பிட்டார்.

**4வது நிகழ்வாக:-**

"சக்தி" ஓர் மீள்பார்வையை – தேவா

"சக்தி" தனியவே பெண்களால் நடத்தப்படுகின்றது மட்டுமன்றி பெண்ணிய விடயங்களை மட்டும் வெளிக்கொண்டுவரும் ஒரு சஞ்சிகையாக காணப்படுகிறது. இதற்கு முன்னர் ஊதா, தேனி, சிந்தனை போன்ற பெண்களுக்கான சஞ்சிகை வெளிவந்திருந்த போதிலும் சக்தி ஒன்றே இன்றுவரை தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் பெண்கள் சஞ்சிகையாகும்.

பெண் எழுத்தாளர்களான செல்வி, ராஜினி திராணகம போன்றவர்களின் கொலை, சிவரமணி தற்கொலைகளின் பின்னணி பற்றியும், அவர்களது கட்டுரைகள், கவிதைகளை பிரசுரிக்கத் தயங்காத சக்தி, இதுவரை காலமும் நிறையப் பெண் களினுடைய சிறுகதைகள், கவிதைகளை நிறை யவே பிரசுரித்திருக்கின்றாள். எனினும் பெரும்பாலும் இதழுக்கு ஒரு சிறுகதை என்ற வட்டத்தினுள்ளே நின்று விடுகின்றது. இதை கொஞ்சம் மாற்றிக் கொண்டால் நல்லது. சக்தியில் வெளிவந்த மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் மிகவும் பிரயோசன மானதாகவும், தரமானதாகவும் காணப்படுகின்றது. மற்றும் சக்தியின் நோக்கங்களுக்கு எதிரான கட்டுரைகளை சக்தி பிரசுரிக்காமல் தவிர்த் திருக்கிறது. இவ்வாறான கறாரான போக்கு ஏனைய பத்திரிகைகளுக்கு ஒரு முன்மாதிரி என நினைக்கின்றேன். சக்தி சொல்கிறாள் நாங்கள் ஆண்களுக்கு எதிரானவர்கள் அல்ல, ஆணாதிக்க சிந்தனைக்கு எதிரானவர்கள். அவ்வாணாதிக்க சிந்தனையை கேள்வி கேட்கும் வகையிலும், பெண்களும் ஆண்களும் அவற்றைப் புரிந்து கொள்ளும் வகையிலும் சக்தியில் பிரசுரமாகும் ஆக்கங்கள் காணப்படுகின்றன. மொத்தத்தில் வர வர சக்தியின் தரம் அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காண்கிறேன். இறுதியாக வந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்தியில் இதுவரை சக்தி தனக்கென ஒரு விமர்சன அரங்கையோ, வாசகர் வட்டத்தையோ உருவாக்கத் தவறிவிட்டிருக்கிறாள் என்னும் விமர்சனம் ஆசிரியருக்கு கிடைத்திருப்பதாக அறியமுடிந்தது. இது சக்தி பரவலாக எல்லோருக்கும் கிடைப் பதில்லை என்பதனால்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன் என்றும் தனது மீள்பார்வையில் குறிப்பிட்டார்.


சக்தி பற்றி மேலும் விளக்கமளித்த சக்தி ஆசிரியைகளுள் ஒருவரான ரஞ்சி சக்தி இதுவரை 23 இதழ்கள் வந்துள்ளது எனவும், இறுதியாக வந்த சக்தியில் சக்தியை ஆரம்பித்தவர்கள் விபரமும், அவர்களுக்கு நன்றியும் வெளி வந்துள்ளது. தற்சமயம் சக்திக்கு Wep side திறக்கப்பட்டுள்ளது. மேலும் இதைத்தொடர்ந்து வந்த விமர்சனங்களில் பெண்கள் மட்டும்தான் எழுத வேண்டும் என்று இருக்கக்கூடாது என்றும் ஆண்கள் எழுதும் ஆக்கங்கள் பெண்ணிய விடயமாக இருக்கும் பட்சத்தில் பிரசுரிக்கப்படலாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**5வது நிகழ்வாக:-**

"மார்க்ஸியப் பார்வையில் பெண்ணியம்" :– நிருபா

இல்லாதவர்கள் என்றும், அளவுக்கதிக மாக வைத்திருப்பவர்கள் என்றும் அதிகாரம் செலுத்துபவர்கள் என்றும் உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்படுபவர்கள் என்றும் வேறு ஒரு பாலினராக இருப்பதனாலேயே அடக்கப்படுபவர்கள் என்றும் இன்றுள்ள சமூக அமைப்புமுறை கலைக்கப்பட்டு எல்லோரும் சமத்துவமாகவும், சந்தோசமாகவும் வாழக்கூடிய புதியதொரு சமூகமாக மாற்றப் படவேண்டும். இந்நிலையில் மார்க்ஸியலாளர் களுக்கும் பெண்ணியலாளர்களுக்குமான சமூகப் பொறுப்புகள் குவிந்து கிடக்கின்றன. மார்க்சிய லாளர்களின் பொருள் முதல்வாத கண்ணோட்டத் தில் அமைந்த ஆய்வுகள் இன்றுள்ள முதலாளித் துவ முறைமையை விளங்கிக் கொள்ளவும் அவ்வடிப்படையில் அமைந்த வர்க்கங்களாக பிரிக் கப்பட்ட சமூகத்தினை புரிந்துகொள்ளவும் வர்க்கப் போராட்டத்தினை நடாத்த ஒரு வழிகாட்டியாகவும் உள்ளது போலவே பெண்ணியலாளர்களின் ஆய்வுகளும் ஆணாதிக்க முறைமையைப் புரிந்து கொள்ளவும் பெண்விடுதலையை நடாத்துவதற்கான வழிகாட்டியாகவும் உள்ளது எனலாம்.

வரலாற்று ரீதியாக தாய்வழி சமூக அமைப்பில் இருந்து சொத்துடமை, வாரிசு என்றரீதியில் குடும்பமும், பெண்ணடிமைத்தனமும் நிறுவப்பட்டதாக மார்க்சியக் கண்ணோட்டத்தில் இருந்து வருகின்ற விளக்கத்தினையும், அதை மறுக்கின்ற




தீவிரப் பெண்ணியர்களின் பார்வையில் பொருளா தார அடிப்படையில் மட்டுமன்றி ஆண்பெண் என்கின்ற கருத்தியல்கள் மிக ஆழமாக சமூகத்தில் பல்வேறு வகையில் வேரூன்றி உள்ளமையையும் நடுநிலைமையில் இருந்து விளக்கிய நிருபா பெண்ணியப் புரிதல்கள் பன்மைப்படுத்தப்பட்டு தீவிரப்பெண்ணியம், கறுப்புப் பெண்ணியம், தலித் பெண்ணியம், சூழலியல் பெண்ணியம் என்றவாறாக பெண்களின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருப் பதை வரவேற்றார். ஆனாலும் மேற்படி எல்லா வகையினரும் ஒருமித்து போராடுவதே ஆணாதிக் கத்துக்கு எதிரான விடுதலையை பெற்றுத் தரும் என (ஒற்றைத் தீர்வில் நின்றே) கூறினார்.

ஆதிப்பொதுவுடமைச் சமூகத்தில் பெண்கள் சுதந்திரமாக இருந்தார்கள் என்றும், தனியுடமை தோற்றத்தின் பின்பே உருவான ஆணாதிக்கம் மீண்டும் ஒரு பொதுவுடமைச் சமூகத்தில்தான் இல்லாதொழிக்கப்பட முடியும் என்பதால் "எமது போராட்டமானது இன்றைய முதலாளிய முறைமைக்கும் ஆணாதிக்க முறைமைக்கும் எதிராக ஒரே வேளையில் நடாத்தப்படவேண்டியதாகிறது" என்று முடித்தார்.

***

இரண்டாம் நாள் அமர்வில் புதிதாக மேலும் சிலர் கலந்து கொண்டதனால் சுய அறிமுகம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து

**1வது நிகழ்வாக:-**

"தலித்பெண்ணியம்"– சிவகாமி

புகலிடத்திலும் தலித்பெண்ணியத்தின் முக்கியத்துவம் உணரப்படுவது குறித்து சந்தோசப்படுவதாக குறிப்பிட்டு பேச ஆரம்பித்த அவர் இந்தியாவின் தலித் இயக்கங்களின் வரலாற்றை சுருக்கமாகக் கூறினார். தலித் என்கின்ற அமைப்பிற்கு மகாராஷ்டிரா மாநிலத்தின் ஜோதிபா பூலே அவர்களின்பங்களிப்பு பற்றியும் அது அம்பேத்காரினால் பெரிய இயக்கமாக வளர்த் தெடுக்கப்பட்டது குறித்தும் விபரித்தார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இச்சாதியத்துக் கெதிரான பெரியளவிலான இயக்கமாக பெரியாரினுடைய செயற்பாடுகள் அமைந்திருந் தாலும் காலப்போக்கில் அதுவும் வெற்றி அளிக்கவில்லை எனக்கூறினார். இரட்டை வாக்குரிமைக்காக அம்பேத்கார் போராடியது காந்தி யின் சாகும்வரை உண்ணாவிரதம் என்கின்ற எதிர்ப்புப் பிரச்சாரத்தினால் முறியடிக்கப்படாவிட்டால் இன்று அரசியல் அதிகாரத்தில் குறிப்பிடத்தக்க இடத்தை தலித்துகள் பெற்றிருக்க முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

உலகத்தில் பெரிய தத்துவமாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதப்பட்ட மார்க்ஸியம்கூட இந்திய தலித்துகள் குறித்து ஏதும் சொன்னதில்லை. இந்திய மார்க்சிய கட்சிகள் கூட இது குறித்து பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. கால்மார்க்ஸே சொன்னது போல இந்திய சமூக அமைப்பு பற்றி அவருக்கு அதிகம் தெரிந்திருக்கா விட்டாலும் இந்திய மார்க்சியர்கள் சாதி அமைப்பு பற்றி பேசுவது தேவையற்றது என்ற விதத்தில் எல்லோர்களையும் தொழிலாளர்களாக ஒன்றிணைத்து தங்கள் தலைமைத்துவத்தை பார்ப்பனர்களும் வேளாளர்களும் பாதுகாத்துக் கொண்டார்கள். அதாவது இந்தியாவில் சாதி ஒரு அடிக்கட்டுமானம் இல்லை, பொருளாதார ரீதியில் தலித்துகள் முன்னுக்கு வந்துவிட்டால் வெறும் மேற்கட்டு மானமாக இருக்கும் சாதி அமைப்பு உடைந்து போய்விடும் என்று நம்பச் சொன்னார்கள்.

5000 ஆண்டு பழமை வாய்ந்த வேதங்கள் இன்றுவரை இந்துமதத்தை வளர்ப்பதற்கு அடிப்படையாக இருப்பது குறித்து நீண்ட விளக்கவுரையை நிகழ்த்திய அவர் வேதங்கள் என்ன சொல்கின்றன என்று இந்திய மக்கள் அறிந்து கொள்ளவே மார்க்ஸ் முல்லர் போன்ற வெள்ளைக்கார அறிஞர்களின் மொழிபெயர்ப்பு வரை காத்திருக்க வேண்டியிருந்தது என்றும். அதன்பின்புதான் வேதங்களிலும் உபநிடதங்களிலும் இதிகாச புராணங்களிலும் பெண்களின் நிலை தலித்துகளின் நிலை எவ்வளவோ மோசமாகச் சொல்லப்பட்டிருப்பதை குறித்து பலரும் அறியமுடிந்தது. என்று விளக்கிய அவர் கீதையின் வாக்கியங்கள் அப்பட்டமான அடிமைத்தனத்தை பெண்கள் மீது சுமத்துவதை உதாரணமாகக் காட்டினார். மேற்படி கருத்தியல்களின் கட்டிவளர்க்கப்பட்ட இந்து மதத்திற்கு எதிராக போர்க்குரல்களாக உருவான ஜைனமும், புத்தமும் கூட இந்து மதத்துக்குள் உள்வாங்கப்பட்டுபோன வரலாறு வேதனையானது என்று தெரிவித்தார். கடைசிக் காலங்களில் அறிமுகமான கிறிஸ்தவமும், இஸ்லாமும் கூட இந்திய சாதியப் படிநிலைகளுக்கு அடிபணிந்து சுழிவு நெளிவுகளுடன்தான் அங்கு வேரூன்ற முடிந்தது குறித்தும் விளக்கி இவ்வகை மதங்களிலும் இன்றுவரை சாதியம் கட்டிக்காக்கப் படுவதை உதாரணங்களுடன் காட்டினார்.

இவ்வாறான இந்திய சமூகத்தில் இருந்து ஆணாதிக்கத்துக்கு எதிராக பெண்களின் குரல்கள் ஒலிக்கின்ற போது அவற்றில் முதல் எதிரியாக இருக்க வேண்டியது இந்து மதமே என்பதை அறுதியிட்டுச் சொன்னார். அதாவது படிநிலை அமைப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு கீழ்நிலையில் இருக்கின்ற பள்ளர் பறையர், சக்கிலியர், வண்ணார் என்று



வருகின்றபோது வண்ணானாலும் அடிமைப் படுத்தப்படுகின்ற வண்ணாத்தி என்கின்ற ஒருநிலை இருப்பதைச் சுட்டிக்காட்டி இத்தலித் பெண்கள் சாதிய ரீதியாக (உயர்த்தப்பட்ட சாதி ஆண்களாலும், பெண்களாலும்) ஒடுக்கப்படும் அதே வேளை தலித் ஆண்களாலும் ஒடுக்கப்படுகின்றாள். இங்கேதான் பொதுப் பெண்ணியப் போக்கில் இருந்து வேறுபட்ட மற்றுமொரு ஒடுக்குமுறைக்கு தலித்பெண் உள்ளாகின்றார்கள். இந்த இரட்டை ஒடுக்குமுறைதான் தலித் பெண்ணியத்தின் தேவையை அவசியமாக்குகிறது என்றார்.

இந்த தலித் பெண்ணியத்தின் குரல்களை புரிந்து கொள்ள மறுக்கின்ற மற்றய பெண்ணியர்கள் இக்குரல்களை இது ஒரு சாதிப்பிரச்சாரம் என்று கொச்சைப் படுத்துவதும் ஒரு வகையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்றும், இப்படி இதை புரிந்துகொள்ள மறுக்கின்ற பெண்ணியர்களோடு தலித்பெண்கள் எந்த அடிப்படையில் சேர்ந்து ஆணாதிக்கத்துக்கு எதிராக போராட முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

மாறாக சிலர் புரிந்து கொள்வதாகவும் பெண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்று எழுதுவதும் பேசுவதும் குறித்து தலித்துகள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் எனவும், இவ்வகையில் முன்வருபவர்களை தங்களின் போராட்டத்துக்கான தார்மீக அடிப்படையை தக்க வைத்துக்கொள்ள தொடர்ந்து தங்களை நிரூபிக்க வேண்டியிருக்கின்றது எனவும் குறிப்பிட்டதோடு யாருடைய வாழ்க்கையும், நடவடிக்கைகளும் அவர்களுடைய் எழுத்துகளுக்கு நெருக்கமாக இருக்கிறதோ அவர்களைத்தான் நம்ப முடியும். வெறுமனே எழுதுபவர்களை நம்ப முடியாது. ஏனென்றால் எழுத்து என்பதும் இன்னொரு அதிகாரமே என தன்னுரையை முடித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் தலித் இலக்கியம், தலித் பண்பாடு என்பனபற்றியும் பேசப்பட்டது.

**2வது நிகழ்வாக:-**

“குறுக்குவெட்டு” (நாவல்) ஒரு பார்வை – விஜி

“சிவகாமியின்” இந்நாவலின் கதையை சுருக்கமாகக் கூறியவர், தன்னுடைய விமர்சனமாக இந்நாவல் குடும்ப அமைப்பின்மீது கேள்விகளைத் தொடுக்கின்றது, ஒருவனுக்கு ஒருத்தி என்ற எமது பதிந்து போன கலாச்சாரத்தின் பொய்மைத் தன்மையை உடைத்துக் காட்டி ஒழுக்கம் என்ற பெயரில் கலாச்சார பண்பாட்டு கட்டுக் கோப்புகளுக்குள் தங்கள் முகவரியைத் தேடிக் கொள்ளும் எத்தனையோ குடும்பங்களுக்குள் இருக்கக் கூடிய மறைமுக பாலுறவு நடவடிக் கைகள் குறித்து பதிவு செய்யும் முயற்சியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நகரும் இக்கதையில் குடும்பத்துக்குள் கணவனோ மனைவியோ மேற்படி உறவுகள் உள்ளவராகக் காட்டப்படுகின்றனர். சில வேளை அவ்விருவருக்குமே அவ்வித உறவுகள் வெளியே இருக்கும் பட்சத்தில் அது குறித்த புரிந்துணர்வும் இலகுத் தன்மையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே என நிறுவும் முயற்சியாகவே இந்நாவல் உள்ளது என்றார்.

3வது நிகழ்சியாக:-

"மலேசிய தமிழ் பெண்களின் பிரச்சனைகள்"
- சுபா

மலேசியாவில் இருக்கும் தமிழர்கள் வாழும் வாழ்க்கை முறை முற்றிலும் வேறு பட்டதாகவே இருக்கிறது. என்று தொடங்கியவர் முதலில் நாட்டைப்பறிய சில விடயங்களை கூறினார். அதாவது மலேசியாவில் மக்கள் தொகை 26.6 மில்லியன் மக்கள் இருக்கிறார்கள். இதில் 46% மலேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள், 32% சீன சமூகம், 7% தமிழர்கள், ஏனையோர் இந்த மூன்று சமூகமும் அல்லாதவர்கள். சட்டமுறைகள் அனைத்திலும் இம்மூன்று சமூகங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டிருந்தாலும் மலேசியர்கள் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறார்கள். அதற்காக இம்மூன்று சமூகங்களும் ஒத்துக் கொண்டு மலேசியர்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை என்ற சட்டமும் இருக்கிறது. மற்றும் இது ஒரு முஸ்லீம் நாடாகவே மத ரீதியில் உள்ளது என்றும், கிராமப்புறத்தை எடுக்கொண்டால் இங்குதான் நிறைய தமிழர்கள் அடிப்படை வசதிகூட அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இவர்கள் சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியாவில் இருந்து இறப்பர் தோட்டத் தொழிலுக்காக கொண்டுவரப்பட்டவர்கள் என்றார்.

மலேசியாவில் கட்டாயக்கல்வி இருந்த போதும் இந்த கிராமங்களில் வாழும் மக்கள் ஏழ்மை, சிறுவர் உழைப்பு, குடிப்பழக்கம் என்பன வற்றால் பெரும் சிக்கல் நிறைந்த வாழ்வினை எதிர்நோக்கி உள்ளார்கள் என்றார்.அங்குள்ள மதுப்பழக்கத்தால் குடும்பப் பெண்களுக்கேற்படும் பிரச்சனைகளைக் கூறியவர், நகர்ப்புறத்தில் வாழும் பெண்களுக்குள்ள பிரச்சனைகளை சிலவற்றையும் எடுத்து வைத்தார்.

இதன் பின்னர் இறுதி நிகழ்ச்சியாக சிவகாமியின் "ஊடாக" படம் போடப்பட்டது. அதைத் தொடர்ந்து அதன் மீதான விமர்சனங்கள் வைக்கப்பட்டது. நிகழ்வுகளின் முடிவில் விஜி தனது நன்றியுரையில் இதுவரை காலமும் ஒருநாள் மட்டுமே நடந்து வந்த இப்பெண்கள் சந்திப்பு இம்முறை இரண்டு




நாட்கள் நிறைந்த நிகழ்வுகளுடன் நடாத்துவதற்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

மேலும் இப் பெண்கள் சந்திப்பில் கலந்து கொள்ள முடியாததை யிட்டு உமா-(ஜேர்மனி), பாமதி-(அவுஸ்ரேலியா) ஆகியோரால் அனுப்பப்பட்ட கடிதங்களும் வாசிக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

இப் பெண்கள் சந்திப்பில் முதன் முதலாக கலந்து கொண்ட சிலரிடம் இருந்து "பெண்கள் சந்திப்பு" பற்றிய அவர்களது பார்வைகள் கீழே:-

சங்கீதா –



நான் யோசிக் கிறேன், இந்த பெண்கள் சந்திப்பு மிகவும் பிரயோசன மானது. ஏனெனில் வந் திருந்த அனைவரும் தங் களுடைய பிரச்சனைகளை மனம்திறந்து கதைத்ததைக் கண்டேன். இதற்கு முதல் எங்கட தமிழ்ப் பெண்கள் இப்படிக் கதைத்ததை நான் காணவில்லை. இவை பற்றிய செய்திகள் புத்தகங்களிலும், செய்திப் பத்திரிகைகளிலும் வெளிவரும்போது பிரச்சனை களுக்கு உட்பட்டு இருக்கும் ஏனைய பெண்களுக் கும் ஒரு உற்சாகத்தையும், சிந்தனையையும் கொடுக்கும் என்று நினைக்கிறேன்.

மற்றது ஆரம்பத்தில் எனக்கும் கேள்வி இருந்தது "ஏன் ஆண்களைக் கலந்து கொள்ளவிடுவதில்லை என்று" இரண்டு நாட்களும் கலந்து கொண்ட பின்னர்தான் ஆண்கள் கலந்து கொண்டால் பெண்கள் இவ்வளவு கதைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டேன். இந்தப் பெண்கள் சந்திப்பில் எங்களைப் போன்ற இளம் பெண்களுக்கான இங்குள்ள பிரச்சனைகளை எங்களுடைய பெற்றாரையும் வைத்து பேச வேண்டும் என்பது எனது விருப்பம். அப்படியென்றால்தான் எங்களுடைய பிரச்சனை களை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

மாலதி.



பெண்கள் சந்திப்பில் 19வது தொடரில்தான், நான் முதன் முதலாக கலந்து கொண் டேன். இச்சந்திப்புக்குப் போக முன்னர் எனக்குள் இச்சந்திப் புச் சம்பந்தமாக இருந்த எண்ணங்கள், என் மனநிலை என்பன அதில் பங்கேற்ற பின் நிறைய மாறுபாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(Progress) அடைந்தவையாக இருக்கின்றன.

முதல் நாள் நடந்த சந்திப்பு, அடுத்த நாளும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்னும் ஆவலைத் தூண்டியது. எல்லோரும் வெளிப் படையான (திறந்த) மனநிலையில் காணப்பட்டனர். இருநாட்களும் கொடுக்கப்பட்ட தலைப்புகளின் கீழ் எல்லோரும் தெளிவாகவும், விரிவாகவும் பேசினார்கள்.

கருத்து வேறுபாடுகள் பெரியளவில் ஏற்படவில்லை. ஒரு கூட்டு - குழு அமைப்பாக சுமூகமாக இச்சந்திப்பு நடந்தேறியதாக உணர்கிறேன்.

சிறி –



பெண்கள் சந்திப்பில் நான் கலந்து கொண்டது இதுவே முதல்தடவை. என்னைப் பொறுத்தவரை மிகவும் பயனுள்ள ஒன்றாகவே அமைந்துள்ளது. பல ஆக்கபூர்வமான கட்டுரைகள் வாசிக்கப்பட்டது.அதன் பின்னர் கலந்துரையாடல் விமர்சனம் என்பன இடம் பெற்றது. இதன் மூலம் தெரியாத பல விடயங்களை தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டதுடன் சில விடயங்களில் தெளிவும் ஏற்பட்டது. அத்துடன் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை சுதந்திரமாக பகிர்ந்து கொள்ள முடிந்தமையானது பெண்கள் சந்திப்பின் அவசியத்தை உணர்த்தி நிறகிறது.

இப் பெண்கள் சந்திப்பானது சிலரால் கேள்விக்குட்படுத்தப்படுகிறது. அதாவது ஏன் இவர்கள் தனித்து செயல்படவேண்டும், ஆண்களுக்கு திட்டுவதற்காகவா இப்படி தனித்து சந்திக்கிறார்கள்? என்றும். இன்னும் சிலர் தாமாகவே தனிமைப்பட்டு ஒதுங்கிக் கொள்கிறார்களா? எனவும் கேள்விக் கணைகள் இடுகிறார்கள். இது, ஏன் நாங்களும் விரலைப் போட்டால் என்ன என்பது போல அமைகிறது. எது எவ்வாறு எப்படிப் பேசப்பட்டாலும் இப் பெண்கள் சந்திப்பானது பிரயோசனமானதொன்றாகவே உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

ரஞ்சனி –



நான் நினைத்ததைவிட நல்லாத்தான் இச்சந்திப்பு நடந்திச்சு. முதலில ஆண்கள் இல்லாம இதுகள் என்னத்தை கூடிக் கதைக்கப் போகுதுகள் என்று நினைத்தேன். ஆனால் இந்த இரண்டு நாட்களிலும் பெண்கள் அவ்வளவு பேரும் மனம் திறந்து பலவிஷயங்களை கதைக் கிறதுக்கு ஆண்கள் இல் லாத அந்தச் சூழ்நிலை தான் உதவியாய் இருந்தது என்பதைப் புரிந்து கொண்டேன்.

அடுத்து சிவகாமியின் வரவு இச்சந்திப்பிற்கு எவ்வளவு அவசியமாய் இருந்தது என்பதை என்னால் உணரமுடிந்தது. இவ்வளவு தூரம் தெளிவாகவும், அமைதியாகவும் பல்வகை ஆற்றல்களுடன் விடயங்களை விளங்கப்படுத்தக் கூடிய ஒரு பெண்ணுடன் எனக்கேற்பட்ட முதல் அனுபவம் இது. பெண்களாலும் இப்படியெல்லாம் முடியும் என்பதை புரிந்து கொள்ள இது எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம். தொடர்ந்தும் இதுபோன்ற சந்திப்புகள் நடத்தப் படவேண்டும், பெண்களுக்கிடையேகருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம்.

சுமதி.



ஐரோப்பாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எத்தனையோ ஆயிரம் பெண்களில் 23 பேர் மாத்திரம் அல்லது இந்த 23 பேராவது, ஒரே நேரத்தில் சந்தித்து, மனம் விட்டு பேசக்கூடிய ஒரு சந்தர்ப்பம், பத்து வருட பத்தொன்பதாவது பெண்கள் சந்திப்பில் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி. பத்து வருடங்களாக நடந்து கொண்டிருந்தும், குறைந்தது வருடத்துக்குப் பத்துப் பெண்கள் வீதம் நூறு பெண்களாவது கலந்து கொள்ளவில்லையே, அது ஏன்? போதிய விளம்பரமின்மையா அல்லது வாசிப்பின்மையா அல்லது பெண்கள் சந்திப்பைப் பற்றிய தப்பபிப்பிராயமா அல்லது இவையெல்லாவற்றையும் மீறி விவாதிப்பதற்கோ மனம் விட்டுப் பேசுவதற்கோ பெண்களுக்குப் பிரச்சினைகளே இல்லையோ? அது ஒரு புறமிருக்க இன்று இலங்கையில்., சுதந்திர வர்த்தக வலயத்தில், பெண்களின் நிலைப் பற்றிய திருமதி. மல்லிகா பரராஜசிங்கம் அவர்களின் கருத்துப் பரிமாற்றம் பிரயோசனமானதும் சிந்திக்கத் தக்கதும்.. மலேசிய தமிழ்ப் பெண்களின் நிலை பற்றி சுபா அவர்களால் புள்ளி விபர அடிப்படையில் தரப்பட்ட குறிப்பு இப்படியுமிருக்குமா? என எண்ண வைத்தது. இந்தியாவிலிருந்து வந்து பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்ட சிவகாமி அவர்களின் தலித்பெண்களின் பிரச்சினை போராட்டங்கள் பற்றிய விளக்கவுரை எத்தனையோ சந்தேகங்களை சிலமணி நேரங்களில் தீர்த்து வைத்தது. அவருடைய இந்திய




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிவற்று நீளும் வெளி பிரக்ஞை
முடிவின்மை. உள் நிற்கும் அர்த்தம்
எஞ்சும் விகிதங்கள்- உருளும் மௌனவலி
முடிவை எழுத நடுங்கும் விரல்கள்
நெரித்து தள்ளும் அமைதியின்மை
படபடக்கும் உயிர்மம்
ஒரு புதிய நட்சத்திர ஒளி
இதனதன் தடங்களை தேடி மரித்தவர் பலர்
முழுமை தேடி. முழுமையில் மரிக்க
உள்முகமாய் வழி கிளைக்க, புதிர் சுழல்
வெளியில் தளை கிழித்து கூறுபோடும்
சிதறல்கள். இல்லை அங்கு இருப்பின்மை.
ஓர் பிரபஞ்ச அகாலம். சுருங்கும் சுயம்
பனிச்சேறு புதையும் ஸ்துலம்
நிசப்த தனிம பளபளப்பு
ஒடுங்கும் நிஜம். ஓடும் இரத்த வெப்பம்
உதிரும் உயிர்த்துகள்கள்
காலமற்ற பெருங் கணங்கள்
மரிப்பை வாசிக்கும் விழிகள்
மௌனமாக கலைந்து பரவும்
குளிர் ஒளியின் தைல நீலம்.



15 07 1999

மொழிநடையில், அதனைக் கேட்கும் போது, ஓ... இவருடைய நூல்களையெல்லாம் உடனடியாக வாசிக்க வேண்டுமே என்கின்ற ஒரு தாகத்தை ஏற்படுத்தியது. வந்திருந்த பெண்களில் சிலர் தமது அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டது, நம்மை நாமே பலப்படுத்திக்கொள்ள, திடப்படுத்திக்கொள்ள நிச்சயம் உதவும். பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்டிருக்கும் பழையவர்கள், தாம் கதைப்பதற்கு நீண்ட நேரத்தை எடுத்துக் கொண்டேயிருப்பது, தவிர்க் கப்பட வேண்டியது. புகலிடச்சூழலில், பெண் களாகிய நாம் சந்திக்கின்ற பிரச்சினைகள், அதனைத் தீர்த்துக்கொள்ள நாம் முயலக்கூடிய வழி வகைகள், கலாச்சாரம் பற்றிய நமது தெளிவின்மை. இப்படி . . . நாம் பேசவேண்டிய பல விடயங்கள் உள்ளன.

தொகுப்பு - **விஜி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நதியின் மரணம்

**23 ஜூலை 1999 அன்று தாமிர பரணியில் நடந்த 17 தலித் மக்களின் படுகொலை பற்றி காஞ்சனை சீனிவாசனால் தொகுக்கப்பட்ட "நதியின் மரணம்" விவரணப்படம் தமிழ் நாட்டில் முற்றாக தடைசெய்யப்பட்டு, தமிழக அரசால் இருட்டடிப்பு செய்யப்பட்டதால் இப்படு கொலையைப் பற்றி கூடியளவு வெளியில் கொண்டு வர எண்ணி ஓராண்டு நினைவு கொள்ளும் இவ்வேளையில் வீடியோ நாடாவில் இருந்து அப்படியே பதிவு செய்கிறோம்.**

**– எக்ஸில் –**

அதிகாலைக் கதிரவனின் ஒளியில் புரண்ட படி தாமிரபரணி தன்னுடைய கரையிலும் உடலிலும் ஏற்படப்போகும் காயங்களை அறியாமலேயே ஓடிக்கொண்டிருக்கிறது. வற்றாத ஜீவநதி என்ற பெருமையைத் தொலைத்துவிட்டு புதிய படிமமாக உருமாற்றிக்கொள்ளப்போகிறோம் என்பதனை உணராமலும் அது அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. கில்லற்றின், கழுமரம், தூக்குக்கயிறு, மின்சார நாற்காலி என்ற வரிசையில் நதியையும் ஒரு கொலைக் கருவியாக பயன்படுத்தமுடியும் என்கின்ற அரச சாதனை இங்கேதான் நிகழ்ந்தது.

வாழ்வில் சில சம்பவங்களை நாம் மறந்து விடக்கூடும். இந்த நூற்றாண்டில் இறுதியில் நடந்த இந்தக் கொடூரமான சம்பவத்தை நாம் திரும்பவும் நினைவுபடுத்தவேண்டும். நமது சந்ததியினர் மறக்காதபடி இதைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்தவேண்டியுள்ளது. மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அறுபது ஆண்டுகளிற்கு மேலாக கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தார்கள். 1998 ஆகஸ்டு மாதம் முதல் அதை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள். 1951ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தையும், 55ம் ஆண்டு விதிகளையும் அமுல்படுத்தக் கோரினார்கள். உரிமை கேட்டார்கள். அதன் விளைவாக நாலுமாத சம்பளத்தை தராது பட்டினி போட்டது நிர்வாகம். அரைப் பட்டினி தொழிலாளர்களை நிர்வாகம் முழுப் பட்டினியாக்கியது. முழுப் பட்டினித் தொழிலாளர்களை தேவையில்லாது கைது செய்து ஆறு மாதங்கள் சிறையில் அடைத்தது தமிழக அரசு. அது போதாது என்று ஜூலை 23 அன்று உரிமை கோரியோரை அடித்துக் கொன்று ஆற்றில் போட்டது காவல் துறை. பட்டப் பகலில் தாமிர பரணியில் நடந்த படுகொலைகளை முற்றிலும் இருட்டடிப்புச் செய்ய தமிழக அரசு முழு மூச்சுடன் இறங்கியது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறந்தவர்களின் தலையிலும், உடலிலும் தாக்கப்பட்ட காயங்களை மறைத்துவிட்டு தண்ணீரில் மூழ்கி இறந்தனர் என்று போஸ்மோட்டம் அறிக்கையை பொய்யறிக்கையாக வெளியிட்டது தமிழக அரசு. மக்களும், பத்திரிகைகளும் இதற்கு எதிரான கருத்துக்களேயே கொண்டுள்ளனர். மறு பிரேத பரிசோதனைக்கு தமிழக அரசு மறுத்தது. தங்கள் தொழிலின் அற நெறியை தொலைத்துவிட்ட மருத்துவர்களும் அரசுடன் சேர்ந்து கொண்டு தவறான முடிவுகளை பிரேத பரிசோதனை அறிக்கையாக வெளியிட்டார்கள். கைது செய்யப்பட்ட 652 தோட்டத் தொழிலாளர்கள் திருச்சி சிறையிலிருந்து முன்பே தமிழக அரசால் விடுவிக்கப்பட்டிருந்தால் படுகொலைகளைத் தவிர்த்திருக்கலாம். குழந்தைகளுடனும் பய பீதியுடனும் வந்திறங்கிய தோட்டத்தொழிலாளர்கள் திருநெல்வேலி பஸ் நிலையத்திலிருந்து அகதிகளாகத் தங்கியிருந்த ஆரோக்கியநாதபுரத்திற்கு செல்வதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டு பஸ் நிலையத்தில் குந்தியிருந்தனர்.

ஆறு உடல்களை உறவினர்கள் வாங்கியிருந்தனர். மற்றவர்களின் உடல்களை அமைதியை ஏற்படுத்தப்போகிறோம் என்ற பெயரில் சடங்கு செய்யும் உரிமை, புதைக்கும் உரிமை போன்றன மறுக்கப்பட்டு கருப்பந்துறை மயானத்திலும் அபிசேகப்பட்டி, வெள்ளைக் கோயில் போன்ற ஊர்களில் புதைக்கப்பட்டனர். பிறந்த மண்ணைவிட்டு வெளியில் அரசே புதைப்பதற்கு கருப்பந்துறை தலித் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சில இடங்களில் படுகொலை செய்த காவல்துறையே சடங்கு செய்து, வாய்க்கரிசி போட்டு, பிரேதங்களைப் புதைத்து மனித உரிமையை கேலிக்குரியதாக்கியது. அன்றைய தினம் புதிய தமிழகம் கறுப்பு தினமாக அறிவித்திருந்தது. கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விட்டனர். மக்கள் கறுப்பு பாட்ச்களை சட்டைகளிலும் கொடிகளை வீடுகளிலும் கட்டியிருந்து சமைக்காதும் இருந்தனர். கனவுகளும் கதைகளும் மீன்கள் கடிக்கின்ற குழந்தைப் பருவ நினைவுகளும் கலை கவிதைகளுக்கு மூலதாரம் தந்த தாமிரபரணி இன்று உருமாறிவிட்டது. முன்பிருந்த ரொமாண்டிக் கனவுகள் தகர்ந்து 17க்கும் மேலான போராளிகளின் ரத்தத்துடன் யதார்த்தத்தின் தீர்க்கம் கொண்டு இன்று அதிவேக இழுப்புடன் ஓடிக்கொண்டிருக்கிறது.

**— காஞ்சனை —**

தேவசகாயம் (ஊர்வலத்தில் வந்தவர்):- கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு தலைவர்கள் எல்லோரும் வந்த பின்னர் ஊர்வலம் நகர வெளிக்கிட்டு ஒழுங்காகத் தான் வந்துகொண்டிருந்தோம். நான் நல்லாப் பத்திரிகைகள் வாசிப்பவன், என்ன நடக்கிறது நாட்டு நிலவரம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் பார்ப்பேன்- எங்கள் தொண்டர்களை எல்லாம் தலைவர்கள் மிகக் கட்டுப்பாடாகத்தான் “டேய் அங்க போகாத, கடைகளுக்கு ஒண்ணும் செய்யக்கூடாது” என்று சொல்லி மிகமிக கட்டுப்பாடாகத்தான் கூட்டி வந்தாங்க. நான் தலைவர் வண்டிக்குப் பின்னால் கொஞ்சத் தூரத்தில்தான் வந்தகிட்டிருந்தேன். கூட்டம் அமைதியாகத்தான் வந்துகிட்டிருந்தது. அந்தத் தேவர் சிலைக்கு கிட்டயெல்லாம் யாருமே ஒண்ணுமே சொல்லல. எந்தவிதமான அசம்பாவிதங்களும் செய்யல. மணி அவர்கள் சொல்வதற்குப் பின்னால் எல்லோரும் கோசம் போட்டுக்கிட்டுத்தான் வாறாங்க. யாருமே எந்த மதத்தைப் பற்றியோ, கட்சியைப்பற்றியோ, யாதியைப் பற்றியோ பேசல. “மாஞ்சோலை எஸ்டேட் பிரச்சனைக்காக கருணாநிதியின்ர சொத்தையா கேட்கிறான்” “சண்டிவியில என்ன பங்கா கேட்கிறான்,,,” “தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் அரை நாள் சம்பளத்தைத்தானே கேட்கிறானுகள் இதை உடனே நிறைவேற்று” அப்படிங்கிற கோரிக்கையைத்தான் பேசிட்டு வந்தாங்க.

லைலாவதி:– கொடி தவிர குழந்தைகள் தவிர எங்கள் கையில வேறு எதுவுமே கிடையாது. எங்கள் வண்டிகள் எல்லாவற்றையுமே ‘செக்’ பண்ணித்தான் அனுப்பினார்கள். ஆயுதம் எதுவுமே எந்த ஆட்களிடமும் கிடையாது. எந்த வண்டியிலையும் கிடையாது. நாங்கள் இவ்விரண்டு பேராக வந்துகிட்டு இருந்தோம். பேரணி மிக அமைதியாக வந்துகிட்டு இருந்தது. வரும் வழியில் எம்.ஜி.ஆர் சிலை, காந்தி சிலை எல்லாவற்றிற்கும் எங்கள் டாக்டர் (கிருஷ்ணசாமி) தலைவர் அவர்கள் ஏறி மாலை போட்டு மரியாதை செலுத்தித்தான் வந்தோம்.

மாரியம்மாள்: ரயில்வே ரோட்டிலிருந்து நடந்துகிட்டுத்தான் வந்தோம். இங்கு வரும்வரை எந்தத் தொந்தரவும் கிடையாது. இங்கிட்டு வந்தவுடன்தான் இருந்திச்சி. மாடியில அடுக்கிட்டு ஆமி நிண்டாங்க. பேரணியை எதிர்பார்த்து நின்றிருக்கிறான்கள். எங்களுக்குத் தெரியாது. நாங்கள் கொடிபிடிச்சு ரொம்ப ஆட்டம் பாட்டத்துடன் வந்துகொண்டிருந்தோம்.

தேவசகாயம்:– கலக்டர் ஆபிஸ் வாசல் வரை பொலீஸ் நிற்கிறார்கள். அதுக்கு முன்னாடி மக்கள் பேரணி நிற்கிறது.

பர்வீன் (மாஞ்சோலைத் தொழிலாளி):- நாங்கள் அங்கு நிற்கும் போது டாக்டர் அவர்கள் சொன்னாங்க,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"கலக்டர் ஆபிசுக் குப் போட்டு வருகிறோம். கொண்டுபோய் மனுக்கொடுத்துவிட்டு வருகிறோம். நீங்கள் அமைதியாக நில்லுங் கள் என்று சொல்லி போறாங்க. நாங்கள் எல்லோரும் அமைதியாகவே இருந்தோம்.

கோபால் ( Sc/ST சங்கத் தலைவர்):- ஜீப்பிற்கு முன்னாடியே போலீஸ் நின்றிருக் கிறான்கள். ஜீப்பிற்கு பின்னாடி லேடீஸ் பொலீஸ், முன்னாடி ஜென்ஸ் பொலீஸ். நிறையப் பொலீஸ். அதிரடிப் பொலீஸ். பின்னாடி மக்கள் இருந்து ஜீப்பை முன்னுக் குத் தள்ளுகிறார்கள். போலீஸ் மறிக்கிறது. அவங்களும் தள்ளுகிறார்கள். ஒரு நெருக்கடியான சூழலாக இருந்தது.

எலிசபெத் ( புதிய தமிழகம்):- எங்க தலைவர் சொல்கிறார் "எல்லோரும் உட்காருங்கள்" என்று. சுடுகிறது என மக்கள் சொல்ல... உங்கள் காலில் இருக்கும் செருப்பைக் கழட்டிப் போட்டு அதன்மீது உட்காருங்க என்கிறேன். சரியென செருப்பைக் கழட்டி உட்கார வெச்சேன். எல்லோரும் உட்காந்தாங்கள். தலைவர் ஜீப்பை விடமாட்டோம் என பொலீஸ் மறித்துவிட்டது. மறிக்கும் போது மக்கள் எல்லோரும் "வழி விடு எங்கள் தலைவர் உள்ளுக்குள் போய் மனுக் கொடுக்க வேணும்" எனச் சொன்னாங்க இல்லை தலைவர இறங்கி நடக்கச் சொல்லு எண்டாங்க. அப்போ "மற்றவங்க மட்டும் இறங்காமல் போகும் போது எங்க தலைவர மட்டும் ஏன் இறங்கச் சொல்கிறாய், வழிவிடு வழிவிடு" என்றார்கள் மக்கள்.

வீ. பழனி(CPI (M)) மாவட்டச் செயலாளர்:- ஆனால் ஜீப்பை உள்ளுக்குவிட அனுமதிக்கல. ஜீப் முன்னால போகிற பொலீஸ் தடுக்கிறது. பேரணியில் பெண்களே முன்னுக்கு வந்தார்கள். பின் ஆண்கள், பின் ஜீப், பின்னால் ஆண்கள் இப்படியே பேரணி வந்து கொண்டிருந்தது. மிக நெருக்கடியான சூழல், லத்திச் சார்ஜ் பண்ணிட்டாங்கள்.

லைலாவதி:- உடனே டாக்டர் மீது ஒரு பெரிய கல் வந்து விழுந்தது. அந்த நேரம் ரெண்டரை வயசுக் குழந்த என் தங்கச்சி குழந்த என் கையில இருக்கு. நான் நதியின் சரிவிலதான் இருந்தேன். எல்லோரும் சரிவில விழுந்திராதீங்க எண்டு சொல்லும் போது டாக்டருக்கு கல் விழுகுது. நான் என் ரெண்டு கண்ணாலும் பார்த்தேன். அதற்குள் டாக்டரை எல்லோரும் மூடிப் பாதுகாத்தார்கள். அதற்குள் கண் மூடி முழிப்பதற்குள் 300 ஆட்கள் நதியில் விழுந்து நீந்திறாங்கள். அதற்குள் கற்கள் வேகமாக வந்து கொண்டிருந்தன. ஐயையோ டாக்டருக்கு என்ன ஆச்சோ என நிமிந்து டாக்டரைப் பார்க்கும் போது ஒருவன் டாக்ரரைப் போட்டு அடித்துக் கொண்டிருக் கிறான். அப்போ டாக்டரை பாதுகாக்க ஓடிப் போனவர் களுக்கு எல்லாம் கம்பும் கல்லும் கொண்டு அடிக்கிறாங்கள். நான் நேரில் கண்டேன். அதே நேரம் என்னருகில் இருந்த ஒரு ஆம்பிளைக்கு பெரிய கல் ஒண்டு வந்து இடுப்பில் விழுந்தது. உடனே நம்ம பிள்ளையத் தூக்கி வயிற்றில் வைத்தபடி குனிந்து கொண்டு ஓடினேன். அதற்கு முதலே நிறையப் பேர் ஓடி சரிவில் விழுந்து கும்பலாகக் கிடந்தார்கள்.

பர்வீன்:- இப்படிக் கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. எங்களைக் கல்லால் எறிந்து தடியால் அடித்து அவமானப்படுத்தி நதியின் சரிவில் விழுந்து கிடக்கும் போது 50 வயது இருக்கக்கூடிய ஒருவர் என் காலைப் பிடித்துக் கொண்டு "அம்மா என்னைக் காப்பாற்று" என்று கத்துகிறார். அவரின் நெற்றியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் இருந்தது. சூட்டத்தில் சுட்ட "சவுண்ட்" கேட்டிச்சு ஆனா அவர் என் காலில வந்து விழுந்த போதுதான் நான் பார்த்தேன்.

அப்பாவு(தி.மா.கா. சட்டமன்ற உறுப்பினர்):- இதுபோக எங்கள் ஜீப்பிற்குப் பின்னால் 3தடவை சூட்பண்ணினாங்கள். ஒரு றப்பர் குண்டு பண்ணினாங்க. அதுவும் எங்க வண்டியிலதான் வந்து அடிச்சுது. மற்ற இரண்டும் "றியல்" எங்க வண்டிக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பச்சை சட்டை போட்ட பையன் ஒருவன் சூடுபட்டு இறந்திருக்கான். அவனை எங்க தூக்கிட்டுப் போனான் என்றே தெரியவில்லை. சூட் பண்ணினவன டி.எஸ்.பி. ஓடிப் போய் அடிச்சார். சூடு நெற்றியில் பட்டது. அவனை இன்றுவரை காணல.

வேல்துரை(த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர்):- நெற்றி மட்டத்தில் கம்பு வைச்சிருக்கும் அதிரடிப்படை அவன்பாட்டிற்கு இறங்கி அடிக்கிறான். உடனே சைலஸ் குமார் யாதவன் ஓடிப்போய் "ஸ்டாப்பிற்" என்று சத்தம் போடுறார். யாரும் நிறுத்தல. இந்த நேரத்தில ஒருவன் "சூட்டிங்" பண்ணுறான் அவனையும் தடுக்கிறார். இஸ்டம் போல் திட்டுகிறார்.

தேவசகாயம்:- ஆறு இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கம் வரை 200அடித் தண்ணி இருக்கிறது. நான் இந்தப் பக்கம் இருக்கிறேன். வீசுகிற கல் எல்லாமே செங்கல்லாகவே வருகிறது. ஆவேசமாக வீசுகிறான். நான் எத்தனையோ கூட்டக் கலவரங்கள் பார்த்திருக்கிறேன். ஆனால் இதுபோல இன்றுவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்ததில்லை. ஆவேசமாக வீசுகிறார்கள். மக்கள் தாமிரபரணியின் அந்தப் பக்கமும் போகமுடிய வில்லை. இந்தப் பக்கமும் போகமுடியவில்லை. போலீஸின் லத்திச் சார்ஜ் உம், கல்லெறியும் மிகவும் மோசமாக இருக்கிறது. இந்தவூர் மக்களுக்கு நதியின் தண்ணி மட்டம் பற்றித் தெரியும். எங்கே? எவ்வளவு? தண்ணி இருக்கும் என்பது பற்றித் தெரியும். நானெல்லாம் பலமுறை ஆற்றைக் கடந்து போனவன். இந்த ஆறுபற்றி நன்கறிவேன். ஆனால் இவர்கள் கூட்டத்தைத்தான் கலைக்கிறார்கள். கலைப் பதுதானே இவர்கள் வேலை. அதன் பிறகு விட்டு விடுவார்கள் என்றுதான் எண்ணினேன். இனிமேல் போலீஸ் கீழே இறங்க மாட்டார்கள் என்றுதான் எண்ணி எல்லோரும் தண்ணியில இறங்காதீர்கள் என்று சொல்லிக்கொண்டு கரையில் நிற்கிறேன். ஆனால் போலீஸ்காரர்கள் அதன்பிறகும் கீழே இறங்கிவந்து ஒவ்வொருவரையும் அடிக்கிற அடியில உயிருக்குப் பயந்து தண்ணியில விழுகிறார்கள். அப்படி விழுந்த பிறகும் அடிச்சுத்தான் தண்ணியில தள்ளுகிறான்கள்.

லட்சுமிஅம்மாள் (தாழையூத்து):- அப்படி அடிச்சுக்கொண்டிருக்கும் போது கடைசிவரைக்கும் நின்றேன். அப்போது ஒருவனைச் சுட்டுக் கொண்டான் கள். அதன் பிறகு பயத்தில் ஆற்றுக்குள் இறங்கினேன். இறங்கி போலீஸ்காரனிடம் போய் ஏனய்யா இந்தப் பொம்புளயப் போட்டு அடிக்கிறீங்க, பிள்ளயத் தூக்கிப் போடுறீங்க? இதுதான் கவுண்மன்ட் சட்டமா என்று கேட்டேன். கேட்டவுடன் சரியான அடி அடிச்சாங்கள். இன்னோர் போலீஸ்காரன் வந்து கிழவி நீ கொடியா புடிக்கிறாய் என்று கேட்டு கொண்டையைப் பிடுங்கி தண்ணியில போட்டான்.

ராதா (தாழையூத்து):- போலீஸ்காரன் என்னை விரட்டிட்டுவாறான். "தேவடியா சிறுக்கி" என ஏசி ஏசி விரட்டுறான். நான் ஓடிப்போய் ஆத்தில விழுந்துட்டன். என்னை விரட்டிற்று வந்த போலீஸ்காரன் என் சேலையைப் பிடிச்சு இழுக்கிறான். இழுக்கும் போது சேலை கிழிஞ்சுவிட்டது. பிறகு தண்ணியில நீச்சலிச்சுக் கொண்டிருக்கும் 10-15 பொம்புளயளிட்டப் போய் அடிச்சு அடிச்சு கம்பால தண்ணிக்குள்ள அமுக்கிறான். அதுக்குள்ள 2 அண்ணாக்கள் வந்து என்னை இழுத்துக்கொண்டுபோய்க் காப்பாற்றினாங்கள்.

பாக்கியம் (தாழையூத்து): உங்களுக்கு ஒரு சாதி, சாதிக்கொரு கூட்டம், கொடி என்று சாதி பெயரைச் சொல்லிச் சொல்லித்தான் அடிச்சான்கள்.

லட்சுமி அம்மாள் :- வேறு ஒருவன் வந்து கொடியைக் கீழே போடு என்றான். போட முடியாது என்றேன். போடு என்றான்.செத்தாலும் கொடியை கீழே போட முடியாது என்றேன். தேவடியா மக என்றான். யாரைப் பார்த்து தேவடியா மக என்கிறாய், நீதான் தேவடியா மக. பொம்புளயளைப் போட்டு அடிக்கிறாய் என்றேன். அதற்குள் போட்டோ எடுத்த பொடியனை அடிக்கப் போனான். அப்போ நான் தப்பிச்சேன்.

பாக்கியம் :- பத்துப் பேரு சேலையால சுத்திக் கட்டிவிட்டு மேலேயிருந்து உருட்டிவிட்டான்கள்.

தேவசகாயம் :- ஆற்றுக்குள் இறங்காது இருந்திருந்தால் இந்த சாவுகள் வந்திருக்காது. ஏனென்றால் எங்களுக்கு நீச்சல் தெரியும். பட்டிக்காட்டான்கள் யாருக்கும் நீச்சல் தெரியாதுஎன்றது பொய். நாங்கள் நீச்சல் தெரியாதவங்களையும் காப்பாற்றி வெளியில் கொண்டுவந்துவிடுவோம். ஆனால் ஆற்றுக்குள் இறங்கி காப்பாற்றுபவர்களையும் அடிக்கும் போது நாங்க என்ன செய்யமுடியும்? அதனாலதான் இது எங்களைத் திட்டமிட்டு கொல்வதற்காக செய்த செயல் என்று எண்ணுகிறோம். கூட்டத்தை கலைக்கணும் என்றால் ஆற்றின் மேலே கலைத்தார்கள் சரி. ஆனால் இங்கு இறங்கி வந்து அடிக்கிறார்கள். என்ன செய்வது? "அரசாங்கம் கூட்டத்தையே ஏற்படுத்தும் அதுவே கலைக்கும்" என்று கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் இது கலைப்பதற்காக செய்யப்பட்டதல்ல. எம்மைக் கொல்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. நாங்கள் எந்தவித கலவரத்தைத் தூண்டக்கூடிய செயல்களும் செய்யவில்லை. ஆற்றின் மறுகரைக்கு ஓடிப் போயிருந்து ஆற்றில் விழுந்தவர்களை கரையேற்றிக் கொண்டிருந்தோம். ஒரு நிமிடத்திற்குள் போலீஸ் ஆற்றின் மறுகரைக்கு வந்து ரவுண்ட-அப் பண்ணி விட்டது. ஆற்றிலிருந்து தப்புவதற்கு எத்தனையோ வழிகள் எனக்குத் தெரிந்தும் நான் தப்பி ஓடாது பெண்களையும் இயலாதவர்களையும் கரையேற்றிக் கொண்டிருந்தேன். கரையேறி வெளியில் உள்ள வீடுகளில் போய் அடைக்கலம் தேடும் பெண்களையும் ஆண்களையும் திரும்ப ஆற்றுக்குள் விரட்டுகிறான் கள் போலீஸ். இனிமேல் கூட்டத்திற்கு வருவியா தேவடியா மக, சிறுக்கி மகள் என்று திட்டித்திட்டி அடிக்கிறான்கள். எனக்கு இரண்டு காலிலும் அடித்து கையையும் முறித்தான்கள். கொஞ்ச நேரத்தில் நான் ஒரு வீட்டின் சுவர் மீதேறி குதித்து உள்ளேயிருந்தேன். ஒரு அரை மணி நேரத்திற்கு ஒரே சத்தமாக இருந்தது. "ஐயோ அம்மா என்னை அடிக்காதே" "ஐயோ அம்மா" என்றே கேட்டுக் கொண்டிருந்தது. பூட்ஸ் கால் சத்தமும் கேட்டது. நான் இருந்த வீட்டின் ரொயிலெட் அறையில் ஒழித்திருக்கிறேன். போலீஸ்காரன்கள் கதவை காலால் உதைத்துக் கொண்டு வந்து என்னை இழுத்துப் போட்டு ஆள் மாறி மாறி அடிக்கிறான்கள். அவன்களின் உருவம் என் நெஞ்சில் சாகும்வரை அழியாது. அப்படித்தான் அடித்தான்கள்.யாரை அடிக்கணும்னு தெரியாம மிருகத்தை அடிக்கிறமாதிரி அடிக்கிறான். இந்த நாட்டில நமக்கு உயிருக்கு உத்தரவாதம் இல்லை. எண்டு அந்த நேரத்தில நினைச்சுக்கிட்டன். மனுசன அடிக்கிற மாதிரியா அடிக்கிறான். நாங்கள் அகதிகளா வெளிநாட்டில போய் தஞ்சம் கேட்கலாமா என்றுகூடத் தோணுது. அவ்வளவுக்கு இந்த நாட்டில உயிருக்கும் உத்தர வாதம் இல்ல. இதே இது வேற கட்சிக்காரன்கள், வேற சாதிக்காரன்கள் கூட்டம்னா அடிப்பாங்க. கூட்டத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைக் கலைப்பாங்க. ஆனா இந்தப் புதிய தமிழகம் கட்சி பண்ணினால் மட்டுந்தான் அடிச்சு, காலைக் கையை முறிச்சு கொல்லுறாங்கள். இதில இருந்து யோசியுங்கள். இந்த தாழ்த்தப்பட்ட சாதிகள், உழுணும், வெட்டணும் நாங்க சொன்னாச் செய்யணும், கீழ்ப்படியுணும், எதையும் பேச்கூடாது என்பதுதான் மேலேயுள்ள ஆட்சியாளர்களுடைய குறிக்கோள்கள். அதிகாரிகளோட குறிக்கோள்கள். நாங்களும் உங்கள மாதிரி மனுசன்கள்தானே! எங்களுக்கும் உங்கள மாதிரி பான்ட் சட்டை போடத் தெரியும், படிக்கத் தெரியும், சாப்பிடத் தெரியும். எங்களுக்கும் எல்லா அறிவும் இருக்கு என்று சொல்லும் போதுதான் எங்களை அடிக்கிறாங்கள். இதாலதான் எங்களைத் தண்ணியில தூக்கிப் போட்டுக்கொண்டான்கள். தண்ணியில தூக்கிப் போடுவது ஏனென்று தெரியுமா? வெளியில போட்டால் எத்தனை பேர் அடிச்சு செத்தார்கள் என்று தெரிய வரும். தண்ணியில் போட்டால் கடைசியில் அவன் நீர் மூழ்கித்தானே சாவான்.

மேரி (பலியான ரத்தினமேரியின் தாய்):- ஆற்றில் இறங்கி மறுகரைக்கு போய்விடுவோம் என இறங்கிப் போனோம். எனக்கு முன்னால் எனது மகள் இரத்தினமேரி தன் குழந்தையுடன் போய் கரையேறி குழந்தையை தரையில் விட்டாள். அதற்குள் போலீஸ் எனது மகளுக்கு அடித்தான்கள். எனது மகள் குழந்தையைத்தூக்க போகவிடாது அடித்தான்கள். அடிப்பதை நான் பார்த்துக்கொண்டு தண்ணியில் நின்றேன். மயங்கி விழுந்துவிட்டேன். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. பேரனும் மகளும் இறந்தது மறுநாள் சாயந்தரம்தான் எனக்குத் தெரியும்.

* எல்லார் உடலிலும் காயங்கள் இருக்கின்றன. ஆனால் போஸ்மோட்டம் செய்த டாக்டர்கள் அறிக்கையே இறந்த உடல்கள் நீரில் மூழ்கிச் செத்தன என்கிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அப்படி இல்லைங்க. என் மகளுக்கு நன்றாக நீச்சல் தெரியும். முங்கு நீச்சல் தெரியும். போனவாரம் ஆரோக்கியநாதர் பஸ்சில் போனபோது குளத்தில் விழுந்த பையனை நீந்திப் போய் காப்பாற்றியவள் என் மகள்.

எலிசபெத்:- ரத்தினமேரிக்கு நன்றாக நீச்சல் தெரியும். அவள் நீச்சல் அடிக்கின்ற பொழுதுகளில் நான் நேரில் பாத்திருக்கிறேன். நீங்கள் யோசியுங்கள் நீரில் மூழ்கிச் செத்தவள் கையைக் காலை அடித்து மூழ்கியிருக்கும். ஆனால் இரத்தினமேரியின் உடலைப் பாருங்கள். இரண்டு கையையும் குறுக்காகக்கட்டி இருக்கு. அவளது சேலையை உருவிவிட்டு எத்தி உதைத்து தண்ணிக்குள் தள்ளிவிட்டுட்டானுகள். அவள் மறுபடி கையை குறுக்காகக் கட்டிக் கொண்டு குழந்தையை தேடும் போது ஆற்றுக்குள் வெளியில் வைத்த அடித்து கொன்றுவிட்டு தண்ணியில போட்டுள்ளார்கள். அவளது பிரேதத்தைப் பார்த்த போது வயிறு வாழையிலை மாதிரி சுருண்டு கிடந்தது. தண்ணி குடிச்ச வயிறு மாதிரி இருக்கவேயில்லை. குழந்தையைக் கூட உயிரோடு தண்ணிக்குள் எறிந்திருக்கிறான்கள்.

செய்யது இப்ராகிம் (ஐக்கிய ஜமாத்):- ஜான்முகராய்-20வயது கராட்டி பிளக் பெல்ட் எடுத்தவர் ஒருவரைக்கூட 'போலீஸ் தலையிலும் மூக்கிலும் நெஞ்சிலும் அடித்து தண்ணிக்குள் போட்டிருக்கிறது. நெஞ்சில் துப்பாக்கி முனையில் தாக்கியது போல குழியான காயம் இருந்தது. அவருக்கு நன்றாகவே நீச்சல் தெரியும்.

கோவை பன்னீர் செல்வம் (தமிழக திராவிடர் கழகம்): ஜான் முகராய் அவர்கள் நீர்மூழ்கிச் செத்தார் என்றால் நம்பமுடியாது. கராட்டி பிளாக் பெல்ட் வாங்கினவர். அவர் நன்றாக நீந்துவார். இவ்வளவு திறமையுள்ள அவரை காவல் துறை அடிச்சுத் தூக்கிப் போட்டுத்தான் சாகடித்துள்ளார்கள்.

J.M ஆரூண் (த.மா.சட்டமன்ற உறுப்பினர்): தண்ணியில இறங்கினவர்களை அடிக்கிறது காவல் துறை. காப்பாற்றுபவர்களையும் அடிக்கிறது. ஒரு பச்சை செக் சேட் போட்ட ஒருவன் சுடப்பட்டு இறந்தான். நான் பார்த்தேன். ஆனால் பிரேதப் பரிசோதனைக்கு கடைசி வரை அந்த பிரேதம் வரவில்லை. அவனைச் சுட்டு மரம் சாய்கிற மாதிரி சாயும் போது நான் பார்த்தேன். லக்ஸ்மி என்ற ஒரு பெண்ணும் பார்த்தா. போலிஸிடம் கத்திக் கத்திச் சொன்னா. சம்பவம் நடந்த இடத்திற்கு மூப்பனார் 5மணிக்கு வந்தார். 2மணிக்கு தண்ணி ஊற்றிக் கழுவி விட்டான்கள். கழுவினவன் கழுவினான். முதல் நாளே கழுவியிருக் கலாம். மூப்பனார் பார்க்கும் போது இரத்தமும் தண்ணியுமாய் இருந்தது.



கோவை பன்னீர் செல்வம்:- தினமணி புகைப்படக்காரர், அவர் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் Photo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுக்கிறார். அவர் கமராவைப் பறிச்சு இழுத்து அடிக்கிறார் ஒரு போலீஸ்காரர். நான் பார்த்தேன்.

முகம்மது இலியாஸ் (புதிய தமிழகம்):- தேவி ஆஸ்பத்திரியில் எம். எல். ஏக்கள் இருந்தார்கள். தேவி ஆஸ்பத்திரி கண்ணாடிகளை அடித்து நொருக்கித் தலைவர்களை அடிப்பதற்கு உள்ளே நுழையவும் முயற்சி செய்தார். முடியவில்லை.

அப்பாவு:– தேவி ஆஸ்பத்திரியை போலீஸ் வந்து அடித்து கண்ணாடி முழுவதையும் நொருக்கி விட்டான்கள். எங்களையும் தாக்க வெறித்தனத்துடன் நின்றான்கள்.

செய்யது இப்ராகிம்:- ஆற்றிலிருந்து வெளிக்கிட்டு ஒரு கோனார் வீட்டில் தங்கி நின்றேன். அவர்கள் ஈர உடுப்பை கழட்டிவிட்டு மாற்றியுடுக்க உடை தந்தார்கள். அங்கும் வீதியில் வந்து கொண்டிருந்த பையன்களையெல்லாம் பிடிச்சு சாதி பெயரைச் சொல்லி அடித்துக் கொண்டிருந்தாங்கள். கம்பும் தடியும் கொண்டு 8,10 ஆட்கள் வரை நின்று அடித்தார்கள். போலீஸ் வந்த பின்னர் கம்புகளை வீட்டிற்குள் போட்டுவிட்டு கை காலால் அடித்தார்கள்.

சீதாலெட்சுமி (புதியதமிழகம்): -உங்க தலைவர் சிவப்பா இருக்கிறானே என்ன எம்.ஜி.ஆர் பட்டமா வாங்கப் போறான். இவதான் முதலில கோசம் போட்டான் என்று அடியுங்க தேவடியாளை என்று

**இந்த தாழ்த்தப்பட்ட சாதிகள், உழுணும், வெட்டணும் நாங்க சொன்னாச் செய்யணும், கீழ்ப்படியணும், எதையும் பேச்கூடாது என்பதுதான் மேலேயுள்ள ஆட்சியாளர்களுடைய குறிக்கோள்கள். அதிகாரிகளோட குறிக்கோள்கள். நாங்களும் உங்கள மாதிரி மனுசன்கள்தானே! எங்களுக்கும் உங்கள மாதிரி பான்ட் சட்டை போடத் தெரியும், படிக்கத் தெரியும், சாப்பிடத் தெரியும். எங்களுக்கும் எல்லா அறிவும் இருக்கு என்று சொல்லும் போதுதான் எங்களை அடிக்கிறாங்கள். இதாலதான் எங்களைத் தண்ணியில தூக்கிப் போட்டு கொண்டான்கள்.**

சொல்ல ஒருவன் தோளிலும், துடையிலும் லத்தியால அடிக்க (இந்தத் தேவடியாள உயிரோட விடக்கூடாது என்று சொல்லி அடிச்சாங்க) இன்னொருவன் ஓடிவந்து வயத்தில உதைந்தான். உடனே சரியான ரத்தம் வெளியேறியது. உடனே போலீஸ்ரேசன் கொண்டு போனாங்க. அங்க நிறை அம்மணத்தோட போட்டுட்டு F.I.R எல்லாம் எழுதிட்டாங்க. பாலம் போலீஸ்டேசன் 6பேர் (பெண்கள்) இருந்தோம். ஆறுபேரையும் நிர்வாணமாகவே வைச்சிருந்தாங்க. எல்லோருமே வயசு வந்தவர்கள். அன்று சாயந்தரம் விட்டுட்டான்கள்.

கோபாலகிருஷ்ணன் (C.PI -M):- என்னருகில் இருந்தவருக்கு தலையில அடிச்சு இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. கையால் பொத்தியிருக்கிறார். அப்படியே வானில் அடித்து ஏத்தினாங்கள். ஸ்டேசனுக்கு கொண்டுவந்த அப்புறம் ஆட்களைக் குறிவைச்சு அடித்தான்கள். அடிக்காதேங்கோ என்று சொல்ல முடியல்ல. வானில வந்து இறங்கி ஸ்டேசனுக்குள்ள போறதுக்குள் போலீஸ்காரர்கள் எல்லாம் வரிசையாய் நின்று அடிச்சாங்க. ஒவ்வொருவரும் இவ்விரண்டு அடிவரை அடிச்சாங்க. ஒருவருக்கு நாடியில அடிச்சு நாடி வெடிச்சிரிச்சு. பொண்ணுங்கள எல்லார் முன்னிலை யிலும் போட்டு மிதி, மிதியின்னு மிதிச்சாங்க.
அரச மருத்தவமனை- பிரேதங்கள்-

* இறந்த சடலங்களை அவர்களது உறவினர்கள் வாங்குவதற்கு புதியதமிழகம் தடையாக இருந்ததாக போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

மணிகண்டன் (புதிய தமிழகம்):- உறவினர்கள் வந்து கேட்கிறார்கள், நாங்கள் என்ன செய்ய? என்று. நாங்கள் அவர்களையும் சேர்த்து கதைக்கிறோம். அப்போ அவர்கள் கட்சி என்ன முடிவு எடுக்கிறதோ அதற்கு கட்டுப்படுகிறோம் என்கிறார்கள். நாங்கள் சடலங்களை வாங்கினால் “போஸ்மோட்டம் றிப்போட் சொல்கிறது தண்ணீரில் மூழ்கிச் செத்தார்கள்” என்று அதனை ஏற்றுக்கொள்பவர்கள் ஆவோம். யாருமே தண்ணீரில் மூழ்கிச் சாகவில்லை. அடித்துக் கொன்று தூக்கிப் போட்டார்கள். அதனால் உண்மையான போஸ்மோட்டம் றிப்போட் வேணும் என்றுதான் உடல்களை வாங்கவில்லை.

* ஆனால் திரும்ப போஸ்மோட்டம் றிப்போட் வேணும் என்று கிருஷ்ணசாமியும் மூப்பனாரும் கேட்கிறார்கள். ஆனால் டாக்டர்கள் மறுக்கிறார்களே?
“அது கருணாநிதியின் சூழ்ச்சி வேலையே தவிர டாக்டர்கள் எவரும் சுயநினைவில் சொல்லவில்லை. அவங்களுக்கு சுயநினைவு இருந்தால் இப்படி சொல்லமாட்டாங்க.”
* காணாமல் போறவர்கள் பற்றிய விபரம் உங்களுக்குத் தெரியுமா?

“ஆம் இருக்கிறது. 4பேர்.” பி.நடராஜன்- வன்னிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருமாள்-40வயது, பரமசிவம்- வயது தெரியவில்லை. கருத்தபாண்டி-27வயது- முருகன்-43வயது சுடப்பட்டு இறந்தவனைக் காணவில்லை. அவனை போலீஸ் தரப்பில சிலபேர் தகவல் சொல்லுறாங்க. வல்லநாடு மலையில கொண்டுபோய் எரிச்சிட்டாங்க என்பதாக.

வேல்துரை:– டாக்டர்களிடம் போய்க் கேட்டேன். சொன்னாங்க, காதிலையும் மூக்கிலையும் இரத்தம் வருகிறது. தலையில் அடிபட்டால்தான் அப்படி வரும் எண்டாங்கள். ஆனால் அதே டாக்டர்கள் போஸ்மோட்டம் ரிப்போட்டில் தண்ணீரில் மூழ்கிச் செத்தார் என்று கொடுத்திருக்கிறார்கள். போஸ்மோட்டம் செய்யும் போது போனேன். அங்கே 5போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் இருந்தார்கள். உங்களுக்கு இங்கே என்ன வேலை என்று கேட்டேன். உதவி செய்வதாக சொன்னார்கள். போஸ்மோட்டம் ரிப்போட் முழுக்க முழுக்க பாரபட்சமாக கொடுக்கப்பட்டது. தண்ணியில் தூக்கிப் போட்ட குழந்தைக்கு காதாலையும் மூக்காலையும் கொஞ்ச இரத்தம்கூட வரவில்லை எப்படி? எனவே இது திட்டமிட்டு செய்யப்பட்டது.

ராம்குமார் (புகைப்படக் கலைஞர்- நக்கீரன்): போட்டோ எடுக்காதையடா என்று சொல்லி அடிச்சாங்க. இன்னொரு போட்டோ கிராபரின் கமராவை புடுங்கி எறிஞ்சாங்க. நான் அதையும் போட்டோ எடுத்தேன். அப்போதும் எனக்கு அடிச்சாங்க. நான் அப்புறம் ஓடி வந்துவிட்டேன்.

J.M.ஆரூண்:– இதில் காவல் துறையில் இருக்கக் கூடிய ஆதிக்க ஜாதில வெறியுள்ள கறைப்பாடுகள். அதிக பங்கு வகித்திருக்க கூடியதாக தெரிகிறது. அதுபற்றிய ஐயப்பாடுகளே எம்மிடம் இருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர்களை கூர்ந்து கவனித்தால் யார், யார் எந்தக் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் என்றுபார்த்தால் கூடிய உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்.

வேல்துரை:– இது தொழிலாளர்களுக்கும், ஏழைகளையும் சாதிரீதியாக ஒடுக்குவதற்கு திட்டமிட்டு தமிழக அரசால். செய்யப்பட்டது. முதலமைச்சர் செய்த சதித்திட்டமிது.

அப்பாவு:– புதிய தமிழகம், தமிழ் மாநில காங்கிரஸ் உடன் இணைந்தவுடன் தலித் ஓட்டுக்கள் எல்லாம் தமிழ் மாநில காங்கிரசிற்கு சேர்ந்துவிடும் என்ற காழ்ப்புணர்வில் திட்டமிட்டு கலைஞர் அவர்கள் வேணுமென்றே செய்தது இது. கலக்டருடன் பேசியபோது C.M பேசவேண்டும் என்று சொல்ல C.M உடன் Phoneஇல் பேசினேன். “என்னப்பா இப்படிப் பண்ணீட்டிங்க” என்றார். ஏன் இப்படி எங்க மீது பழியைப் போடுறீங்க? எங்க தரப்பு மீது எந்த தவறும் கிடையாது. இப்படி யார் சொன்னது என்று கேட்டேன். கலக்டர்தான் சொன்னாங்க என்றார். நான் கலக்டர் கூடத்தான் இருக்கிறேன். கலக்டர் D.A.C, D.C, மூன்று பேரும் நடந்தது தங்கள் தவறுதான் என்று சொல்லியுள்ளார்கள். இப்ப தவறான தகவல்களை சொல்லச் சொல்லியே உங்களைத் திசை திருப்பிட்டு இருக்காங்க பம்பாய்கார முதலாளிங்க. நீங்கள் ஏன் இப்படி பண்ணுனீங்க என்றேன்.

வேல்துரை:– இதற்கு சாதி சாயம் பூசுவது தவறு. சிறைச்சாலையில் இருந்த 653 பேரில் 40 பேர் இஸ்லாமியர் சமூகம், கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். நாடார் இருந்தார்கள். தலித் மக்கள் கூடுதலாக இருந்தார்கள். பம்பாய்க்கார முதலாளிக்காக தமிழக அரசு வரிந்து கட்டிக்கொண்டு இப்படி வன்முறையில் இறங்கி தலித் மக்களை, ஏழை மக்களைத் துன்புறுத்துவது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

தேவசகாயம்:– எங்களுக்கு நிம்மதியே கிடையாதாங்க! ஒரு பஸ்டிப்போவில எத்தனையோ முறை முறையிட்டாச்சு. எங்க பஸ் டாப்பில பஸ்சே நிற்பாட்டமாட்டாங்கிறாங்க. கேட்டால் நீ எஸ்ஸி உனக்கென்ன பஸ் வேண்டிக்கிடக்குன்னு கேட்கிறான்.

அப்பாவு:– ஜாதியை தமிழ் நாட்டில் வளர்த்தவர் கலைஞர்தான். பாம்பை விட்டு பார்ப்பானைக் கொல் என்ற சுலோகத்தை சொல்லிக் கொடுத்தவர் இவர். முதுகுலத்து கலவரத்தைப் பாருங்கள். கலக்டரையும் D.I.G ஐயும் மாற்ற வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. அதுக்கு அவர் கலக்டரையும் D.I.G ஐயும் மாற்றினால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் கொதிப்படைந்து விடுவார்கள் என்கிறார். தவறு செய்கின்ற ஒருவர் தனிநபர் என்ன ஜாதி என்று பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியுமா? இந்த வயசில இப்படிச் சின்னப் புத்தி இவருக்கு வரலாமா? ஜாதியைச் சொல்லக்கூடிய அளவுக்கு மிகச் சின்னப் புத்தி இது.

வேல்துரை:– இது மிகக் கொடுமையான சம்பவம். மிகத் துயரமான சம்பவம் இது. இனிமேல் இது போன்ற படுகொலை தமிழகத்தில் நடக்க விடக்கூடாது.

**– நன்றி காஞ்சனை சினிமா இயக்கம் –**

**4 ஜுன் 2000 அன்று பாரிசிலும், 11ஜுன் 2000 அன்று ஜேர்மன் இலக்கியச் சந்திப்பு நிகழ்விலும் “நதியின் மரணம்” எக்ஸில் நண்பர்களால் திரையிடப் பட்டது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"இந்த ஆண்டு மிகவும்மோசமானது
வசந்த காலம் எங்களிற்கு
எந்த வாக்குறுதிகளையும் தரவில்லை
செய்தி தருவோரை நாம் காத்திருக்கவும்
இல்லை..."**

எனத் தொடங்குகின்றது 1999 ஆம் ஆண்டு எழுதிய "வரட்சி" கவிதை.

இந்த வரிகளை எழுதிய மஹ்மூட் டார்விஸ் (MAHMOUD DARWICH) தமிழில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட புகலிடக் கவிஞராக இருக்கலாம் எனக் கதுகின்றேன். இவரது கவிதை இயக்கம், பாலஸ்தீனிய மக்களது அரசியல் இயக்கத்துடன் பின்னிப் பிணைந்தது. 13-03-1941 இல் BIRWA (இஸ்ரயேல்) இல் பிறந்த டார்விஷ் 1948இல் லெபனானில் அகதியானார். இதன் பின்னர் திரும்பவும் இஸ்ரயேல் சென்று அங்கும் அகதியானவர். டார்விஷ் எழுத்து இயக்கம் அரசியல் சார்பு கொண்டதால் பல தடவைகள் சிறைவாசம் இவருக்கு கிடைத்தது. மிகப்பெரும் அரபுக் கவிஞரான இவரது கவிதைகளை தனது பாடவிதானத்தில் சேர்க்க இஸ்ரேலிய அரசு பலதடவைகள் மறுத்தபோதும், கடந்த ஆண்டு இஸ்ரேலிய நடாளுமன்றம் இவரது கவிதைகளைப் பாடவிதானத்தில் சேர்க்கும் முடிவினை எடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். டார்விஷ் கவிதைகள் பிரஞ்சு மொழியில் ஏற்கனவே மொழி பெயர்க்கப்பட்டுள்ள போதும், முதலாவது தடவையாக பிரஞ்சு GALLIMARD வெளியீட்டு நிறுவனத்தின் உலகப் புகழ் பெற்ற கவிதைப் பிரிவான Poésie/ GALLIMARD இல் இடம் பெற்றுள்ளது. டார்விஷ் இதுவரை எழுதிய கவிதைகளின் தெரிவு செய்யப்பட்ட தொகுப்பே இது. "எங்களுக்கு நெருக்கமாக நிலம் உள்ளது" எனும் தலைப்பில் இது வெளிவந்துள்ளது. மிகவும் அபூர்வமாகவே கவிஞர்கள் எழுதும் முன்னுரைகளை வாசிக்கும் டார்விஷ் இதற்கு எழுதிய முன்னுரை கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியதாகும். "ஓர் தெரிவு செய்யப்பட்ட தொகுப்பு என்பது சந்தேகங்களைத் தூண்டுவதாகவே இருக்க முடியும். தெரிவு செய்யப்பட்ட சில கவிதைகளுக்கூடாக கவிஞனின் உலகத்தை நான் கண்டு கொள்ள முடியுமா?" என இந்த முன்னுரையில் கேள்வி கேட்கும் டார்விஷ் கவிதை மொழி பெயர்ப்பு மீதும் தனது விமர்சனத்தை வெளிப்படையாகவே வைக்கின்றார். "மொழி பெயர்ப்பாளர் ஒரு கவிதையை மொழிபெயர்க்கும் போது தன்னை கவிதையை எழுதியவன் நிலையிலேயே வைத்துக் கொள்கின்றார். மூலமொழியில் எழுதியவன் கவிதைக்கு எந்த அடையாளத்தைத் தேட எத்தகைய ஆக்கினையைச் செய்தானோ, அதே ஆக்கினையை மொழி பெயர்ப்பாளனும் தனது சுய மொழியில் செய்கின்றான்" எனக்கூறும் டார்விஷ் இன் விமர்சனப்போக்கு, கவிதை மொழிபெயர்ப்பு சந்தேகங்களைத் தாங்கிய ஒன்று என்பதை வலியுறுத்துகின்றது. ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு வந்த டார்விஷ் கவிதைகளை நான் பிரஞ்சு மொழி பெயர்ப்புடன் ஒப்பீடு செய்து பார்த்தபோது நிச்சயமாக நிறைய வித்தியாசங்களைக் காண முடிந்தது. மொழிபெயர்ப்பில் இருந்து மொழிபெயர்க்கப்படும் அனைத்துப் படைப்புகளிலும் - நாம் படைப்பாளியின் முழுமையான இலக்கைத் தரிசித்தல் இலகுவானதாக இருக்க முடியாதுதான். ஆனால் டார்விஷ் கவிதைகள் நேரடியாக அரபிலிருந்து பிரெஞ்சுக்கு வந்துள்ளதால் இந்த மொழிபெயர்ப்பு அதிகம் மோசமானதாக இருக்காது எனக் கருத வாய்ப்புள்ளது.




**NOTES:-By Mithila**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




லெபனான் கவிஞர் மிஷெல் கலீல் ஹெலயலின் (Michel Khalil Hélayel) "பாடல் வாழ்விற்கான ஓர் பெயர்" (Le chant un nom pour la vie) வெளிவந்துள்ளது. இவரது கவிதைகள் தமிழில் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளன. போல் எலுவார்ட், ஈஜேன் கில்விக் போன்றோரை அரபு மொழிக்கு அறிமுகமாக்கிய இவரது கவிதைத் தொகுப்புகள் பிரெஞ்சு மொழியிலும் அரபு மொழியிலும் நிறைய வெளிவந்துள்ளன. பொருளாதார ஆய்வுப் படைப்புக்களையும் இவர் பிரஞ்சு மொழிக்குத் தந்துள்ளார். 20 வருடங்களுக்கு மேலாக பிரான்ஸில் அகதியாக வாழும் ஹெலயல் Maison des science de l'homme இன் ஆய்வுப்பிரிவில் கடமையாற்றுகிறார். கவிதை இலக்கியத்தில் ஆழமான புலமை கொண்ட இவரது கவிதைகள் தெளிவானவை, தத்துவப்பார்வை கொண்டன. கவனத்துக்கு எடுக்கக் கூடிய புகலிடக் கவிதைகள் என மதிப்பிடப்பட்டுள்ளன. "பாடல் வாழ்விற்கான ஓர் பெயர்" எனும் தலைப்பில் வெளிவந்துள்ள இவரது கடைசித் தொகுப்பினை பாடல்/அதாவது கவிதைமீதான ஓர் பன்முகப்பார்வை எனலாம். ஹெலயலின் படைப்பு ஆளுமை வரிக்கு வரி தெரிகின்றது. இலகுவான மொழித்தேர்வில் எழுதப்பட்ட குறுகிய கவிதைகள். உதாரணத்திற்குச் சில...

*"எல்லைகளுக்கு அப்பாற்பட்ட/ ஓர் தேசம்/ பாடல்"*
*"எப்போதும்/ தனக்கு அப்பால் நிற்பதே/ பாடல்"*
*"பாடல்/ எங்களை இணைக்கின்றது/ எங்களை வித்தியாசப் படுத்துகின்றது."*
*"பாடல் பாடலைக் கேட்கின்றது/ அதே வேளையில் எங்களையும் பார்க்கின்றது"*
*"பாடல்/ இது ஒரு பெயர்/ இதனைக் கற்க வேண்டும்",*
*"அனைத்துக் காலத்திலும்/ பாடல் காலத்தைச் செய்கின்றது/ அனைத்துக் கணங்களிலும்/ பாடல் கணத்தைச் செய்கின்றது"*

Musil, மிஷெல் பூக்கோவினது மறுபெயரா? Hervé Guibert இன் A l'ami qui ne m'a pas sauvé la vie (எனது வாழ்வைக் காப்பாற்றாத நண்பனுக்காக) இல் கருகின்ற Musil பாத்திரம் பூக்கோவென்றே கருதப்படுகின்றது. Aids வருத்தத்தோடு மருத்துவமனையில் இருந்து Guibert எழுதிய கடைசி நாவல் (1990) இது. பூக்கோவிடம் இருந்தே Aids வருத்தத்தைப் Guibert பெற்றார் என்பது இன்று பகிரங்கமான விஷயம். ஆனால் இந்த நாவலிலோ அல்லது மரணத்தின் பின்னர் வெளியிடப்பட்ட ஏனைய நாவல்களிலோ பூக்கோவின் மீது எந்த விரோதத்தையும் Guibert காட்டவில்லை. 20ஆம் நூற்றாண்டுப் பிரெஞ்சு இலக்கியத்தில் Guibert இற்கு ஓர் தனித்த இடம் உள்ளது. ஆனால் இந்த நாவல் பிரெஞ்சு விமர்சகர்களிற்குள் ஓர் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஏன் Musil எனும் பாத்திரப் புனைவுக்கூடாகவே பூக்கோவினையும் Aids பீடித்திருந்தது என்பது காட்டப்பட்டது? எனும் கேள்விகள் இலக்கியவாதிகளுக்குள் எழுந்தன. பூக்கோ தான் இறக்கும் வரை தன்னை Aids வியாதி பீடித்திருந்தது என்பதை ஒரு போதுமே வெளிப்படுத்தவில்லை. பிரெஞ்சுப் புத்திஜீவிகளுள் முதல் தடவையாக இந்த வியாதி தனக்கு உள்ளது என்பதை பகிரங்கமாக அறிமுகப்படுத்தியவர் தத்துவஞானி Reymond Aron அவர்களே. பூக்கோ தனக்கு Aids இருந்ததை வெளியுலகுக்கும் சொல்லவில்லை, தனது கடைசிக் காதலனான Guibert இற்கும் அறிவிக்கவில்லை. ஆனால் தன்னை எது பீடித்திருந்ததோ அது Guibert இனது மரணத்தின் நிறமாகவும் இருக்கும் என்பதை பூக்கோ அறிந்திருந்தார். பூக்கோ, Guibert. இது ஓர் காதல் உறவு மட்டுமல்ல, இந்த உறவோடு சேர்ந்த இலக்கிய உறவுமாகும்.




பூக்கோவிற்கு முன்னர் Guibert இற்கு Roland Barthes ஐத் தெரியும். கடித உறவுகளுக்கூடாக மட்டுமே. 1977இல் தனது முதலாவது நாவலான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அறிவித்தல்

எமது எக்ஸில் நிறுவனத்தின் (புகலிடக் கருத்து இலக்கியம்- EXIL IDEE LITERATURE) ஒரே இதழாக "எக்ஸில்" இதழ் மட்டுமே வெளியிடப்படுகிறது என்பதையும் "உயிர்நிழல்" என்கின்ற பத்திரிகை எமது வெளியீடு அல்ல என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். மற்றும் எமது வெளியீட்டு நூல்களான "நிஷ்டை", "யுத்தத்தின் இரண்டாம்பாகம்" என்பன வெளியிடப்பட்டதுபோல் தொடர்ந்தும் எமது வெளியீடுகள் குறித்த அறிவிப்புகள் எக்ஸில் இதழில் உத்தியோகபூர்வமாக வெளியாகும். மாறாக தங்கள் இதழ்களையோ, தொகுப்புகளையோ பிரபலமாக்கும் வண்ணம் எக்ஸில் நிறுவனத்தின் பெயரையும், சின்னத்தையும் பயன்படுத்துபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**எக்ஸில்.**
(EXIL IDEE LITERATURE)

"Mort Propagande" (பிரச்சார மரணம) இன கையெழுததுப பிரதியை Barthes இறகு அனுப்புகின்றார். புதிய எழுத்தாளனின் முதலாவது நாவல் Barthes, இனைத் திகைக்க வைக்கின்றது. வாசிப்பு அழகியலில் கைதேர்ந்த Colllege de France இன் பேராசிரியர் Barthes Guibertஇற்கு எழுதிய கடிதத்தில் "எழுத்திற்கும் வெளியே சொல்லத் தயங்கும் விருப்பங்களுக்கும் (Fantasme?) இடையில் உள்ள உறவு தொடர்பாக உங்களோடு நான் பேச விரும்புகின்றேன். ஆனால் உங்களைத் தெரிந்து கொள்ளாமல், கடிதத் தொடர்புகளைக்கூடாக மட்டுமே" எனக் குறிப்பிடுகின்றார். சந்திப்புகள் இன்றித் தொடர்பு வளர்கின்றது. இந்தத் தொடர்பு எப்படி உடைந்தது என்பதைக் Guibert பின்வருமாறு எழுதுகின்றார். "எனது நாவலிற்கு (பிரச்சார மரணம்) அவர் ஓர் முன்னுரை எழுதச் சம்மதித்தார். ஆனால், ஓர் நிபந்தனையோடு, அதாவது தன்னுடன் நான் கிடக்கவேண்டும் என்பதே. என்னால் இது முடியாததாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் அவரது வயதைக் கொண்ட ஒருவருடன் ஒரு உறவை (செக்ஸ்) வைக்க முடியாததாக இருந்தது."

இதே நாவல் பூக்கோவிற்கும் செல்கின்றது. பூக்கோவையும் திகைக்க வைக்கின்றது. ஆசிரியரைச் சந்திக்க பூக்கோ துடித்தார். "கண்காணித்தலும் தண்டித்தலும்" எனும் பூக்கோவினது ஆய்வு நூல் வெளிவந்த வேளையில்தான் இருவரும் சந்தித்துக் கொள்கின்றனர். சந்திப்பு நீடித்த உறவாக மாறுகின்றது.

சதையின் மர்மங்களை இலக்கியமாக்கி விடலாம், இதனை சமூக வாசிப்புக்குக் கொண்டு வருதல் இலகுவான விஷயமா? Guibert இன் எழுத்து சதையின் உண்மைகளைக் பச்சையாகக் கக்குவது. பூக்கோவினது ஆய்வு ஒழுக்கமோ செக்ஸ் மீதான பச்சையான வாக்குமூலங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது. Guibert பூக்கோவின் கடைசிக் காதலன், முதல் காதலனாகவும் கருதப்படலாம்.

பூக்கோவை மரணப்படுக்கையில் கண்ட போது, அவதிப்படுத்தப்பட்ட தனது மரணத்தை Guibert தரிசித்தார் என பிரெஞ்சு இலக்கிய விமர்சகரான Frédéric Gaussen தனது "Les enfants Perdus du siècle" Edition PUF. (இந்த நூற்றாண்டில் காணாமல் போன குழந்தைகள்) இல் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆக இறுதியில்
இங்கு வந்து நிற்கிறேன்
வாழ்வின் நாற்சந்தியில்
கை தட்டி அழைக்கவோ
பெயர் சொல்லி நிறுத்தவோ
பரிச்சய முகமற்ற
இவ்விடம் நிலத்தின்
துண்டிக்கப்பட்ட கரம்
என்பதாக இருக்கிறது
அந் நிலை
புரியாமல் புதிதாய்
விலாசம் கேட்டு நெருங்குபவனுக்கும்
திசை சொல்லத் தெரியாமல்
புதிர்களாய் போகின்றன
வயலின் ஊடே
மௌன வீதிகள் ஆளற்று
சகித்து
கொள்ள முடியாத அந்நிய பார்வைகள்
கொத்தி தின்கின்றன
மானுடத்தின் நம்பிக்கையை
இரக்கமின்றி மீண்டும்
பூவையோ தலையையோ
காட்டாமல் தொலைகிறது
வட்ட சுழல் பாதையில்
சுண்டி எறியப்பட்ட நாணயம்
மரக் கனவில்

ஹரி

போரால், வன்முறையால், இனத்துவேஷத்தால், நில ஆக்கிரமிப்பால், அரசியல் ரீதியான காரணங்களால், புயலால், பஞ்சத்தால், வறுமையால், சொல்ல முடியாத துயரால் நிலமற்று அலையும், உலகில் ஏதேனும் காரணத்தால் அகதியாக்கப்பட்ட அனைவருக்கும் இக் கவிதை சமர்ப்பணம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவரோவியக் கண்காட்சி -பாரிஸ்-






பாரிசின் 18வது பிரிவில் கிடைக்கப்பெற்ற ஏறத்தாழ 200மீற்றர் நீளமான சுவர் ஒன்றினை அப்பிரிவின் நகரசபை, சுவர் ஓவியம் வரைவதற்காக ஓவியர்களிடம் ஒப்படைத்தது அவ் ஓவியர்கள் தரம்/வகை அறிந்தே அழைக்கப்பட்டார்கள். இதில் பாரீசின் பலகலைக்கழக ஓவியர்கள், பிரபலமான ஓவியர்கள் என பலதரப்பட்டவர்கள் இருந்தனர். இந்தச் சுவர் ஓவியத்தினை Association DOUZE ஐச் சேர்ந்த Ludmilla Rossignet, Nathelie Rossignel, Jaimejimeney ஆகியோரும், Ragu, Rodolphe Burninout மற்றும் Kilia குழுவினரும் வரைந்துள்ளனர்.

சுவர் திருத்தப்பட்டு ஓவியங்கள் வரைவதற்காக ஒரு வாரம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஓவியங்களைப் பாதுகாக்க நகரசபை "வாணீஸ்" போன்ற கண்ணாடித் திரவம் பூசி அதனைப் பாதுகாத்து வருகிறது. பாரீசில் மிகவும் பிரசித்தி பெற்ற ஓவியங்களில் "கிராபிக்ஸ்" எனப்படும் (கிறுக்கல்) ஒரு வகை சுவர் ஓவியம் காணக் கிடைக்கிறது. அதனை வரைகின்ற ஓவியர்கள் ஒவ்வொரு குழுவாகவும் தனித்தனிக் குழு அடையாளங்களுடனும் இருக்கின்றனர். இவை தம்மிடையே கடினமான போட்டிகளை கொண்டிருக்கிறன. ஆபத்தான மிகக்கடினமான பிரதேசங்களில் தமது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரை ஓவியங்களை வரைதல், இதில் ஆற்றின் ஆழ் விழிம்புகளில், புகையிரத முன் முகப்புகளில், மிகப் பெரிய கட்டிடத்தின் மேல் கோபுரங்களில் என தனது அடையாளத்தைப் பொறிக்கின்றனர். இதில் மிகவும் பிரபலமானது Cemoi எனும் குழுவும் Fusi எனும் குழுவும் ஆகும். மேலும் இந்த ஓவியர்களிடம் உரையாடலில் சுவர் ஓவியம் வரைவதன் மூலம் நீங்கள் பொது மக்களின் எதிர்ப்பை சந்திப்பதில்லையா? எனக் கேட்டபோது இது எமது கலை, கலைகளில் சிலருக்கு ஈடுபாடு இல்லை. அவர்களைப் பற்றிய அக்கறை எமக்கு இல்லை என்றார்கள். பொதுச் சொத்துக்களை நீங்கள் வீணடிப்பதாக குற்றச்சாட்டு வருவதில்லையா? என்று கேட்க நாம் மட்டுந்தான் வீணடிக்கிறோம் என்று நீங்கள் கருதுகிறீர்களா என்று திருப்பிக் கேட்டார்கள்.

-எக்ஸில்-

சிதர் துளி நடுக்கம்.
நாராய்
வரிவட்டு
அலை அலையாய்
கரை சேரா அடங்குவது எங்கே?

நீருக்குள் புதையுண்டு
நீராகிப் போனபின்
கிளப்பும் அலைமீதும்
மோதுவது
ஒரு துளி.

கரையைக் குறிவைத்து
தப்பிக்கும் அலையை
உள்ளிழுத்து,
அழிக்கும்
நடுக்கப் பெருமிதம்.

கவனமெல்லாம்
அலைமீதும் கரைமீதும் பிதற்ற
ஒளியின் உட்சுவையாய்
ஊடறுக்கும்
துளித் தெறிப்பு.

-கற்சுறா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகலிட வாழ்வின் பல்வித நெருக்கடிகளுக்குள் புலம்பெயர் சமூகத்தின் உயிர்ப்பைப்பேணும் முயற்சிகளின் ஒரு பகுதியாக சிறு சஞ்சிகை வட்டத்தினராலும், வாசக, ஜனநாயக சக்திகளினாலும் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற இலக்கியச் சந்திப்பின் 26 வது தொடர் கடந்த ஜுன் 10,11 ம் திகதிகளில் ஜேர்மனியின் ஸ்ருற்காட் நகரில் நடைபெற்றது. இது குறித்து சில பதிவுகள் கீழே தரப்படுகின்றன.

கடந்த 11 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்ற இச்சந்திப்பானது இலங்கையிலும், புகலிட தமிழ்ச் சூழலிலும் செல்வாக்குச் செலுத்தும் அரசியல், சமூக பொதுநீரோட்டத்தில் இருந்து விலகி மாற்றுக் கருத்துகளுக்கும், அதிகாரத்துக்கு எதிரான குரல்களுக்கும் வாய்ப்பளிக்கும் ஒரு களமாக செயற்பட்டு வருகிறது. குறிப்பாக முஸ்லிம் படுகொலைகள், ராஜினி கொலை, செல்வி கடத்தல்... என்று பரிஸ் சபாலிங்கம் கொலைவரை எதிர்ப்புக் குரல் ஏதுமின்றியே தமிழ்ச் சமூகம் மௌனமாகிப் போன சூழலில் இவ்வித ஜனநாயக விரோத நிகழ்வுகளுக்கு எதிராக தனது கண்டனத்தை இச்சந்திப்பு தெரிவித்து வந்திருக்கிறது. இவ்வகையில் மாற்றுக் கருத்துகளைக் கொண்ட சிறுபான்மைக் குரல்களுக்கும் அதுபோன்றே என்றும் சமூகத்தினை முன்நோக்கி தள்ள முயலும் சிறுசஞ்சிகையாளர்களுக்கும் ஊக்குவிப்பையும் வெளியீடுகளுக்கான வாய்ப்பையும் இச்சந்திப்பு கொடுத்து வருகின்றது. இனியும் சூல் கொள், இருள்வெளி, எக்ஸில், தோற்றுத்தான் போவோமா, நிஷ்டை,... போன்ற பல்வகை வெளியீடுகள் இச்சந்திப்பு தொடர்களில்தான் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்க சில வரலாற்று நிகழ்வுகள்.

பத்திரிகைகள் மட்டுமல்ல தனிமனிதர்களும் சுயதணிக்கைக்கு உட்படுவதே சமூக நியதியாய் போன வேதனையான தமிழ்ச்சூழல் புகலிடத்திலும் நிரந்தரமானபோது அதை மறுத்து யுத்தசூழலுக்கெதிராக மாற்று சிந்தனைகள் என்றால் அது "இலக்கியச் சந்திப்பு" என்று சொல்லும் அளவுக்கு இச்சந்திப்பானது இனம் காணப்பட்டுள்ளது. அவ்வகையில் எங்குமே பேசமுடியாத, எழுத முடியாத, விவாதிக்கவோ விமர்சிக்கவோ முடியாத கருத்துகளுக்கு இதுவே களமாகும்.

இத்தனை சாதனைகளையும் சாத்தியமாக்கிய இச்சந்திப்பிற்கு ஓர் நிர்வாக அமைப்பு வடிவமோ, அதிகார அலகுகளால் நிரம்பிய ஒழுங்கமைப்பாளர்களோ இன்றுவரை இல்லாமையும், இது யாருக்கும் சொந்தமானது, யாரும் எதையும் வந்து பேசத் தடையில்லையென்ற திறந்த ஜனநாயகப் பண்பும் சாதகமான அம்சங்களாகும். இந்த நெகிழ்வுப் போக்குத்தான் இன்றுவரை இந்த சந்திப்பின் தொடர்ச்சிக்கான உயிர்மூச்சாகும் என்று சொல்வதில் ஓரளவு உண்மை இருந்தாலும் அதை நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடியாவண்ணம் அவ்வப்போது இச்சந்திப்பிலும் மையப்படுகின்ற அதிகாரம் குறித்து அதிருப்தி கொண்ட பலர் வெளியேறி வருவதும் இல்லாத செய்தியல்ல. கட்புலனாகாத மத்திய குழுவின் அதிகாரக் கரங்கள் இச்சந்திப்பில் ஆதிக்கம் செலுத்துவது பற்றியும் அதை உடைப்பதற்காகவே உள்ளேயிருந்து போராட வேண்டியிருப்பது பற்றியும் பல தோழர்களுக்கிடையே கிசுகிசுக்களும் உண்டு.

## 26வது தொடரின் ...

### 1ம் நாள்

நிகழ்வுகளை ஆரம்பிக்க முன் சுய அறிமுகம் இடம் பெற்றது. சிலர் சுய அறிமுகம் என்பதை கேலிக்குள்ளாக்கி தான் 'எங்கிருந்தோ வந்தவன்' என்பதாகவும், அருகில் இருந்த பெண் எந்த நாடோ 'அந்த நாட்டில்' இருந்து வந்தவராகவும் சொல்லிக் கொள்வதில் பெருமிதப்பட்டனர். இதற்குப் பலர் சிரிப்பொலியையும் பரிசாக தந்தனர். இன்னும் சிலர் தங்களது பெயருக்கப்பால் ஏதுமே கூறவில்லை. அதிகமானோர் முதற்தடவையாக சந்திப்பிற்கு கலந்து கொண்டவர்களாக இருக்க, இவர்கள் எல்லாம் உலகில் தங்களைத் தெரியாதவர்கள் யாரும் இல்லை என்ற தொனியில் செய்கின்ற இந்த சுயஅறிமுகம் இம்முறை மட்டுமல்ல தொடர்ந்து நடைபெறும் முசுபாத்திதான். இனிவரும்

# இலக்கிய சந்திப்பு

www.tamilarangam.net

சந்திப்புகளில் இந்த வெட்டி நிகழ்வு தேவையற்ற தாகவேபடுகிறது.

**நிகழ்வு—1**

**"சிங்கள் சாதி அமைப்பும் தமிழ் தேசியப் பிரச்னையில் அதன் தலையீடும்" - சரவணன்**

தமிழ்ச் சூழலில் ஒரு பேசு பொருளுக் குரிய விடயமாக இல்லாது அவ்வப்போது கதையாடலுக்குள் வந்து போகின்ற சிங்கள சாதி அமைப்பு பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்துப் பேசினார்.

இலங்கை இந்திய அரசர்களுக்கிடை யில் ஏற்பட்ட உறவுகள்/ஆக்கிரமிப்புகள் என்பவற்றுக் கூடாக இந்திய சாதியம் மெல்ல மெல்ல சிங்கள சமூகத்திடம் நிறுவப்பட்டதாகவும் நிலப்பிரபுத்துவ சக்திகளும், ஆங்கிலேயரும் இச்சாதி அமைப்பை தக்க வைத்து வந்துள்ளனர் என்பதாகவும் விளக்கிக் கூறிய சரவணன் இந்திய பார்ப்பன/ யாழ் சைவ வேளாள சாதிகளுக் கொப்பாக சிங்கள சமூகத்தில் கொவிகம எனும் சாதியே படிநிலையில் முதலாவது சாதியாகவும் கராவ, சலகம என்ற வரிசைப்படுத்தலில்... 43 சாதிகள் இருந்ததாகவும் பின்னர் 26 ஆகக் குறைந்து தற்போது 14 சாதிகள் வழக்கத்தில் இருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிப்பதாய் குறிப்பிட்டார்.

அனேக சாதிகள் இந்திய படிநிலை ஒழுங்கு போன்றல்லாது சம அந்தஸ்துக் கொண்டவையாக இருந்தமையே இவ்வாறு வழக்கொழிந்து போனமைக்கு காரணமாகச் சொல்லப்படுவது குறித்தும் விளக்கமளித்தார். நிறைந்த தரவுகளுடனான இவரது கட்டுரை குறித்த உரையாடலுக்கு நிகழ்வுகளின் ஒழுங்கமைப்பாளர் அழுங்குப்பிடி கொண்ட நேரக் காப்பாளராய் மாறிய துரதிஸ்டம் காரணமாக விவாத நேரம் மறுக்கப்பட்டது வேதனையே.

**நிகழ்வு: 2**

**"மாறன் மனமும் மறந்து போன புரட்சியும்" - நா.கண்ணன்**

இலங்கை, இந்தியாவில் மட்டும் அல்ல புகலிடத்திலும் சாதியத்தின் கொடுமை தாங்காது எழும் தலித்தியக் குரல்களுக்கு பதில் சொல்லும் முகமாக இவரது பேச்சு அமைந்திருந்தது. நீங்கள் இன்று பேசும் தலித்தியம் எல்லாம் எங்கள் ஆழ்வார்கள் என்றோ பேசிவிட்டார்கள் என்றவாறாக "பிளேட்டை பிரட்டி"ப்போட்டார் கண்ணன். போதாக்குறைக்கு அந்த ஆழ் வாரையே ஓர் "போஸ் மொடனிஸ்ட்"ராய் ஆக்கி விடுவதில் குறியாய் இருந்தார். அதற்குப் பக்கபலமாக சில சாதகமான குறுக்கீடுகளை லதா என்ற பொண்ணு பண்ணிக்கிட்டிருந்தா. இது என்ன இலக்கியச் சந்திப்புத்தானா? என்ற சந்தேகம் பலருக்கும் வந்து விட்டது. ஆனாலும் சிலருக்கு பிரயோசனம் இருந்ததாகச் சொல்லிக் கொண்டார்கள். இவர்களுக்கெல்லாம் ஒரு பட்டிமன்றமோ அன்றி இந்து மாநாடோ கிடைப்பதில்லையா? சென்ற ஆண்டும் பாரிஸில் நடைபெற்ற இந்து மாநாட்டுக்கு கண்ணன் வந்துதானே போனார். இந்த ஆழ்வாரைப் பற்றிப் பேச அங்கு தடை சொன்னார்களா? நாங்கள் மாற்றுக் கருத்துகளுக்கும் சிறு சஞ்சிகை யாளருக்குமாக காப்பாற்றி வரும் இந்த சந்திப்பில் மண்ணை அள்ளிப் போடலாமா? கடைசி தமிழினி 2000 என்று காலச்சுவடு கடைவிரித்துள்ளதே அங்காவது போய் பேசலாமே?

என்ன செய்வது இலக்கியச் சந்திப்புக்கு இப்படியும் ஒரு கதி. எதையும் பேசும் சுதந்திரம் தான் இலக்கியச் சந்திப்பு என்பதை சிலருக்கு இன்னும் புரியவைக்க வேண்டி இருக்கிறது. எதையும் வெளியில் எங்கும் பேசமுடியாத "எதையும்" இங்கு பேசலாம் என்பதுதான். ஆனால் இந்த ஆழ்வாரைப் பற்றி கண்ணன் எங்கு வேண்டுமானாலும் பேசலாமே என்பதுதானே தவிர அவர் இதை இங்கு பேசக்கூடாது என்பதெல்ல



இடமிருந்து தேவா ஹரோல்ட், ராகவன், முரளி, உமா

எங்கள் தொனி. சரி கண்ணனிடம் கேட்கிறோம்: ஆழ்வார்கள் தலித்தியம் பேசினார்கள் என்பதற்காக நாங்கள் இப்போ பேசாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்கான தேவை இன்று இல்லாமல் போய்விட்டதா? எந்தவகையில் இப்போது இந்தச் சாதியக் கொடுமை குறைந்துவிட்டது?

குறிப்பு:-

மேற்படி நிகழ்விற்கு நிறைந்த நேரம் பேசுவதற்காகவும் வேண்டியளவு விவாதத் திற்குமான நேரம் வழங்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நிகழ்வு—3**
**சக்தி விமர்சனம்:- லதா, தர்மினி, மேரி**



லதா, தர்மினி, மேரி

தர்மினி புகலிடத்துக்கு வந்து சிலகாலம்தான் என்பதால் தான் அதிகம் படிக்கவோ புரியவோ முடியவில்லை எனக்கூறி சுருக்கமாக சக்தி பற்றி சில கருத்துக்களை முன்வைத்தார். மேரியும் குறைந்த பட்சம் தான் பொறுப்புணர்வுடன் தயார் செய்து வந்திருந்த சக்தி மீதான விமர்சனத்தை முன்வைத்தார். லதாவோ இந்த யாழ்ப்பாணப் பெண்கள் பேசுவது எந்தப் பெண்ணியம்? சர்வதேசப் பெண்ணியமா? அல்லது இலங்கைப் பெண்ணியமா? என்று ஒரே போடாய்ப் போட்டார். விமர்சனத்துக்காக எத்தனை சக்தி இதழ்களை இவர் படித்து விட்டு வந்தார் என்பது தெரிய வில்லை. அறிமுகம் பண்ணும் பாணியில் சற்று மேதாவித்தனமும் கலந்து யாழ்ப்பாணப் பெண்கள் யாழ்ப்பாணப் பெண்கள் என்று ஏதோ பேசிக்கொண்டு இருந்தார். உமா குறுக்கிட்டு '10 வருடங்களாக வரும் சக்திக்கு அறிமுகம் தேவையில்லை' என்று சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் இருந்தது அந்த விமர்சன அரங்கு. எப்படியோ சக்தி விமர்சனத்தை மூட்டைகட்டி வைத்து விட்டு பெண்ணியத்தின் பன்முகப் புரிதல் குறித்து எல்லோரும் விவாதிக்கத் தொடங்க அழகலிங்கம், தமிழரசன் என்று சிலர் ஒரே குரலில் பொருளாதாரம்தான் ஆணாதிக்கத்தை தக்கவைக்கிறது எனும் 100 ஆண்டு காலப் பல்லவியை பாடத்தொடங்கினர். அதை மறுத்து பெண்கள் தரப்பில் இருந்து பெண்ணடிமையைத் தக்கவைக்கும் சமூக, கலாச்சார, பண்பாட்டு காரணிகள் பற்றி கருத்துக்கள் முன்வைக்கப் பட்டது. மேற்படி பன்முகப்புரிதல்களை கோரும் ஒற்றைப் பார்வைகளை மறுக்கின்ற பின் நவீனத்துவம் இங்கேதான் அவசியமாகின்றது என்றவாறாக விவாதம் தேவையான தளத்துக்கு மாற ஒரே செக்கனில் ரென்சனாகிய லதா 'போஸ் மொடனிசம் இஸ் நோன்சன்ஸ்' என்று அடித்துக் கூறியதுடன் நேர ஒழுங்கமைப்பாளர் விவாதத்தை முற்றாக்கினார். எனினும் இதற்குப் பதிலிறுக்க நேரம் தேடி சாப்பாட்டு வேளையில் இது குறித்து கேட்ட நண்பர்களிடம் இல்லை நான் அப்படிச் சொல்லவில்லை போஸ் மொடனிசம் பேசுபவர்களைத்தான் சொன்னேன் என்று மழுப்பினார். அல்லது சொதப்பினார் லதா.

**நிகழ்வு—4**
**"தென்னாசிய மனச்சாட்சியின் குரல்" - சந்தூஷ்**

பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமிர்தாசென்னுடைய பொருளாதாரக் கோட்பாடுகள் பற்றி உரையாற்றினார்.

**நிகழ்வு—5**
**"இடம்பெயர் வாழ் தமிழர்களும் ஜேர்மன் சட்ட முறைகளும் பரிமாணமும் எதிர்காலமும் ஓர் ஆய்வு" - யோகநாதன்**

அகதிகள் குறித்து அக்கறை கொள்ளும் ஜேர்மன் சட்டமுறைகள் பற்றிய நுணுக்கங்கங்களை தொகுத்து வழங்கினார்.

**நிகழ்வு—6**
**"விபரணப்படம்"**

சுப்பிரமணிபாரதியார் பற்றி அம்சன் குமார் இயக்கிய விவரணப்படம் காண்பிக்கப்பட்டது. தொகுத்து வழங்கியவர் கோடையிடி குமரன். படத்தில் பாரதியின் முகமும் வாழ்ந்த வீட்டையும் காட்டியதைத் தவிர பாரதி பற்றிய எந்த விமர்சனங்களுமற்று இன்னொரு ஆழ்வாராக்கும் முயற்சியே மேற்கொள்ளப்பட்டது என்பதுடன் அமெரிக்காவில் வசிக்கும் பார்ப்பன நண்பர்களின் பணத்தில் எடுக்கப்பட்ட இப்படத்தில் நாம் வித்தியாசமாக எதையும் தேடவேண்டிய அவசியம் இல்லை என்பது வரை காரசாரமான விமர்சனங்கள் வைக்கப்பட்டது.

## 2ம்நாள்

**நிகழ்வு—1**
**"பெரியாரியம் ஒரு புதுவாசிப்பு" - அசோக்**

பெரியார் பற்றிய தீவிரமான வாசிப்பற்ற ஒருவன்/ஒருத்தி எந்தவொரு விமர்சனமும் இன்றியே பெரியாரை தூக்கியெறிந்து விட்டுப் போகும்படியான ஒரு எண்ணத்தையே இக் கட்டுரை தோற்றுவித்திருந்தது. அந்தளவிற்கு அவரை அசோக் திட்டித்தீர்த்ததுதான் மிச்சம். அங்கு இப்படிப்பேசினார். இங்கு இப்படிப் பேசினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடையில் ஒரு "க்" கன்னா குறைந்து விட்டது என்பதுபோல் பிழைபிடிப்பதில் குறியாய் நின்று பழைய பெரியார் பற்றிய சில ஏடுகளைத் துணைக்கழைத்து பெரியாரைக் கட்டுடைத்தார். மற்றவரெல்லாம் காந்தியைக் கட்டுடைக்கையில் கா.சிவத்தம்பியை கட்டுடைக்கையில், புதுமைப் பித்தனைக் கட்டுடைக்கையில், ஏன் அந்த லெனினையும் ஸ்ராலினையும் கட்டுடைக்கையில் நான் ஏன் சும்மா இருக்க நானும் கட்டுடைக் கிறேன் என்று புறப்பட்டவராக பெரியாரைக் கட்டுடைத்தார். ஒன்றுமட்டும் சொல்லமுடியும் கட்டுடைப்பின் நோக்கம் ஒன்றைப் புனிதப்படுத்தி அதனைப் பெருங்கதையாடலாக்கி அதன் பெயரால் ஆதிக்க செயற்பாடுகள் தொடரும் போது அந்த புனிதத்தைக் கேள்விக்குள்ளாக்கு வதாய் இருக்க வேண்டும். இன்று காந்தியைப் புனிதமாக்கி அந்த புனிதத்தின் பெயரால் இந்து தர்மமும் அதன் வர்ணாச்சிரமக் கோட்பாடுகளும் கோலோச்சிகையில் தலித்துகளும், பெண்களும், சிறுபான்மையினங்களும், ஏனைய விளிம்பு நிலையினரும் ஒடுக்கப்பட்டு நசிவுறுகிற போது அந்த புனிதத்தை நாம் கேள்விக்குள்ளாக்குவது நசிவுற்றோரின் மீதான ஜனநாயக மீறல்களுக்கு எதிரான குரலாகவே. ஆனால் அசோக்கோ இன்று பெரியாரைக் கட்டுடைப்பதன், கொச்சைப் படுத்துவதன் தேவை என்ன? 5000 ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டு வாழ்வுரிமை மறுக்கப் பட்டுவரும் தலித்துகள் பெரியாரை தங்களின் போர்க்குரலாக வாசிக்கின்றார்கள். உடன் கட்டையேறி உருக்குலைந்து போன பெண்ணினம் இன்று தங்களின் போர்க்குரலாக பெரியாரை முன்நிறுத்துகிறார்கள். இவற்றையெல்லாம் பொறுக்கமுடியாத ஓர் சாதித் திமிர் பிடித்த வேளாளனாலும் ஆணாதிக்க வெறிபிடித்த இந்துவாலும் மட்டுமே இந்தவகை வாசிப்புகளில் இருந்து பெரியாரைப் பிரித்தெடுத்து கட்டுடைப்புச் செய்யமுடியும். அதை அசோக் செய்திருக்கிறார். தனது பேச்சினிடை ஓர் புகலிட எழுத்தாளன் பற்றி குறிப்பிடுகையில் தான் பெயர் குறிப்பிட விரும்பாத 'ஒரு பத்திரிகையில்' எழுதுகின்ற 'ஒருவர்' என்றவாறாக சுட்டிச் சென்றார். தனக்குப் பிடிக்காத பத்திரிகை ஒன்றையோ எழுத் தாளனையோ பெயர் சொல்லிப் பேசுவதுகூட "தீட்டு" என்று எண்ணும் அளவிற்கு தீண்டாமை நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் அசோக்கினால் இவற்றைத்தான் செய்யமுடியும்.

ஐரோப்பாவில் மட்டும் பிறந்திருந்தால் ஓர் கால் மார்க்ஸ்சைவிட புகழ்பெற்றிருக்க வேண்டிய அந்த மனிதனை கொச்சைப்படுத்த (இங்கே கொச்சை என்ற சொல் மிக நிதானமாகவே கையாளப்படுகிறது.) இன்று வரை கேவலம் அந்த 'பால்தக்கரே' கூட ஏன் அதன் பிரதிநிதியான 'சோ.ராமசாமி' கூட இப்படித் துணிவதில்லை. இதுவரை காலமும் புகலிட இலக்கியச் சூழலில் ஓர் சுப்பிரமணிய சுவாமி யாகத்தான் அசோக்கைப் பார்ப்பது வழக்கமாய் இருந்தது. இன்றிலிருந்து புகலிட இலக்கியத்தின் சைவ வேளாள கருத்தியலின் பிதாமகராக ஆறுமுகநாவலரின் புதிய வாரிசாக அவரைக் கொள்ளலாம். மேற்படி கருத்துக்கள் அசோக் மீதான தனிப்பட்ட தாக்குதலாகவோ பழிச் சொற்களாகவோ தவறான புரிதலுக்கு வாசகர் களை இட்டுச் செல்லக்கூடாது என்பதனால் அவரின் உரையைத் தொடர்ந்து நிகழ்வின் எதிரொலிகளை ஒலிநாடாவில் இருந்து அப்படியே பதிவு செய்கிறோம்.

**நா.கண்ணன்:–** "கடவுள் செத்துவிட்டார், இலக்கியச்சந்திப்பு செத்துவிட்டது அப்படின்னு இருந்த ஒரு நிலையில் இருந்து திரும்ப வந்து ஒரு ஆரோக்கியமான கட்டுடைப்புச் செய்து அது ஆழ்வாராக இருந்தாலும் சரி பெரியாராக இருந்தாலும் சரி அது மார்க்ஸாய் இருந்தாலும் சரி ஒரு ஆரோக்கியமான ஒரு முழுமனிதப் போக்கு இந்த இலக்கியச் சந்திப்புக்கு வந்திருப்பது இலக்கியச் சந்திப்பின் ஆர்வலன் என்ற வகையில் எனக்கு ரொம்ப சந்தோசமாய் இருக்கு. அந்த வகையில் உங்களுடைய கட்டுரை ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்தது."

அதற்கு மேல் போய் தனக்கு 'ஒரு கீதையை வாசிப்பது போலும் மனுஸ்மிருதியை வாசிப்பது போலும்' அசோக்கின் கட்டுரை இருந்ததாக புளகாங்கிதம் அடைந்தார். இதன் அர்த்தம் வாழ்க அசோக் வளர்க பிராமணியம் என்பதை விளக்கத்தேவையில்லை.

**சுகன்:–** "உங்கள் பேச்சில் ஒரு சமூகத்தை பிராமணர் x பிராமணர் அல்லாதோர் என்று பிரிக்கின்ற பாசிச மனோபாவம் வெளிப்படு கின்றது. அடுத்தது உங்கள் கட்டுரையில் தீண்டத்தகாதோர் என்று அடிக்கடி வாசிக் கிறீர்கள் அது பிழை. அது ஒரு சாதிய மனோ பாவத்தின் கூறு அத திருத்தி தீண்டப்படாதோர் என்று வாசிங்க. மற்றது, குணாவின்ர கருத்துகளும் துக்ளக் சோவின்ர கருத்துகளும் 'மெலோஞ்சே' பண்ணின ஒரு புதுக்கருத்து பெரும்பாலும் இதுல தெரிந்தது."

மெலோஞ்சே:- கலந்த என்பதற்கான பிரஞ்சுப் பதம்.

**ஷோபாசக்தி:–** "பெரியாரைப் பார்ப்பனீயம் வெற்றிகொண்ட காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது முக்கியமான விசயம். இந்தக் கட்டத்தில் அசோக் அவர்களுடைய கட்டுரை மிக நுட்பமாகத் தயாரிக்கப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரை. கட்டுரை முடிந்தவுடன் கண்ணன் அவர்கள் ஆஹா... ரொம்ப சுவாரஸ்யமாய் இருக்கிறது. இலக்கியச் சந்திப்பு சாகவில்லை இன்று இப்படிப் பெரியாரைப் பற்றிப் பேசினோம் நேற்று ஆழ்வாரைப்பற்றிப் பேசினோம் ரொம்ப சந்தோசமாய் இருக்கிறது என்றார். அற்ப சந்தோஷம்!"

**பிரசன்னா ராமசாமி:–** "பெரியார் வந்து ஒரு சீர் திருத்தவாதி ஒரு சீர்திருத்தவாதி படிப்பாளியாய் இருக்கோணுமின்னு நீங்க எதிர்பார்க்க முடியாது. அவர்களிட்ட முரண்கள் இருக்கத்தான் இருக்கும்."

"இந்த வாசிப்பில நீங்க எடுத்துவைத்த ஆக்கிமென்ரோ அரஞ்மென்ரோ பிழையில்ல. ஆனா இத இப்படிப் பார்க்கிறது வந்து நமக்கு நாணயமில்ல. இன்னிக்கிருக்கிற நிலமையில அது ஞாயமில்ல."

**கற்சுறா:** "அசோக் வந்து பெரியாரை தமிழ்வெறியனாகக் காட்ட முனைந் தார். அப்படி யல்ல. ஹிந்தி தேசிய மொழியாக வருவதனால் தமிழர்க்கு என்ன லாபம் என்று கேட்டாரே ஒழிய அவர் தமிழ் வெறி கொண்டு அலையவில்லை. இன்னோரிடத்தில் ஹிந்தித் திணிப்பு வந்தால் நான் அதைவிட தமிழ்நாட்டை பிரான்சினுடனோ இங்கிலாந்துடனோ இணைக்கக் கோருவேன் என்கிறார். அதாவது புதிதாகப் பயிலும் மொழியானது தமிழர்க்கு வளம் சேர்ப்பதாய் இருக்க வேண்டும் என்பதே அவர் கொள்கையாய் இருந்தது."

மேலும் சுருக்கமாக ரஞ்சினி இது குறித்து பேசும்போது "பெரியார் பெண்களுக்காக எவ்வளவோ பேசியிருக்கிறார். இன்டைக்கு ஐரோப்பாவில றடிக்கல் பெண்ணிலைவாதிகள் பேசக்கூடிய மிகவும் தீவிரமான கருத்துக்களை பெண்கள் குறித்து அன்றே பெரியார் முன்வைத்துள்ளார். இதுபற்றி கண்டுகொள்ளாமல் விட்டது பெரும் ஏமாற்றத்தைத் தந்தது." என சுட்டிக்காட்டினார்.

சரவணன் இதுகுறித்து கருத்துச் சொல்கையில் "முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட நோக்கங்களுக்கேற்ப ஆதாரங்களைத் தேடி மிகவும் நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்ட உங்கள் கட்டுரைபோல் கட்டுரை தயாரிப்பது ஒன்றும் பெரியவிடயமில்லை" எனக்கூறினார்.

பாரதி தனது கருத்தாக "அசோக் வந்து கால் மார்க்ஸை வைத்து அ.மார்க்ஸ்சுக்கு எதிராக பெரியாரை வாசித்துள்ளார்" எனக் கூறினார்.

## நிகழ்வு–2

**சுபாஜினி அவர்கள் "இயந்திரங்களின் பரிணாம வளர்ச்சி" பற்றி உரையாற்றினார்.**

## நிகழ்வு–3

வடபுலத்தில் இருந்து முஸ்லிம்கள் விரட்டப் பட்டதன் 10 ஆண்டு நினைவு கொள்ளும் வகையில் நினைவுரையை புஸ்பராஜா வழங்கினார்.

**"முஸ்லிம் தேசியமும் தமிழ் பாசிசக் கருத்தியல் அச்சுறுத்தல்களும்" - எம்.ஆர்.ஸ்ராலின்**

தமிழ்த் தேசியமானது தன்மீது கற்பித்துக் கொண்ட புனிதங்கள் சிறுபான்மை முஸ்லிம்களை எப்படி மற்றயவையாகவும் எதிரியாகவும் கட்டமைத்தன என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கினார். மேலும் மேற்படி தமிழ் தேசியத்தின் புனிதங்களை தொடர்ந்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு தமிழ் பாசிசத்தின் செயற்பாடுகளுக்கு துணைபுரிபவர்களாக இன்று வி.ரி.தமிழ்மாறன், வ.ஐ.ச.ஜெயபாலன் போன்றோர் செயற்படுவதை அவர்களது அண்மைக்காலப் பேச்சுகளும், பேட்டிகளும் வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டு அவர்கள் மிது பலத்த கண்டனத்தைத் தெரிவித்தார்.

## நிகழ்வு–4

வெளியீடு "யுத்தத்தின் இரண்டாம் பாகம்"

எக்ஸிலின் இரண்டாவது வெளியீடாக சக்கரவர்த்தியின் 10 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டது. எக்ஸிலின் சார்பில் கற்சுறா, எம்.ஆர்.ஸ்ராலின் போன்றோர் வெளியீட்டு உரையை நிகழ்த்தினார்கள்.

## நிகழ்வு–5

விவரணப்படம் - "நதியின் மரணம்"

விபரணப்படம் குறித் தவிவாதங்கள்:-

**அசோக்:–** இந்தப் படம் தன்னை மிகவும் கோபப்படுத்தியதாகக் கூறிக்கொண்டு உணர்ச்சி வசப்பட்டு பேச ஆரம்பித்த அசோக் "அரசியந் திரம் என்பது எல்லோருக்கும் ஒன்று தான். அரசியந்திரத்தில ஒரு தலித் பொலிசாய் இருந்தாலும் அவன் அத ஒடுக்கத்தான் செய் வான். புதியகலாச்சாரத்தில நீங்கள் பார்த்திருக் கலாம். இங்க சுட்டதில மிக முக்கியமான ஆக்கள் தலித் பொலிஸ். ஒடுக்கப்பட்ட சாதியச் சேர்ந்த வங்கதான் அந்த தலித் மக்கள சுட்டாங்கள். நான்கு முஸ்லிம்கள் இங்கே கருத்துச் சொன்னாங்கள். அவங்களெல்லாம் என்ன ஒடுக்கப்பட்ட சமூகமா? இங்கே சாதிப்பிரச்சாரம் செய்ய வந்திற்றீங்களா? இது ஒரு தொழிற்சங்கப் பிரச்சனை. அதை மறைத்து அதற்கு சாதிச் சாயம் பூசுவதும் ரொம்ப கொச்சத்தனமான வேலை... இங்கே யாரும் வியாபாரம் பண்ணக்கூடாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றவாறாக இன்னும் பேசினார்.

**நா.கண்ணன்:–** அசோக்கின் கருத்துக்கு வலுச் சேர்ப்பதற்காக இதைச் சொல்வதாக கூறிக்கொண்டு "பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானை அடி என்று சொல்லிக் கொடுத்த கட்சியில் இருந்து வந்தவருதான் கருணாநிதி என்பதனால் அது அவங்கதான் பண்ணுறாங்களே தவிர பார்ப்பனர்கள் கொலைக் குக் காரணம் அல்ல." எனச் சொன்னதோடு தன்னை எல்லோரும் பார்ப்பான் என்று சுட்டிக் கதைப்பது குறித்து ஆட் சேபனை தெரிவித்தார்.



**வ.அழகலிங்கம்–** "அந்த மக்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களுக்கு சடத்துவ லாபம் கிடைக்கும்படி நாங்கள் ஏதாவது பண்ணவேண்டும். அவர்களது வழக்கு செலவுகளை நாங்கள் பொறுப்பெடுக்க வேண் டும்." என்றவாறாக அவர்களை எப்படி தொழிலாளர்களாக ஒன்றிணைப்பது என்பது பற்றியும், சர்வதேச தொழிற்சங்கங்கள்/கட்சிகள் என்று மேலும் பேசினார்.

**சரவணன்:–** (மிக நிதானமாக) "முதல்ல... தலித் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தை இங்க கேலி செய்யிற வேலைய வச்சுங்கா தீங்கோ. தயவு செய்து அந்த மக்களுடைய போராட்டத்தை வெறும் பொருளாதார குறுக்கல் வாத இந்த இதுகளுக்குள்ள சிக்கல்பட்டு அவர்களுடைய அந்த சையிட்ட வந்து மறுதலித்துச் போடாதீங்கோ. இங்க அப்படிச் செய்யிற யாராவது இருந்தீங்கன்னா அந்த மக்களுக்கு இப்படிப் பேசுறதில எந்தப் பிரயோசன மும் இல்ல. சரியா வெறும் உணர்ச்சிகளால இதுக்குப் பதிலளிச்சு அதுகளுக்குப் பின்னால் உள்ள சாதிய இதுகள் எல்லாத்தையும் மழுங்கடிச்சுப் போடாதீங்கோ. இங்க அந்த மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் அந்த வர்க்கமாய் இருக்கிற அதே நேரம் அவர்கள் எந்த சாதியச் சேர்ந்தவர்கள் என்பத நீங்கள் இது பண்ணிப் போடதீங்கோ. "இங்க அடிச்சவனும் தலித்" என்று நிறுவுவதெல்லாம் என்ன இது? நிச்சயமாக அடிக்கிறவன் வந்து பார்ப்பானாக இருக்க வேணும் என்பதல்ல பிரச்சனை. இங்கே தனிநபர்கள் அல்ல பிரச்சனை. அந்த சித் தாந்தமும் அந்த ஆளும் குழுமமுந்தான். அந்த ஆளும் குழுமம் என்பது குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்த அதே நேரம் ஆதிக்க சாதியினுடைய அரச இயந்திரத்தை பிரநிதித்துவம் பண்ணுற வனாகவும் இருக்கான். அதத்தான் நாங்க வந்து கருத்தில கொள்ள வேணும். அதவிட்டிற்று இத வந்து கேலிசெய்து இன்னொரு பக்கத்துக்கு திசதிருப்பி இத வந்து குறுக்கிப் போடாதீங்க."

**ஷோபாசக்தி:** "இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்பு வோட்கூடப் போட முடியாத நிலையில் தலித்துகள் இருந்தார்கள். ஆனால் இன்று கிருஷ்ணசாமி வந்தபிறகு, திருமாவளவன் வந்தபிறகு அவர்கள் என்னதான் என்னதான் எதிர்ப்புரட்சிக்காரராய் இருக்கலாம், சீர்திருத்தவாதிகளாய் இருக்கலாம். ஆனால் அவர்களால் வோட் போட முடிகிறது. ஓர் எம்.எல்.ஏ யை தங்களுக்கு தெரிவு செய்து அனுப்ப முடிகிறது."

**தேவதாஸ்:** "இது வந்து தோட்டத்தொழி லாளர் என்பதற் கப்பால் புதிய தமிழகம் எனும் கட்சி வளர்ந்து கொண்டு போகுது. தலித் மக்களுக்கு ஒரு முனைப்போடு ஒரு தலைமை யோடு வளர்ந்து கொண்டு போகுது. அதனால் தங்களுக்கு ஆபத்து வரப்போகுது எண்டுதான் நிச்சயமாக இது திட்டமிட்டு இந்த அரசால் செய்யப்பட்டது."



**விஜி:** "அது வந்து அடிவாங்கின அந்த பாதிக்கப்பட்ட அவரே வந்து சொல்கிறார் 'நான் பறையன் என்கிறதால வந்து நான் ஒன்டும் கேட்கமுடியாதா? 'ஒரு சீட்டில போய் இருக்க முடியாதா? அதுக்காக வந்து எங்கள் அடிக் கிறாங்களே? நாங்க வந்து யோசிக்கிறது அவர்களுக்கு பிரச்சனையாக இருக்கு' என்று அந்த மக்களே வந்து சாதிப் பேரச் சொல்லிச் சொல்லி 'பறச்சிறுக்கி' உனக்கெதுக்குடா கூட்டம் என்று சொல்லித்தான் அடிச்சானுக என்று சொல்லுறாங்க. அப்ப இதுக்கு வந்து சாதிச் சாயம் பூசுற எங்கிறதல்ல, உண்மைப்பிரச்சனை வந்து அதுதான். இப்ப கண்ணன் வந்து தனிப்பட்ட மனிசனாக மிகவும் நல்ல மனிசர்தான். ஆனா எல்லா இடத்திலயும் எல்லோரும் பார்ப்பான் பார்ப்பான் என்று சொல்வது மிக வருத்தத் துக்குரிய விடயந்தான். ஆனால் அதில் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மை இருக்கு என்னவென்டு சொன்னா இந்த பார்ப்பனியத்தின் தாக்கம் அவ்வளவு தூரம் இருக்கிறது. அந்தத் தாக்கத்தில் இருந்துதான் அந்த எதிர்ப்பு எழுகிறது. அதவந்து நாங்க மறுக்கேலாது. அப்ப தலித்துகளாக அடக்கப் படும் மக்களிடம் அப்படித்தான் அந்த உணர்ச்சி வரும் என்டு நான் நினைக்கிறன்.

**முரளி:** "அழகலிங்கத்துக்கு நான் நன்றி சொல்லவேணும். ஏனென்றால் அவரின்ர கழிவிரக்கம். அவருக்கு படம் பார்த்தவுடனே கூடக்கழிவிரக்கம் வந்திட்டுது. "சரவணன்ர ஸ்ரேற்மென்ர" ஒருத்தருமே விளங்கிக் கொள்ளல்ல போலிருக்கு."

**ஸ்ராலின்:** "இன்று அசோக் சாதிச் சங்கங்கள் என்று குறிப்பிட்டது தொடர்பாக கதைக்கலாம் என்று நினைக்கிறன். இந்த திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்றவர்களுடைய கட்சிகள் வரும்வரைக்கும் இந்த தலித் அரசியல் பற்றி நாம் இவ்வளவுதூரம் அக்கறை கொண்டோமா? இந்தப் படத்தில் ஒரு மனிதன் சொல்கிறான் 'நான் என்னுடைய உரிமையைக் கேட்கும்போதுதான் என்னை வந்து அடிக்கிறான்' என அவன் தன் உரிமையைக் கேட்பதற்கும் அந்த ஊர்வலத்தை நடத்தவும் கிருஷ்ணசாமி அங்கு தேவை. திருமாவளவன்மீதோ/கிருஷ்ணசாமிமீதோ நமக்கு ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் தலித்துகள் தங்கள் வழியில் தங்கள் அரசியலைத் தெரிந்து கொண்டு தங்களுக்கு நம்பிக்கை தரக்கூடியவர்களுடன் போய் என்றோ ஒருநாள் தங்கள் அரசியலைக் கண்டு பிடிப்பார்கள். மற்றய தலித் அல்லாத ஓர் தமிழனால் அதற்கு ஐடியாச் சொல்வதற்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை. அவன் தமிழனாய் இருக்கும் வரை அந்தப் பக்குவம் போதாது."

**ரஞ்சினி:** "ஒரு மனிதத் தன்மை இல்லாம சாதி குறைஞ்ச என்ற காரணத்தைக் காட்டி ஒரு குழந்தையைத் தூக்கி ஆத்தில போடுகினம். எத்தனையோ பேர அடிச்சுக் கொலுறாங்க. இதில இருந்து பார்க்கத் தெரியுது சாதியின்ர கொடும. நிதி சேர்த்து அனுப்புற பற்றி பேசினோம். இத இதற்குச் செய்யலாம். ஆனா இனி நடக்கப்போற படுகொலைய நாம எப்படி தடுக்கப்போறம்."

**இறுதியாக கற்சுறா:** "இங்கேவந்து நிதி சேகரிப்பு சம்பந்தமா கதைச்சாங்க. இதவிட இங்கு எல்லோரும் கட்டிப்பிடிச்சிற்று அழுதிற்றுப் போகலாம்." என்று தலித் அரசியலை மறுதலித்து கழிவிரக்கம் கொள்வோர் மீது தன் விமர்சனத்தை முன்வைத்தார்.

இறுதியில் அடுத்த இலக்கியச் சந்திப்பு நடத்துவதற்கான பேச்சு ஆரம்பித்தவேளை இடையே குறுக்கிட்ட கற்சுறா அதற்கு முன்பாக இந்த சந்திப்பில் பேசப்பட இருந்த ர.'.பேலின் ஒரு தலைப்பு ஒழுங் கமைப்பாளர்களால் வெட்டப் பட்டது குறித்து கேள்வி எழுப்பினார். ஆரம்பத்தில் அதை சாக்குப் போக்குச்சொல்லி பூசி மெழுக அழகலிங்கம், பரா, சிவராசா போன்றோர் முயற்சித்தனர். புஸ்பராஜா குறுக் கிட்டு அமைப்புக் குழு வினர் தலைப்புக் குறித்து பிரச்சனை கொண்டிருந்தமை, அதை நீக்க முயற்சித்தமை என்பவற்றை இட்டு தான் அறிந்திருந்ததையும் சொன்னார். மேலும் அமைப்புக் குழுவினரின் மேற்படி செயலை தான் வருத்தத்துடன் கண்டிப்பதாகக் கூறினார். இது குறித்து விஜி, ஸ்ராலின், அசோக் போன்றோர் அமைப்புக் குழுவினரை நோக்கி தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர்.


சிவராசா

இறுதியாக தங்களது நடைமுறை செயற்பாடுகளில் மேற்படி பிழைகள் ஏற்படுவது சகஜம் என்றும் காரணம் பலத்த நெருக்கடி களுக்கு மத்தியில் இச்சந்திப்பினை கூட்டு வதாகவும் இம்முறையும்கூட "எக்ஸில்" வெளியீடா கிய "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" வெளியிடு வதற்கு வாய்ப்பு வழங்குவதை எதிர்த்து "உயிர்நிழல்" கலைச்செல்வன் ரெலிபோனில் மிரட்டியதாக ரகசிய மிரட்டல்களை அம்பலப் படுத்தினார்கள். எப்படியோ பல்வித நெருக்கடிகளுக்கு மத்தியிலும், மிரட்டல்களுக்கு அஞ்சாமலும் இரண்டு நாட்களும் இலக்கியச் சந்திப்பு அமர்வுகள் சிறப்பாக நடக்க சந்திப்புக் குழுவினரும் சகதோழர்களும் செய்த பணி சிறப்பானது.

புகலிடத்தில் வெளிவருகின்ற எத்தனையோ சிறுசஞ்சிகைகள் குறித்த விமர்சனங்களை அண்மைக்கால நிகழ்வுகளில் காணமுடியவில்லை. அடுத்த இலக்கியச் சந்திப்பில்?...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# வெளியீட்டு நிகழ்வு. பாரிஸ்

## காலம்: 23/07/00

நாதன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்ற இவ் வெளியீட்டு விழாவில் ஆரம்ப உரையை நிகழ்த்திய கலாமோகன். புகலிடத்திலே போர் எதிர்ப்புப் படைப்புகள் அவ்வப்போது தோன்றியுள்ளன. சக்கரவர்த்தியின் படைப்பியக்கம்கூட போர் எதிர்ப்பையே தனது பிரதான கருப்பொருளாகக் கொண்டது. போர் எதிர்ப்பையே மையப் பொருளாகக் கொண்ட முழுமையான சிறுகதைத் தொகுப்பாக இந்த யுத்தத் தின் இரண்டாம் பாகம் தன்னை புகலிடத்தில் இனம் காட்டுகிறது. சக்கரவர்த்தி போன்ற துணிச்சலும் நேர்மையும் கொண்ட படைப் பாளிகளுக்கு எக்ஸில் வழங்கும் காத்திரமான காணிக்கையாகவே இத்தொகுப்பு முயற்சியை நான் கருதுகிறேன் என தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் பல படைப்பாளிகள் இலகுவாகத் தொட்ட விடயங்களை சக்கரவர்த்தி கொஞ்சம் காரமாகவே தொட்டுள்ளார். குறிப்பாக வட இலங்கையில் இஸ்லாமியர்கள் வெளியேற்றப்பட்டமை, அவர்களின் அவஸ்தைகள் போன்றவை பற்றி தீவிரமாகவே எழுதியுள்ளார். இங்கே தான் இவரது எழுத்தியக்கம் முகமூடி போடாததொன்றாகின்றது.

அடுத்து உரையாற்றிய அரவிந் அப்பாத்துரை ஓர் ஆழமான கருத்துரையை வழங்கினார். பண்டைய காலம் தொட்டு புகலிடம் என்பது தாய் மொழிக்கு செல்வம் சேர்க்கும் ஒன் றாக செயற்பட்டு வந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் உலகின் மாபெரும் இலக்கியங்களில் பெரும்பாலானவை புகலிடங்களில் படைக்கப்பட்டவையே. இவ்வகையில் சக்கரவர்த்தி என்கின்ற படைப்பாளியின் ஓர்மம், படைப்புத்திறன் என்பவற்றைப் பாராட்டாமல் இவரது இலக்கியத்தை விமர்சிக்க முடியாது. போரில் ஏற்படும் சமூகவியல் மாற்றங்களை விபரிக்கும் ரீதியில் இவரது படைப்புகள் காணப்படுகின்றமை ஓர் முக்கிய விடய மாகும் எனக் கூறிதொடர்ந்து தொகுப்பிலுள்ள சிறுகதைகள் குறித்த தனது விமர்சனங்களை முன்வைத்தார்.



கீழ்கரவைப்பென்னையன், சண், செல்வி செல்லத்துரை, புதுநகர் செல்லத்துரை, அமீன் முகமட், அப்பாத்துரை, அஸ்மி, பாஸ்கர்

இதனைத் தொடர்ந்து மோகன், தேவதாஸ், ஷோபாசக்தி, கீழ்கரவைப் பொன்னையன், கற்சுறா, விஜி, எம்.ஆர்.ஸ்ராலின் என்று பலரும் சிறுகதைகள் குறித்த விமர்சனங்களை முன்வைத்து விவாதத்தில் ஈடுபட்டனர். சுகன் என்பவர் இத்தொகுப்புக் குறித்து தனது கருத்துக்களை முன்வைக்கையில் சிறுகதை வடிவங்கள் குறித்தும், மொழியின் பாசிசத் தன்மை பற்றியும் மட்டுமே திரும்பத் திரும்ப பேசினார். இதனூடாக சக்கரவர்த்தியின் எழுத்தாளுமையையோ, அவரது சிறுகதைகளில் உள்ள அரசியல் கூறுகளையோ கண்டுகொள்ள மறுத்தார். போருக்கும், யாழ்மையவாத ஆதிக்க பண்பாட்டு கூறுகளுக்கும் எதிரான சக்கரவர்த்தியின் கலகக் குரல்களை மறுதலிக்கும் தொனியே இவரது பேச்சில் இழையோடியது.

தில்லை சிறுகதை குறித்து கருத்துச் சொல்கையில் புகலிடத்தில் முக்கிய படைப்பாளிகளில் ஒருவரான சக்கரவர்த்தியின் இக்கதைகளுள் ஒப்பீட்டு ரீதியாக ஆரம்ப கால கதைகள் குறிப்பாக “நானும் ஒகஸ்டினாவும் ஒரு பந்தயக் குதிரை”யும் என்கின்ற கதையில் இருந்த இலக்கியத் தரம் அண்மைக்காலக் கதைகளில் காணக்கிடைக்கவில்லை. இது குறித்து சக்கரவர்த்தி கவனம் செலுத்தவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனோ, கலாமோகன், பிறிஜிட், ஷோபசக்தி, ரதன், அழகிரி

"அம் மா" ஆசிரியர் மனோ கருத்துரைக்கையில் "ஆடு புலி புல்லுக் கட்டு" என்கின்ற கதையில் ஒரு தற்கொலைப் போராளியின் மனச்சாட்சி பேசுவதாக அதாவது நாளை குண்டு வெடித்தபின் நடக்கப்போகும் நிகழ்வு களை சித்தரித்த சக்கரவர்த்தி அவன் கிடப்பான், இவன் கிடப்பான், அந்தக் கடைக்காரன், பிச்சைக்காரன் எல்லோரையும் சொல்கிறார். ஒரு பெண்கூட வரவில்லையே ஏன்? அதுமட்டுமன்றி "நீங்கள் அறிந்ததுண்டா பேனா கூட சரியாகப் பிடிக்கத் தெரியாத என் கைகளில் துப்பாக்கிகள் திணிக்கப் பட்டதை" அப்படியெண்டால் பள்ளிக்கூடம் போய் படியாத எல்லோரும் சமூகத்துக்கு உதவாதவர்கள் என்ற கருத்தா? எனக் கேள்வி அனுப்பினார்.

இறுதியாக உரையாற்றிய தோழர் அழகிரி அந்தோணிப்பிள்ளை தனது உரையில் எங்களுடைய நாட்டுமக்களுடைய எதிர்காலம் சம்பந்தமான ஒரு போக்கில் இன்றைக்கு இக்கூட்டத்தில் கலந்து கொள்வதென்பது மிக முக்கியமான விஷயம். காரணம் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் பயமுறுத்தலுக்குள்ளாகும் இன்றைய தமிழ்ச் சூழலில் இப்படியான கதைகளை எழுதுவதோ அல்லது அது பற்றிக் கதைப்பதோ அதிகாரத்தையும் அராஜகத்தையும் எதிர்த்து உடைத்துக் கொண்டு செல்வதற்கான ஒரு முயற்சியாகும். இன்றைய காலகட்டத்தில் எவருமே செய்யமுடியாத இந்தப் பணியை எக்ஸில் நிறுவனத்தினர் செய்திருக்கின்றனர். இத்தகைய முயற்சிகள்தான் அனைத்து மக்களின் விடுதலைக்குமான முக்கிய தேவையாகும் எனக் கூறினார்.



## வெளியீட்டு நிகழ்வு - கனடா

**காலம்: 09/07/00**

கனடா இலக்கிய அகவி வட்டத்தினர் சார்பில் சக்கரவர்த்தியின் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. எக்ஸில் வெளியீடான யுத்தத்தின் இரண்டாம் பாகம் எனும் மேற்படி தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வுக்கு கவிஞர் சேரன் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் ஒரு கவிஞனே சிறுகதையாளனாகவும் இருப்பதுதான் சக்கரவர்த்தியின் படைப்புகள் வெற்றியீட்டுவதற்கான அடிப்படைக்காரணமாகும் என்று குறிப்பிட்டார். அவரது அறிமுக உரையைத் தொடர்ந்து சிறுகதைகள் குறித்து கருத்துரைத்த திரு ராஜரெட்ணம் கதைசொல்லும் உத்தியிலும் மக்களின் பேச்சு மொழியை கதையாக்குவதிலும் பல கதைகள் வெற்றி பெற்றிருந்தாலும், சில கதைகளில் வரும் சம்பவங்கள் சோனகர் சார்பாக வலிந்து எழுதப்பட்டிருப்பதாகத்



டி.பி.ஜெயராஜ், ராஜரெட்ணம், நாகேஸ்வரி, செல்வராஜகோபால்/ ராஜரெட்ணம், சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்

தெரிவதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு ஆடு புலி புல்லுக்கட்டு என்கின்ற கதையை மார்க்ஸிம் கோர்க்கியின் READER என்ற கதையுடன் ஒப்பிட்டுப் சிலாகித்தார். திருமதி நாகேஸ்வரி தனது கருத்துகளைக் கூறுகையில் குறித்த கதையின் சோனகர் சார்பாக வலிந்து எழுதப் பட்டு இருப்பது போல் உங்களுக்குத் தெரியலாம் உண்மைதான். சில உண்மைகளை நம்ப முடியாதுதான். ரெலோ இயக்கப் பெடியன்களை புலிகள் ரூமுக்குள் அடைத்து குண்டு போட்டு தொகை தொகையாக கொன்றுவிட்டு வந்தபோது எங்கட அண்டைச் சனங்கள்தான் புலிகளுக்கு கொக்கக் கோலா உடைத்துக் கொடுத்தவ இத நான் கொழும்பில் வந்து சொன்னபோது யாரும் நம்பவில்லை. நம்பவும் முடியாதுதான். காரணம் உண்மைகள் சிலவேளை நாம் எண்ணுவதைவிட மோசமாகவும் அதிகமாகவும் இருக்கின்றது என சில அனுபவங்களை விவரித்தார். இவரது கல்லூரிக்கறை அற்ற இயல்பான பேச்சு கூட்டத்தினர் மத்தியில் பலத்த வரவேற்புப்பெற்றது.

மட்டக்களப்பில் பிறந்து யாழ்ப்பாணத்தில் சிலகாலம் வாழ்ந்ததுவும் யுத்த சூழலில் அவர் பட்ட அனுபவங்களும் சக்கரவர்த்தியின் எழுத்துகளுக்கு நிறைந்த தாக்கத்தைக் கொடுக்கின்றது என டி.பி.ஜெயராஜ் தனதுரையில் தெரிவித்தார். ஈழத்து பூராடனார் அவர்களும் கலந்து தனது கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. சுமார் 100பேர் வரை கலந்துகொண்ட இந்த நிகழ்வு ரொறின்ரோ நகரில் யூலை 9 சனி மாலை இடம்பெற்றது.



# ⏩வெளியீட்டு நிகழ்வு - ஜேர்மனி

## காலம்: 23/07/00

ஸ்ருட்காட்டில் நடைபெற்ற 26 வது இலக்கியச் சந்திப்பில் எக்ஸில் வெளியீடான "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" வெளியீட்டு வைக்கப்பட்டது.

சபாலிங்கம் கொலையை அடுத்து புகலிட இலக்கியத்தின் முக்கிய குரலாய் ஒலித்த இலங்கை அரசியலின் மாற்றுக் கருத்துக்களுக்கான சூழல் புகலிடத்திலும் மறுக்கப்பட்டது. பல சஞ்சிகைகள் நிறுத்தப்பட்டன அல்லது சமரசம் செய்து கொண்டன. இந்நிலையில் மீண்டும் எந்தக் கருத்துக்கும் மதிப்பளிப்போம் என்ற குரலுடன் மாற்றுக் கருத்துகளுக்கான குரலாக எமது எக்ஸில் பத்திரிகையினை ஆரம்பித்தோம். அந்த வழியில் எமது வெளியீடுகளும் ஆதிக்க பண்பாடுகளுக்கு எதிரான தொனிப்பொருளைக் கொண்டன. அவ்வகையில் யுத்தமறுப்பை கருப்பொருளாகக் கொண்ட இத்தொகுப்பினை பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் வெளியிட்டு வைக்கிறோம் எனக்கூறி இத் தொகுப்பு வெளியில் கொண்டு வருவதற்கு தங்களுடன் சேர்ந்து உழைத்த 'யாதுமாகி' தோழர்களுக்கும் நன்றியைத் தெரிவித்தார்கள்.



எம்.ஆர்.ஸ்ராலின், கற்சுறா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பகுதி-3**

"உடலரசியல்" எனும் இக்கட்டுரையின் 1ம் பகுதியான "மொழி எந்திரங்கள்" "இனியும் சூல்கொள்" (23வது இலக்கியச் சந்திப்பு மலர்) தொகுப்பில் பிரசுரமாகியிருந்தது அதன் தொடர் பகுதிகள் எக்ஸிலில் தொடர்ந்து வெளிவரும்.

# "மதிப்புருவாக்க எந்திரங்கள்."

உடல் அரசியல் ஒரு உடல் எப்படி மொழியில் வேர்கொள்கிறது என்பதை படிப்பதும், நவீன சமூகமாக அறியப்பட்டிருக்கும் இன்றைய அமைப்பில் மொழியின் பாசிசமாதலை புரிந்து கொள்வதும், அதன் வேர்களை வெட்டி எறிவதும்தான். ஆக, முதலில் மொழியின் அதிகார குணத்தையும், அது பேச்சின் வழியாக என்னவாக செயல்படுகிறது என்பதையும் புரிந்து கொள்வது அவசியம். அதனால், உன்னை மீண்டும், முயற்சியில் சற்றும் மனந்தளராமல், மொழியின் புதிர்ப் பாதையிலேயே அழைத்துச் செல்கிறேன். புதுமைபித்தனின் அசரீரிக் குரலால், மொழியின் வரலாற்றிற்குள் நுழைந்து காலத்தில் பின்னோக்கிச் சென்று, தமிழின் 'கபாடபுரமும், தென்மதுரையும்' கடல்கோள்களால் அழிந்ததைப் பார்க்கும் வாய்ப்பற்ற உடலாகிப்போன நம்மால், பல்வேறு மூதாதைகளின் தடங்களைப் பற்றி இயங்கி மொழியை இப்படியும், அப்படியுமாக வளைத்தும், கிளைத்தும் ஏதேனும் ஒரு விளையாட்டாக மட்டுமே நடத்திக் கொண்டிருக்க முடியும்.

## குறிப்புரை 13. 'மொழி'-எனும் போராட்டக்களம்.

*மொழி இலக்கணத்தின் வரியாக, பேச்சு செயலில் ஈடுபடும் ரெண்டு உடல்களுக்கான இடத்தை (place) நிர்ணயித்துத் தருகிறது. இவ்வாறு இடத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கான போராட்டம் பேச்சின் (discourse) மூலம் நிகழ்த்தப்படும்போது இரு உடல்களுக்கிடையிலான அதிகாரமானது செயல்படத் துவங்குகிறது.*

சமூக அமைப்பில் ஒரு உடல் தனது இடத்தை நிர்ணயித்துக் கொள்வதன் மூலமே, தனக்கான இருத்தலைப் பெறுகிறது. சமூக அமைப்பு மொழியின் விளைபொருளாதலால், இவ்விட நிர்ணயம் பேச்சின் மூலம் உருவாக்கப்படுகிறது. ஆக பேச்சு சமூக அமைப்பில் ஒரு உடல் தனக்காக இடத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கான போராட்டக் களமாக (battle field) அமைகிறது. அதாவது, பேசும் உடல்களின் இருத்தல் ரீதியான மதிப்புருவாக்க போராட்டமாக அமைகிறது. உடல்கள் சமூகத்தில் தங்களை நிர்ணயித்துக் கொள்ள சமூக மதிப்பு என்கிற அளவையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இம்மதிப்புகள் மூலமே, சமுகத்திற்கு தேவையான ஆற்றல் பிழிந்தெடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒருவகையில் சமூக இயக்கம் என்பதே இந்த ஆற்றலைப் பிழிந்தெடுப்பதற்கான ஒரு யுத்திதான். இதனை உனக்கு விளக்க சமூக பொருளியல் வலைப் பின்னலைப்பற்றி, எனக்கு தெரிந்தவற்றைக் கூறுகிறேன்.

சமூக அமைப்பின் சமநிலையைக் காக்கும் சமன்பாடுகள் ஒரு உடலின் ஆற்றல் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு என்பதான ஆற்றல் சுழற்சி வினைகளை கட்டுக்குள்வைத்து சமூக ஆற்றலை ஒற்றை மையத்தை நோக்கி பிரிந்தெடுப்பதன் மூலம் நிகழ்கிறது. உடலானது, உழைப்பின் மூலம் உற்பத்தி செய்தவற்றை, சமூக அமைப்பானது பெற்று பங்கீடு செய்கிறது. அப்பங்கீட்டை, நுகர்வின் மூலம் அதே உடலானது திரும்பப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருகிறது. அதாவது, திரும்ப உழைப்பில் ஈடுபடுவதற்கான உடலை மறுஉற்பத்தி செய்வதற்கானதாக, நுகர்தல் என்கிற செயல் நடைபெறுகிறது. உற்பத்தி-நுகர்வு-மறுஉற்பத்தி என்கிற சுழற்சியின் மூலம் உடலின் ஆற்றல் சுழற்சியானது நடைபெறுகிறது. இச் சுழற்சியை கண்காணித்து ஒழுங்குப்படுத்துவதே சமூக நிறுவனங்களின் அடிப்படைப் பணியாக இருக்கிறது.

அதாவது, உடலானது தனது உடலியல் ஆற்றலை உழைப்பின் மூலம் வெளியிட்டு, நுகர்வின் மூலம் திரும்பப் பெறுகிறது (இங்கு உழைப்பு என்பதை பொருள் உற்பத்தி மட்டுமின்றி கருத்து உள்ளிட்ட எல்லாவற்றிற்குமானதாகக் கொள்ளலாம்.). உழைப்பு உடல் வெளியிடும் ஆற்றலாகவும், நுகர்வு உடல் உள்வாங்கும் ஆற்றலாகவும் இருக்கிறது. இவ்விரு ஆற்றல்களையும் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக, அதாவது பொருளியலில் சுட்டப்படும் பயன் மதிப்பின் மீது, உருவாக்கப்படும் பரிவர்த்தனை மதிப்பிலேயே சமூகத்தின் இயக்கவியல் அடங்கியிருக்கிறது. சமச்சீரற்ற சமூகத்தில், வெளியிடப்படும் ஆற்றலைவிட, திரும்ப பெறும் ஆற்றல் குறைவாக இருப்பதால் உருவாகும் உபரி ஆற்றலானது, சமூக நிறுவனங்களுக்கான ஆதாரமாக அல்லது வாழ்விற்கானதாகப் பங்கிடப்படுகிறது.

இவ்வுபரி ஆற்றலை உறிஞ்சுவதற்காக மதிப்பு பற்றிய சொல்லாடல்கள் உருவாக்கப்படுகின்றன. மதிப்பிடுதல் பொருளிற்கான உபரி ஆற்றல்களை பங்கீடு செய்யும் வினையாக நிகழ்கிறது. மதிப்பீடு செய்தலே சமூகத்தின் முக்கிய வினைவடிவமாக செயல்படுத்தப்படுவதன் மூலம் இந்த உபரி பங்கீட்டு வினைகள் முற்றிலுமாக மறைக்கப்படுகின்றது. மதிப்புகளை உருவாக்கும் தொழில் நுட்பங்களாக அந்தந்த காலச் சமூக அமைப்புகளிலும், பல்வேறு நேரடியான, மறைமுகமான, பொதுநோக்கிலான நிறுவன வடிவங்கள் செயல்பட்டு வருகின்றன. இந் நிறுவனங்கள் மதிப்புகளை உருவாக்குவதும், இயக்குவதும், அவற்றைப் பரவலாக்குவதும், அதனை பரந்துபட்ட உடல்களின் மன அமைப்புகளாக[அ] வடித்தெடுப்பதுமாக இயக்கமடைகின்றன.

**(அ)** ஒவ்வொரு சமூகமும் அதற்கே உரிய தனித்துவமான மன அமைப்புகளை உருவாக்கிக் கொள்கிறது என்றோம். மன-அமைப்பு அடிப்படையில் ஒரு மொழி அமைப்பாகவும், மொழி மூளையின் சங்கேத-சிதைச் சங்கேத உயிர் வேதிம இயக்கத்துடன் (coding and de-coding of bio-chemical process)[அ-1] உறவு கொண்டும் இருப்பதால், ஒவ்வொரு சமூகமும் அதற்கேயுரிய உடலியல் ரீதியான மொழி அமைப்புகளைக் கொண்டதாக இருக்கிறது. இவ்வாறாக உடலின் அங்கீகரிக்கப்பட்ட உணர்வுகள் அனைத்தையும் மொழி வழியாக சமூக அமைப்பு தனது கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்கிறது[அ-2]. அதாவது; சிரிப்பதோ, அழுவதோ எல்லா சமூகத்திலும் ஒரே மாதிரி இருப்பதில்லை, அதன் சங்கேதம் உடலுக்குள் புரியம் வினையும், அது உருவாக்கும் நினைவும் வேறுபடுகிறது[அ-3]. இவ்வாறாகவே, மனித குலத்தின், ஒரு செல் உயிரியான அமீபாவிலிருந்து துவங்கி இன்றுவரையிலான, 'வரலாற்'றின் அரசியல் ஒரு உடலுக்குள் செயல்படுகிறது.

**(அ.1)** மொழி மூளையின் ஒரு தனிச்சிறப்பான செயல்பாடாகும். PET (Positron Emission Tomography) என்கிற கருவி கொண்டு மூளையின் மொழிச் செயல்பாடுகள் வரிக்கண்ணோட்டம் (scan) இடப்பட்டு பல முக்கிய முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. '(ஜப்பானிய, போலிஷ், சுஹ்வைலி போன்ற) ஒவ்வொரு மொழி அமைப்பிற்கும்தக, அம்மொழிக்குள் புழங்கும் உடல்களின் மூளை அமைப்பானது ஒழுங்கமைக்கப்படுகிறது.' (Language:Rod Mengham:Fontanna Press:1993.P.18). மூளைக்குள் மொழி மையங்கள் (language centers) என்கிற பகுதிகள் உள்ளன என்றும் அவற்றை இயக்கி மொழியை ஏற்பதும், உருவாக்குவதும் 3 முக்கிய அமைப்புகளின் வழியாக நடைபெறுவதாக நரம்பு உடலியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது, மூளையின் Cortile (கேட்டல், படித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் போன்ற சிறப்பான நிகழ்வுகளுக்கான பகுதி), Subcortail (வர்க்கமான மற்றும் பழக்கமான நிகர்வுகளுக்கான பகுதி, உருவாக்கப் பட்ட 'கூற்று'-களை சேகரித்து வைக்கும் ஒன்றாகும்.) இவை இரண்டிற்கும்

# "உடலரசியல்"

— ஜமாலன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடையிலான mediation systems (மொழி மையங்களுக்கு மொழி உருவாக்கத்திற்கான உந்தங்களை கடத்தும் பகுதி) என்கிற மூன்று பகுதிகளில் மொழிச் செயலியக்கம் (உருவாக்கம்/பரிமாற்றம்) நடைபெறுகிறது. மூளையின் முன்பகுதி மொழிக்கான துவக்கத்தை அல்லது ஊக்கத்தை தந்து, குறிப்பான கருத்தாக்கங்களை நிர்வகித்து, மொழியியல் வினை வடிவங்களை (Verbal forms) செயல்படுத்துகிறது. மூளையின் பின்பகுதியின் தூண்டலால் மொழி காட்சிகளாக ஏற்கப்பட்டு (visual reception) பொதுவான கருத்தாக்கங்களுடன் இணைத்து பெயர்ச் சொல் (Noun forms) வடிவங்களாக உருவாக்கப்படுகிறது. மூளையின் மைய அமைப்பானது இந்த வினை மற்றும் பெயர் சொற்களை இணைத்து, மொழியை உருவாக்கி, கேட்டல், பேசுதல் போன்ற செயலுக்கு காரணமாக அமைகிறது. மூளையில் உள்ள மொழி மையங்களில் சில பகுதிகள் பழுதடைந்தால், மொழியில் செயலியக்கம் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன(அ-1.1). சான்றாக, 'மூளையின் இடது ஹெமிஸ்பியரில் பழுதடைந்த ஒருவர், உயிர் எழுத்துக்களின் பயன்பாட்டையும், முக்கியத்துவத்தையும் இழந்து, சொற்களை உயிரெழுத்தின்றி வெளிப்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன' (மேற்படி நூல்:பக்.26). சிலருக்கு சில எழுத்துக்கள் உச்சரிப்பில் கிடைக்காமல் அதற்கு பதிலாக வேறு எழுத்தை உச்சரிப்பது, இதன் விளைவேயாகும் (சிலர் தமிழில் 'ட'-விற்கு பதிலாக 'த'-வை உச்சரிப்பதைக் காணலாம். ஆனால், எகிப்தியர்கள் அரபியில் உள்ள 'ஜ' (ஜெத்தா) என்கிற உச்சரிப்பிற்கு பதிலாக 'க (gha)' (ஜெத்தா) என்று உச்சரிப்பதற்கு இதனை காரணமாக கருத முடியாது. இது அரபி மொழியானது, எகிப்தியர்களிடம் வேர் கொள்ளும்போது உருவான மாற்றமாக கருதத்தக்கது.) ஆக, மொழியமைப்பிற்கும், மூளையின் செயல் அமைப்பிற்கும் இடையே ஒரு உறவு இருப்பது, மொழியின் உடலியல் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துவதாக அமைகிறது. (விஞ்ஞானம் மட்டுமே மெய்யான ஆதாரம் என நீயும் சிலவேளை 'நவீன மதவாதி' போல செயல்படலாம் என்பதால்தான், அங்கங்கு இதுபோன்று விளக்கங்களை தேட வேண்டி உள்ளது.)

*(அ.1.1)* 'சீசோபெரணியா' (Schizophernia)(அ-1.1.1) எனும் பிளவாளுமைக்கு உட்பட்ட ஒரு உடலானது, சிந்தனைக்கும், யதார்த்தத்திற்கும் இடையிலான உறவின் இணைவின்மையால், தனக்குள் ஒரு அக யதார்த்தத்தை (psychical reality) உருவாக்கி அதற்குள் வாழத்தலைப்படுகிறது. யதார்த்த உலகு அவ்வுடலிற்குள், பிளவுபட்டு, அதன் அக யதார்த்த புனைவுகளாக சங்கேதப்படுத்தப்படுகிறது. இவ்வாறு ஒரு புனைவான (phantasized) உலகிற்குள் வாழும் அவ்வுடலின் மொழிச்செயல், மொழிச் செயலின் விதிமுறைகளுக்குள் இயங்கி உருவாகும் யதார்த்தம் பற்றிய 'இயல்பான' புனைவுகளுக்கு மாறாக, தனக்குள் உருவாக்கப்படும் புனைவுகளுக்குள் வாழ்ந்து, அவற்றை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அவ்வுடலின் 'இயல்பான' ஆளுமை பிளவுபட்டு, உலகுபற்றி தனக்குள் 'விசித்திரமான' புனைவையும், அதனால் உருவமைக்கப்பட்ட ஆளுமையையும் கொண்டு இயங்குகிறது.

*(அ-1.1.1)* மனச்சிதைவு நிலைகளில் சீசோபெரணியா மற்றும் பரோணியா என இருவகைகள் உள்ளன. சீசோபெரணியா மனநிலை பின்நவீனத்துவ ஆய்வுமுறை புரட்சிகரமாக நமக்கு அடையாளம் காட்டிய ஒன்று என்கிறார்கள் பிரேம்:ரமேஸ் பிரேதன். 'புறப்பொருட்களும் அதன் இயக்கங்களும் கணந்தோறும் மாறிக் கொண்டிருக்கும் நிலையில் அவற்றினுள் தன் இருப்பைப் பொருத்தி ஒரு தொடர் மாற்றத்திற்குத் தன் சுயம்/மனம் ஆட்பட்டு, ஒன்றின் நீடித்த தன்மையற்றுக் கணந்தோறும் வெவ்வேறாய் வெளிப்பட்டு நிற்கும் நிலையே Schizophernia மனநிலையின் அடிப்படை. தனது நிலையான சுயம்/மனம் என்ற செயல்பாட்டு இயந்திரத்திற்கு இயைபாகவன்றிப் புறப்பொருட்களின் வடிவங்களும் அவற்றின் இயக்க வேகங்களும் மாறுபட்டு இயங்கும்போது அதன் போக்கில் அவற்றை ஏற்காமல் தனது தர்க்கத்திற்கு உட்படுத்த முயலும் போது, அவற்றின் பல்வேறுபட்ட இயக்கப் போக்கின் விதிகளை மறுத்து ஒற்றைத் தன்மையின் இலக்கணத்தை தான் உருவாக்குவதில் ஏற்படும் மனநிலையை Paranoia என வரையறுக்கலாம்.' ('மௌனிவகை எழுத்து மரபும் கதையழிப்பின் வன்முறையும்: பிரேம்:ரமேஸ் பிரேதன்:பக்.52:கதைசொல்லி). இவ் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரஞ்சு சிந்தனையாளர்களான தெல்லஸ்:கொத்தாரியால் முன்வைக்கப்படும் 'Schizolinguistics' என்கிற ஆய்வுமுறை குறித்து இறுதியில் பேசலாம்.

*(அ-2)* சான்றாக, கல்வி, இலக்கிய, மத நிறுவனங்கள்... போன்ற பொது நிறுவனங்களைச் சுட்டலாம். இவை 'மனிதவள மேம்பாடு' என்பதாக, சமூக உடல்களின் மதிப்புருவாக்கத்தை நிகழ்த்தி, அதனை சமூகக் கலாச்சாரமாக வடித்தெடுக்கின்றன. குறிப்பாகக் கூறினால், சமூகத்தில் நிலவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடலற்றதான 'தாய்'- என்கிற ஆணிய-பிம்பத்தின்(அ-2.1) அடியில் உருவாக்கப்பட்டிருக்கும் உயர் மதிப்பீடுகளைச் சுட்டலாம். பெண் உடலின் உபரி ஆற்றலை உறிஞ்சுவதற்காக, இம்மதிப்பீடு, இன்றுவரை ஆதிக்க தொழில் நுட்பமாக இயங்கி வருவது கண்கூடு.

**(அ-2.1)** 'தாய்' என்கிற பெண்ணிய பிம்பம் ஒன்று உள்ளது. அது தாய்வழிச் சமூகம் உருவாக்கிய, இயற்கையுடன் இயைந்த, வளமைப் பெருக்குடன்(அ-2.1.1) உறவுபடுத்தப்பட்ட ஒன்று. பெண்ணை ஆற்றல் மையமாகவும், சக்தியாகவும் கொண்டாடுவது. வள்ளலார் ராமலிங்கரால் முன்வைக்கப்பட்ட 'கருணை', பாரதி முன்வைக்கும் 'புதுமைப் பெண்' போன்றவற்றையும், பழந்-தமிழர்களின் 'கொற்றவை' வழிபாட்டையும், இந்திய தாந்ரீகர்களிடமும் நிலவிய 'சக்தி' வழிப்பாட்டையும், வைணவர்களின் 'பக்தி', சூ.'.பிகளின் 'புனிதக் காதல்' (divine love) ஆகியவற்றுடனும் இப்பிம்பத்தை இணைத்துக் காணலாம்.

**(அ-2.1.1)** இன்றுள்ள இனங்கள் தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழிச் சமூகமாக மாறிவந்தவையே. அதனால், எல்லா கலாச்சாரங்களிலும், பெண் உடல், நிலத்தின் பதிலியாக(அ-2.1.1.1) ஒரு கட்டத்தில் மாற்றப்பட்டு வந்துள்ளது. பெண் பற்றிய உருவகம் பேச்சின் வழியாக, அல்லது மொழியின் வினையாக நிலம் பற்றிய உருவகமாக மாற்றப்பட்டிருப்பதே, மொழியின் முதல் அதிகாரக்குணம் வெளிப்பட்ட நிலையாகக் கூறமுடியும். பெண்ணை இயற்கையாகவும், நிலமாகவும் உருவகப்படுத்தப்பட்ட நினைவிலிதளத்தின் விளைவே, ஆணாதிக்கத்தைக் கொண்ட அறிவியல் தொழில் நுட்பங்கள் எனலாம். அதாவது, அறிவியலும் பகுத்தறிவும் ஆண்மையச் சொல்லாடலாக இருப்பதால், அது இயற்கையை வெல்வதையே தனது உச்ச நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அரசு, சமூகம் ஆகியவற்றில் இத் தொழில் நுட்பம், நாடுகளை வெல்வதும், அடக்குவதாகவும்; சமூக வாழ்வில் பெண் உடலை பாலின்ப துய்ப்பின் களமாகவும், பெண்ணை வெறும் உடலற்ற கருத்துப் புனைவாகவும், அடிமையாகவும் வைத்துள்ளது. தத்துவம், உலகப் பார்வை ஆகியவற்றில் மேலைத்தேயம் வழிவந்த பகுத்தறிவை கொண்டிருப்பதால் , நம் சமூகங்களின் மாயப் புனைவுகளை சங்கேதப்படுத்திக் கொள்ளும் ஒரு உணர்வு தளத்தை இழந்துள்ளோம். அதனால்தான், நமது சமூகங்கள் ஒரு வெள்ளையனைப் போலவே நமக்கும் 'காட்டு மிராண்டிகளின் நாகரீகமற்ற சமூகமாக' தோன்றுகிறது(அ-2.1.1.2). அறிவுவாதத்தை அல்லது பகுத்தறிவை ஆண் மையச் சொல்லாடலாகக் கொண்டால், மாயப் புனைவுகளை பெண் மையச் சொல்லாடலாகக் கொள்ளலாம். (பேச்சை பெண்மையச் செயலாகவும், எழுத்தை ஆண் மையச் செயலாகவும் சுட்டிக்காட்டும் பூக்கோவின் கருத்துடன் (Order of Things:P.38) இதனை ஒப்பு நோக்கலாம்.) அறிவுவாத மொழியின் வேட்கை விரைப்பு நோக்கியதாகவும், வளர்ச்சியை மையமாகக் கொண்டதாகவும் இருக்கிறது. ஆனால், மாயப்புனைவுகளால் ஆன மொழியானது, எப்போழுதும் கிளைத்துக் கிடப்பதாகவும், தணிப்பைத் தருவதாகவும், வளர்ச்சியைவிட வாழ்விற்கான களிப்பை, கொண்டாட்டத்தை, வேட்கையைக் கொண்டதாக இருக்கிறது.

**(அ-2.1.1.1)** சைவசித்தாந்தம்(அ-2.1.1.1.1), குரான் மற்றும் மகாபாரதம் ஆகியவை பெண்ணை நிலத்துடன் உருவகப்படுத்தியே தங்களது எடுத்துரைப்புகளை (narration) நிகழ்த்துகின்றன. இம்மதங்கள் பெண் உடலை, நிலம் என்கிற ஆணிய துய்ப்புக்களமாகவும், இன வலிமையைக் கூட்டக்கூடிய 'வளமைப் பெருக்குடன்' (fertility) இணைபடுத்தியே தங்களது அடிப்படைகளைக் கொண்டிருப்பதால்தான், இவை பெண் அடிமை என்பதை தங்களது முக்கிய இயக்கவியலாக கொண்டுள்ளன எனலாம். அந்த வகையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட எல்லா மதங்களும் தங்களது அடிநாதமாக பெண் அடிமையையும், பெண் உடலை தங்களது செயல்பாட்டிற்கான ஒரு களமாகவும் (site) கொண்டுள்ளன எனலாம். பெண் உடலை வரைத்தோலாகக் கொண்டு அதன்மீதே தங்களது 'அறவியலை' எழுதி உள்ளன.

**(அ-2.1.1.1.1)** சிவாகமங்களில் நிலம் பற்றியும், நிலங்களை வகைப்படுத்துவது பற்றியும், நிலங்களை தேர்ந்தெடுப்பது, குடியமர்த்துவது என நிலத்தை பற்றிய சிந்தனைகள் காணப்படுகிறது. நிலத்தை உயிரினங்களுக்கு ஏற்ப 12 வகையாகவும், நிலத்தின் குணத்திற்கு ஏற்ப ஆறுவகையாகவும் பிரித்து, மக்கள் தேர்ந்தெடுப்பதற்கான, வீடுகட்டுவதற்கான முறைகளைப்பற்றி கூறப்படுகிறது. முதலில் குடியிருப்பு அமைக்க தேர்ந்த நிலத்தில் செய்யப்பட வேண்டிய 'பிரவேச பலி' என்கிற பூசையில், மந்திரிக்கப்பட்ட கும்பநீர் கொண்டு தெளிக்க வேண்டும் என்கின்றன ஆகமங்கள். கும்பம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை 'பெண்குறியின்' குறியீடாகக் கொண்டால், பெண்ணின் 'இந்திரியம்' தெளிக்கப்பட்டு நிலம் தூய்மைப்படுத்தப்படுவதன் மூலம், பெண்ணின் வளமைப் பெருக்குடன் ஆன தொடர்பை இவை காத்து வருவதை உணரலாம். (நிலம் சிவனின் வேர்வை நெற்றியில் உருவான அந்தகாசூரனை கொல்ல படைக்கப்பட்ட ஒரு பூதத்தினை கட்டி படுக்க வைத்த நிலையாக உருவகப்படுத்தப்படுகிறது ஆகமங்களில் (பக்.42:சைவ ஆகமங்கள் - ஒரு அறிமுகம்(ஆகமம்):டாக்டர் எஸ்.பி. சபாரத்தினம்: கழக வெளியிடு:மூன்றாம் பதிப்பு:1994). இந்நிலத்தில் தேவதைகள் வாசம் செய்வதால் 'வாஸ்து' எனப்படுகிறது. இதுவே 'வாஸ்து சாஸ்திரத்தின்' அடிப்படையாக கூறப்பட்டு, தேவதைகளின் இருப்பறிந்து நிலம் சதுரிக்கும் செயலாக இன்றுவரை நடைமுறையில் உள்ளது.)

(அ-2.1.1.2) 'கீழைத்தேயம்' (Oriental) என்கிற கருத்தாக்கத்தின் வரியாக 'மேலைத்தேயம்' (Western) என்கிற அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளதை எட்வர்ட் சைத் 'Orientalism' என்கிற நூலில் விளக்குகிறார். அறிவு கள்ளமற்றது அல்ல, அது அதிகாரத்தின் செயல்களத்துடன் உறவுடையது என்பதாக, மேற்கத்திய அறிவால், எப்படி கீழைத்தேயம் கட்டமைக்கப்பட்டது என்பதை, மேற்கத்திய வல்லுனர்களின் எழுத்துக்களில் இருந்து தருவிக்கிறது இந்நூல். 'காலணீய சமூகங்களில் பரிச்சயமான (familiar) 'ஐரோப்பிய, மேற்கு, நாம்' (European, the West, 'us') - களுக்கும் அந்நிய (strange) 'கீழைத்தேய, கிழக்கு, அவர்' (Orient, the East, 'them') - களுக்கும் இடையிலான ஒரு இருமை முரணியக்கம் கட்டமைக்கப்பட்டு, அதன் வழியாகவே நவீன அரசியல் பார்வைகள் உருவாக்கப்பட்டன. காலணீய மக்கள் பகுத்தறிவற்றவர்களாக, காட்டுமிராண்டிகளாக, உணர்ச்சிமிக்கவர்களாக, சோம்பேறிகளாக எடுத்துரைக்கப்பட்டு, அதனால் ஐரோப்பியர்கள் பகுத்தறிவானவர்களாகவும், நாகரீகமானவர்களாகவும், பாலியல் வேட்கைகளை கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும், கடின உழைப்பாளிகளாகவும்' (Edward Said:Orientalism:P.45-46:qt. from Colonialisn/Post-Colonialism:Ania Loomba:P.45) ஆன 'வெள்ளை அறிவு' அல்லது 'வெள்ளை மாயை' (white myth) உலக மக்களின் பொதுப் பார்வையாக உருவமைக்கப்பட்டது. 'கீழைத்தேயர்கள் இயக்கமற்றவர்களாக இருப்பதாகவும், அதனால் அவர்களுக்கு வளர்ச்சியை, வாழ்வை கையளிக்கக் கூடியவர்களாக ஐரோப்பியர்கள் தங்களைக் கருதிக்கொண்டார்கள். கீழைத்தேயத்தை பெண்மையாகவும், ஐரோப்பியத்தை ஆண்மையாகவும் கருதிக்கொண்டவர்கள் ஐரோப்பியர்கள்' என எட்வர்ட் சைத்தால் சுட்டிக் காட்டுப்படுகிறது (Orientalism-பற்றிய விமர்சனத்துடனான ஆய்விற்கு பார்க்க: Loomba:P.46-57). இன்றைய ஒவ்வொரு உடலுக்குள்ளும் பதிவுறுத்தப்பட்டிருக்கும் இவ்வரசியலின் விளைவாகவே, நிற, பால், இன, மத வெறிக்கான கதையாடல்கள் கட்டமைக்கப்பட்டு, அவை செயலாகவும் வடிவம் கொள்கிறது.

(அ-3) சான்றாக, மொழியின் தோற்றம்பற்றி சைவ ஆகமங்கள் - 'சுத்தமாயை என்பதன் முதல் தத்துவமான விந்து என்பது சிவபெருமானின் திருவருட் சக்தியால் அசைக்கப்படும்பொழுது நாதம் தோன்றுகிறது. அந்த நாதமே ஓங்காரம் என்றும் குடிலை என்றும் கூறப்பெறும். காரத்தினின்றும் அகரம் முதலான ஐம்பது எழுத்துக்களும் தோன்றும். ஒன்பது பிரிவுகளாக அமைந்துள்ள எழுத்துக்களால் சொற்களும் சொற்களால் சாத்திரங்களும் தோன்றும்.' (ஆகமம்:கிரணாகாமம்:11-ஆம் படலம்:பக்.13) என்று மொழியின் சப்த உருவாக்கம் பற்றியும், அவை சொற்களாகி, சாத்திரங்களானது பற்றியும் கூறுகிறது. சைவத்தில் மொழி என்பதே சாத்திரங்களுக்கானதுதான். ஆக, மொழி இறை தத்துவத்தை விளக்கப்படுத்துவதுதான். இதில் மொழியின் சப்த உருவாக்கம், விந்துவின் அசைவினால் உருவாகும் நாதம் என்பதாக குறிக்கப்படுவதையும், சதாசிவம் என்கிற சைவத்தின் மூல விசையான சிவனின் அருவுருவத் திருமேனியான 'லிங்கம்'[அ-3.1] என்பதில் பீடத்தை விந்தாகவும், லிங்கத்தை நாதமாகவும் கொண்ட கலவி அடிப்படையில் மொழியின் தோற்றம் விளக்கப்படுகிறது. இந்த 'வேத, ஆகம சாத்திரங்கள் படைப்புக் காலத்தில் நாத தத்துவத்தில் தோற்றம் கொண்டு, மகாபிரளயத்தின் போது தோன்றிய இடத்திலேயே சூக்கமமாக ஒடுங்குகின்றன. மீண்டும் படைப்புக்காலத்தில் தோன்றுகின்றன. இவற்றிற்கு தோற்றமும், ஒடுக்கமும் உண்டே தவிர அழிவு கிடையாது.' (ஆகமம்:பக்.-21) இதுவும் மொழிக்கும் இறைக்கும் உள்ள உறவு பற்றிய சித்திரமே. இந்த ஆகமங்கள் வரிவடிவைக் கொண்டிருந்தாலும், இது அடிப்படையில் நாத வடிவிலான மந்திரமாகவே[அ-3.2] இருக்கிறது. ஆக, ஒழுங்கற்றதான சப்தத்திற்கும் உடலியக்கத்திற்கும், உடல்களின் கலவை இயக்கத்திற்கும் உள்ள உறவையே இந்த நாத-விந்து[அ-3.3] ரூப சதாசிவ தத்துவம் விளக்குவதாகச் சொல்லலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(அ-3.1)* லிங்கம் என்பதை 'லிம் லயத்தையும் (ஒடுங்குவதையும்) கம் வெளிவருதலையும், குறிக்கும்.' (ஆகமம்:பக்.54) (இதுபோன்ற 'லிம்-கம் மொழிவிளையாட்டுக்கள்', மந்திரங்களின் ஒலிக்குறிப்பு விளக்கங்களிலும் காணக்கிடைக்கிறது.) இதிலும்கூட ஒடுங்கி வெளிவருதல், கலவியின் நினைவைக் கொண்டிருக்கிறது. சதாசிவம் தனது நினைப்பாற்றல் (சங்கல்பம்) மூலமே இந்த உலகை படைத்தார் என்கின்றன சைவ ஆகமங்கள். ஆக, நினைவாற்றல் பிம்பரூபமாக இருந்தாலும், அது வெளிப்படும் வடிவம் மொழியாகவே இருக்கிறது. மொழியின் படைப்பாற்றல் பற்றிய உருவக வினைக்கும், இந்த சைவ ஆகமங்களுக்கும், உடல்களின் கலவிக்கும் இடையில் உள் உறவு இருப்பதை உணரலாம். உடல்கள் பற்றியும் அவை வினைபடும் தன்மைகள் பற்றியும், ஆலயம் என்பதை சரீர தத்துவமாகவும், மனிதனின் உடற்கூற்றின் அடிப்படையில் ஆலய அமைப்பை (படுக்கை நிலையில் கிடத்தப்பட்ட ஒரு மனித உடல் பற்றிய உருவகமாக) விளக்குவதும், உடல்களை காரண சரீரம் (ஆணந்தமய கோசம்), கங்சுக சரீரம் (விஞ்ஞானமய கோசம்), குணசரீரம் (மனோமய கோசம்), சூக்கும சரீரம் (பிராணமய கோசம்), தூல சரீரம் (அன்னமய கோசம்) என்றும் இதனை அர்த்தமாகக் கொண்ட ஐந்து பிரகார அமைப்புகள் ஆலயத்தில் இருப்பதையும் விளக்கும்போது, சைவத்தில் உடல்பற்றிய சிந்தனை முக்கியமானதாக இருப்பதை உணரலாம். சைவ ஆலய வழிபாடு அருவமான உடலுக்குள் பிரவேசிப்பதான உணர்வலைகளுடன் ஒருமைப்படுத்தப்படுகிறது எனக் கூறமுடியும். சைவசித்தாந்தம் உடல்பற்றிய ஆய்விற்குள் வரலாற்றின் வழியாக இறக்கப்பட்டிருப்பதையே இவை காட்டுவதாகிறது. இதன் விளைவே, உடல் தூய்மை பேணும் உடல்களாக 'சைவ உடல்கள்' கட்டமைக்கப்பட்டு, அடிப்படையில் 'தூய்மை', 'புனிதம்' என்கிற பாசிச உடல் அமைப்பிற்கான வேர்கள் நடப்பட்டுள்ளன எனலாம்.

*(அ-3.2)* மந்திரம் 'ஜபம்' எனப்படும் சப்தங்களின் சங்கிலி வரிசைகளைக் கொண்டது. இதன் ஒவ்வொரு கண்ணியும் 'பீஜம்' (வேர்கள்) எனப்படும். சான்றாக, 'ஓம், ரீம்' என்பதில் 'ஓம்' ஒரு கண்ணி. இச் சப்தங்கள் உள்ளீடற்றவை (பொருளற்றவை) என்றாலும், இவை ஒருவகை உளவியல் அடிப்படையிலான 'குறிப்பான்களாக' செயல்படுகிறது எனலாம். அதாவது, பேச்சு மொழியற்ற மன அமைப்பிற்குள், இச் சப்தங்கள் ஒருவித உணர்வின் 'திறப்பாக' செயல்படக்கூடியவை. இம்மந்திரங்களின் கண்ணி ஒவ்வொன்றும் உருவாக்கும் சப்தலயம் உள்மனத்தில் ஒரு புனைவமைப்பை எழுப்பக் கூடியதாகும். மந்திரம் என்பதை 'ஒரு உளவியல் அனுபவத்திற்கான சுய-மனோவசியச் சுருக்கக்குறிப்பு' (autohypnotic shorthand for a psychological experience) என்றும் 'ஒவ்வொரு மந்திரமும், அதன் இசை லயத்துடன் ஒவ்வொரு பிம்பக்காட்சியை உருவாக்கக்கூடியதாக இருக்கிறது' என்றும் கூறுகிறார் காக்கர். (Sudir Kakkar, Indian Psyche:Shamans, Mystics and Doctors:P.172-174). தமிழ்ச் சித்தர்களும், தாந்ரீகர்களும் இந்த மந்திர பீஜங்களை, உடலின் இயக்கங்களுடன், அதாவது நாடிகளுடன் இணைத்தும், இவற்றை உச்சரிக்கும் போது, அந்த குறிப்பிட்ட நாடிகளை விரலால் தொட்டும், அதற்கான phantasize செய்யப்பட்ட பிம்ப உருக்களை, மனதிற்குள் தோற்றுவித்துக் கொள்வதின் மூலமே, இம்மந்திரங்கள் பலன் அளிக்கும் என்கிறார்கள் (சித்தர்:சித்தர் இலக்கியம்-முதல் பகுதி:மீ.ப.சோமு:பக்.201:அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு 1993:இரண்டாம் பதிப்பு). ஆதிச் சமூகங்களில், இந்தவகை சப்த உருவாக்கம், பொருட்களுடன் இணைக்கப்படுவதற்கு, அதாவது அர்த்தமாக உருவாவதற்கு, முன்பு ஒருவித நிகழ்வியல் பிம்பத்துடன் இணைக்கப்பட்டு, அச்சங்கிலிகள் உடைபட்டு, தனிப்பட்ட பொருட்களின் பெயர் அலகுகளாக மாற்றப்பட்டிருப்பதாக யூகிக்கலாம். ஆக, மொழி அர்த்தங்களுடன் மட்டுமின்றி, சப்தங்களுடனும், அது தரும் உணர்வுடனும், நினைவுடனும் இணைக்கப் பட்டதாகவே இருக்கிறது. இப்படியாகத்தான், இசை ஒரு உடலுக்குள் எழுப்பும் பரவசமும், அவ்வுடலின் நினைவுடன் உறவு கொண்டதாகவே இருக்கிறது. (இங்கு ரிச்சர்ட் வாக்னர் இசையை ரசித்து கேட்பான் ஹிட்லர் என சிலாகித்த தமிழ் 'கலைக் கோஷ்டியின்' எண்பதுகளின் இலக்கிய விவாதங்கள் நினைவிற்கு வருகிறது.) உடலிலிருந்து வெளிப்படும் எந்த பேச்சும், சப்தமும் தன்னளவில் உலகியல் உறவு கொண்டதாக இருக்கிறது.

*(அ-3.3)* 'உடம்பு உண்டாவதற்கு முன்புள்ள ஒரு நிலை விந்து நாதநிலை என்று சித்தர்களால் அழைக்கப்படுகிறது. விந்து என்றால் ஒளி என்று ஒரு பொருள். நாதம் என்றால் ஒலியாகும். இவை மனித உடம்பைச் சூழ்ந்து கொண்டு ஒரு தொம்பைக்கூடு போன்ற பரு உடலுக்கு ஒரு முழம் தள்ளி, உடம்பு முழுவதையும் சூழ்ந்து கொண்டு, ஆகாயக் கூறான நுண்வடிவத்தில் விளங்குவதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞானிகள் கண்டார்கள்.' 'நாதம் விந்து என்று அழைக்கப்படுகின்ற இந்தத் தூல சூக்கம ஒலி வடிவங்களே, படைப்புக்கு ஆதாரமாகவும் ஆரம்பமாகவும் விளங்குவதால், ஓம் என்ற பிரணவம்தான் உற்பத்தியின் மூலம் என்று, சித்தர் இலக்கியம் பேசுகிறது.' (சித்தர்:பக்.273) 'ஓசையும், ஒலியும் இந்த உலகத்தை தோற்றுவித்ததோடு அல்லாமல், இந்த உலகத்தின் இயக்கத்தையும் நடத்துகின்றன' (சித்தர்:பக்.271) சித்தர்கள் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்ததால்தான், மொழி உருவாக்க எந்திரமாக கருதி உடல் பற்றிய நுட்பங்களை காண்வதும், அதனை கட்டுப்படுத்தி, அதிலிருந்து ஆற்றலை பெறுவதுமான 'சித்தி'-கள் வழியாக உடல் பற்றிய வியக்கத்தக்க பல கருத்தாக்கங்களை கண்டுள்ளனர். சித்தர்கள் 'இறை'-பற்றி பேசுவதெல்லாம், அன்றைக்கான பொதுபுத்தியில் இருந்து 'இறை'- என்கிற கருத்தாக்கத்திற்கு எதிரான ஒரு இடையீடாகவே அமைந்துள்ளன எனலாம். அவர்கள் பயன்படுத்திய மொழியும் கூட குறிப்பு பொருட்களைக் கொண்டதாகவும், அவர்களது இயக்கம் ஒரு ரகசிய சமூக இயக்கமுமாகவே இருந்திருக்கிறது.

வரலாற்றுக் கட்டங்களாக அறியப்பட்டிருக்கும், சமூக அமைப்புகளில், நிலவுடைமைச் சமூகத்தை எடுத்துக் கொண்டால், மதிப்புகளை உருவாக்க மதம், இலக்கியம்.. இன்னபிறவற்றையும், முதலாளிய சமூக அமைப்பு கல்வி போன்ற நிறுவன அமைப்புகளையும்[ச] பயன்படுத்தி வந்திருப்பதையும், இன்றைய சமூக அமைப்புகள்வரை இத்தகைய மதிப்புருவாக்க உத்திகள் அழித்துவரும் உடலின் உபரி ஆற்றலையும், இவ்வாற்றல்கள் அதிகாரத்தின் உயிர்-வாழ் ஆற்றலாக செயல்படுவதையும் தினவாழ்வின்[ஆ] அனுபவங்களாக, அபத்தங்களாக அறிய முடிகிறது.

(ச) மதம், குடும்பம், கல்வி போன்ற நிறுவனங்கள், சமூகத்தின் ஆளும் வர்க்கத்தின் கருத்தியலை சமூக உடல்களில்பதிவுறுத்தி, ஆளும் வர்க்கத் தன்னிலைகளாக கட்டமைக்கிறது என்றும் அதனை கருத்துருவ அரசு எந்திரம் (Ideological State Apparatus) என்றும் கூறுவார் பிரஞ்சு மார்க்சியரான லூயிஸ் அல்தூஸர். தன்னிலைகள் பற்றிய நமது பேச்சில் இதனை விவரிக்க முயலலாம்.

**(ஆ)** தினவாழ்வு பொதுபுத்தியால் (common sense) கட்டமைக்கப்படுகிறது. இந்த பொதுப் புத்தி, ஆளும் வர்க்க கருத்தியல் மேலாண்மையினால் (hegomony) சமூகத்தில் பரவலாக்கப்பட்ட ஒன்று என்கிறார் இத்தாலிய மார்க்சியரான அந்தோணியோ கிராம்சி. கருத்தியல் மற்றும் தன்னிலைகள் உருவாக்கம் பற்றிய பேச்சில் இதனை உனக்கு விளக்க முயல்கிறேன். பொதுவாக தினவாழ்விற்கான காலம் உழைப்பு, ஓய்வு, தூக்கம் என்பதாக பிரிக்கப்பட்டுள்ளது. உழைப்பில் உடல் ஈடுபடும்போது, மனம் எந்திரமாகவும், ஓய்வில் தந்திரமாகவும்[ஆ-1], தூக்கத்தில் மந்திரமாகவும் செயல்படுகிறது. (இங்கு இச்சொற்கள் பொதுவான பொருளில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது) உழைப்பில் மனம் எந்திரகதியில், இயக்கமற்றதாக, உடல் ஒரே கட்டளைகளை நிறைவேற்றுவதாக இருக்கிறது. அதாவது, மொழியானது, ஒரே இயக்கத்திற்குள் திரும்ப, திரும்ப செயல்படுவதாக இருக்கிறது. ஓய்வில், உடலானது, உழைப்பிலிருந்து பலவிதமாகத் தப்பிச் செல்லும் தந்திரத்தை கடைப்பிடிக்கிறது. அதாவது, மனம் ஒரு விடுவிக்கப்பட்ட பரப்பில், தன்னிச்சையாக, அல்லது, மூளையின் கட்டளைப்பரப்பிற்கு உட்பட்ட சுதந்திர வெளியில் உலவுகிறது. மொழியானது தனது தந்திர வலையில் உடலை வீழ்த்தி, ஒன்றிலிருந்து ஒன்றாக தாவிச்செல்வதாக இருக்கிறது. இதற்கு பொழுதுபோக்கு சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் உருவாக்கும் பரப்பு முக்கியமானதாகின்றன[ஆ-2]. இதுவே, உடலானது மறந்துபோன ஒரு நிலை, அல்லது ஓய்வு எனப்படுகிறது. தூக்கத்தில் மனமானது, ஒருவித தவம் போன்ற இயக்கநிலையில் இருக்கிறது. அதாவது, மொழியானது, மந்திரமாகச் செயல்படுகிறது. இம்மந்திரம் உச்சமடையும்போது, அது கனவுகளாக வவடிம் கொள்கிறது எனலாம். மொழியை அதிகாரமானது மேலும், மேலும் எந்திரமாக, அதாவது, ஒருபடித்தானதாக, மாற்றும்போது உடலானது, உழைப்பைத் தவிர்த்த பிற நேரங்களிலும், தன்னை உழைப்பை நோக்கியதான எந்திரமாக்கிக் கொள்கிறது. ஆகவேதான், அதிகாரமானது, திரும்பத் திரும்ப, தனது ஊடகங்கள் மூலம், ஒரேபடித்தான, பல விஷயங்களை பரப்புவதும், அதன் வலைக்குள் உடல்களை வீழ்த்துவதுமான ஒரு இயக்கத்தை இடைவிடாது செய்து வருகிறது. இந்த அதிகார எதிர்ச் செயல்களாக கண்டடையப்பட்ட பிரதியியல் நுட்பமே நவீன இலக்கிய வடிவங்களின் மிதக்கும் குறிகள் (floating signs), மாயத்தன்மை, மையமற்ற புனைவு மற்றும் நாட்டார் கதையாடல் உத்திகள் போன்றவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**(ஆ-1)** 'தத்துவங்களிலும், மந்திரங்களிலும் அடங்கியுள்ள பொருள்களை விளக்கி கூறுவதாலும் (தன்-தனோதி) தன்னை அடைந்தவரைக் காப்பாற்றுவதாலும் (த்ரம்-த்ரானம்) இந்நூல் தந்திரம் எனப்படுகிறது.' (தந்திராவதார படலம்:ஆகமம்:பக்.11) சைவ ஆகமங்கள் தந்திரம் என்பதை ஒருவகை பிரதியாக்க யுத்தியாக கொண்டுள்ளன. திருமூலரின் திருமந்திரம், இந்த 'தந்திரங்களினை' விளக்கும் முகமாக புனையப் பட்ட நூலே. மேலே குறிப்பிட்ட தந்திரம், சைவம் கூறும் 'தந்திரம்' அல்ல, மாறாக ஜாலத் தன்மையுடன் உறவுடைய தந்திரம் என்கிற சொல்லாக்கமே.

**(ஆ-2)** சான்றாக, உடலானது தினவாழ்வில், என்ன செய்ய வேண்டும்? என்ன பேச வேண்டும்? எதை நோக்கி சிந்திக்க வேண்டும்? என அனைத்தும், அதிகாரத்தின் ஊடகங்கள் வழி தரப்பட்டு பெருக்கப் படுகிறது. தினவாழ்வில், நாம் எங்கு முட்டினாலும், இந்த மொழி வலையிலிருந்து, தப்ப முடியாததாக நமது உடல் மாட்டிக் கொள்கிறது. தினவாழ்வு, நீயும், நானும் நினைத்து வந்ததைப் போல யதேச்சையானது அல்ல, அது ஒருவித சமூக உற்பத்தி, அல்லது அதிகாரத்தை ஏற்கும் உடல்களுக்கான வாழ்நிலை. இந்த வாழ் நிலையிலிருந்து விலகிச் சென்றவையே மொழியின் தந்திர (கலை இலக்கியம்) மற்றும் மந்திரச் (மதங்கள்) செயல்பாடுகள். இவற்றின் தந்திர மற்றும் மந்திரத் தன்மைகள், எந்திரமாக மாற்றப்படும்போது, அதாவது ஒழுங்கமைப்பதாக மாறி, மன இறுக்கங்களை உருவாக்கும்போது, இவையே மிகப்பெரும் அதிகாரமாக மாறி விடுகின்றன. இதிலிருந்து விலகிச் செல்லும், பிறிதொரு மதமோ, உட்பிரிவோ முதலில், மதப் பிரதிகளை, ஒரு தந்திரமான மெழியால் மறு-உரை(ஆ-2.1) செய்வதன் மூலம், வேறுவிதமான சொல்லுதலை கட்டமைத்து, மத இறுக்கத்தில் சிக்கிய உடல்களை விடுவிக்க முயல்கின்றன.

தொடரும்...

## நன்றிகள்

| | |
|---|---|
| **ஜி.கே. எழுதிய மர்மநாவல்**<br>தமிழவன் (நாவல்)<br>பல்கலை பதிப்பகம்<br>36 தெற்கு சிவன் கோயில் தெரு<br>கோடம் பாக்கம், சென்னை-600024 | **பெண்ணியப் பார்வையில் திருக்குறள்**<br>(செ.கணேசலிங்கன்) (கட்டுரைத் தொகுதி)<br>குமரன் பப்பிளிகேசன்<br>3, மெயகை விநாயகர் தெரு<br>வடபழனி-சென்னை-600014, தமிழ்நாடு |
| **மகா வாக்கியம்**<br>பிரம்மராஜன் (கவிதைத் தொகுப்பு)<br>ஸ்நேகா<br>348 டி.டி.கே.சாலை<br>இராயப்பேட்டை, சென்னை - 600014 | **சாமக்கூத்து**<br>சுகன் - (கவிதை தொகுப்பு)<br>**சுந்தர சுகன்** - (14ம் ஆண்டு மலர்)<br>அம்மாவீடு<br>சி.46 இரண்டாம் தெரு, நகராட்சி குடியிருப்பு<br>தஞ்சாவூர் - 613007, தமிழ்நாடு |
| **பெண்ணே போற்றி**<br>எஸ்.நஸிறுதீன் - (சிறுகதைத் தொகுப்பு)<br>ரிபாயா மன்ஸில்<br>முஅத்தினார் வீதி, அக்கரைப்பற்று<br><br>**போஸ்ட் மார்ட்டம்**<br>எட்வார்ட் (கவிதை தொகுதி)<br>வானவில் வெளியீட்டகம்<br>பரணியறத்தலவிளை<br>களியக் காவிளை-629153, குமரி மாவட்டம்<br><br>**கண்ணீர் காதலன்**<br>இந்தியன் சமஸ் (கவிதைத்தொகுதி)<br>New Indian Publishers<br>47 Sanjeevi Street<br>Mannargudi-614001, Tamilnadu | **உடலே சவப்பெட்டியாக**<br>(பெண்களின் சிறுகதைகள்)<br>**தமிழன் வாழ்வும் வரலாறும்**<br>(கட்டுரைத் தொகுதி)<br>**எங்கள் வாழ்வும் எங்கள் தமிழும்**<br>(கட்டுரை தொகுப்பு)<br>**தண்ணீரும் கண்ணீரும்**<br>(கட்டுரை தொகுப்பு)<br>நிகழ்/நேயம்<br>123 காளிசுவர் நகர்<br>கோயம்புத்தூர்-6410009, தமிழ்நாடு |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பல்கேரியப் புனைவாளரான கிறிற்டோ பொய்ற்சேவ் புனைந்த 'லூ கொலனல் ஒய்ஸோ' எனும் நாடகப் பிரதியின் இணைப்பிரதியான இப்பிரதியில்**

**இதுவரை:**

பருத்தித்தீவு எனும் அநாதைத் தீவில் அமைந்திருக்கும் சிறிய புஸ்பம் மடத்தில் ஆறு மனநோயாளர்களும் இவர்களை பராமரிக்கும் ஓர் மருத்துவனும் யுத்த சூழல் காரணமாக புறஉலககோடு தொடர்புகள் துண்டிக்கப்பட்டு பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்திய அமைதி காக்கும் படையினர் விமானத்திலிருந்து தமது துருப்புக்களுக்காக வீசி எறிந்த ராணுவச் சீருடைகளும் உணவுப் பொருட்களும் இவர்களது இருப்பிடத்தில் இலக்குத்தவறி விழுகிறது. குண்டுச் சத்தங்கள் விமான முழக்கங்கள் - யுத்த சீருடைகள்...

மருத்துவ மனையில் அனுமதியானதில் இருந்து ஒரு வார்த்தை தன்னும் பேசாது ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்தவாறு இருந்த லெபனான் இப்போது பேச ஆரம்பிக்கிறான். தன்னை தோழர் குக்கூ என அழைக்கிறான். இராணுவ சீருடை தரித்து மற்ற நோயாளர்களை வழிநடத்த முயலுகிறான். அவர்களும் அவனுக்கு கட்டுப்பட ஆரம்பிக்கிறார்கள்.

VII

சிறியபுஸ்பம் மடத்தின் முற்றம்: காலை
அந்திராசி, செனகப்பு, அலங்காரரூபன், சத்தியகீர்த்தி அணிவகுப்பு நடைபயில்கிறார்கள். மருத்துவன் ஓர் ஓரமாக நின்று நடப்பவற்றை அவதானிக்கிறான்.

**லெபனான்:** ஈரடி முன்னால் ஓரடி பின்னால்... எமது ஒவ்வொரு காலடியும் வாழ்க்கையை நோக்கியது. மரணத்துக்கு வழிவிட்டு ஒதுங்கி, ஒரு புத்தகத்துக்காய், ஒரு கவிதைக்காய், ஒரு காதல் பாடலுக்காய், ஒரு ஆனந்தமான கனவுக்காய்

லெப்ற்... றைற்-
லெப்ற்... றைற்-
லெப்ற்... றைற்-

(அணியினர் கால்களை மாற்றி மாற்றி போட்டுக் கொண்டிருக்க லெபனான் தரையில் விழுந்து படுத்து அணியினரின் கால்களை கவனித்தவாறே லெப்ற்... றைற் சொல்லிக்கொண்டிருக்கிறான்.)

**பிரிஜிட்டும் ஷோபாசக்தியும்...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***அலங்காரரூபன்:*** எவ்வளவு அரசியல் தெளிவோட தோழர் குக்கூ கதைக்கிறார். ஒரு மகத்தான மனிதனோட நாங்கள் இவ்வளவு நாளும் சீவிச்சிருக்கிறம்.

***செனகப்பு:*** வருசக்கணக்கா அவர் ஒரு சொல் பேசினதில்ல.. கதைக்கயில்ல... ஆனால் ஒரு முடிவோடதான் யன்னலுக்குள்ளால பார்த்துக் கொண்டிருந்தவர். அவர் ஒரு தீர்க்கதரிசிதான்.

***அலங்காரரூபன்:*** அவர் பி.எல். ஓவில பயிற்சி பெற்றிருக்கிறார். நான் நினைக்கிறன் காஸா பள்ளத்தாக்கையே காய் கதி கலங்க வைச்சிருக்கும்.

***அந்திராசி:*** ஒண்டைக் கவனிச்சீங்களா? அவருக்கு முன்னால டொக்ரர் கூட ஒண்டும் கதைக்கிறதில்ல.

***செனகப்பு:*** திம்புவுக்கே போய் கதைச்சிற்று வந்த ஆளுக்கு முன்னால டொக்ரர் என்னத்தைக் கதைக்கிறது?

***அலங்காரரூபன்:*** திம்பு?

***செனகப்பு:*** ஓம். திம்பு சமாதான பேச்சுவார்த்தைக்கு அவரின்ர இயக்கத்தின்ர பிரதிநிதிகள் குழுவுக்கு அவர்தான் தலைமை தாங்கினவர்.

***அலங்காரரூபன்:*** இது உனக்கு எப்பிடித் தெரியும்?

***செனகப்பு:*** அவர் எனக்குச் சொன்னவர்.

***சத்யகீர்த்தி:*** செனகப்பு பொய் சொல்லுறான். தோழர் குக்கூ இவனோட ஒருக்காலும் கதைக்கயில்ல.

***செனகப்பு:*** பொத்தடா வாயை. இல்லாட்டி உன்னை நசிச்சுக் கொல்லுவன்.

***லெபனான்:*** (தரையில் படுத்தவாறே) :.போர்வர்ட் மார்ச்... லெப்ற்... றைற்...

***அந்திராசி:*** (நடந்துகொண்டே) இப்பதான் ரியூன் சரியா வருது.

***அலங்காரரூபன்:*** (நடந்துகொண்டே) இப்பதான் நாங்கள் உண்மையான பைத்தியம்.
(மருத்துவன் நிகழ் மையத்துக்கு வருகிறான்) தோழர் டொக்ரர் வாறேர்.

***லெபனான்:*** அற்றேன்சன் (நோயாளிகள் விறைப்பாய் நிற்கின்றனர்.) வாங்க டொக்ரர். (சல்யூட் செய்கிறான்.)

***மருத்துவன்:*** (ஒரு அரை சல்யூட் செய்கிறான்.) எல்லாரும் எப்பிடியிருக்கிறீங்கள்? ஆருக்காவது சுகமில்லையா?

***அலங்காரரூபன்:*** எனக்கு நல்ல சுகம் டொக்ரர்.

***மருத்துவன்:*** அந்திராசி?

***அந்திராசி:*** எல்லாம் சுகம் டொக்ரர்.

***மருத்துவன்:*** சக்யகீர்த்தி?

***சத்யகீர்த்தி:*** (இரு தடவைகள் துள்ளிக் குதிக்கிறான்.) நல்ல சுகம் டொக்ரர்.

***மருத்துவன்:*** நீங்கள் இப்ப சின்ன ஆளாய் மாறுறது இல்லையோ?

***சத்யகீர்த்தி:*** நான் இராணுவத்தில நல்ல சந்தோசமாய் இருக்கிறன் டொக்ரர்.

***லெபனான்:*** நன்றி டொக்ரர். உங்களால இந்த நாடு பெருமைப்படுது. எபவுர்ட் ரேன்- லெப்ற்... றைற்... (நோயாளிகள் திரும்பி நடக்கிறார்கள்.)

***மருத்துவன்:*** (தனக்குள்) எனக்கு இப்ப லெபனானின்ர நோய் தெளிவாய் விளங்குது. அது ஸிஹிசோபிரேனியாவிலயிருந்து பரநோயாவா பரிணமிச்சிருக்கு. இதை மருத்துவ மொழியில டெப்பஸாஜ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எண்டு சொல்லுறது. மற்ற நோயாளிகளிலும் மாற்றம் தெரியுது. ஒழுங்கா உடுப்பு போடுகினம். சுத்தமாய் இருக்கினம்...

(இருள்)

## VIII

அதே அறை. மருத்துவன் எழுதிக்கொண்டிருக்கிறான். ஞானசவுந்தரி உள்ளே வருகிறாள்.

***ஞானசவுந்தரி:*** நான் லிற்றில் :.பிளவர் மடத்தை விட்டு வெளியெறுற நேரம் வந்திற்றுது எண்டு நினைக்கிறன் டொக்ரர்.

***மருத்துவன்:*** வெளியேறி எங்க போகப் போறீங்கள்.

***ஞானசவுந்தரி:*** நான் ஆர்மியில சேரப்போறன். டொக்ரர் உங்களுக்குத் தெரியுமா இராணுவத்துக்கு எப்பயுமே பொம்புளையள் தேவை... எப்பேயும்.

***மருத்துவன்:*** சரி, ஆனா நீங்கள்?

***ஞானசவுந்தரி:*** (கையைத் தூக்கி அசைத்து) இல்ல டொக்ரர்... :.பாதர் சிங்கராயர் கூட போராட்டத்துக்கு சேவை செய்திருக்கிறார். அதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீங்களா?

***மருத்துவன்:*** ஓம்... ஓம் நான் கேள்விப்பட்டிருக்கிறன்.

***ஞானசவுந்தரி:*** என்ர உசிரப் பணயம் வைச்சு இராணுவத்துக்கு சேவை செய்யப்போறன். அதில என்ர பாவங்களை கரைக்கப் போறன்.

***மருத்துவன்:*** இது நல்ல ஐடியா. ஆனால் பொம்புளையள் இராணுவத்தில சேருறதில நிறையப் பிரச்சனையள் இருக்கு.

***ஞானசவுந்தரி:*** நான் தோழர் குக்கூவோட எல்லாம் விளக்கமா கதைச்சு முற்றெடுத்திற்றன். அவர் என்னை ஆர்மியில சேர்க்க சம்மதிச்சிற்றார். நான் நாளைக்கு என்ர சேர்டிபிக்கற்றை அவரட்டை ஒப்படைக்க வேணும்.

***மருத்துவன்:*** என்ன சேர்டிபிக்கற்?

***ஞானசவுந்தரி:*** மெடிகல் சேர்டிபிக்கற். நான் நல்ல ஆரோக்கியமாய் இருக்கிறன் எண்டு எனக்கொரு மெடிகல் சேர்டிபிக்கற் தேவைப்படுது.

***மருத்துவன்:*** அதால என்ன பிரயோசனம்.

***ஞானசவுந்தரி:*** அது சட்டப் பிரச்சனை டொக்ரர். நீங்கள் எனக்கொரு மெடிகல் சேர்டிபிக்கற் தருவீங்களா?

***மருத்துவன்:*** கட்டாயம். (ஒரு தாளில் கிறுக்குகிறான்.) இந்தாங்கோ.

***ஞானசவுந்தரி:*** நல்லம். குறைவிளங்காமல் எனக்கு இதில இன்னொரு கொப்பி தருவீங்களோ?

***மருத்துவன்:*** ஓம். (எழுதிக் கொடுக்கிறான்.) இந்தாங்கோ.

***ஞானசவுந்தரி:*** (தாளை வாங்கி சட்டைப் பையினுள் வைக்கிறாள்.) அப்ப... நான் நல்ல ஆரோக்கியமாய் இருக்கிறன். இல்லையா?

***மருத்துவன்:*** நிச்சயமாய்.

***ஞானசவுந்தரி:*** அப்ப முந்தியிருந்த டொக்ரர் எனக்கு சுகமில்லை எண்டு ஏன் சொன்னவர்?

***மருத்துவன்:*** மனுசர் சில நேரங்களில பிழை விடுவினம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***ஞானசவுந்தரி:*** அப்ப அவர் பிழையாச் சொல்லியிருக்கிறார்?

***மருத்துவன்:*** சில நேரங்களில சில பிழைகளை சில டொக்ரர்மார் செய்யிறது வழமை.

***ஞானசவுந்தரி:*** சரி... சரி... நான் இதில ஒரு சேர்டிபிக்கற்றை அந்த டொக்ரருக்கு அனுப்புவன். அவர் இனியாவது மனுசருக்கு தேவையில்லாமல் விசர்ப்பட்டம் கட்டுறதுக்கு முன்னால ஒண்டுக்கு ரெண்டு தரம் யோசிக்கவேணும்.

***அந்திராசி:*** (வந்துகொண்டே) வணக்கம் டொக்ரர், வணக்கம் தோழி.

***ஞானசவுந்தரி:*** சல்யூட் தோழர்.

***அந்திராசி:*** டொக்ரர், உங்களை தோழர் குக்கூ தலைமைக்குழு கூட்டத்துக்கு அழைக்கிறார்.

***மருத்துவன்:*** தலைமைக் குழுவோ?

(இருள்)

IX

சிறிய புஸ்பம் மடத்தின் முற்றம். நோயாளிகள் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள். மருத்துவன் ஒரு புறம் உட்கார்ந்திருக்கிறான். லெபனான் எழுந்து நிற்கிறான்.

***லெபனான்:*** தோழர்களே! எங்களுக்கு சில நாட்களுக்கு முன்பு வானத்திலிருந்து பெரிய பரிசுகள் கிடைத்தன. அந்தப் பரிசுகள் கிடைக்காவிட்டால் பசிக்கு உணவின்றி உடையின்றி நாங்கள் இறந்திருக்கலாம். ஆனால் அந்தப் பரிசுகளின் உதவியோடு நாங்கள் இன்றொரு கட்டுக்கோப்பான இராணுவ அணியாகப் பரிணமித்திருக்கிறோம். ஆகாயத்திலிருந்து உணவுகளும் உடைகளும் போடப்பட்டதை வெறும் மனிதாபிமான நடவடிக்கையாக நாங்கள் குறுக்கிவிட முடியாது. இதுவொரு தெளிவான அழைப்பு. வானிலிருந்து கிடைத்த அரசியல் சமிக்ஞை.

நான் இன்றிலிருந்து எமது இராணுவ அணியை அமைதிகாக்கும் படையின் ஒரு அணியாகப் பிரகடனப்படுத்துகிறேன்.

எமது அணி இன்றிலிருந்து இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த இந்திய அமைதிப்படையோடு தோளோடு தோள் நின்று உழைக்கும் என தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். (நோயாளர்களை உற்று நோக்கி) ஏதாவது மாற்றுக்கருத்துகள்? அபிப்பிராயங்கள்? (எல்லோரும் மௌனமாய் இருக்கிறார்கள்.) நல்லது தோழர்களே.. உங்கள் ஒத்துழைப்புக்கு இந்த நாடு கடமைப்பட்டிருக்கிறது. இப்போது எங்கள் முன் ஒரு பெரிய பிரச்சனை உள்ளது. எங்களை அமைதிப்படையின் ஒரு அங்கமாக இணைத்துக்கொள்ளுமாறு நாங்கள் முறைப்படி இந்திய வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புகொள்ள வேண்டும். அதுதான் சட்டப்படி சரியானதும்கூட. ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சுடன் நாம் எந்த ஊடகம் மூலமாய் தொடர்பு கொள்வது? இது பிரச்சனை. உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் அரசியல் ஆலோசனைகளை நன்றியுடன் எதிர்பார்க்கிறேன்.

***மருத்துவன்:*** எல்லாத் தொடர்பு வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன தோழர். கடிதம் மூலம் சிரமப்பட்டு முயற்சித்தாலும் கடிதத்தைப் பிரிச்சு உளவு பார்க்கும் அபாயம் இருக்கு.

***லெபனான்:*** நான் நினைக்கிறேன் டொக்ரர் சொல்லுறது சரி. கடிதம் சரிவராது. வேற அபிப்பிராயங்கள்?

***அலங்காரரூபன்:*** பழைய யுத்த காலங்களில செய்திகளை அனுப்புறதுக்கு புறாக்களைத்தான் தூதுவிட்டவை.

***லெபனான்:*** ஓம் அது மெய்.

***சத்தியகீர்த்தி:*** இப்ப கச்சான் காத்து அடிக்கத் தொடங்கிற்று. வாடக்காத்துக்கு வடக்கிலிருந்து புலம்பெயர்ந்து இஞ்சவந்த பறவையள் எல்லாம் திரும்பவும் வடக்குக்கு திரும்பிக்கொண்டிருக்குது.

***லெபனான்:*** இது ஒரு நல்ல தீர்வு. ஆயிரக்கணக்கான வருசங்களாய் இப்பிடி செய்தி அனுப்புற முறை இராணுவத்தில நடைமுறையில இருந்திருக்கு.

***அலங்காரரூபன்:*** பதில்? நாங்கள் என்னெண்டு மறுமொழிய பெற்றுக்கொள்ளுறது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***மருத்துவன்:*** இதே வழிதான். பறவைகள் மூலமாய்.

***லெபனான்:*** நல்லது தோழர்களே. நாங்கள் நாளைக்கு இந்தியவெளிவிவகார அமைச்சகத்துக்கு செய்தி அனுப்புவோம். அதன் பிரதியொன்றை இந்திய இராணுவத் தலைமையகத்துக்கும் இன்னொரு பிரதியை இலங்கையில் நிலைகொண்டிருக்கும் அமைதிப்படையின் தளபதிக்கும் அனுப்புவோம்.

(இருள்)

## X

காலை. சிறிய புஸ்பம் மடத்தின் முற்றம்.
அந்திராசி, செனகப்பு, சத்தியகீர்த்தி ஆகியோர் கைகளில் ஒவ்வொரு புறாக்களை வைத்திருக்கின்றனர். புறாக்களின் கால்களில் கடிதங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

***செனகப்பு:*** ஐயோ, இந்த சனிப்புடிச்ச புறா கொத்திப்போட்டுது. கையெல்லாம் கடுக்குது.

***அந்திராசி:*** இந்தப் புறாக்களுக்கு எங்கிட அமைதித்திட்டம் தெரியாது. எவ்வளவொரு நல்ல விசயத்த நாங்கள் செய்யப்போறம் எண்டு இந்தப் புறாக்களுக்குத் தெரிஞ்சால் எங்களைக் கொத்தமாட்டுதுகள்.

***செனகப்பு:*** போ புறாவே போ. எங்களுக்கு சமாதானமும் அமைதியும்... இஞ்ச பார் திரும்பவும் கொத்துது காத்தைக் கோத்த புறா.

***சத்தியகீர்த்தி:*** ஏய் செனகப்பு... புறாவை இப்பிடி ஏச உனக்கு வெக்கமில்லையா?

***செனகப்பு:*** என்ன வெக்கம்?

***சத்தியகீர்த்தி:*** ஏனோ? மனுசன் புறாவிலயிருந்துதான் பரிணாமம் அடைஞ்சு மனுசனாய் வந்தவன்.

***செனகப்பு:*** ஒருக்காலும் இல்ல. மனுசன் குரங்கிலிருந்துதான் பரிணாமம் அடைஞ்சவன்.

***சத்தியகீர்த்தி:*** ஓம்... ஓம்... ஆனால் குரங்கு புறாவிலிருந்துதான் வந்தது. திரும்பவும் மனுசன் குரங்காவான். குரங்கு திரும்பவும் புறாவாகும். நான் நினைக்கிறேன் அப்ப மனுசர் பறப்பினம். மனுசருக்கும் புறாவுக்கும் பல ஒற்றுமையள் இருக்கு. உதாரணமாய் புறா தன்ர செட்டையால பறக்குது. மனுசர் தங்கிட ஆத்துமத்தால பறக்கினம்.

***அந்திராசி:*** சரி ரெடியாகுங்கோ. எல்லாம் நல்லபடியாய் நடக்க வேணும். இந்த நாட்டுக்கு மறுபடியும் அமைதி கிடைக்கவேணும். எல்லா மக்களும் றீகல் தியேட்டரில செக்கன் ஷோ பார்க்கவேணும். கீரிமலையில குளிச்சு கூவிலில குடிக்கவேணும்.

***எல்லோரும்:*** வண்... ரு... திறி. (புறாக்களைப் பறக்கவிடுகிறார்கள்.)

## XI

மாலை.
சிறிய புஸ்பம் மடத்தின் முற்றம்.
எல்லோரும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.

***செனகப்பு:*** அங்க பாருங்கோ... அங்க பாருங்கோ ஒரு புதுப் பறவைக்கூட்டம் மேற்கிலயிருந்து வருகுது. ஐயோ கடவுளே வானமே இருட்டாய் போறமாதிரியல்லோ பறவையள் வருகுது.

***அலங்காரரூபன்:*** பாருங்கோ... பாருங்கோ. நாலாவது வரிசையில வாற ஏழாவது குருவி கீழ பார்க்குது. நான் நினைக்கிறன் அதுதான் பதில் கொண்டு வருகுது.

***அந்திராசி:*** அந்தக் குருவி மற்றக்குருவிகளை விட வரிசையிலிருந்து எப்பன் கீழ பறக்குது. அந்தக் குருவியிட்ட பாரமான சாமான் ஏதோ இருக்குது.

***அலங்காரரூபன்:*** ஓம்... ஓம். அது செய்தி கொண்டு வருகுது... இல்ல அது திரும்பவும் மேல போகுது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***ஞானசவுந்தரி:*** இஞ்ச பாருங்கோ இந்தப்பக்கமிருந்து இன்னொரு பறவைக்கூட்டம் வருகுது. இது இன்னும் பெரிய கூட்டம்.

***அலங்காரரூபன்:*** இப்ப வாற கூட்டம் காகக்கூட்டம்.

***சத்தியகீர்த்தி:*** சூப்பர்! காகங்கள் தானே பறவையினங்களிலேயே புத்திசாலிகள்.

***செனகப்பு:*** காகங்கள் ஒருக்காலும் புலம்பெயருறது இல்ல. நாங்களும் நாளும் பொழுதும் அணிலேறவிட்ட நாய் கணக்காய் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறம். கடவுளும் கண் துறக்க மாட்டேராம்.

***லெபனான்:*** காகங்கள் குழப்படியான பறவைகள். ஆகவே இந்திய வெளிவிவகார அமைச்சு காகங்களை பயன்படுத்தமாட்டினம் எண்டுதான் நினைக்கிறன்.

***அலங்காரரூபன்:*** பாருங்கோ... இரண்டு பறவைக்கூட்டமும் ஒண்டக்க மண்டக் கலக்குது.

***சத்தியகீர்த்தி:*** இல்ல, அவை கலக்கமாட்டினம். நாங்கள் கீழயிருந்து பார்க்கிறதால அப்பிடித் தெரியுது. ஒவ்வொரு பறவைக்கூட்டத்துக்கும் வித்தியாசம் வித்தியாசமான பாதைகளும் ஏரியாக்களும் இருக்கு.

***செனகப்பு:*** ஏன் நாங்கள் மேற்கில பார்க்கவேணும்? எங்களுக்கு வடக்கயிருந்துதானே செய்தி வரக்கிடக்கு.

***அந்திராசி:*** அண்ணறைற். இது சரி. நாங்கள் வடக்கதான் பார்க்கவேணும்.

***அலங்காரரூபன்:*** ஒரு ஒத்தக் குருவி கூட வடக்காலயிருந்து வரயில்ல.

***செனகப்பு:*** நியாயம்! கச்சான் காத்துக்கு தெற்கயிருந்துதான் பறவையள் வடக்கால போறது வழமை.

***லெபனான்:*** வடக்கிலயிருக்கிற இந்திய வெளிவிவகார அமைச்சு எங்கிட செய்தியைப் பெற்றிருக்கலாம். ஆனா அவையள் வடக்கிலயிருந்துதான் பதில் செய்தி அனுப்புவினம் எண்டு சொல்லமுடியாது. அவையள் சர்வ வல்லமை கொண்ட உலகின்ர நாலாவது பெரிய இராணுவம். எந்தப்பக்கமிருந்தும், எட்டுப் பக்கமிருந்தும் செய்தி அனுப்புவினம். அவையட தொலைத் தொடர்பு சிஸ்ரங்கள் சரியான நவீனமானவை.

***ஞானசவுந்தரி:*** பாருங்கோ... பாருங்கோ. இரண்டு புதுப் பறவைக் கூட்டங்கள் வருகுது.

***அலங்காரரூபன்:*** (கிட்டத்தட்ட அழுகிறான்.) என்ர கடவுளே, இந்தப் பறவைகளிட்டக்கூட எங்களுக்கொரு செய்தி இல்லையா?

***ஞானசவுந்தரி:*** அழக்கூடாது. உலகத்தில கோடிக் கணக்கான பறவையள் இருக்கு. அதில ஏதாவது ஒண்டிட்ட செய்தி அனுப்பியிருப்பினம். நாங்கள் இன்னும் ஒரு லெச்சம் பறவையளைக் கூடப் பார்க்கயில்ல. இன்னும் இலச்சக் கணக்கான பறவைகள் உலகத்தில இருக்கு.

***சத்தியகீர்த்தி:*** அங்க பார்த்தீங்களா? ஒரு பறவை கொஞ்சம் கீழ வந்து றவுண்ட் அடிக்குது.

***எல்லோரும்:*** எங்க?

***சத்தியகீர்த்தி:*** இஞ்ச... இரண்டாவது பறவைக் கூட்டத்துக்கு நடுவில.

***அந்திராசி:*** ஓமோம். அது காத்துல உலாஞ்சுது. ஓஹோ ஓஹோ...

***ஞானசவுந்தரி:*** அது எங்களுக்கு சிக்னல் காட்டுறது உங்களுக்கு விளங்குதா?

***அலங்காரரூபன்:*** அது சும்மாயும் உலாஞ்சலாம்.

***சத்தியகீர்த்தி:*** இல்ல... இல்ல... மற்றப் பறவைகள் நோர்மல். இது மட்டும்தான் உலாஞ்சுது.

***அலங்காரரூபன்:*** பாருங்கோ! அது கூட்டத்திலயிருந்து பிரியுது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***சத்தியகீர்த்தி:*** அது கீழ இறங்குது.

***அலங்காரருபன்:*** ...அது கடற்கரைப் பக்கமா இறங்குது. வாங்கோ கடற்கரைக்கு போய் அதைத் தேடுவம்.

***செனகப்பு:*** இந்தப் பெரிய கடற்கரையில அத் எங்கேயெண்டு தேடுறது?

***சத்தியகீர்த்தி:*** நாங்கள் போவம். அது தானாகவே எங்களைக் கூப்பிடும்.

***செனகப்பு:*** எல்லாம் விசர்க்கூட்டம். நீ முழு விசர். குருவி என்னெண்டு எங்களைக் கூப்பிடும்.

***லெபனான்:*** எங்களோட தொடர்பு கொள்ள இந்திய இராணுவம் அந்தப் பறவைக்கு பயிற்சி கொடுத்திருக்கும்.

***செனகப்பு:*** ஓமோம்... நான் அந்த லைனில யோசிக்கயில்ல.

***எல்லோரும்:*** போவம்... போய்த் தேடுவம்.

(இருள்)

## XII

கடற்கரை.
இருள்.

***அந்திராசி:*** (இரகசியக்குரலில்) செனகப்பு? செனகப்பு?

***செனகப்பு:*** உஷ் சத்தம் போடாதே.

***அந்திராசி:*** அந்தப் பறவை இஞ்சயிருக்கு. இந்தப் பெரிய பறவையை நான் என்ர வாழ்நாளில காணயில்ல.

***செனகப்பு:*** உனக்கு சரியாத் தெரியுமா? அது இஞ்சதானா இருக்கு?

***அந்திராசி:*** ஓம். நான் அந்தப் பறவைக்கு மேல தானே இருக்கிறன்.

***செனகப்பு:*** எந்தயினப் பறவை?

***அந்திராசி:*** தெரியேல்ல. இருட்டில அது தெரியேல்ல. ஆனால் இது சரியான பெரிய பறவை. இந்தப் பெரிய பறவையை இந்தியா அனுப்பியிருக்கெண்டால் ஏதும் பார்சல்தான் அனுப்பியிருக்கினம் எண்டு நினைக்கிறன். (பறவை சத்தமெழுப்புகிறது) ஏய் பறவையின்ர சத்தத்தைக் கேட்டியா?

***செனகப்பு:*** ஓ... கேட்டன். அதில ஒரு சமாதானத் தொனி தெரியுது. குரலிலேயே தெரியுது பெரிய பறவைதான்.

***அந்திராசி:*** அதுதான் நானும் சொன்னது. இது எங்களுக்காக நிச்சயமாய் ஏதோ கொண்டுவந்திருக்குது. நான் அமத்திப்பிடிச்சுக்கொள்ளுறன். நீ காலில ஏதாவது இருக்குதா எண்டு தேடு.

***செனகப்பு:*** ஐயோ... சனியன் என்ர மண்டையில கொத்திப்போட்டுது.

***அந்திராசி:*** ஐயோ கொத்துது செனகப்பு. ஓடு... ஓடு...

***செனகப்பு:*** என்ர கண்மட்டும் இருக்கு. மூளையை அது திண்டு போட்டுது. நான் விடமாட்டன்... அதைச் சும்மா விடமாட்டன். நான் இதை மேடர் செய்வன். (பறவையின் அவலக்குரல் கேட்கிறது.)

(இருள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## XIII

காலை.
சிறிய புஸ்பம் மடத்தின் முற்றம்.
சத்தியகீர்த்தி, அலங்காரரூபன், மருத்துவன் ஆகியோர் தரையில் உட்கார்ந்திருக்கிறார்கள். லெபனான் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். அந்திராசியினதும் செனகப்புவினதும் உடல்களில் காயங்களுக்கு கட்டுப்போடப்பட்டுள்ளது. அவர்களுக்கு முற்றத்தைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் தண்டனை லெபனானால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

***லெபனான்:*** எனக்கு நீங்கள் உண்மை மட்டும்தான் சொல்லவேணும். சொல்லுங்கோ யார் முதலில் பறவையைத் தாக்கினது?

***செனகப்பு:*** பறவைதான் தாக்குதலைத் தொடங்கினது. நான் என்ர தற்காப்புக்காகத் திருப்பிக் கொஞ்சம் தாக்கினன்.

***அந்திராசி:*** நாங்கள் அதின்ர காலில ஏதாவது செய்தி இருக்குதா எண்டு தேடினம். ஆனால் அது எங்களை அற்றாக் பண்ணிப் போட்டுது.

***லெபனான்:*** தோழர்களே! பறவைகளுக்கு பிரங்ஞாபூர்வமாக சிந்திக்க முடியாது. ஆனாலும் இந்தப் பறவை நல்லெண்ணத்துடனும் சமாதானத்துடனும் எங்களுக்கொரு செய்தியைக் கொண்டு வந்தது. ஆனால் நாங்கள் அதை எப்பிடி வரவேற்றிருக்கிறம்? வன்முறையால வரவேற்றிருக்கிறம்! வெட்கக்கேடு... இந்திய அரசுக்கு யார் இப்ப பதில் சொல்லுறது? அவர்கள் எங்களுக்கு தக்க தருணத்தில் உணவுகளும் உடைகளும் அனுப்பியிராவிட்டால் நாங்கள் இப்போ செத்து செத்த இடத்தில் புல்லும் முளைச்சிருக்கும். நன்றியோட இருக்க வேண்டிய நாங்கள் இந்தியாவின்ர நல்லெண்ண சமிக்ஞைகளை தாங்கிவந்த பறவையை சிநேகிதபூர்வமாய் வரவேற்றிருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அதைக் கொன்றிருக்கிறீர்கள். என்ன அவமானம்? நான் எப்பிடி இந்திய அரசின் முகத்தில் முழிப்பேன்?

(ஞானசவுந்தரி கூச்சலிட்டுக்கொண்டு ஓடி வருகிறாள். அவள் கையில் புறா ஒன்று மயங்கியோ அல்லது இறந்தோ கிடக்கிறது.)

***ஞானசவுந்தரி:*** செய்தி வந்திற்றுது... செய்தி வந்திற்றுது. இது மடத்துக்கு பின்னால மயங்கிக் கிடந்துது. ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் பறந்து வந்திருக்கு! பாவம்! அதின்ர காலில ஒரு செய்தி இருக்கு. அதின்ர காலில ஒரு இரும்புத்துண்டு இருக்குப் பாருங்கோ. அதில ஏதோ எழுதியிருக்கு.
(லெபனான் புறாவை வாங்கி அதன் காலிலுள்ள உலோக வளையத்தில் பொறித்துள்ளதை வாசிக்கிறான்.)

***அலங்காரரூபன்:*** (பறவையின் காலில் உள்ள வளையத்தை கவனித்தவாறு) இது என்ன ஒரு மோதிரமா? (அழுகிறான்) அனுமான் சீதையை தேடி இலங்கைக்கு வரயிக்க ஒரு மோதிரத்தோடதானே வந்தவன். (கண்களை துடைத்துக்கொண்டே) ஆ என்னவொரு அர்த்தமான சமிக்ஞை. (புறாவின் காலில் உள்ள உலோக வளையத்தில் உள்ள எழுத்துக்களை வாசிக்கிறான்.) J. S. 01/01

***லெபனான்:*** இதுவொரு இரகசியக் குறியீடு.

***அந்திராசி:*** (உலோக வளையத்தை வாசிக்கிறாள்.) J.S. 01/01

***லெபனான்:*** ஜல்தி சலோ. ஒன்று. ஒன்று. (உரக்க) நாங்கள் ஜனவரி முதலாம் தேதி வெளிக்கிட்டுப் போய் இந்திய அமைதிப்படையுடன் இணைகிறோம்.

***அலங்காரரூபன்:*** நாங்கள் போகப் போறமோ?

***லெபனான்:*** கட்டளைக்கு மேலே விவாதம் செய்யக்கூடாது!

(இருள்)

## XIV

அதே நோயாளர்களது அறை.
சுவரில் மிகப்பெரிய இலங்கைப்படம் வரையப்பட்டுள்ளது. அதன் சில இடங்களில் கரித்துண்டுகளால் அடையாளமிடப்பட்டுள்ளது. லெபனான் கையில் ஓர் அடிமட்டத்துடன் அடையாளமிடப்பட்ட பகுதிகளைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொட்டுக் காட்டுகிறான்.

***லெபனான்:*** நான் எங்கிட கடற் பயணப் பாதையை திரும்பவும் ஒருக்கா உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புறன். இது புளியந்தீவு- இஞ்சயிருந்து நயினாதீவு- பிறகு குறிகட்டுவான்- அங்கயிருந்து வேலணைத் துறை- வேலணைத் துறையிலிருந்து அல்லைப்பிட்டி ராத்தலடி- அங்கயிருந்து கௌதாரி முனை- கௌதாரி முனையிலிருந்து நேரா யாழ்ப்பாண டச்சுக்கோட்டையிலிருக்கிற IPKF முகாம். இதுதான் எங்கிட பயணப் பாதை. ஆனால் எங்களைக் கடலில இலங்கை கடற்படையோ அல்லது கடற்புலிகளோ வழிமறிக்கலாம்.

***அலங்காரரூபன்:*** அது சாத்தியமில்லை. அமைதிப்படையை வழிமறிக்க அவையளுக்கு அதிகாரம் இல்ல.

***லெபனான்:*** அது மெய். நாங்கள் இங்கயிருந்து இன்னும் இரண்டு நாளில ஜனவரி முதலாம் திகதி- வெள்ளனக் காலையில வெளிக்கிடுவோம்.

***சத்தியகீர்த்தி:*** தோழர் குக்கூ, கடற்கரையில ஒரு கைவிடப்பட்ட வள்ளம் இருக்குது. இஞ்ச மடத்தின்ர ஸ்ரோர் ரூமில ஒரு 55 கோர்ஸ் பவர் அவுட்மோட்டரும் இருக்குது. ஆனால் பெற்றோல் எங்களட்டயில்ல. இருந்த பெற்றோலையெல்லாம்...

***லெபனான்:*** (கோபத்துடன்) தோழர் செனகப்பு, இன்னும் 24 மணி நேரத்துக்குள்ள நீங்கள் களவெடுத்த பெற்றோலையெல்லாம் என்னட்ட ஒப்படைக்க வேணும்.

***செனகப்பு:*** (சரி தோழர்.)

***லெபனான்:*** நான் கடைசியா உங்களுக்கு சொல்லுறன். இராணுவம் எண்டுறது இறுக்கமான கட்டுக்கோப்பும் கண்ணியமும் உள்ளது. ஒரு கள்ளன் ஆர்மி யூனிஃபோர்மை போட்டிருக்க ஏலாது. ஒரு இராணுவ வீரன் களவெடுக்கக்கூடாது.

***செனகப்பு:*** (மிகத் தாழ்ந்த குரலில்) இராணுவத்தில களவெடுக்க ஏலாது... அப்ப எங்க களவெடுக்கிறது?

(இருள். இருளில் மருத்துவனின் குரல் ஒலிக்கிறது.)

***மருத்துவன்:*** இதுவரை எல்லா விசயங்களும் கொஞ்சம் நல்லாத்தான் நடந்தது. ஆனால் இப்ப நிலைமை சீரியஸாய் போச்சுது. அவையள் உண்மையாகவே அவையளின்ர திட்டப்படி முதலாம் திகதி வெளிக்கிடத்தான் போகினம். ஆனால் நிச்சயமாய் எல்லாப் பெரிய திட்டங்களிலுமே ஒரு சின்ன ஓட்டை இருக்கும். என்னால வலு சிம்பிளா இவையள வெளிக்கிடாம தடுத்து நிப்பாட்ட ஏலும். நாளைக்கு காலையிலேயே வள்ளம் பிடிச்சு மருத்துவ தலைமையகத்துக்குப் போய் இவையளின்ர விளையாட்டைப்பற்றி சொல்ல முடியும். ஆனால் அது சரியா?

புறா வந்துது. அதின்ர காலில ஒரு இரும்பு வளையம்... பறவை ஆய்வாளர்கள் பறவைகளின்ர காலில அடையாள வளையங்களை ஆய்வு நோக்கங்களுக்காகப் போடுவினம். இது ஒரு இன்ரலக்சுவல் விளையாட்டு.

நீங்களும் நானும் மருத்துவத்தலைமை அதிகாரியும் அமைதிப்படையும் அரசாங்கமும் இயக்கங்களும் பறவை ஆய்வாளர்களும் பைத்தியக்காரர்கள் இல்லைத்தானே? ஆனால் நாங்களும் விளையாடுறம். எங்கிட விளையாட்டு பெரிய விளையாட்டு! இந்த நோயாளிகளின்ர விளையாட்டு சின்ன விளையாட்டு! எந்த விளையாட்டு சரியானது? சின்ன விளையாட்டா? பெரிய விளையாட்டா? இரண்டு விளையாட்டில் எது உண்மை? அவையள் தங்கிட திட்டப்படி ஜனவரி முதலாம் திகதி பயணப்பட ஆயத்தமாகினம்.

* * *

## XV

அதிகாலை.
அதே நோயாளர்களது அறை. படுக்கைகள் எல்லாம் சுருட்டிக்கட்டப்பட்டுள்ளன. நோயாளர்களது தோள்களிலும் கைகளிலும் பயணப் பொதிகள் உள்ளன. சத்தியகீர்த்தியின் தோளில் வள்ளம் செலுத்தப் பயன்படும் 'மோட்டார்' உள்ளது. அவர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். அணிவகுப்பில் முதலில் கைகளில் உயரப்பிடித்த வெள்ளைக் கொடியுடன் லெபனான் நிற்கிறான். மருத்துவன் அறையினுள் பிரவேசிக்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***லெபனான்:*** (சல்யூட் செய்கிறான்.) சல்யூட் டொக்ரர்.

***மருத்துவன்:*** சல்யூட் தோழர். (பதிலுக்கு சல்யூட் செய்கிறான்.)

***லெபனான்:*** நாங்கள் உங்களுக்கு திரும்பவும் நன்றி சொல்லுறம் டொக்ரர். நாங்கள் எங்கிட அமைதிப்பயணத்தை தொடங்குகிறோம்.

***மருத்துவன்:*** நீங்கள் உங்கிட திட்டத்தை வெல்லுவீங்கள் எண்டு நம்புறீங்களா?

***லெபனான்:*** இதென்ன கேள்வி டொக்ரர்?

***மருத்துவன்:*** நீங்கள் கடலில கனதூரம் பயணம் செய்யவேணும். கடலில ஒரே வெடிகளும் குண்டுகளுமாய் சண்டை நடந்துகொண்டிருக்கு. நீங்கள் வெறுங்கையோட போறீங்கள்?

***லெபனான்:*** வெறுங்கையில்ல டொக்ரர்... வெள்ளைக்கொடி. (கொடியை தூக்கிக் காட்டுகிறான்.) தவிரவும் நாங்கள் எந்த அவசர நிலையையும் சமாளிக்கப் பயிற்சி பெற்ற இராணுவ அணி.

***மருத்துவன்:*** இது ஸிஹிசோபிறேனியாவின்ர உச்சகட்டம்.

***லெபனான்:*** நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்கயில்ல.

***மருத்துவன்:*** பைத்தியக்காரர்களுக்கு எண்டு ஒரு சிறப்பான தெய்வம் இருந்தால்தான் இந்தத் திட்டம் வெல்லும் தோழர்.

***லெபனான்:*** இதுவும் எனக்கு விளங்கயில்ல.

***மருத்துவன்:*** நான் ஒண்டும் கதைக்கயில்ல. (வெளியேறுகிறான்.)

***லெபனான்:*** சரி தோழர்களே புறப்படுவோம். எந்த நிலைமையையும் சமாளிக்க சமாதானத்தின் பெயரால் நாங்கள் தயாராய் இருக்கவேண்டும்.

***ஞானசவுந்தரி:*** நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதயுங்கோ தோழர். கடலில் இலங்கை நேவி மறிச்சால் நான் கதைக்கிறன். எனக்கு நல்லா சிங்களம் தெரியும்.

***அந்திராசி:*** கிழிச்சாய்... ஆரைக்கண்டாலும் உங்களைக் கைதடிப்பாலத்தில சந்திச்சனான். கைதடிப் பாலத்தில சந்திச்சனான்... எண்டு கதைப்பாய். உடன அவையளுக்கு நாங்கள் பைத்தியங்கள்' எண்டு தெளிவா விளங்கிப்போடும்.

***ஞானசவுந்தரி:*** ஆருக்கு பைத்தியம்? எனக்கா? (மருத்துவ சான்றிதழை தூக்கி காண்பிக்கிறாள்.) இது சேர்டிபிக்கற்றா? இல்லை மயிரா?

**லெபனான்:** தோழர்களே! நீங்கள் பைத்தியக்காரர்கள் இல்லை. நீங்கள் ஏனையோர்களிடமிருந்து கொஞ்சம் வித்தியாசமானவர்கள் என்பதுதான் உண்மை. இந்த உலகம் மற்றவர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்காகவும்தான் படைக்கப்பட்டிருக்கிறது. வரலாற்று புகழ் பெற்ற நூலான 'மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்' என்ற நூலின் இறுதிப் பகுதியில் பேராசான் ஏங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளதை தோழர்கள் தயவு செய்து கவனிக்க வேண்டும்.

இந்த உலகம் உழைப்பவர்களுக்கு சொந்தமானது.
இந்த உலகம் அடிமைகளுக்கு சொந்தமானது.
இந்த உலகம் தொழிலாளர்களுக்கு சொந்தமானது.

ஆனால் துரதிர்ஸ்டவசமாக இந்த உலகம் பைத்தியக்காரர்களுக்கும் சொந்தமானது என்று பேராசான் ஏங்கெல்ஸ் சுட்டிக்காட்ட தவறிவிட்டார். புறப்படுங்கள் தோழர்களே!

(மருத்துவன் அறையினுள் நுழைகிறான். அவன் இராணுவச் சீருடை தரித்துள்ளான்.)

***மருத்துவன்:*** தோழர் குக்கூ நானும் உங்கள் இராணுவ அணியில் இணையலாமா?

***லெபனான்:*** நிச்சயமாய்! (மருத்துவன் அணியினுள் புகுந்து கொள்கிறான்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெப்ற்- றைற்
லெப்ற்- றைற்
லெப்ற்- றைற்
:.போர்வர்ட் மார்ச்...

(இருள்)

XVI

அதே நோயாளர்களது அறை. நோயாளிகளது இராணுவச் சீருடைகள் கிழிந்தும் அழுக்காயும் உள்ளன. கலைந்த தலைமுடிகளும் சவரம் செய்யப்படாத முகமுமாய் அமைதியாக அவரவர் கட்டில்களில் அமர்ந்திருக்கிறார்கள். மருத்துவன் மருத்துவனுக்குரிய வெள்ளைச் சீருடை அணிந்து நிகழ்மையத்தில் குறுக்கு மறுக்காக யோசனையுடன் உலாவிக்கொண்டிருக்கிறான். அந்திராசி நாக்கைத் துருத்திக்கொண்டு எழுதிக்கொண்டிருக்கிறாள்.

***அந்திராசி:*** அன்புள்ள செல்வராணி

***மருத்துவன்:*** செல்வராணி எண்டுறது அவற்ற மனுசியின்ர பெயர்...

***அந்திராசி:*** இன்று என்ன திகதி, என்ன மாதம், என்ன வருடம் என்று எங்களுக்குத் தெரியாது. நாங்கள் காலங்களை மறந்து அவற்றை துச்சமென மதித்து அமைதிக்கான எங்கள் நீண்ட பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

எமது பிள்ளைகள் இப்போது பெரியவர்கள் ஆகியிருப்பார்கள் என்று நம்புகிறேன். தந்தையில்லாத குழந்தைகளை வளர்ப்பதற்கு நீ எவ்வளவு சிரமப்படுவாய் என்பதை நான் உணர்கிறேன். நீ உனது குழந்தைகளுக்கு ஒரு புதிய தந்தையை இப்போது தேடிக்கொள்வது தான் நியாயமானது என எனக்குப்படுகிறது. ஏனெனில் இந்நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை. நான் திரும்பி வரப்போவதும் இல்லை. ஜெய்ஹிந்த்

***எல்லோரும்:*** (உணர்ச்சிகள் செத்த குரலில்) ஜெய் சிலோன்.

* * *




இவ்வண்டு யூலை 12ம் திகதி யுனெஸ்கோ ஆதரவில் பாரிசில் நடைபெற்ற கல்வியியல் பற்றிய உலகக் கருத்தரங்கின் தொடர்ச்சியாக தலித்தியம் எனும் தலைப்பில் அமர்வு ஒன்று இடம் பெற்றது. மேற்படி அமர்வுக்காக இந்தியாவில் இருந்து இருவர் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிலிருந்து திரு.நிக்கொலாஸ், மும்பையிலிருந்து "கம்யூனலிசம் கொம்பாற்" எனும் ஆங்கில இதழின் ஆசிரியையான ஸ்ரெலா செடல்வேட் போன்றோர் வருகை தந்திருந்தனர். மற்றும் பெல்ஜியத்தில் இருந்து பேராசிரியர் றொபெட் தெலியேஸ் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். இந்திய நாகரீகம் குறித்து விரிவுரையாளராக பணியாற்றும் இவர் தலித்தியம் பற்றிய ஆய்வு முயற்சிகளில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுபவர்.

நிக்கொலாஸ் அவர்களுடனான தனியான ஒரு சந்திப்பு யூலை 16 அன்று எக்ஸில் நண்பர்கள் ஆதரவில் இடம் பெற்றது. மேற்படி சந்திப்பின் போது புலம்பெயர் வாழ்விலும் வேர் கொண்டுவிட்ட சாதியச் சிக்கல்கள் குறித்தும் தமிழக தலித் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நீயும் நானும்



நீயும் நானும் - ஆனாலும்
என்னிலிருந்து நீ வேறு
உன்னிலிருந்து நானும் அப்படியே
ஒருவரை விட்டு ஒருவர் அகல்வோம்
நம்மை நாமே ஆழமாய்ப் பார்ப்போம்
நம்மைப் பற்றி நாமே ஆய்வோம்
உன்னால் இலகுவாய் செய்ய முடிந்ததை
நான் தினம் தினம் பயில்வதை
நீ நாளும் செய்வதை
என்னால் முயன்றும் முடியவில்லை
எதை நினைந்து நீ சிரித்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
இரவைக் கண்டு பயமா
நான் சுமக்கும் கடமைகளை
நீ சுமக்கும் ஆசைகளை
நான் விரும்பும் வர்ணத்தை
நான் தாங்கும் சோகத்தை
இனிமை அளிக்கும் செயலினை
நீ ஏதும் அறிவாயா
ஏன் யார் எதை உனக்குச் சமைத்தார்
யார் எதை ஏன் எனக்காகப் பாடினார்
திடீரென இதென்ன ஞானம் நமக்குள்ளே
நம்முள்ளே நாமிருவரும் ஒன்றுதானே
ஏன் வெளியில் மட்டும் என்னவாம்
இது கூட அறியாதிருக்க நாமென்ன குருடரா!

(எங்கோ வாசித்த ஜேர்மன் மொழிக்கவிதையின் தழுவல்)

www.tamilarangam.net

# “நூல் அறிமுகம்”

34 கவிதைகளைக் கொண்ட கல்லூரனின் கவிதைத் தொகுப்பு இது. கல்லூரன் தனது கவிதைகள் தன்னைத் தேடுதலில் நிகழ்ந்த ஒரு அகத் தேடல் பற்றி எழுந்தவையே எனக் குறிப்பிடுகிறார். அந்தத் தேடலுக்குள் நுழைய ஒரு வெளியைக் கண்டுகொண்ட கல்லூரன் அதற்குள் தன்னைத் தெரிந்து கொள்ள தானும் ஒரு வெளியாய் உருவானதை வெளிக்குள் வெளியாய் அடையாளங் கண்டிருக்கிறார்.

கல்லூரன் தனது கவிதைகள் தொடங்குகின்ற இடங்களாக தனது பதிவுகளை நகர்த்தும் பாதை மிகத் தெளிவாக அவரை இனங்காண வைக்கிறது. மிகவும் யாக்கிரதையாக அவர் நம்பி தன்னை இணைத்துக் கொண்ட பக்கச் சூழல் எல்லாம் ஒவ்வொரு கட்டத்தில் அவரை இலகுவாக காய்வெட்ட வைத்தது. எல்லாமே சிறிது காலத்தில் தனது அப்பட்ட உண்மையை வெளிக்காட்டி செயலிழந்து போய்விடக்கூடியதாய் கல்லூரனை ஆக்கும் போது அங்கே ஒரு கவிதையை வீர்யத்துடன் எறிந்துவிட்டு தன்னை அடுத்த கட்டத்தை நோக்கி பூரணப்படுத்த முனையும் போக்கு கல்லூரனின் கவிதைகளுக்கு நிகழ்ந்திருக்கிறது.

இவரின் அநேக கவிதைகள் துயரத்தை வெளிக்குள் இருந்து குடைந்தெடுப்பதை கொண்டபடியால் கவிதைகளின் மீது கழிவிரக்கத்தை உண்டுபண்ணுகின்றது. - ஆனால் அவற்றின் செல்திசை நேர்த்தியாக அமைக்கப்பட்டிருப்பதால் கவிதையின் ஆற்றுகை குறித்து பேசவேண்டியுள்ளது. அநேக கவிதைகளில் ஒரு படிம அடுக்கு இரண்டு தடவைகள் இடம் பெறுவதைக் காண முடியும். உதாரணமாக

ஓட்டமெடுக்கிறேன்
ஓட்மெடுக்கிறேன்
தாளிட்ட கதவுகளில்
குருட்டு வௌவ்வாலாக
மோதி விழுகிறேன்.

இந்த ஓட்டமெடுக்கிறேன் என்ற இரண்டும் ஒரே பார்வையை ஒரே அர்த்தத்தை ஒரே வாசிப்பை, ஒலியை கவிதையின் மீது கொண்டிருப்பதில்லை. இரண்டும் இரு வேறுபட்ட வேகத்தையும், உணர்வுகளையும் கொண்டிருக்கிறது. இவ்வாறு அனேக இடங்களில் கல்லூரன் தன்னுடைய உணர்வுகளை அழுத்தப் படுத்துகிறார்.

வாழ்வின் பொய்மை மீதும் அதற்கு துணைநின்றோடும் மனிதர்கள் மீதும் கிண்டலடித்துவிட்டுப் போகும் கல்லூரன் தன்னை அடிக்கடி மரணிக்க வைப்பதன் மூலமும் பிணமாய்க கிடப்பதன் மூலமும் அவற்றை ஒட்டுமொத்தமாய் சவக்குழிக்குள் போட்டு மூடிவிடுகிறார். கல்லூரனின் அனுபவ முதுமையின் ஆளுமையை அவரது கவிதைகள் இலகுவாய்க் குறிகாட்டிவிடுகிறது. எல்லாக் கவிதைகளுமே ஒரு பக்கத்தில் நியாயத்தை வேண்டி இருந்துகொண்டும் அதே நேரத்தில் மறுபக்கத்தில் காறி உமிழ்ந்து சாட்டையடி கொடுக்கக்கூடிய கவிதைகளையும் தந்திருக்கிறார். மனித வாழ்வின் அவல விழுமியங்கள் அத்தனைமீதும் தன்னைப் பொருத்தி அனுபவித்துப் பார்க்க முடிகிறது. அங்கே நியாய அநியாயங்கள் விவாதிக்கப் பட்டபடியே அவரால் கவிதைகளுக்குள் எங்களையும் சேர்த்து தோய்த்து எடுக்க முடிகிறது. அவரின் கவிதை மனத்தின் ஓர்மத்தை ஒரே முகம் என்ற ஒரு கவிதையினூடு மாத்திரம் அடையாளம் இடமுடியும்.

சிரித்திருக்கும் மலர்களைப்
போல நான்

யாருக்காகவும்
சோடித்துக் கொள்வதில்லை
இடுகாட்டிலும்
பூத்துக்கிடப்பேன்
எனது
ஒரே ஒரு முகத்துடன்.



தொடர்புகட்கு:-

VIEW-HUM
27/A Srinoar Shop
Batticaloa Road
Kalmunai
Sri Lanka



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கார்ணபரம்பரை கதைகளான புராணங்களையும் இதிகாசங்களையும் வரலாறாக நம்பிக் கொண்டிருந்த இந்திய சமூகத்தில் மன்னர்களினதும் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்களினதும் வெற்றிகளும், தோல்விகளும் வீர விளையாட்டுக்களுமே முழுச்சமூகத்தினதும் வரலாறாக முன்னிறுத்தப்பட்டிருந்தது. காலனித்துவ ஆட்சியின் பின் உருவான அச்சியந்திர வளர்ச்சியில் அப்போது படித்தவர்களாலும், சமூகத்தின் மேன்நிலையில் இருந்தவர்களான உயர்த்தப்பட்ட சாதி/வர்க்கத்தினரால் மேற்படி வரலாறுகளே நூல்களாக உருக்கொண்டன. இன்றுவரை அவையே வரலாறாக எமக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றன என்பது கொடுமை. இந்த வரலாறுகளே வாய்ப்பாட்டு முறையில் மாணவர்களுக்கு ஊட்டப்படுவதும் அதை உள்வாங்கும் அவர்கள் சமூகத்துக்குள் நுழையும் போது ஆசிரியர்களாக, விரிவுரையாளர்களாக, பேச்சாளர்களாக, போதகர்களாக, எழுத்தாளர்களாக, இலக்கியவாதிகளாக, நடிகர்களாக மீண்டும் அந்த வரலாற்றையே மீண்டும் மீண்டும் அடுத்த பரம்பரையினருக்கு கடத்துவதும் ஓர் போதனை வடிவில் தொடர்கிறது.

இவ்வகைப் போதனைகள் புனிதமானவைகளாக/ கேள்விக்குட்படுத்த முடியாதவையாக சமூகத்தின் அவ்வவ் மொழிசார்ந்த கலாச்சார பண்பாட்டு அம்சங்களை பாதுகாப்பதனை நோக்கமாக கொண்டிருப்பதனால் வரலாறு கடந்து வந்த பல உண்மைகள் தங்கள் புனிதத்தன்மைகளில் கறை பட்டுவிடும் என்பதனால் கண்டுகொள்ளப்படாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டது. இன்று அதன் சுவடுகளே இல்லாதொழிக்கப்பட்டுமுள்ளது.

இவ்வகையில் மறைக்கப்பட்டு வந்த மனிதகுல வரலாற்றின் மறுபக்கத்தில் மனிதர்களை அடிமையாக்கி விற்பதும் நரபலி இடுவதும் நடந்தேறியிருப்பது போல் தமிழ் நாட்டின் வரலாற்றிலும் மிக கொடுமையாக இவை இருந்திருக்கிறது என்ற உண்மையை தோண்டி எடுத்து அதனை நாடகமாக்கியிருக்கிறார் கே.ஏ.குணசேனரம் அவர்கள். இந்த நரபலியிடலுக்கு தீண்டத்தகாதவர்களே உட்படுத்தப்பட்டு தெய்வத்திற்கு இரத்தப்பலி கொடுக்கும் வேள்வியில் மாண்டனர் என்கின்ற உண்மைக்கு ஆதாரமான கல்வெட்டு செய்திகளையும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாய்மொழிச் செய்திகளையும் கொண்டு உண்மைவரலாற்றை நாடக, இசை வடிவங்களாக படைத்துவரும் முயற்சிகளின் ஒன்றுதான் இந்த "பலியாடுகள்".

இதுவரையில் எங்களுக்கு கையளிக்கப் பட்டுள்ள வரலாற்றுப் புத்தகங்களின் மலைபோன்ற குவியல்களினுள் எங்களுக்கானதை எங்கே ஒழித்து வைத்துள்ளீர்கள்? என்ற கேள்வியுடன் களத்தில் இறங்கியுள்ள குணசேகரம் போன்றவர்களின் இந்த முயற்சிகளின் பலனாக தலித்துகளின் இயல்பான சொல்லாடல்கள், களைத்து கருத்த மேனிகளின் போர்க்குரல்களாக "தலித் அரங்கு" என்று நாடகத்துறையில் ஓர் தடம் பதிக்கும். அந்த முயற்சியில் இந்த "பலியாடுகள்" என்கின்ற நாடகபிரதி அசைக்கமுடியாத ஓர் அத்திவாரம்.

## பிரதிகளைப் பெற்றுக்கொள்ள



**"பலியாடுகள்"**
**நவஜோதி** பதிப்பகம்
**20,** பிரான்சுவா தவின் வீதி
**பத்**மினி நகர்
**புது**ச்சேரி - 12
**இந்**தியா

## கே.ஏ.குணசேகரம் அவர்களின் மேலும் இரண்டு நூல்கள்



**"இன்றைய தமிழ் நாடகச் சூழல்"**
தன்னானே
81, முதன்மை சாலை
பாரதி நகர்
பாண்டிச்சேரி - 605008




**"தலித் கலை கலாச்சாரம்"**
**ராகாஸ்**
**293,** இராயப்பேட்டை
**நெடுஞ்**சாலை
**சென்னை** - 600014



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தத்தால் தொலைந்தோம்

நாளை நீயும் நானும் நடக்கவுள்ள
நிலப் பரப்புக்களில்
தேசிய கொடி மட்டுந்தான் மிஞ்சிக்கிடக்கும்

மழலைகளையும் முட்களையும் ஒன்றாக புதைத்து
மூடிய குப்பைமேடுகளுடன்
என் தேசம் ஒரு பிணக்காடாகும்-
மனிதமாமிசத்தை தின்று பெருத்த
அந்த விசர் நாயின் கண்களிடமா
என் தோழர்களின் தேசிய உணர்வை தேட முடியும்

ஆயிரக்கணக்கான
இந்தச்சமாதிகளிடமா
எமது விடுதலையை கொண்டாட முடியும்

விட்டுவையுங்கள்
யாராவது ஒரு மனிதனையாவது விட்டுவையுங்கள்
யுத்தத்தால் அழிந்து போன எனது மண்ணைப்பற்றி
எழுத குருதி நிரம்பிய பேனாவையையும்
மனித நேயத்தை
உணர்த்த விட்டுவையுங்கள்

காலையில் பூத்த மலர்களின் மகரந்தங்களில்
இரவுகளில் குருதி காய்ந்திருந்த
சோகங்களையெல்லாம்
ஆட்சி மீதும் ஆயுதங்கள் மேலும் மோகம்
கொண்ட குருடர்களை பற்றியெல்லாம்
எழுத வேண்டும்

ஒரு புதிய உலகம்
தோன்றும் நேரம்
ஆயுதங்களெல்லாம் புதைக்கப்பட்ட
கொலைகளை மரணதண்டனைகள் கடந்த
மனிதப்பண்புகள் நிறைந்த
சமத்துவம் மட்டும் பேசும் இனவேற்றுமை உணராத
சமுதாய எழுச்சி வேண்டும்

இந்த யுத்தத்தில் எப்படி தொலைந்தோம்
எதை இழந்தோம்
எதை பெற்றோம்
எமது தெருச் சுவர்களில்
இந்த கொடியவர்களின் வரலாறு
எழுதப்பட வேண்டும்

பாமதி
(அவுஸ்திரேலியா)
12.01.00




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அ.மார்க்ஸ்

# ஓர் இடைமறிப்பு

ஷோபாசக்தி



**– தொடர்கிறது –**

> நமது மொழியும் கலாச்சாரமும் சாதி காப்பாற்றுகையில் மரபுகளைத் தேடுதல், வேர்களைக் கிண்டியெடுத்தல், தொன்மங்களை தோண்டியெடுத்தல் என பல கலை இலக்கிய முயற்சிகள் நடைபெறுகின்றன. குறிப்பாக எமது ஈழத்து நாடகச் சூழலில் இந்தப் போக்குகள் அதீதம். எடுத்துக்காட்டாக "மண்சுமந்த மேனியரை"யே குறிப்பிடலாம். தமிழகத்தில் "கருஞ்சுழி"யை சொல்லலாம். இதெல்லாம் வேலைக்காகுமா?

ஆம் அல்லது இல்லை என்கிற ரீதியில் இதற்கு பதில் சொல்ல இயலாது. மரபுகளிலிருந்துநாம் முழுமையாக தப்பித்து விட முடியாது. ஆனால் கலை இலக்கியம் என்பதே ஒரு வகையில் மரபுகளோடு நடத்தக்கூடிய யுத்தம்தான். மரபுகளை மீறும்போதுதான் அது கலையாகிறது. அறிவு சார்ந்த அறிதல் முறைக்கும் அழகியல் சார்ந்த அறிதல் முறைக்குமிடையேயான வேறுபாடுகளில் இதுவும் ஒன்று. மற்றபடி நாம் மரபு என்று ஒருமையில் சொல்வதிலுள்ள பிரச்சனைகளையும் யோசிக்க வேண்டும். மரபுகள் என்று சொல்வதுதான் பொருத்தம். இவற்றில் எந்த மரபு என்பது முக்கிய கேள்வி. மரபுகளைத் தேடுகிறேன் என்கிற பெயரில் திரும்பத் திரும்ப இந்து பார்ப்பனிய எல்லைக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் உலக நாடக அரங்குகளை எட்டிப் பார்ப்பது அவற்றில் இருந்து எடுத்துக் கொள்ளக் கூடிய அம்சங்கள் கூடுதலாக இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. இப்படிப் பழைய கதையாடல்களை எடுத்துக் கொண்டு புதிய கேள்விகளைப் போடுகிறேன் என்கிற பெயரில் கே.ஏ.குணசேகரன் போன்றவர்கள் மீண்டும் மீண்டும் அரிச்சந்திரன், சத்தியவான் சாவித்திரி எனச் சுழன்று கொண்டிருப்பது வெட்டிவேலையாகத்தான் இருக்கிறது. இதுவரை வரலாற்றில் சந்தித்திராத பன்முகப்பட்ட சிக்கலான பிரச்சனைகளை மனித சமூகம் எதிர்கொண்டுள்ள காலமிது. புதிய Theme கள் புதிய கருத்துக்கள், புதிய வடிவங்களை யோசிக்க வேண்டிய அவசியம் உள்ளது. நான் பாரிசில் தங்கியிருந்த நாட்களில் பார்க்க முயற்சித்துப் பார்க்க இயலாமல் போன ஒரு பல்கேரிய நாடகம் பற்றி இங்கே சொல்லத் தோன்றுகிறது. 'அமைதி காப்புப் படை' ஒன்றை அய்.நா. அவை ஒரு நாட்டுக்கு அனுப்ப உள்ளது. ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கக் கூடிய பழைய ராணுவ வீரர்கள் சிலர் அதில் போய் சேருவதற்கு எத்தனம் செய்வது போன்ற ஒரு கருவை அமைத்துக்கொண்டு அதன் மூலம் அமைதி காப்புப்படை, ராணுவத்தன்மை, ராணுவ மனநிலை போன்ற பல்வேறு பிரச்சனைகளைக் கேள்விக் குள்ளாக்குகிறது அந்நாடகம். கிறிஸ்தவம் சார்ந்த புனைவுகள், சொல்லாடல்கள் முதலிய மரபுகள் இதில் பயன்படுத்தப்பட்டாலும் இது தொடுகிற பிரச்சனைகளும் செயல்படும் தளமும் வேறாக இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். ஜெனே, பெக்கட் போன்றோரின் ஆக்கங்களிலும் இதனை நீங்கள் காணமுடியும். மரபுகளைத் தூக்கிச் சுமப்பதன் மூலம் இதைச் செய்ய முடியும் எனத் தோன்றவில்லை. தமிழ் நாட்டில் நாடகச் சூழலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுத்த மட்டில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் சில அத்தனை உவப்பளிக்கக் கூடியதாக இல்லை. சின்னச் சின்னக் குழுக்கள், இயக்கங்கள் எல்லாம் இன்று நாடகம் போடக்கூடிய நிலையில் இல்லை. வீதி நாடகம் முதலிய முயற்சிகள் இன்று பின்னுக்குத் தள்ளப் பட்டுள்ளன. அரசு சார்ந்த பெரு நிறுவனங்கள் அல்லது அரசு சாராத எம்.எஸ். சுவாமிநாதன் பவுண்டேசன், போர்ட் பவுண்டேசன் ஆதரவில் இயங்கும் முத்துச்சாமியின் நிறுவனம் போன்றவைதான் நாடகங்கள் நடத்த முடியும் என்கிற ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது. நாடகம் என்பது பெரிய அளவில் பணம் செலவிட்டு மேற்கொள்ளக்கூடிய ஒரு முயற்சியாக ஆகி விட்டது. இந்த நிறுவனங்களில் பொறுப்பேற்றுச் செயல்படக்கூடிய நபர்களின் சமூகத் தளம், சாதியப் பின்புலம் முதலியவை பற்றியெல்லாம் நாம் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. கே.ஏ.குணசேகரன் போன்ற அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கூட இவர்களை அண்டி நிற்கவும் இவர்களது பெருந்திட்டங்களில் ஒரு சிறுகருவியாக மட்டுமே நிற்கவும் வேண்டியிருக்கிறது. சமீபத்தில் அரங்கேற்றப்பட்ட ஒரு முக்கிய நாடகம் 'அவ்வை'. இன்குலாப்புடைய 'ஸ்க்ரிப்டை' மங்கை நாடகமாக்கியுள்ளார். எம்.எஸ்.சுவாமி நாதன் பவுண்டேசனின் ஆதரவோடு. அவ்வை பற்றி தமிழ் மரபில் கட்டமைக்கப்பட்ட பிம்பங்கள் சிலவற்றை உடைப்பதோடு சங்ககால இனக்குழு வாழ்க்கை முறையின் சமத்துவக்கூறுகளை, நாகரீகத்தால் மண்ணாக்கப்பட்ட சில பொதுமைக் கூறுகளை முன்நிலைப்படுத்துவதற்கு வாய்ப்பான ஒரு கரு இது. நாகரீகம், ஒழுங்குகள், ஆண்-பெண் உறவு முதலான பல்வேறு கருத் தாக்கங்களைப் பிரச்சனைப் படுத்துவதற்கு உரிய கரு. இன்குலாப் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதனைச் செய்திருந்தார். அவ்வை புலவர் மரபினள் அல்ல. நாடோடிச் சமூகத்தினள். வேரற்றவள். இனக்குழு மக்கள் மத்தியில் சென்று பாடி மகிழ்விப்பவள். அவர்களோடு ஒன்றாய் ஆடிக் கள்ளருந்திக் களிப்பவள். ஒரு பெரிய carnival ஆகக் கொண்டாட்டமாக அந்தக் காட்சிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். நொதித்துத் துகள் பறக்கும் பெரும் கள்ளுப் பானையைச் சுற்றி அதியனுடனும் மற்ற இனக்குழுவினருடனும் ஆடிக்களிக்கும் கொண்டாட்டக் காட்சி அதில் 'சென்சார்' செய்யப்பட்டிருந்ததோடு பாணினி அவ்வையின் பாத்திரத்தில் பரதம் பயின்ற ஒரு மேற்சாதி மங்கையை நடிக்க வைத்திருந்தார் மங்கை. இந்தப் பாணர் மரபில் வந்தோர் பின்னாளில் தீண்டத்தகாதவர்களாகவும் பெண்கள் தேவரடியார்களாகவும் ஆயினர். நாகரீகம், பண்பாடு விளைவித்த கொடுமைகளில் இதுவும் ஒன்று. இந்தப் பாத்திரத்தில் உயர்சாதி உடற்தோற்றமும் நளினங்களும் உடைய ஒரு பெண்ணைத் தேர்வு செய்ததிலேயே பல பிரச்சனைகள் வந்து விழுகின்றன. நேர்த்தியான நாட்டிய உடையுடன் அந்தப் பெண் ஒரு சிறிய கள்ளுக் கலயத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஒயிலாய் நிற்பதும், சாய்வதும், சரிவதும் ஒரு பாணினிக்குரியதாய் இல்லை. எனவே நாடகத்தின் நோக்கம் முற்றிலுமாய் சிதைந்து விடுகிறது. பாத்திரத்தின் உடல், அரங்கின் அதன் தோரணைகள் - ப்ரெக்ட் இதனை gest என்ற கருத்தாக்கம் மூலம் சொல்வார் - இந்த gest மிகவும் முக்கியம். 'அவ்வை' அடித்தள மக்களின் gest அய்ப் பதிவு செய்யவில்லை. எனவே நமது தமிழ்ப் பண்பாட்டாளர்கள், இதர மேட்டிமைச் சக்திகள் யாரையும் எந்தவித அதிர்ச்சியும் இல்லாமல் ரசிக்க வைத்த, பாராட்ட வைத்த ஒரு நாடகமாகத்தான் அது இருந்தது. விளிம்பு நிலையினர், தலித்துக்கள் நாடகங் களைக் கையில் எடுக்க வேண்டும். பாதல் சக்கார், சப்தர் ஹஷ்மி முதலானவர்களின் நாடக இயக்கங்கள் - அதாவது பெரு நிறுவனங்களைச் சாராமல் சிறிய அளவிலான நாடக முயற்சிகள் இந்த வகையில் கவனிக்கப்பட வேண்டியவை. நாடகங்கள் இலக்கியச் சூழல், மீடியா எல்லா வற்றிலும் இன்று மீண்டும் உயர்சாதி ஆதிக்கம் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. பார்ப்பனியத்தின் மறு வெற்றி என்று கூட இதைச் சொல்லலாம். நாடகம், பெண்ணியம், மனித உரிமை இயக்கங்கள் ஆகியவற்றைப் பார்ப்பனர்களின் கையிலிருந்து விடுவிப்பது இன்றைய முக்கியமான தேவைகளில் ஒன்று. இவர்கள் பழைய பார்ப்பனீய சரக்கை யாரையும் நோக வைக்காமல் புதிய மொந்தையில் ஊற்றித் தருபவர்களாகவே உள்ளனர்.

* ஜெயமோகனின் நாவலான 'பின் தொடரும் நிழலின் குரல்' வெளியாகியுள்ளது. நாவலில் ஜெயமோகன் இட்டுக்கட்டலாளர் ஜெயமோகனாகவே வருகிறாராம். ஒரு பாத்திரம் இவரை நோக்கி "அப்ப விஷ்ணுபுரம் இப்ப வராதா" என்று கேட்கிறதாம். இவரும் "இலங்கைத்தமிழர் இருக்க என்ன பயம்?... பத்மநாப அய்யருக்கு எழுதியிருக்கேன் பார்ப்பம்" (பக்:593) என்கிறாராம். So பத்மநாபனும் லண்டனில் அகதிகள் பெயராலும், தமிழர் நலன் புரிச் சங்கத்தின் பெயராலும் கிடைக்கும் பணத்தை விஷ்ணுபுரம் போன்றதொரு இந்துத்துவ குப்பையை கூட்டியள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தாரைவார்க்கிறாராம். "இந்தியன் சுஜாதா" அதை 'எடிட்' பண்ணுகிறாராம். இதில் தமிழர் இருக்க என்ன பயம்? என்ற எகத்தாளம் வேறு. ரெஸ்ரோரண்டுகளில் அடுப்பிலும் நெருப்பிலும் வெந்து கண்ணீரும் சோறும் தின்றுகொண்டிருக்கும் எங்கள் மீது "விஷ்ணுபுரம்" வெளிவந்ததற்கான வரலாற்றுப் பழியை சுமத்தலாமா? இது ராஜிவ்காந்தியின் மரணத்திற்கு ஒட்டுமொத்த தமிழர்கள் மீதும் பழிசுமத்திய நீதிபதி ஜெயினின் கூற்றோடு ஒப்பு நோக்கத்தக்கதல்லவா?**

ஜெயமோகன் இப்படிச் சொல்லியிருப்பது விஷமத்தனமானது. மட்டுமல்ல வேடிக்கையானதுங்கூட. இவரது புத்தகங்கள் வெளியிடுவதற்கும் அவற்றை விற்பதற்கும் யாரெல்லாம் பின்னணியில் உள்ளனர் என்கிற விசயங்கள் ரொம்பவும் அதிர்ச்சியளிக்கக்கூடியவை. இவரது எழுத்துக்கள் மூலம் இன்றைய சூழலில் யாரெல்லாம் பயனடைவார்களோ அவர்கள் எல்லோரும் வெளிப்படையாகவும் நேரடியாகவும் இதனைச் செய்து வருகின்றனர். விஷ்ணுபுரம் நாவல் ஆர். எஸ். எஸ் கடைகளில் வைத்து விற்கப்பட்டதையும் பொள்ளாச்சி மகாலிங்கம் இதன் பிரதிகளை வாங்கி விநியோகித்ததையும் நீங்கள் அறிந்திருக்கலாம். ஜெயமோகனின் கதை இப்படியுள்ள போது இவர் ஈழத் தமிழர்களைக் குறித்து இப்படிச் சொல்லியிருப்பது வழக்கமான அவரது திமிர்த்தனத்தையே காட்டுகிறது. பத்திரிகை நடத்தக் கூடிய புலம் பெயர்ந்த தமிழர்களை நேரில் வந்து பார்க்கும் போது அவர்கள் படும் கஷ்டங்கள், கடுழியங்கள் நெஞ்சைச் சுடுகின்றன. கிடைக்கும் கொஞ்ச நஞ்ச கால அவகாசத்தையும், மிச்சமாகும் கொஞ்ச நஞ்சப் பணத்தையும் பத்திரிகை வெளியீட்டிற்காகச் செலவிடுவதையும், அதன் விளைவாக குறைந்த பட்ச வசதிகளையும் குறைத்துக்கொண்டு அவர்கள் வாழ்வதையும் கேலி செய்யும் **ஆணவம்தான் இது.**

*** இது தொடர்பான இன்னொரு கேள்வி. அண்மையில் 'இந்தியாடுடே' இதழில் ஆயிரத்தாண்டின் இலக்கிய முகங்கள் என தமிழில் இருவரைக் குறிப்பிட்டிருந்தார்கள். ஜெயமோகன் அன்ட் இமயம். ஜெயமோகன் பற்றி 'பின்நவீன இலக்கியவாதி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பு வெளியாகி இருபத்திநாலு மணிநேரத்துள் சாரு நிவேதிதா, ரமேஷ்-பிரேம் போன்றோர் நஞ்சருந்தி தற்கொலை செய்திருக்க வேண்டாமா?**

**சாரு நிவேதிதாவைப்பொறுத்தமட்டில் அவர் நிச்சயம் இந்தக் கூற்றை ஏற்கமாட்டார் என உறுதியாகச் சொல்லமுடியும். பிரேம்-ரமேஷ் பற்றிச்** சொல்ல முடியாது. அவர்கள் எந்த நேரத்தில் என்ன கருத்தைச் சொல்வார்கள், யார் பின்னாடி போவார்கள் என்று சொல்ல முடியாது. சமீபமாக அவர்கள் ஜெயமோகன் பின்னாடியும் சுந்தரராமசாமி பின்னாடியும் சுத்திக் கொண்டிருக்கிறார்கள். காலச்சுவடு மற்றும் ஜெயமோகன் குழுவினருக்கும் இப்படிச் சில "பின் நவீனத்துவவாதிகள்" தேவைப்படுகின்றனர். தங்களுடைய எழுத்துக்களை 'மகா இலக்கியங்கள்' எனப் புகழக்கூடிய 'பின் நவீனத்துவவாதிகள்'. அம்பேத்கர் மற்றும் புத்த மதம் பற்றி பிறரது கவனத்தை ஈர்த்தே ஆவது என்கிற ரீதியில் அட்டகாசமான கருத்துக்களை எல்லாம் உதிர்த்துக் கொண்டிருக்கும் இவர்கள் இருவரும் எப்படி விஷ்ணுபுரம் நாவலைச் சிலாகிக்க முடிகிறது, எப்படி விஷ்ணுபுரம் நாவல் அம்பேத்கர்/புத்த மதத்துடன் இணைந்து நிற்கிறது அல்லது அம்பேத்கர்/புத்தமதச் சிந்தனைகளுக்கு விரோதமானாலும் எப்படி மகா இலக்கியமாகிறது என்பதைப் பதிவு செய்தால் நல்லது. சமீபத்தில் நீங்கள் குறிப்பிட்ட 'பின் தொடரும் நிழலின் குரல்கள்' நாவல் வெளியீட்டு நிகழ்ச்சியில் பிரேம் பேச்சைக் கேட்டேன். எதையும் தெளிவாய்ச் சொல்லாத் சத்தற்ற பேச்சு அது. ஜெயமோகனைப் பின் நவீனத்துவவாதி எனச் சொல்கிறவர்கள் எந்த அடிப்படையில் அப்படிச் சொல்கிறார்கள் என்பதை விளக்கினால் நல்லது. ஜெயமோகனைப் பொறுத்தமட்டில் பேசுகிற விசயங்கள்- உயர்த்திப்பிடிக்கும் கருத்தியல்கள் மட்டுமல்ல அவரது Narrative தன்மையும் மிகவும் சனாதனமான ஒன்று. ஒரு குறிப்பான மையத்தைச் சுற்றி இறுக்கமாக ஒழுங்கமைக்கப்பட்ட வடிவக்கூறுகளை (geomentry) அவரது எழுத்துக்கள் எல்லாவற்றிலும் காணலாம். மேலோட்டமாய்த் தெரியும் Non-linear கூறுகளுக்கு அப்பால் இத்தகைய மையம் சார்ந்த தன்மையை, நாவலை முழுமையாகப் படிக்கும்போது உணர முடியும். அந்த மையம் 'விஷ்ணுபுரத்தைப்' பொறுத்தமட்டில் இந்துக் கலாச்சாரம். சாருநிவேதிதாவின் 'ஸீரோ டிகிரி' நாவலை விஷ்ணுபுரத்துடன் ஒப்பிட்டால் ஒரு அம்சம் புலப்படும். இரு நாவல்களிலும் வருகிற தேவதாசிகள்/பாலியல் தொழிலாளிகளை ஒப்பிடுங்கள். ஜெயமோகனின் நாவலில் அவர்கள் இந்துக் கலாச்சாரத்தைக் காப்பாற்றுபவர்களாகவே வருவர். இந்தக் கலாச்சாரத்தினால் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்த போதும் இந்தக் கலாச்சாரத்தைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை அவர்கள் சுமந்து கொள்வார்கள். ஒருத்தியின் ஆடிய பாதம் ஒரு ஆழ்வாரையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்குகிறது. இன்னொருத்தியோ 'விஷ்ணு புரம்' என்கிற 'மகா காவியத்தை'ச் சுமந்து பரப்புவதற்குத்தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொள்கிறாள். தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தை தேவதாசியரின் பிரதிநிதிகள் சென்ற நூற்றாண்டின் மத்தியில் கொண்டு வந்தபோது அதனை வன்மையாக எதிர்த்த சத்தியமூர்த்தி அய்யர் "தேவதாசிகள் இந்துக் கலாச்சாரத்தைக் காப்பாற்றுபவர்கள். தேவதாசி முறையை ஒழிப்பது இந்தியக் கலாச்சாரத்தின் மீதான தாக்குதல்" என்கிற ரீதியில் பேசியது இங்கே இணைத்துப் பார்க்கத் தக்கது. ஆனால் 'ஸீரோ டிகிரி' யில் வருகிற பாலியல் தொழிலாளிகள் இந்தக் கலாச்சாரத்தின் மீது, இந்த மகா இலக்கியங்களின் மீது மூத்திரம் அடிப்பவர்களாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

கலாச்சாரத்தைக் மையப்படுத்தும் விஷ்ணுபுரம் நாவலை நாடோடித் தன்மையான, வேர்களற்ற போஸ் மார்டனிச எழுத்தாகச் சொல்வதை விட அறியாமை ஏதும் இருக்க முடியாது. இன்னொரு பக்கம் பார்த்தீர்களானால் இவர்கள் எல்லோரும் போஸ்ட் மார்டனிசத்தைக் கிண்டலடிக்கிறவர்கள். அப்படியானால் ஜெயமோகனை இப்படிச் சொல்வதன் பொருளென்ன என்றும் விளங்கவில்லை. தமிழ்ப் பத்திரிகை உலகம் பற்றியும் நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வெண்டும். இதில் பணியாற்றக் கூடியவர்களில் பெரும்பாலோர் விரிவான இலக்கியப் பரிச்சயம் உடையவர்கள் அல்ல.

***நீங்கள் குறிப்பிடுவது வெகுசனப் பத்திரிகைகள் குறித்தா? சிறு பத்திரிகைகள் குறித்தா?**

பெரும் பத்திரிகைகளைத்தான் சொல்கிறேன். அதிகம் விபரம் தெரியாத இளைஞர்களைக் குறைந்த சம்பளத்தில் அதிக வேலை வாங்கும் நிறுவனங்களாகவே இவை உள்ளன. யாரோ ஒரே ஒருவர் மட்டும் கொஞ்சம் "காத்திரமான" நபராக இருப்பார். அவருக்கு மட்டும் கொஞ்சம் நியாயமான சம்பளம் கொடுப்பார்கள். விவரமானவர்களைத் தேவையானால் வெளியே வைத்தே பயன்படுத்திக் கொள்ளலாம். உள்ளே அனுமதித்து வம்பை விலைக்கு வாங்க வேண்டாம் என்பதே அவர்களின் அணுகல் முறை. இந்த இளைஞர்கள் அதிகம் படிப்பதில்லை. படிக்கிற தேவையுமில்லை. எனவே போகிற போக்கில் இப்படிப் பொறுப்பற்ற வசனங்களை உதிர்த்துச் செல்வது வாடிக்கையாகிவிட்டது. இதை எல்லாம் இங்கே யாரும் 'சீரியசாக' எடுத்துக் கொள்வதில்லை. இன்னொன்றையும் கவனியுங்கள். 'இமயத்தை' ஏன் அவர்கள் தேர்வு செய்தார்கள் என்பதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள், தலித் இலக்கியத்தை தலித்துகள்தான் எழுத வேண்டுமென்பதில்லை, யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்கிற கருத்தை ஏற்றுக் கொள்கிற வராம் இமயம். தலித் இலக்கியம் தோற்றம் கொண்ட போது அதனை ஒரேயடியாக எதிர்த்தவர்கள் இன்று அது நிலையானவுடன் தலித் இலக்கியத்தை யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்பன போன்ற கருத்துகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்து தலித்தியத்தை நீர்க்கச் செய்யும் முயற்சியில் உள்ளார்கள். இமயத்தின் இரு நாவல்களையும் வெளியிட்டது 'க்ரியா' என்னும் பெரு நிறுவனம். தலித்தியம் முதலான சிந்தனைகளை ஏற்கக்கூடிய நிறுவனம் அல்ல அது.

தலித்தியத்தை அடிப்படையில் ஏற்காத பலரும் இமயத்தின் முதல் நாவலை வெகுவாகப் பாராட்டினார்கள். ராஜ் கவுதமன் இதனைச் சரியாகத் தோலுரித்தார். தலித்துக்களுக்குள் உள்ள தீண்டாமையை அந்த நாவல் பேசியது. தலித்துக்களுக்குள்ளும்தான் சாதியம் இருக்கிறதே- பிறகென்ன நீங்கள் சாதியத்தை எதிர்ப்பது என்கிற ரீதியில் பேசுவதற்கு தோதாகத்தான் இமயத்தைத் தூக்கித் தங்கள் சட்டைப் பைக்குள் போட்டுக் கொள்கின்றனர்.

*** "இந்தியா டுடே" இலக்கிய மலர் பார்ப்பனிய சாய்வு உடையதாக இருந்ததெனச் சொல்லி அதை மலம் துடைத்தெறிந்து எதிர்ப்பைக் காட்டியவர்கள் நீங்கள். ஆனால் அண்மைக்காலங்களில் நீங்களும் பெரும் பத்திரிகைகளை நோக்கி நகர்வதாய்த் தெரிகிறது. உதாரணத்துக்கு நீங்கள் குமுதத்தில் ஞானக்கூத்தனுடன் நடாத்திய உரையாடலைக் குறிப்பிட விரும்புகிறேன். உங்களது மதிப்பீடுகள் மாறியிருக்கிறதா? அல்லது இந்தியா டுடேக்கும் குமுதத்துக்கும் இடையில் ஏதாவது வித்தியாசத்தைக் கண்டிருக்கிறீர்களா?**

'இந்தியாடுடே' இலக்கிய மலரைக் கிழித்து மலந்துடைத்தது என்பது அது ஒரு பெரும் பத்திரிகை என்பதற்காகச் செய்யப்பட்டது அல்ல. பெரும் பத்திரிகையில் பங்கு பெறக்கூடாது என்கிற கருத்தை நாங்கள் எப்போதும், அப்போதும் சரி, இப்போதும் சரி கொண்டிருக்கவில்லை. 'தினமணி' முதலான இதழ்களில் அப்போதும் எழுதியுள்ளோம். நமது கருத்துக்களை எவ்விதச் சிதைவுமின்றி சொல்ல வாய்ப்புள்ள போதுதான் அதைக்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்ய முடியும். ஆனால் பெரிய பத்திரிகைகளில் முகங்காட்டுவது என்பதற்காக பத்திரி காசிரியர்களை அதுவும் வாசந்தி மாதிரி முழுக்க முழுக்க பார்ப்பனீய சக்திகளை நத்தித் திரிவது என்கிற காரியத்தை நான் எப்போதும் செய்ததில்லை. 'இந்தியாருடே' இதழ் மீது அத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டது என்பது அன்றைய இலக்கிய உலகில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பரபரப்பான அரசியல் நிகழ்வு. பலரையும் அஞ்ச வைத்த ஒரு நடவடிக்கை. 'தலித் இலக்கியம்' மற்றும் விளிம்பு நிலை எழுத்துக் களைப் பெரும் பத்திரிகைகள் வேறு வழியின்றி ஏற்க நேர்ந்ததற்கான பல்வேறு காரணங்களில் அந்நிகழ்வும் ஒன்று. முழுக்க முழுக்க பார்ப்பனீய நெடி வீசியதற்காகவே அதைச் செய்தோம்.

'இந்தியாருடே'க்கும் 'குமுத'த்திற்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை என்ற போதும் சில வித்தியாசங்கள் இருக்கவும் செய்கின்றன. குமுதம் ஒரு சாதாரண வெகுசனப் பத்திரிகை. தரங்குறைந்த 'ஆபாசப்' பத்திரிகை என்கிற மதிப்பீடும் இலக்கியவாதிகள் மத்தியில் உண்டு. ஆனால் 'இந்தியாருடே'யோ தரமான இலக்கியப் பத்திரிகை என்கிற பாவனையோடு வெளிவரும் ஒரு இதழ். வாசந்தியின் இலக்கியப் பார்வைதான் இந்தியாடுடேயின் பார்வை. குமுதத்தைப் பொறுத்தமட்டில் பல மாற்றங்கள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன. வரவேற்கத்தக்க மாற்றங்கள் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் சுஜாதா, மாலன் போன்ற இலக்கியப் புனிதர்கள் யாரும் இப்போது அதில் இல்லை. அதில் இப்போது பணி புரியும் பாபுயோகேஸ்வரன், மணா போன்றவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு நிறப்பிரிகையோடு தொடர்புடையவர்கள். அந்த உரையாடலில் பங்கு பெற்றதற்கு இதெல்லாம் ஒரு காரணம். அதோடு ஞானக்கூத்தனையும் கூட சுந்தரராமசாமி போன்றவர்களிடமிருந்து சற்றே வேறுபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. முழுக்க முழுக்க இலக்கியம் பற்றிய பார்ப்பனீயச் சிந்தனைகள் நிறைந்தவரானாலும் ஞானக்கூத்தனிடம் உள்ள கொஞ்ச நஞ்ச சனநாயகப் பண்புகளும் கூட ராமசாமி போன்ற தந்திரசாலிகளிடம் இருக்காது. இத்தகைய ஒரு உரையாடலுக்கே ராமசாமி போன்றவர்கள் ஒத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். விரிவான அந்த உரையாடலின் ஒரு சிறு பகுதிதான் குமுதத்தில் வந்தது. அவ்வுரையாடலை முழுமையாக ஒரு தனி வெளியீடாகக் கொண்டு வரவும் உள்ளனர்.

** தமிழக சிறுபத்திரிகைச் சூழலில் மீண்டும் சே-குவேரா பாணி அதிசாகசவாத அரசியல் பேசப்படுகிறதே - குறிப்பாக "காலக்குறி" இதழைச் சுட்டலாம். கஸ்ரோ -சே.குவேரா பாணி அரசியலில் பின் விளைவுகளை லத்தீன் அமெரிக்க ஒடுக்கப்பட்டவர்கள் இப்போது அறுவடை செய்வதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். கட்டக்கடைசியாக அருளப்ப சின்னப்பனும் வந்து கஸ்ரோவை ஆசீர்வதித்துவிட்டுப் போய்விட்டான். சண்டினிஸ்டுகளின் சீரழிவுக்கும் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கும் மில்லியன் ஆதாரங்கள் உள்ளன. புகழ் பெற்ற சண்டினிஸ்ட் விக்டர் ரிறாடோ, அவர்களின் உத்தியோக பூர்வ பத்திரிகையான "பரிக்கடா" வில் 1988 தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் பற்றி கூறுகையில் "தொழிலாளர்கள் எல்லாமே சொர்க்கத்திலிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள்" என்று சொன்ன ஒற்றை வரி போதும் சண்டினிஸ்டுகளின் வர்க்கச் சாய்வை அம்பலப்படுத்துவதற்கு. இதையெல்லாம் இன்றுவரை அரசியல் ரீதியாக சீர்தூக்கிப் பார்க்காமல் சண்டினிஸ்டுகளின் சாகசங்கள் குறித்து "கன் பைட் காஞ்சனா" பாணியில் கட்டுரைகள் எழுதியும் மொழிபெயர்த்தும் வருகிறார்கள். ஸ்டாலினிஸம், மாவோயிஸம், ட்ரொட்ஸ்கியம் எல்லாம் அம்பலப்பட்டு போன காரணங்களாலே அவற்றுக்கு பதிலீடாக இவர்கள் இன்னும் இன்னும் மூளையற்ற துப்பாக்கிகளில் தொங்குகிறார்களா?*

சேகுவராவைப் பொறுத்தமட்டில் ஒரு விசயத்தை நாம் மறக்கக் கூடாது. ஒரு நாட்டின் புரட்சியில் பங்கு பெற்று, அது வெற்றியுமடைந்து, ஆட்சியிலும் பங்கேற்று அரசதிகாரம், பதவி சுகம், பெரும் புகழ் ஆகியவற்றோடு நின்றுவிடாமல் இவற்றிலிருந்து தப்பித்துச் சென்றவர் அவர். மீண்டும் இன்னொரு நாட்டுப் புரட்சியில் பங்கேற்று உயிரும் துறக்கிறார். ஆனால் இங்கே சேகுவராவின் படத்தை வீட்டில் ஒட்டியிருப்பவர்கள், புத்தக அட்டைகளில் வெளியிடுகிறவர்கள், பனியனில் போட்டும் கொள்கிறவர்கள்... இந்த நண்பர்களில் பலர் எந்தவிதமான தீவிர அரசியலில் மட்டுமல்ல, கருத்துரிமைப் பறிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகக்கூட எதையும் செய்யாதவர்கள். எல்லாவற்றிலும் குறிப்பாக தலித்தியச் செயற் பாடுகளிலிருந்து முற்றாகத் தங்களை விலக்கி நிறுத்திக் கொண்டுள்ளவர்கள். இந்துத்து வத்திற்கு எதிராகவும் இவர்கள் எதையும் பேசியதில்லை என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். இவர்கள் சேகுவரா, பிடல் காஸ்ட்ரோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றவர்களை டீ சேர்ட்டுக்களில் போட்டுச் செல்வதற்கு ஒரு காரணம் அவர்கள் இருவரும் ஸ்டைலான தோற்றம் உடையவர்களாக இருப்பதும் கூட. இதை நான் வேடிக்கையாக அல்ல சீரியசாகவே சொல்கிறேன். 'காலக்குறி' பத்திரிகையைப் பொறுத்த வரையில் அதனுடைய இரட்டை முகம் ரொம்பவும் சந்தர்ப்பவாதத் தன்மையுடையது. ஒரு பக்கம் ரொம்பத் தீவிரமாக Body Politics எல்லாம் பேசுவார்கள். இன்னொரு பக்கம் வேணுகோபால் அல்லது டெர்ரி ஈகிள்டன் போன்றோரின் மட்டையடிக் கட்டுரைகளைப் போடுவார்கள். நடக்கிற விவாதங்கள் எதிலும் கலந்துகொள்ளாமல் கள்ள மவுனம் சாதிப்பார்கள். தலித்களோ, சிறுபான்மையினரோ பாதிக்கப்படும் போது குறைந்த பட்ச எதிர்ப்பைக்கூடக் காட்டமாட்டார்கள். எந்த அரசியற் செயற்பாடுகளும் இல்லாத இவர்கள் சேகுவேரா படத்தைப் போடுவது, பின்நவீனத்துவத்தைக் காய்வது இவற்றைத்தான் மிகப் பெரிய அரசியலாக நினைத்துக் கொண்டுள்ளனர்.

* தொடர்ச்சியாக பின்நவீனத்துவம், தலித்தியம், பெரியாரியம் போன்றவைகள் குறுங்குழுவாதங்கள் அப்படி இப்படி எனச் சொல்லித் தொல்லைகொடுத்து வருபவர்களில் தலையானவர் நு.:மான். மார்க்சிய இயக்கத்துக்குள் இருக்கும் பலபத்துப் போக்குகளில் எந்தப் போக்கை இவர் சார்ந்திருக்கிறார் என்பதை இன்று வரை எவரும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு "சும்மா" மார்க்சியம் பேசிக்கொண்டிருப்பவர். பின்நவீனத்துவம், தலித்தியம் என்பவற்றையெல்லாம் எதிர்க்கும் இந்த "மனிதநேய" மார்க்சியர் கொலைக்காரி சந்திரிகா ராசாத்திக்கு கொள்ளியெடுத்துக் கொடுக்கிற மந்திரி எம்.எச்.எம்.அஷ்ர:ப்பின் "நான் எனும் நீ" எனும் கவிதைத் தொகுதிக்கு முன்னுரையும் எழுதி அமைச்சரின் கவிதையில் சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிரான குரல் ஒலிப்பதை தான் கண்டுபிடித்திருப்பதாகவும் குறிப்பிடுகிறார். தவிரவும் தமிழ்-முஸ்லிம்-சிங்கள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள்மீதும் காட்டாட்சி நடத்திவரும் இலங்கை அரசின் முக்கிய பொய்பரப்பும் ஊடகமான ரூபவாகினியிலும் உயர்பதவியை ஏற்றுக்கொண்டார். இந்த தடம் புரளல்கள் மார்க்சியத்தின் பக்கவிளைவுகள் எனலாமா?

இத்தகைய போக்குகளை மார்க்சியத்தின் பக்க விளைவுகள் என்று சொல்வதைக் காட்டிலும் இன்றைய அவர்களின் கோட்பாட்டு நிலைப் பாடுகளுடன் இணைத்துப்பார்ப்பதே பொருத்தமாக இருக்கும். பின் நவீனத்துவத்தை இவர்கள் எதிர்ப்பது என்பதன் இன்னொரு பக்கமாகத்தான் நான் இதனைப் பார்க்கிறேன். நு:.மான் போன்றவர்கள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கும் கிளிப் பிள்ளைகள் ஆகிவிட்டார்கள். புதியதாக எதையும் அறிந்து கொள்ளும், கிரகித்துக் கொள்ளும் சக்தி இவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சிவத்தம்பியைப் பார்த்தீர்களானால் இசுலாமியர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டது குறித்து அவர் சாதிக்கும் மவுனம் என்பது அவருக்குள்ளிருக்கும் ஒற்றைப் பரிமாண தேசியவாதத்தினுடைய வெளிப்பாடுதான். பன்மைத் தன்மையை ஏற்காத தேசியவாதம் எப்படிப் பின்நவீனத்துவத்தை அங்கீகரிக்கும்? நு:.மானைப் பொறுத்த மட்டில் அவர் ஒரு authority யை நேசிக்கக் கூடிய ஒரு அடிப்படைவாதி. 'ஆசிரியன்' செத்துவிட்டான் என்பதைக் காதால் கேட்கக் கூடச் சகியாதவர் அவர். இவர்களெல்லாம் வேறெப்படி இருப்பார்கள் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? இவர்கள் மார்க்சிஸ்டுகளாக இருந்தது ஒரே ஒரு அம்சத்தில்தான். மார்க்சியத்தில்பிரிக்க இயலாமல் நிறைந்திருந்த ஹெகலியக் கூறான மொத்தத்துவ அணுகல் முறையை மட்டுமே வரித்துக் கொண்டவர்கள் இவர்கள். ஹெகலைப் பொறுத்தமட்டில் தத்துவ வகையினங்களுக்குள் வித்தியாசங்களை அங்கீகரித்தது அதனுடைய மிகப் பெரிய பங்களிப்பு. Thesis, Anti thesis என கோட்பாடு, எதிர்க் கோட்பாடு என்று அணுகி கோட்பாட்டின் மற்றமையை ஏற்றுக் கொண்டது ஹெகலியம். முதலாளி, பாட்டாளி என சமூகத்திற்குள் உள்ள வித்தியாசங்களை முதன்மைப்படுத்திய வகையில் புரட்சிகரமானதாக விளங்கியது மார்க்சியம். ஆனால் ஹெகலியம் Thesis X Anti thesis என்கிற முரண் நிலைகளை, வித்தியாசங்களை அங்கீகரித்ததோடு நிற்கவில்லை. அந்த முரணின் தீர்வாக அல்லது அடுத்த நிலையாக synthesis என்கிற இணைவை வற்புறுத்தியதன் மூலம் முரண்களின் தீர்வு அல்லது அடுத்த பரிமாணம் என்கிற வகையில் ஒரு மொத்தத்துவத்தை, முரண்களற்ற நிலையை அது முன் வைத்தது. மார்க்சியமும் அதனை அப்படியே ஏற்றுக் கொண்டது. புரட்சிக்குப் பிந்திய சமூகம் பற்றிய அதன் அணுகல் முறைகளில் இது வெளிப் படையாகத் தெரிந்தது. மற்ற எல்லாவிதமான மார்க்சிய அணுகல் முறைகளிலும் இந்த மொத்தத்துவ அணுகல் முறை ஊடாக சூழலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. எனவே நு.'.மான் போன்ற இன்றைய அதிகார அமைப்பை நேசிக்கக்கூடியவர்கள் அதே சமயத்தில் தங்களை மார்க்சியவாதிகளாகவும் காட்டிக் கொள்ள முடிந்தது இந்த வகையில்தான். முரண்பாடுகளின் தீர்வைக் காட்டிலும் மோதலை முக்கியப் படுத்துபவர்களாக நீட்ஷே, லியோதார்த் போன்றோரைச் சொல்லலாம். தீர்ப்பு (Judgement) என்பது சாத்தியமில்லை. தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கும் வரைதான் நீதி நிலைநாட்டப்படுகிறது என்பன போன்ற கருத்துக்களையும் பின் நவீனத்துவம் முன் வைப்பதை நாம் இந்தப் பின்னணியில் விளங்கிக் கொள்வது அவசியம்.

*** நிறப்பிரிகை சார்ந்த தோழிகள் தோழர்களினதும் முக்கிய பணிகளாக எவற்றை இலக்கு வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?**

நான் முன்பே சொன்னேன். நாங்கள் அப்படி ஒன்றும் பெரிய வட்டத்தினர் அல்ல. திட்டங்கள், இலக்குகள் என்று பெரிதாக எதையும் நான் சொல்ல விரும்பவில்லை. சொல்லப் போனால் கடந்த ஓராண்டில் எங்களின் செயற்பாடுகள் சற்றே குறைந்துள்ளது என்பதுதான் உண்மை. நாங்கள் மட்டுமல்ல இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளில் எழுச்சி பெற்ற தலித்தியக் கோட்பாடுகள், பின்நவீனத்துவச் சிந்தனைகள், இலக்கியம் பற்றிய புதிய கருத்தாக்கங்கள் இவை எல்லாமும் கூட அடுத்த கட்டமாய்ப் போகவில்லை. ஆனால் அதே சமயத்தில் இலக்கியம், பிரதி, ஆசிரியன் குறித்த புதிய கருத்தாக்கங் களையும் தலித்தியம், விளிம்பு நிலைச் சிந்தனை கள் (subaltern studies) ஆகியவற்றின் பிரதான கோட்பாடுகளையும் மறுத் துக் கொண்டிருந்தவர்கள் ரொம்பத் . தீவிரமாக இயங்கி வருகின்றனர். இலக்கியப் புனிதத்தைக் கட்டமைப்பதன் மூலம் அதிகாரத்தை ருசித்துச் சுகம் கண்ட இலக்கிய அதிகாரிகள் இவர்கள். அரசியல் சூழலை எடுத்துக் கொண்டால் இந்துத்துவம் முதலான பாசிசப்போக்குகள் ஒரு புறம். உலகமயமாதல்- Globalisation என்கிற உலக முதலாளிய அமைப்பில் திட்டமிட்ட செயற்பாடுகள் இன்னொரு பக்கம். Globalisation எல்லாவற்றையும் மறுவாசிப்புச் செய்து தன்னுடைய ஓரங்கமாக அவற்றை மாற்ற முயற்சிக்கிறது. புதிய ஆயிரத்தாண்டு மற்றும் உலக மயச் சூழலில் செவ்வியல் இலக்கியங்களில் முக்கியத்துவம் மற்றும் பொருத்தப்பாடு குறித்து Globalistகள் சில ஆண்டுகளாகவே பேசி வருகின்றனர். இலக்கிய அதிகாரத்தைத் தக்க வைக்க முயற்சிக்கிறவர்கள் இந்த முயற்சிகளோடு தங்களை இணைத்துக் கொள்கின்றனர். இலக்கியப் புனிதங்களைப் போட்டுடைத்த புதிய சிந்தனைகள்தான் இவர்களின் முதல் எதிரி. நாடகத் துறையில் மேற்கொள்ளப்படும் பிரமாண்ட முயற்சிகளைப் பற்றி முன்பே சொன்னேன். எல்லாவற்றையும் பிரமாண்டமாகச் செய்வது என்கிற வகையில் சிறிய அளவிலான செயற்பாடுகளை பொருத்தமற்றதாக ஆக்குகிற இவர்களின் ஆபத்தான உள்நோக்கமும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்துத்துவ அரசு, Globalisation ஆகியவற்றின் வலுவான ஆதரவும் இவர்களுக்கு உண்டு. இந்த முயற்சிகளை அடையாளங்கண்டு அவற்றைத்



**சுமார் கடந்த 20பது ஆண்டு காலமாக தமிழ்ச் சூழலில் நவீன சிந்தனைகளை அறிமுகப்படுத்தி பரவலான விவாதங்களை ஏற் படுத்தி வருபவர்களுள் குறிப் பிடத் தக்கவர் பேராசிரியர் அ.மார்க்ஸ். சொல்லில் மட்டும் அல்ல செயலிலும் வேகமான இவர் தலித்துகள், பெண்கள், சிறுபான்மை முஸ்லிம்கள் என்று ஒடுக்குமுறைக்குள்ளாகும் சகலரினதும் போராட்டங்களிலும் களம் இறங்கி கைகொடுத்து வருபவர். இதனால் அரசினதும், ஆதிக்க சக்திகளினதும் பழிவாங் கல்களுக்கு அடிக்கடி உள்ளாகு பவர். அரசியல், இலக்கியம், சமூகவில் என்று பல்வேறு தளங் களிலும் இவரது நூல்கள் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றமை கவனங்கொள்ளற் பாலது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோலுரிப்பது எமது முதல் வேலையாக இருக்கிறது. இதன் ஓரங்கமாக நிறப்பிரிகையை குறைந்த பக்கங்களுடனாகிலும் தொடர்ந்து கொண்டு வருவது அவசியமாக இருக்கிறது. உலக அளவில் மீண்டும் தத்துவக் கேள்விகளும் தத்துவப் படிப்பும் முதன்மை பெறுவதைக் காணலாம்.

புத்தகக் கடைகளுக்குப் போகிறவர்கள் இதை அவதானிக்கலாம். ரொம்பவும் Popular ஆக தத்துவ நூற்கள் பலவும் எழுதப்படுகின்றன. நீட்ஷே, ஹெய்டெகர் முதலான சிந்தனையாளர்களின் நூற்கள் மீண்டும் அச்சிடப்படுகின்றன. மிக விரைவாக அவை விற்றுப் போவதையும் காணலாம். எல்லாப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டுள்ளன என்கிற மாடர்னிச மமதை உடைந்து போனதன் விளைவாகத்தான் நாம் இதைப் பார்க்க முடியும். எனவே இத்தகைய தத்துவார்த்தக் கேள்விகளை தமிழ்ச் சூழலில் விவாதத்திற்குள்ளாக்கும், அறிமுகப்படுத்தும் பணியும் நமக்கு இருக்கிறது. Polemics- விவாதங்களிலிருந்து நாம் ஒதுங்க முடியாத நிலை இருக்கிறது. அரசியற் களத்தைப் பொறுத்தமட்டில் வழக்கம் போல இந்துத்துவம் முதலான பாசிச எதிர்ப்பு, சுற்றுச் சூழல் வாதிகளைப் போல வரட்டுத்தனமாக Globalisation- அய் எதிர்க்காமல் Globalisation உம் பாசிசமும் சந்திக்கக்கூடிய புள்ளிகளைக் கண்டறிந்து எதிர்ப்பதும் தலித்துகள், சிறுபான்மையினர் முதலான ஒடுக்கப்பட்ட சக்திகளின் போராட்டங்களோடு தொடர்ந்து நம்மை இணைத்தக் கொள்வதும்தான் நம்முடைய செயல்பாடாக இருக்க முடியும். எங்களுக்குச் சாத்தியமான அளவிற்கு இவற்றைச் செய்து கொண்டே இருப்போம்.

* * *

## நன்றிகள்

- யாதிரா - (2,3) (கவிதைக்கான இதழ்)
  YAATHRA 37, Dhankanatta Road, Mabola-Wattala
- உறவு (மார்க்சிய தத்துவ இதழ்)
  கா.சே.பாலசுப்பிரமணியன், 6/5 கீழகொரட்டியார் தெரு, காரைக்குடி -630001
- தேசபக்தன் (தமிழீழ புதிய ஜனநாயக கட்சி ஏடு)
  A.Jayaratna, 67, Parkwood, Villege DR, # 308 Donmills Ontario, M342x4, Canada
- கண்ணோட்டம் (E.P.R.L.F வரதர்பிரிவு)
  37/2 1/1 Wimalassara road, Kalubowila, Dehiwala.
- பிரவாகினி (பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன வெளியீடு)
  W.E.R.C, 58 DHarnarama Road, Colombo-6
- பெண்ணடிமைதீர (தமிழ்நாடு பெண்ணுரிமை கழக வெளியீடு)
  அஜிதா, த.பெ.எண். 6937
  கே.கே.நகர்.தபால் நிலையம், சென்னை-78
- "மூன்றாவது மனிதன்" (மே.ஜூலை இதழ்)
  53, Vauxhall Lane, Colombo-02
- "திவ்வியா" (நிழல்படங்களுக்கான கவிதைகள்)
  Puthunagah Selladurai, 6, Les dix Arpents Bruns 95610 Eragny Suroise, France
- "காலக்குறி" இதழ் மே-ஜூலை-2000
  24, Alagiri Nagar, Second, Vadapalani, Chennai-600026
- "காலச்சுவடு" இதழ்-31
  151, கே.பி.சாலை, நாகர் கோயில் -629001
- "ஏழைதாசன்" இதழ்கள்- 79,80
  26, அடப்பன்வயல், 8வது தெரு, புதுக்கோட்டை-622002
- "பயனீட்டாளர்" ஓகஸ்ட-2000
  Gonsumers Association of penang, 228 Jalan Mascalister, 10400 Penang, Malasia

**வெளிவந்துவிட்டது**

*U.T.H.R(J)*

மனித உரிமைகளுக்கான (யாழ்) பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிக்கை.

இல-24

**வாசகர்கட்கு:-**

பின்நவீனத்துவ நிலை:- "அறிவின்மீது ஓர் அறிக்கை" என்கின்ற ஜோன் ஃபிரான்ஸுவா லியோதாரினுடைய எமது மொழிபெயர்ப்புத் தொடரினை நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இவ்விதழில் பிரசுரிக்க முடியவில்லை என்பது குறித்து வருந்துகிறோம்.

-எக்ஸில்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டு கடிதங்கள்

## ஒன்று

இறுகியிருக்கும் மௌனங்களின் துச்ச நாவுகள்
துழாவி சுவைக்கின்றன அந்தரங்கத்தின்
உட் சுவர்கள் மீது

கசிந்து தம்மின் துயரங்களையோ
ஆட்கொள்ளவியலாத ஆன்மாவின்
தூய்மையையோ அறிவதில்லை.
கோணலாகிப் போன
உறவின் நேர்கோட்டுப் பாதை.

விதியென்பதை விட்டுக் கொடுக்காததை
எவரிடமோ பெறும் மர்ம உறவு.
சந்தேகத்தின் சூல் ஒன்றை உடலுக்குள்
நிச்சயமாய் ஏற்றுக் கொள்ளவியலாது.

போன திசைகளின் சுவடுகளை
நினைத்துப் பார்க்கிறேன்.

வெறிகொண்ட உடற் கசிவுகளை
துடைத்துக்கொள்ள ஒரு கைக்குட்டை
போதுமென்கிறாய்.

அந்தரங்க சுத்தியின் மீது ஆணையிட
தயாரில்லை. அருவருப்பான சத்தியத்தின்
மீதும் கரிச் சாபம் பூசி விடுகிறேன்.

எங்கோ நடுநிசியில் எல்லைகளை
கடந்து பெயரறியாத ஒருத்தியின்
உடலைச் சுவைக்கின்றாய்
நான்கு டாலருக்கு.

தேகத்தின் பசி இயற்கையென்கிறாய்.
உந்தன் நிலை போலத்தான்
எனக்கும்.

முன்பிருந்த அழுத்தம் விலகி
முகமறியா முதல் இளைஞனை
உறுதி செய்கிறேன் இன்னும்.

சில கணங்கள். இன்னும்
சில தினங்கள்.
தடுமாற்ற பெண்டுலத்தின் நின்று
விடும் கணம் எதுவோ

என் இயலவியலாத தேகம் நிதானம்
மீறி பரவுகையில்
சாக்கடையிலோ,
சந்தையிலோ போய் விழுந்தாய் எனப்
பெயரிடுவாய் எனில்
குற்றம் உனதே!

"மனம் தூய்மையகன்ற போதின்
பெண் கற்பொழுக்கம் பாழ்" என்றதின்

புளுகை உடைக்கிறேன்
முதன் முறையாய்
தடைகளை மீறுகிறேன்.

அன்புள்ள கணவனே! உனக்கும்
இனி தோன்றுமா இவ்விடர்.

இன்னும் அன்புடன்
-சீதா-

## இரண்டு

ஒரு வெள்ளைக் கடுதாசியில்
எழுதி முடிக்காத துண்டு வரியில்
நிற்கிறது உன் உலகின்
நுழைவாயில்.

உள்ளுக்குள் ஒளிந்திருந்த காற்று
குதத்தின் வழியாக வெளியேறுவதைப்
போல நா கரித்தலில்
வெளியேறுகின்றன சாடியபடி
வார்த்தைகள்.

உடல் பெரிய சொர்க்கம்.
ஆன்மாவின் மையத்தை விட
தேகத்தின் உண்மை நிச்சயம்.

தபவு பாராது சிரத்தையின்றி
சுதந்திரத்தை நிறுவு. எவர் தடையிலும்
ஏதுமில்லை மகளே!
என் விலங்கு தளைகளை சுமந்தபடி
கல்லறைக்குப் போகிறேன். நான்.

காமம் கொடூரமென்பவர் எவரோ
அவர்களையும் திருப்பிக் கேள்.
உடலின் நான்கு பாதைகளை
அடக்க கதவேது.

இன்புறுறு மகளே!
உள்ளுள் கள்ளமில்லாதவள் எனச்
சொல்லும் பொய்யின் முகமூடி
கிழிப்பாயாக.

தாய்மையின் பேருவகை, காமத்தின்
கருவடி
சார்ந்த பொய் கரங்களை விலக்கி
கதகதக்கும் பெண்மைக்கு
அணி சேர்ப்பாயாக.

அன்புடன்
அனுசுயா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்போதெல்லாம் சிறு பத்திரிகைகள் சார்ந்த புத்தக வெளியீட்டு விழாக்கள் தமிழ் சினிமாவின் முதல் நாள் படப்பிடிப்பு பூஜையையும் மிஞ்சக்கூடிய வகையில் நடந்து வருகின்றன.

பக்தி (அறம்), அரசியல் (பொருள்), சினிமா (இன்பம்) என்ற துறைகளில் என்னென்ன மலினங்கள் உண்டோ அவ்வளவையும் இந்தப் புத்தக வெளியீட்டு விழாக்களில் நாம் காணமுடிகிறது.

ஒரு எழுத்தாளருக்கு குழந்தை பிறக்கிறது. குழந்தைக்கு காது குத்தும் வைபவத்தை ஊரெல்லாம் வியக்கக் கொண்டாட வேண்டுமென எழுத்தாளருக்கு ஆசை. சடுதியில் தான் எழுதியிருந்த கவிதை முத்துக்களைத் தொகுக்கிறார். காதணி விழாவோடு புத்தக வெளியீட்டை இணைக்கிறார். தமிழகத்தின் எழுத்துலகப் பிரமுகர்கள் அத்தனை பேரும் புத்தக வெளியீட்டு விழாவுக்குத் திரள்கின்றனர். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

புத்தகமும் வெளியிட்டாயிற்று. ஊரார் மற்றும் உற்றார் மத்தியில் பெரிய ஆள் என்றும் காண் பித்துக் கொண்டாயிற்று. பங்காளி பகையாளிகளுக்கும் ஒரு மறைமுகமான மிரட்டல் விட்டது போல் ஆயிற்று. ஆனால் பாவம், எழுத்தாளரின் மனைவி. குழந்தை பிறந்து நாற்பது நாட்களே ஆன பச்சை உடம்புடன் இலக்கிய ஜாம்பவான்கள்.நூறு பேருக்கு ஆட்டுக்கிடா வெட்டி பிரியாணி செய்ய வேண்டிய வேலை! கிடா வெட்டில் இன்னொரு விஷயமும் உண்டு. மாடன், காடன், வேடன், காத்த வராயன் போன்ற சிறு தெய்வங்களுக்குத்தான் கிடா ஆட்டுப் பலி!

இப்படியே போனால் நரபலியும் கொடுப்பார்கள் என்று தோன்றுகிறது. பாரதியிடம் துவங்கிய நவீனத்துவம், சிறு பத்திரிகையில் ஊடுருவிவிட்ட இந்துத்துவ/மதவாத/ஜாதீயக் கும்பலிடம் மாட்டிக்கொண்டு விழி பிதுங்கி நிற்கும் என்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது.

**விழா நம்பர் ரெண்டு:** இது ஒரு சாதனை விழா. ஒரே நாளில் இருபத்தேழு புத்தகங்கள் வெளியீடு! கவிதைப் புத்தகங்கள்- ஒன்பது, மொழி பெயர்ப்புப் புத்தகங்கள்- ஒன்பது, பிற துறைப் புத்தகங்கள்- ஒன்பது. குளு குளு ஏ.சி. ஹால். கட்டுக்கடங்காத கூட்டம். அப்போது அரங்கத்திற்கு வெளியே ஒரு வேனிலிருந்து திபு திபுவென்று பெண்கள் கூட்டம். 'சிறு பத்திரிகை உலகம் பெண்களே அற்ற பாலைவனமாயிற்றே... ஏது இத்தனை பெண்கள்!' என மூக்கில் விரலை வைத்தேன். 'வாயைப் பிளக்காதே... இவர்களெல்லாம் கவிஞர் எக்ஸின் குடும்பத்தினர்' என்று என்னை எச்சரித்தான் நண்பன். கவிஞர் எக்ஸின் கவிதைத் தொகுதி அன்று வெளியிடப்பட இருந்த ஒன்பது தொகுதிகளுள் ஒன்று.

உள்ளே போய் அமர்ந்தோம். துவக்கவுரை ஆற்றிக் கொண்டிருந்தார் ஜுஜதா. (அப்படித்தான் உச்சரிப்பார் மூணாங்கிளாஸ் மட்டுமே படித்த என் அம்மா) கவிதை என்றால் என்ன, கவிதை எழுதுவது எப்படி என்று விளக்கிக் கொண்டிருந்தார் அவர். 'பார்வையாளர்களில் பாதிப்பேர் தமிழகத்தின் பிரபலமான கவிஞர்களாயிற்றே, இவர்களிடம் போய் கிளாஸ் எடுக்கலாமா' என்ற கூச்ச நாச்சம் கூட அவரிடம் இல்லாதது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்போது மெதுவாக, பூனையைப் போல் பதுங்கிப் பதுங்கி நுழைந்தார் கவிஞர் எக்ஸ். ஆறு வயதுப் பெண் குழந்தை அவர் கையைப் பற்றி யிருந்தது. அவர் மகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரு திருவென சற்று நேரம் விழித்தார் கவிஞர். ஏதோ வரக்கூடாத இடம் ஒன்றிற்குள் நுழைந்து விட்டது போலிருந்தது அவர் பார்வை. சற்று நேரம் பார்வையாளர் பகுதியில் உட்காரலாமா அல்லது மேடைக்குச் செல்லலாமா என்று யோசிப்பதைப் போல் பாவனை செய்தார். பிறகு குழந்தையுடன் மேடையை நோக்கிச் சென்று காலியாக இருந்த இருக்கையில் சற்றே லஜ்ஜையுடன் அமர்ந்து கொண்டார். எங்கள் ஊரில் 'ரொம்ப கொசறியப்பா' என்பார்கள். கொசறுதல்- ஆண்கள் நாணப்படுதல். அன்றைய தினம் ரொம்பத்தான் கொசறினார் கவிஞர்.

குழந்தையுடன் மேடையில் நுழைந்த கவிஞரைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஜுஜாதா அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக சற்றே செயற்கையான தொனியுடன் 'என்ன, அவர்களும் கவிதை எழுதுவார்களா?' என்று குழந்தையைச் சுட்டிக்காட்டி கவிஞரிடம் கேட்டார். இந்த அரிய நகைச்சுவையைக் கேட்டு அரங்கமே சிரித்தது. மீண்டும் 'கொசறிய' படி இருக்கையிலேயே நெளிந்தார் கவிஞர்.

அடுத்து, ஒரு புத்தகத்தை வெளியிட்டார் ஜுஜாதா. பிரதியை பெற்றுக் கொண்டவர் கவிஞர் விக்ரமாதித்யன். பிரதியைப் பெற்றுக் கொண்ட கவிஞர் உடனே ஜுஜாதாவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தார்.

அதற்கு மேல் அசிங்கத்தைப் பொறுக்க முடியாமல் நாங்கள் சிலபேர் அரங்கத்தை விட்டு வெளியேறினோம்.

**விழா நம்பர் மூணு:** க.வை. பழனிச்சாமியின் 'மீண்டும் ஆதியாகி' நாவல் வெளியீட்டு விழா. 'முதல் பெண்ணிய நாவல்' என்று ஆசிரியரே தனது நாவலுக்கு அடை மொழியும் கொடுத்திருக்கிறார். ஆங்கிலத்தில் 'Trans-Novel' என்ற அடைமொழி வேறு!

வரவர எழுத்தாளர்களின் 'புளிப்பு' தாங்க முடியவில்லை. எதற்கெடுத்தாலும் 'முதல்' என்கிறார்கள். மெடா.'பிக்ஷனா- நான்தான் முதல், நான்லீனியரா- நான்தான் முதல், பின்நவீனத்துவ நாவலா- நான்தான் முதல் என்ற ரீதியில் போய்க்கொண்டிருக்கிறது இவர்களின் பிரதாபங்கள். முன்பெல்லாம்- இப்போது இல்லை- செக்ஸ் ஒர்க்கர்களிடமும் மாமாக்களிடமும் ஒரு பழக்கம் உண்டு, 'இன்றைக்குத்தான் முதல்', 'உங்களோடுதான் முதல் படுக்கை', 'இன்றுதான் முதல் திறப்பு'... எழுத்தாளர்களின் 'முதல்' பிசினஸும் இதையே எனக்கு ஞாபகப்படுத்துகிறது.

'முதல்' பெண்ணிய நாவலைப் பற்றி இரண்டு பக்க விளக்கவுரை அழைப்பிதழிலேயே அச்சிடப்பட்டுள்ளது. எல்லாம் கோணங்கி ரக உளறல். ஆனால், கோணங்கியை மலினமாக இமிடேசன் செய்தி சரக்கு, 'இது நம்மஆளு' பட வசனம் ஞாபகம் வருகிறது. "பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும்பாங்க... இங்க நாரோட நாரு சேர்ந்து எல்லாமே நாறுது" சாம்பிளுக்கு ஒன்று. "ஆதி மெய்ஞான மறை இருளில் அருபவடிவில் பிரக்ஞையில் விழித்திருக்கும் ஆதி புத்திரி, புறம் இயங்கும் பிரபஞ்சத்தில் உயிர் வதையின் வலி உணர்ந்தும் உயிர் வதைக்கும் சுயவெறி மாநுட அழுக்கின் நெடி தாங்காது பிரபஞ்சம் சுருட்டி மீண்டும் ஆதிவயல் வாழ் அழியாக் காதல் காணும் கதா அதிர்வு" ஆதி ஆதி என்று வாசிக்கும் போது அது எனக்கு சூதி சூதி என்றே அர்த்தமாகிறது. என்ன செய்ய?

இன்னமும் பாருங்கள்... இந்த நாவல் அச்சடிக்கப்பட்ட இடத்தைப் பற்றிய விபரம்: "உலகின் அதி நவீன அச்சகங்களில் ஒன்றான ஸ்ரீனிவாசா பைன் ஆர்ட்ஸ் சிவகாசியிலிருந்து வடிவமைக்கப்பட்ட நூல்"

ஒரு வேளை இப்படைப்பு ஆதிக்சூதியைப் பற்றிய நாவலோ என்னவோ... படித்து விட்டு பிறகு எழுதுகிறேன். ஆனால் ஒன்று- முதல் பெண்ணிய நாவலை கானா வையன்னா பானா என்ற ஆண் எழுதிவிட்டதால் பெண்களுக்கு ஒரு வேண்டுகோள்... முதல் சுன்னிய * நாவலை ஒரு பெண்தான் எழுத வேண்டும்!



நாவலுக்கு சி.மணியின் சிபாரிசு வார்த்தைகள்: "அசாதாரணமான உள்ளடக்கம். அதற்குத் தக்க மாதிரி இறுக்கமான நடை. இந்தப் படைப்பைப் புரிந்துகொள்ள ஒரு எளிய வழி. இதை உரக்க, வாய்விட்டுப் படியுங்கள். அதுவும் முதல் சில அத்தியாயங்களை..."

சிறு பத்திரிகை இயக்கத்தில் இப்படிப் பட்ட கோர விபத்துக்கள் இப்போது அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன. சொற்களும் வாக்கியங்களும் எழுத்தாளரின் லாரிச் சக்கரங்களுக்கிடையே மாட்டி குருதி பெருக்கெடுத்து ஓட குற்றுயிராய்க் கிடக்கின்றன.

இந்த கோர விபத்தை அறிமுகம் செய்து வைத்தவர்கள் என கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், தமிழ்நாடன், நீல பத்மநாபன், க.இராசாராம் (முன்னாள் மந்திரி?) சி.மணி, சா.கந்தசாமி, ஜெயமோகன், பிரபஞ்சன், டாக்டர் பாலா, எஸ். ராமகிருஷ்ணன் ஆகியவர்களைச் சுட்டுகிறது அழைப்பிதழ்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விழா நம்பர் நாலு:** பாரதிராஜாவின் உதவியாளர் ஒருவர். பாவம்... கவிஞர். அவருடைய கவிதை வெளியீட்டு விழாவுக்கு மனுஷ்யபுத்திரனை அழைத்திருக்கிறார் கவிஞர். மனுஷ்யபுத்திரனோ கவிதையை கிழிகிழியென்று கிழித்து கட்டுரை வாசிக்க சினிமாக்காரர்களுக்கு கோபத்தில் துடிக்க ஆரம்பித்துவிட்டது- மீசை. 'கல்யாண வீட்டுக்கு வந்து ஆசீர்வாதம் பண்ணாமல் இப்படிச் சாபமிடலாமா? இது நியாயமா? மனுஷ்யபுத்திரா, நீ ஒரு மனுஷ்யனா?' என்ற ரீதியில் மனுஷ்ய புத்திரனை திட்டி ஒரு மிரட்டல் கட்டுரை கணையாழியில் வந்துள்ளது.

இந்த மிரட்டல் கட்டுரையைப் படித்து விட்டு இனிமேல் புத்தக வெளியீட்டு விழாக்களுக்கு பேச்சாளனாகச் செல்வதில்லை என்ற சபதமும் பூண்டுள்ளேன். இந்த விஷயங்களை துணிச்சலாக இங்கே நான் எழுதுவதன் காரணம்கூட இன்னமும் காலச்சுவடைப் போல் எக்ஸிலில் சினிமாக்காரர்களிடையே பாப்புலர் ஆகவில்லை என்பதுதான்.

மேற்கண்ட சபதம் ஏற்பதற்கு முன்னால் நான் மாட்டிக்கொண்ட ஒரு புத்தக வெளியீட்டு விழா பற்றிச் சொல்ல வேண்டும்.

**விழா நம்பர் அஞ்சு:** பூமா ஈஸ்வர மூர்த்தியின் சிறுகதை மற்றும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா. புத்தகத்தை மனுஷ்யபுத்திரன் வெளியிட நான் பெற்றுக் கொண்டேன். புத்தகத்தைப் பற்றிய என் வாசிப்பை ஒரு கட்டுரையாக எழுதி வாசித்தேன். அக்கட்டுரை பின் வருமாறு:

சமகாலத் தமிழ் எழுத்து நடுத்தர வர்க்கத்தின் அசட்டுத்தனம் மலிந்ததாக இருக்கிறதென்று நான் சொல்லி வந்திருக்கிறேன். இந்த அசட்டுத்தனம் என் குடும்பம், என் குழந்தை, என் மொழி, என் நாடு, எனது ஜாதி, எனது இனம் என்பதாக தனது ஒற்றை அடையாளங்களை மட்டுமே தக்க வைத்துக் கொண்டுள்ளது. இதனாலேயே ஆபீஸ், வீடு, மனைவியுடனோ அல்லது அனுமதிக்கும் வேறொரு பெண்ணுடனோ செக்ஸ், குழந்தையின் நோட்டுப் புத்தகம் என்பதாக ஒரு மனிதனின் வாழ்வனுபவம் மிகவும் குறுகியதாக இருந்து வருகிறது. இந்தப் பார்வையின் தர்க்க நீட்சியாகவே வேறொரு தர்க்கம் கிடைக்கிறது. அதன்படி அடுத்தவர் குடும்பத்தோடு சண்டை போடலாம். அடுத்தவர் குழந்தை கொல்லப்படலாம், அடுத்தவர் தேசத்தில் போர் நடக்கலாம், குண்டுகள் போடப்படலாம், அடுத்த ஜாதிக்காரர்கள் உயிரோடு எரிக்கப்படலாம், அடுத்த இனம் பூண்டோடு அழித்தொழிக்கப்படலாம், இந்த ஃபாசிசத்தின் மூலக்கூறு - குடும்பம் என்ற சிறு



அலகு. இதனாலேயே குடும்பத்தை- குடும்ப உறவுகளை உயர்த்திப் பிடிக்கும் தமிழின் பெரும்பான்மையான எழுத்துக்கள் ஃபாசிசப் பிரதிகளாக எஞ்சுகின்றன. ஆனால் சீரிய கலை முயற்சி என்பது நடைமுறை மதிப்பீடுகளை ஏற்க மறுத்து மொழி, இன, ஜாதி, தேச அடையாளங்களை ஒதுக்கித் தள்ளுகிறது. இதுதான் கலையின் அடிப்படையான குறைந்த பட்சத் தகுதி. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பிரபஞ்ச அன்பாக எல்லையற்று விரிவதே உண்மையான கலை.

இதை நான் வேறு வார்த்தைகளில் சொல்லிப்பார்க்கிறேன்.

வாடிய பயிர் என்பது Other, இந்த Other இல் ஓர் கவி மனம் கூடு விட்டுக் கூடு பாய்கிறது. இப்படிக் கூடு பாய்தலே இலக்கியத்தின் அடிப்படைத் தன்மையெனக் காண்கிறேன். Other என்பது யார்? அல்லது என்ன? ராஜஸ்தானிலும் எத்தியோப்பியாவிலும் பட்டினியால் சாகும் மனிதர்கள், விலங்குகள். லட்சக் கணக்கானவர்களைக் கொன்று குவிக்கும் ஆட்சியாளன். 'இதற்கு முன்னால்' என்பதே இல்லாமல் இந்தக் கணத்தில் பிறந்து விழும் சிசு. காலத்தையும் வெளியையும் இணைக்கும் புழு. பாறைத் தொகுப்புகளுக்கு உள்ளே பல மில்லியன் ஆண்டுகளாய்ப் படிந்து கிடக்கும் Fossils. குரூரம், கோபம், துவேஷம், இழப்பு, நம்பிக்கைத் துரோகம் போன்ற ஆதி உணர்வுகளின் வெம்மை அல்லது இவற்றை நிராகரிக்கும் அல்லது மறுதலிக்கும் உன்னதங்களின் அபத்த உறைபனிக் குளிர். பிரபஞ்ச வெளியில் மனிதத் தனிமையின் அவல ஓலம். மாற்றுருவின் வெளியாக மாறிய பெண்ணின் உடல் வெளி. தானே உருவாக்கிய புதிர் வெளிப் பாதையில் சிக்குண்டு கிடக்கும் சிலந்தி.
மனித மனத்தின் இருட்குகைகளில் ஆதிச் சித்திரங்களாய் பதிந்து கிடக்கும் மான்கள்.

இதைத்தான் travelling into the other என்று சொல்கிறேன்.

இந்தப் பயணத்தில் கலைஞன் வனங்களை உருவாக்கி அந்த வனங்களிலேயே தொலைந்தும் போகிறான்.

*அடிக்குறிப்பு: ஈழத்தமிழில் 'சுண்ணி' என்று எழுத வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் ஷோபாசக்தி. அவருக்கு நன்றி.

எண்ணற்ற ரகஸ்யங்களையும் மர்மங்களையும் கொண்டிருக்கிறது வனம். அருவிகளின் ஒலி இதோ அருகாமையில் கேட்கிறது. ஆனால் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. கேளாத திசையிலிருந்து புறப்பட்டு வருகிறது ஓசை. காணாத தூரங்களிலிருந்து பளிச்சிடுகின்றன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலங்குகளின் கண்கள். உயரங்களிலிருந்து தரை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் விருட்சங்கள். ஆயிரக்கணக்கில் உடைந்து சிதறிய ஆகாயம். சர்ப்பங்களின் அமானுஷ்யமான கலவிப் பிழம்புகள், வாயுத்துகள் உருண்டையுள் செல்லும் காலடித் தடங்கள், ஒருவரையொருவர் கொன்று தின்னும் கதைகள் சொல்லும் வரலாற்றின் முற்றுப் பெறாத சுவடிகள், பாழ் வெளியில் தனது விரல்களால் காற்றை இசைத்துக் கொண்டிருக்கும் எருமைத் தலை தொன்ம மனிதன், சிலுவையைச் சுமந்து அலையும் கறுப்பு அடிமை, கற்பாறைகளைப் புணரும் கடல் கன்னிகள், பிறப்புறுப்புக்களை அறுத்தும் கிழித்தும் எறியும் பாதிரிகளும் கன்னியாஸ்திரிகளும், மொக்கு அவிழ்ந்து நட்சத்திரங்களைப் பரப்பும் மலர்ப் பக்கங்கள், குருதி துளிர்க்கும் சிறுமியின் கழுத்து, ஆயிரம் பெண்களின் ரத்த வாடை வீசும் அரண்மனைத் தடாகங்கள், கோழியைப் புணரும் இளைஞன், தனது தாயின் பிறப்புறுப்பை ஊசியால் தைத்துக் கொண்டிருக்கும் சிறுமி, அலை அலையாய் சுருள்கிறது கதை சொல்லியின் சொல் வளையம். நட்சத்திர வெளியில் மிதக்கும் துப்பாக்கி, துப்பாக்கிக் குழல் வழியே ஒழுகும் விந்து, நிணம் உருகி வழியும் சொற்சிதைவுகள், சமுத்திரத்தின் ஆழத்தில் இணை தேடி அலையும் துறவி, பனிமலையில் பதிந்த காலடிச் சுவடுகள், ஆயுதங்களைப் புணர மறுத்தவனின் உடல் சொற்களாய் சிதைவுறுகிறது. கருந்துளைக் கணத்தை கவிதையில் முயன்று தற்கொலை செய்து கொள்கிறான் கவி. யுகத்தின் பாடலை கிதாரில் இசைத்துக் கொண்டிருக்கிறான் கவியின் நண்பன். சாக்கடையில் வீழ்ந்து கிடக்கிறது கவிதைக் கடவுளின் முற்றுப் பெறாத கவிதை. வானமாகி எழுந்து நிற்கும் பிரும்மாண்டமான கட்டிடங்கள் ஆயிரம் மைல்களில் சிதைந்து கிடக்க ஆயிரம் பெண்களின் வயலின் இழைவுகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. முன்பின் பக்கங்கள் இல்லாத காலத்தின் சுவடியிலிருந்து பாடல்களை இசைத்துக் கொண்டிருக்கிறான் கவிக்குள்ளன். சிலுவையால் சுயமைதுனம் செய்து கொண்டிருக்கும் பதுமை- மூங்கிலால் ஹராகிரி செய்து கொள்ளும் வீரன், இறுதிப் பேரழிவின் வெறுமையை முதல் வேட்டையில் தேடி துக்கம் கொள்ளும் போராளி, நியாயவாதியின் எல்லையற்ற தனிமை, தனது குழந்தைகளைக் கொன்று வீழ்த்திக் கொண்டிருக்கும் தாய் மனம், தனது நூறாயிரம் பிம்பங்களைக் கண்டு சித்தப் பிரமை கொள்கிறாள் அவள்.

தனது முதல் கதையை இப்படியாகச் சொல்லத் துவங்குகிறாள் ஆதித்தாய்.

* * *

இவ்வளவும் சொல்வதால் Beautification of cruelty யை மட்டுமே பேசுவதாக அர்த்தமில்லை. உன்னதங்கள் பேசப்படலாம். Chamber music ஆக இருந்தாலும் சரி, கொத்துப் பரோட்டா கொத்தும் சப்தமாக இருந்தாலும் சரி, அதன் 'வெளி' நான் உள்ளிழுக்கப்படுவதற்கு இடம் கொடுப்பதாக இருக்க வேண்டும். துயரங்கள் மட்டுமே பேசப்பட வேண்டும் என்பது நிபந்தனை அல்ல. துயரமோ அல்லது உன்னதமோ அது தனி மனித வரையறைகளுக்குள் மட்டுமே அடங்கி விடலாகாது. வீட்டின் Door number கள் அல்லது பெட்ரூம்கள் வெறும் தனிநபர் துயரங்களாக அல்லது தனிநபர் உன்னதங்களாக மட்டுமே குறுகி விடாமல் பிரபஞ்சத்துயரமாகவோ பிரபஞ்ச உன்னதமாகவோ மாற வேண்டும். ஒரு சாதாரண அனுபவம் Mystic அனுபவமாக மாறும் ரஸவாதமே கலையின் அடிப்படைத் தன்மை.

ஒரு கிணற்றிலிருந்து நீர் இறைத்து அதே தண்ணீரை அதே கிணற்றில் விடுவதை விட வெவ்வேறு இடங்களிலிருந்து நீர் இறைக்கப்பட வேண்டும். அது எத்தியோப்பியா என்ற சமூக வெளியாகவும் இருக்கலாம், அல்லது குவாண்டம் தியரி, பார்ட்டிகிள் ஃபிஸிக்ஸ், இசை, marine biology> geology, மானுடவியல் என்று எதுவாகவும் இருக்கலாம்.

இதைத்தான் நான் சமகாலத் தமிழ் இலக்கியத்தில் எதிர்பார்க்கிறேன். இதை நோக்கிய சிறு அசைவைக் கூட பூமா ஈஸ்வரமூர்த்தியின் எழுத்து நிகழ்த்தவில்லை என்பதால் அதை நான் முற்றாக நிராகரிக்கிறேன்.

***

புத்தக வெளியீட்டு விழாக்கள் இப்போது குடும்ப விழாக்களாகி விட்டபடியால் என் கட்டுரை பலருக்கும் முகச்சுளிப்பை ஏற்படுத்தி விட்டது. பெண் பூப்பெய்திய விழாவில் வந்து 'நீ நாசமாப் போக, நீ வெளங்காமப் போக, நீ பாடையில போக' என்று 'வாழ்த்தினால்' எப்படியிருக்குமோ அதுபோல் அர்த்தமாகியது என் பேச்சு.

**விழா நம்பர் ஆறு:** கபிலன் என்றொரு கவிஞர். இவரது கவிதை வெளியீட்டு விழாவும் குறிப்பிடத்தகுந்த தமாஷ் நிகழ்வுதான். புத்தகத்தை வெளியிட்டவர் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி. பாஸ்போர்ட் அலுவலகத்தின் தலைவர். பாஸ்போர்ட் அலுவலகத்துக்கும் கவிதைக்கும் என்ன சம்பந்தமெனில் கபிலன் அங்கே ஒரு ஊழியர். புத்தகத்தைப் பெற்றுக் கொண்டவர் கமலஹாசன். கமலின் அடுத்த படத்தில் (ஹே பெரியார்!) கபிலனின் பாடல் இடம்பெறும் என ஆசீர்வதிப்போமாக!

நினைத்துக் கொண்டேன்... அலுவல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தில்தான் குமாஸ்தா வேலை என்று சொல்லப் படுகிற இந்தக் கேவலமான மாமா வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம். பிழைப்புக்காக குண்டி கழுவி விட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இலக்கியம் ஒன்றுதான் உயிர் வாழ்வை நியாயப்படுத்தும் ஒரே ஆறுதல். அங்கேயும் போய் நாம் யாருக்கு குண்டிகழுவி விடுகிறோமா அவர்களையே அழைத்து வந்து அவர்கள் முன்னால் கைகட்டி நின்று கூழைக் கும்பிடு போட்டு கவிதை வளர்க்க வேண்டுமா என! ஒரு வேளை கபிலனின் அலுவலகச் சூழல் வேறு மாதிரி இருக்குமோ என்னவோ!

***

சென்ற "எக்ஸில்" இதழில் சினிமா - சிறுபத்திரிகை விளையாட்டு பற்றி எழுதியிருந்தேன். சிறு பத்திரிகை எழுத்தாளர்களுக்கு சினிமா நடிகை நடிகரின் பெயர்சூட்டும் இந்த விளையாட்டில் பலரும் விடுபட்டுப் போய் விட்டார்களென நண்பர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். அதனால் மதுபானக் கேளிக்கை இரவு ஒன்றில் அந்த ஆட்டத்தைத் துவங்கினோம். ஆட்டமுடிவில் கிடைத்த பட்டியல்

## இதோ:

கல்கி - எம்ஜியார்.
நாஞ்சில் நாடன் - சரத்பாபு.
வண்ணதாசன் - சிவக்குமார்
விடியல் சிவா - சாண்டோ எம்.எம்.ஏ.சின்னப்பாத் தேவர்
விஜயன் - ரஞ்சன்
அம்பை - ஜோதி லட்சுமி
ஜெயகாந்தன் - P.S வீரப்பா
நா.பார்த்தசாரதி - எம்.கே.தியாகராஜ பாகவதர்
திலகவதி - விஜயசாந்தி
விக்ரமாதித்யன் - சுருளிராஜன்
காலச்சுவடு கண்ணன் - இளைய திலகம் பிரபு
பொன்னீலன் - சரத்குமார்
அழகியநாயகி அம்மாள் -சௌகார் ஜானகி
சங்கர ராம சுப்பிர மணியன் - ஹாஜா செரீப்
சிவத்தம்பி - சிவாஜி
(தானாடவில்லையம்மா... தன் சதையாடுது... மார்க்சீயத்தைப் பற்றி யாரும் ஏதும் சொன்னால் துடிதுடித்துப் போவார்)
பொ.வேல்சாமி - V.K.ராமசாமி
வல்லிக்கண்ணன் - வாத்தியார் ராமன்
பிரபஞ்சன் - ஜெமினி
வ.கீதா - பிந்துகோஷ்
எஸ்.வி.ராஜதுரை - எம்.என். நம்பியார்
வெங்கட்சாமிநாதன் - பொன்னம்பலம்
ஞானி - பித்துக்குளி முருகதாஸ்
(ஆன்மீகம், இந்துத்துவம், முருக பக்தி, இத்யாதி)
வளர்மதி - முதல் மரியாதை வீராச்சாமி
("ஒரு உண்மை தெரிஞ்சாகணும்" என்று எஸ்.வி. ஆரின் சட்டையைப் பிடித்த வரலாற்றுச் சம்பவம்)
எம்.எஸ்.எஸ்.பாண்டியன் - மேஜர் சுந்தர்ராஜன்
யமுனா ராஜேந்திரன் - ராம.நாராயணன்
அ.மார்க்ஸ் - மம்முட்டி
(தோற்றத்தில் ஒரு தோரணை, ஆனால் பீடியும் குடிப்பார், தோழனின் தோழன், எதிரிக்கு எதிரி...)
பெருந்தேவி - நந்திதா தாஸ்
ஷோபாசக்தி - பார்த்திபன்
இந்திரா பார்த்தசாரதி - பூர்ணம் விசுவநாதன்
அமரந்தா - சுகாசினி
(இதைச் சொன்னதும் பக்கத்திலிருந்த நண்பர் 'பாடறியேன், படிப்பறியேன், பள்ளிக்கூடம் நானறியேன்' என்று பாடிக்காட்டினார்)

எல்லாம் சொல்லியாயிற்று. ஆனால் ராஜன்குறைக்கு ஆள் இல்லை. ஒருவர் டி.ராஜேந்தர் என்றார். 'உருவ ஒற்றுமை மட்டும் போதாது' என்று சொல்லி அந்தப் பெயரை மறுத்து விட்டது சபை. 'தமிழ் நாட்டின் ஐந்து முதல் மந்திரிகளைக் கொடுத்த சினிமா உலகத்திற்கு ஒரு ராஜன்குறையைக் கொடுக்க முடியாமல் போய்விட்டதே!' என்று வாய்விட்டுப் புலம்பினேன். புலம்பலுக்குப் பலன் கிடைத்தது. ஒரு நண்பர் 'விசு' என்றார். ஆஹா... கண்டு பிடித்தாயிற்று. அரட்டை அரங்கம் விசு...
ராஜன்குறை - விசு
மோனிகா - ஐஸ்வர்யா (லட்சுமியின் மகள்)

### பிழை திருத்தம்.

கடந்த எக்ஸில் இதழ்-9 யூகோசிலாவியா கட்டுரைத் தொடர்ச்சியில் இடம் பெற்ற பின்வரும் தவறுகளை சரி செய்து வாசிக்குமாறு வேண்டுகின்றேன். 89ம் பக்கம் 2ம் பந்தி 30வது வரியில் "லைபீரியாவின் மொத்த சனத்தொகை" என்பது சைபீரியாவின் மொத்தசனத்தொகை என்று தவறாக இடம் பெற்றுவிட்டது. 91ம் பக்கத்தில் 2ம்பந்தி 29வது வரியில் 400 மில்லியன் டொலரில் இயங்கின என அமையவேண்டியது 400 மில்லியன் இயங்கின எனவும், 94ம்பக்கம் 2ம் பந்தி 12வது வரியில் 500 மில்லியன் மார்க் யுத்தத்துக்கு செலவு செய்தது என வரவேண்டியது 500 மார்க் யுத்தத்துக்குசெலவு செய்தது என்றும் பிழையாக இடம் பெற்றுள்ளது. 95ம் பக்கம் 1ம் பந்தி 25 வது வரியில் <<ROCKEYS<< குண்டுகள் என்பதற்கு மாறாக <<ROCKBYS<< குண்டுகள் என்று வந்துவிட்டது. 97ம் பக்கம் 1ம்பந்தி 7வது வரியில் தொடங்கி 8வது வரியில் முடிவடையும் "Mütter gegen den krieg" என்று இடம்பெற வேண்டியது "Mitter gegen den krieg" என்று இடம் பெற்று விட்டது. எக்ஸில் இதழ் 8,9 இரு இதழ்களிலும் மேற்படி கட்டுரையில் இடம்பெற்ற இன்னமும் பல எழுத்து மற்றும் வசனப் பிழைகளை தயவு செய்து திருத்தி வாசிக்கவும்.

-தமிழரசன்-




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேடல்கள், வாசிப்புக்கள்
இல்லாது,
தோற்றுப்போவதால்
பொறுக்கி எடுத்ததை வைத்து
நான்–நான் என்ற
குதூகலிப்பு –
எங்கள் கைகளுக்கு சிக்காதவரைக்கும்.

துளிர்களின் பசளையை
ஈர்த்து –
தலை சிலுப்பி– விரல் சொடுக்கி
தூரமாகவும்–அண்மையாகவும்
கைதட்டி அழைத்து
பெயர் வைத்து–
கிருஷ்ண பரமாத்மாவின்
குதியாட்டம்.



அவளுக்கு–அவனுக்கு–அதுக்கு–உனக்கு
தோற்றுப்போவதாக பயம்
செத்துப்போவதாக பயம்.

ஒவ்வொருவர் மீதும்/பற்றியும்
நான் நானாக இருப்பதிலும்
கட்டாயமும் இல்லாமலும்
எழுகிறது– எழவைக்கிறது.
கேள்வி,
மூளையில்.

வேடிக்கையானதும், விபரீதமானதுமான
அவநம்பிக்கையான நம்பிக்கைகளை
அமைதியாய் உள்வாங்கி, அலட்சியப்படுத்தி
என்னையும் மற்றயதையும்
அவதானித்துக்கொண்டிருப்பவள்
நான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





...
உயிர்களைத் தின்போனின்
சிம்மாசனம் எலும்புகளால் ஆனது
பீடம்
குழந்தைகளின்
சமாதிகளின் மேல் நிமிர்கிறது

எல்லா வித நாகரிகங்களையும்
புதிய கலாச்சாரங்களையும்
துவம்சம் செய்து
நிமிர்ந்தெழுகிறது பழமைச் சிலைகள்

- வெட்கம் கொள்வோம் -

தமிழும், சைவமும், தேசியமும்
மானிடத்தின் விரோதியென்பது
சூரியன் உதிர்ந்த நாளொன்றில்
மறுபடியும் மறுபடியும் நிறுவப்படுகிறது.
- சக்கரவர்த்தி



Published by Exil, R.INBAVALLI,
B.P-204, 92604 Asnieres Cedex, FRANC
No d'enreg: 13022670

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்